*Issued* 11—5—1965]

1035

5 - JUN 1965
283/10 ASo(B)

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

# OFFICIAL REPORT

TUESDAY, 2ND MARCH 1965

**VOLUME XXVI—No. 2**

*CONTENTS*


| | | Pages |
|---|---|---|
| I | Obituary reference to Sri K. Kuppuswami Iyer, ex-M.L.A. | 125 |
| II | Questions and Answers .. .. .. .. .. .. | 125–147<br>218–220 |
| III | Point of Order *re* Motion of Privilege moved by the Minister for Industries .. .. .. .. .. .. .. | 147–155 |
| IV | Motion expressing want of confidence in the Ministry .. .. | 155–160 |
| V | Adjournment Motions.. .. .. .. .. .. .. | 160 |
| VI | General Discussion on the Budget for 1965–66 .. .. .. | 160–216 |
| VII | Business of the House .. .. .. .. .. .. | 217 |
| VIII | Papers laid on the table of the House .. .. .. .. | 217–218 |


©
GOVERNMENT OF MADRAS
1965

*Legislative Assembly Department*
*Madras*

Price 50 *Paise.*]

V211.31 N65

N65.26.2 cp3

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Tuesday, 2nd March 1965.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

### I.—OBITUARY REFERENCE TO SRI K. KUPPUSWAMI IYER, EX-M.L.A.

MR. SPEAKER: I regret to announce to the House the death of Sri K. Kuppuswami Iyer, a former Member of the Legislative Assembly during 1937–39 representing Dindigul General, Rural Constituency, on 23rd January 1965. I request the Members to stand in silence for two minutes as a mark of respect to the departed soul.

The Members stood in silence for two minutes.

### II.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*போலீசாரால் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகங்கள் (1963-64).*

** 122 கேள்வி.—திரு. எம். எஸ். மணி:<br>திரு. எஸ். ஜே. ராமசாமி:<br>திரு. இராம அரங்கண்ணல்:* } *கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) தமிழகத்தில் 1963-64-வது ஆண்டுகளில் போலீசாரால் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகங்கள் எத்தனை?*

*(இ) அதனால் காயமடைந்தவர்கள் எத்தனை பேர்? இறந்தவர்கள் எத்தனை பேர்?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM: *(a)* & *(b)* The police had resort to the use of fire arms on eight occasions during the years 1963 and 1964. Thirteen persons were injured and five persons were killed as a result of these incidents.

*திரு. கே. ஏ. மதியழகன்: எந்தெந்த இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டன? அப்படி நடந்த இடங்களில் எந்தெந்த இடங்களில் இறந்தார்கள்? எந்தெந்த இடங்களில் படுகாயம் அடைந்தார்கள் என்பதைப்பற்றிய விவரங்களை கனம் முதலமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM:

| | Injured. | Killed. |
|---|---|---|
| Urappanur, Madurai district. | 9 | 3 |
| Madurantakam, Chingleput district. | 1 | Nil |

[2nd March 1965

| | Injured. | Killed. |
|---|---|---|
| An islet in the river cauvery near Erode, Coimbatore district. | Nil | Nil |
| Nochikuppam, Chingleput district. | Nil | Nil |
| Pannamparai, Tirunelveli district. | Nil | Nil |
| Coimbatore | Nil | 1 |
| Nagercoil | 2 | Nil |
| Coimbatore (East Pakistan Refugee Camp) | 1 | 1 |

**திரு. இராம. அரங்கண்ணல் :** எட்டு இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தன என்று கனம் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எட்டு இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது சரியா தவறு என்பது பற்றி விசாரணை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஒவ்வொரு சம்பவத்திற்கும் விசாரணை நடத்தப்பட்டு அறிக்கையும் வெளியிடப்பட்டது.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** துப்பாக்கிச் சூடு எந்தெந்த சூழ்நிலையில் எப்படி நடத்துவது என்பதுபற்றி விதி முறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றனவா ? அப்படி இருந்தால் அவைகள் எல்லா போலிஸ் துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** விதிமுறைகள் ஓரளவுக்கு இருக்கின்றன. அதைப்பற்றி போலீசாருக்கு அறிவிப்பும் இருக்கிறது. அதை வெளிப்படுத்துவதற்கில்லை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** துப்பாக்கிப் பிரயோகத்திற்கு முன்பு ஏதேனும் எச்சரிக்கை செய்யப்பட்டதா ? கண்ணீர்ப் புகை விடப்பட்டு அதன் பிறகு துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : This question relates to the years 1963 and 1964. If the hon. Member wants particulars about every place, I think it may not be possible for the Hon. Chief Minister to answer.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சாதாரணமாக எச்சரிக்கை செய்வதுண்டு. கண்ணீர்ப் புகை உபயோகிப்பதுண்டு. லத்தி சார்ஜ் செய்வது உண்டு. இதையெல்லாம் உபயோகித்தார்களா இல்லையா என்பதெல்லாம் விசாரணை அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இப்போது நடந்த துப்பாக்கிப் பிரயோகங்களில் எத்தனை தவறானவை, எத்தனை நியாயமற்றவை என்று கருதி போலீசார்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.



2nd March 1965]

**திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த 8 துப்பாக்கிப் பிரயோகங்களில் போலீசார் அத்துமீறி அதிக பலாத்காரத்தைக் கையாண்டார்கள் என்று கருதி இன்ஸ்பெக்டர்-ஜெனரல், "இனிமேல் நீங்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்யும்போது ஜாக்கிரதையாக உபயோகிக்கவேண்டும்" என்று அறிக்கை விடுத்ததாகத் தெரிகிறது. அப்படியானால் அந்த அறிக்கையின் விவரம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அப்போதைக்கப்போது போலீசார்களுக்கு இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அவர்கள், போலீசார்கள் எவ்வாறெல்லாம் நடந்துகொள்ளவேண்டும் என்று தெரிவிக்கிறார்கள். கனம் அங்கத்தினர் அவர்கள் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அவர்கள் சுற்றறிக்கையைப்பற்றிச் சொன்னார்கள். எனக்குத் தெரிந்தவரை நான் போலீசாரின் ஒரு கூட்டத்தில் பேசும்போது "கூடியவரையில் துப்பாக்கிப் பிரயோகத்தைத் தவிர்க்க வேண்டும்" என்று சொன்னேன். அப்போது நான் பேசிய பேச்சின் சாராம்சத்தை எடுத்து எல்லா போலீசாருக்கும் அனுப்பியதாக பத்திரிகையில் பார்த்தேன்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** பாதிக்கப்பட்ட எத்தனை குடும்பங்களுக்கு இழப்பீட்டுத்தொகை வழங்கப்பட்டிருக்கிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** என்னிடம் தகவல் இல்லை.

**திரு. முனு. ஆதி :** துப்பாக்கிச் சூட்டிற்கு என்ன காரணம் என்பது பற்றிய அறிக்கை இந்த சட்டசபை முன் வைக்கப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** காரணம் அமைதியை நிலை நாட்டுவதற்காகவும், பெருவாரியான மக்களைக் காப்பதற்கும்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** ஒரு பெரிய கிளர்ச்சி நடக்கிறபோது துப்பாக்கிச் சூடுகள் ஏற்படும் நிலைமை வேறு. ஆனால் சாதாரணமாக இரண்டு ஆண்டுகளில் எட்டு சம்பவங்கள் ஏற்பட்டிருப்பதைப் பார்க்கும்போது போலீசார் எண்ணிக்கை குறைவு காரணமாக பெரிய கூட்டங்களில் ஏற்படக்கூடிய கஷ்டத்தினால் திடீரென்று துப்பாக்கிச் சூடு ஏற்படுகிறதா என்பதைப்பற்றி விசாரித்து, போலீசாரின் எண்ணிக்கையை அதிகரிக்க உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** போலீசார் எண்ணிக்கை அதிகம் என்றும் சொல்லலாம், குறைவு என்றும் சொல்லலாம். மற்ற மாகாணங்களை ஒப்பிட்டுப்பார்த்து குறைவு என்றும் சொல்லலாம். நான் எதையும் சொல்லத் தயாராய் இல்லை. துப்பாக்கிப் பிரயோகத்திற்கு அவசியம் இல்லாமல் இருந்து பிறகு துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டிருந்தால் அதைப் பற்றி விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதிலே போலீசாரின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவது என்ற பிரச்சினை எழவில்லை. இதைப்பற்றி என்னிடம் தகவலும் இல்லை.

[2nd March 1965

**திரு. க. ர. நல்லசிவம் :** போலீஸ் மூன்று துப்பாக்கிப் பிரயோகம் செய்தது சம்பந்தமாக விசாரணை நடைபெற்று முடிவு எடுத்ததாக அமைச்சர் சொன்னார்கள். முடிவுற்ற விசாரணையினுடைய தீர்ப்பை சபை முன்னால் வைக்க முடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** மதுரை ஜில்லாவில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது பற்றி விசாரணை நடந்தது. அந்த விசாரணை அறிக்கை கொடுக்கப்படவில்லை. அதன் விவரம் என்ன என்று அமைச்சர் சொல்ல முடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அறிக்கை அரசாங்கத்திற்கு வந்தால் அதை சமர்ப்பிக்கவேண்டும் என்று அவசியம் இல்லை. கனம் அங்கத்தினர் தனிக் கேள்வி போட்டால் என்ன தகவல்கள் கொடுக்க முடியுமோ அதை நான் கொடுக்கிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** துப்பாக்கிப் பிரயோக சம்பவ நேரங்களின்போது, கலகக்காரர்கள் அசக்தி அடைகிறார்கள் என்று தெரிந்தவுடன் துப்பாக்கிப் பிரயோகத்தை நிறுத்தவும், காயம் அடைந்தவர்களையும் மற்றவர்களையும் உடனடியாக ஆஸ்பத்திரியில் சேர்க்கவும், போலீஸ் விதிமுறை இருக்கிறது. ஆனால் நாகர் கோயில் துப்பாக்கிப் பிரயோகம் பொறுத்தவரையில், கேப்ரியல், முத்தையா இருவரையும் அப்படியே போட்டுவிட்டார்கள். இப்படி விதி முறைக்கு உட்பட்ட காரியத்தை செய்யத் தவறியதால் நாகர்கோயில் போலீஸ்காரர்களிடம் சமாதானம் கேட்கப் பட்டதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் கூறுவது சரியானதா, இல்லையா என்ற தகவல் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விடை அளிக்கலாம்.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, 'ஷூட்டு கில்' என்ற புதிய சர்க்குலர் போலீஸுக்கு அனுப்பியது உண்மையா ? அப்படிப்பட்ட சர்க்குலர் மத்திய சர்க்கார் மூலமாக அனுப்பப் பட்டதா ? அதன் விளைவாக துப்பாக்கிச் சூட்டினால் இறப்பது அதிகமானது உண்மையா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நூதனமாக இருக்கிறது கனம் அங்கத்தினர் கூறுவது. அம்மாதிரி ஒன்றும் இல்லை.

**திரு. ப. கா. முத்துவேலப்ப கவுண்டர் :** இந்த அராஜகத்தினால் போலீஸ்காரர்கள் எத்தனை பேர் இறந்தார்கள் ? அவர்கள் குடும்பத்திற்கு அரசாங்கம் உதவி அளிக்க முன்வந்து இருக்கிறதா ?

MR. SPEAKER : The main question does not relate to the recent police firing. It relates to police firings during the years 1963 and 1964.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** யாராவது இறந்தார்களா என்பதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.



2nd March 1965]

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** துப்பாக்கிச் சுடுவதாலே மக்கள் இறக்காமல் இருக்க ஏதோ குண்டு தயாரிப்பதைப்பற்றி போலீஸ் ஐ.ஜி. ஆலோசனை கூறியிருக்கிறார்களா ? அதை அரசாங்கம் பரிசீலனை செய்ததா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றி எல்லாம் ஒன்றும் தகவல் இல்லை.

**திரு. இராம. அரங்கண்ணல் :** முதல் தடவை துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் நேரத்தில் முழங்காலுக்குக் கீழே சுட வேண்டுமென்று ஏதாவது உத்திரவு இருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதெல்லாம் நான் வெளியிலே சொல்ல முடியாது.

**திரு. கரு. சீமைச்சாமி :** இப்போது எதற்கெடுத்தாலும் சுடுவது சர்வசாதாரண நிகழ்ச்சி ஆகிவிட்டது என்பதை மனதில் கொண்டுதான் பார்த்து நிதானமாகச் செய்யவேண்டும், பார்த்து சுடவேண்டும் என்று அறிவுரை சொன்னார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் கூறுவது அவர் அபிப்பிராயமாக இருக்கலாம்.

**திரு. முனு. ஆதி :** தலைவர் அவர்களே, துப்பாக்கிச் சூட்டைப் பற்றிக் கேட்டால் விசாரணை முடியட்டும் என்று சொன்னார்கள். விசாரணை அறிக்கை பற்றி கேட்டால் அதை சமர்ப்பிப்பது அவசியம் இல்லை என்று சொல்கிறார்கள். அப்படி சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியாமல் இருக்கக்கூடிய அறிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எல்லாவற்றையும் சட்ட மன்றத்திலே சொல்ல முடியாது.

**திரு. மு. சண்முகம் :** கனம் அமைச்சர் அவர்கள் துப்பாக்கிச் சுடுவதற்குக் காரணம் கலவரத்தை தவிர்ப்பதற்கும் பெருவாரியான பொதுமக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். துப்பாக்கிச் சுடுவதினால் பொதுக் கூட்டங்களில் நிரபராதிகள்தான் பெரும்பாலும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்பது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா ? அதைத் தவிர்ப்பதற்கு வேறு வழிவகைகளை அரசாங்கம் கையாளுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தவிர்க்கமுடியாத நிலையில்தான் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்படுகின்றது. சில சமயங்களில் நிரபராதிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பது உண்மைதான். ஆகவேதான் இம்மாதிரி கலவரங்கள் நடக்கக்கூடிய இடங்களுக்கு மக்கள் போகக்கூடாது என்று எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

[2nd March 1965

**திரு. கே. ஏ. மதியழகன் :** எட்டு துப்பாக்கிப் பிரயோகங்களும் அனாவசியமாகவும், அதிக்கிரமமாகவும் நடந்தது என்பது என்னுடைய கருத்து. இந்தத் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடந்தவுடன் . . .

**கனம் சபாநாயகர் :** கேள்வி கேட்கலாம். கனம் அங்கத்தினர் தங்கள் கருத்தைச் சொல்வதில் என்ன பிரயோஜனம். **Let not** the hon. Member please make it a debate. He must ask a question. Nowadays, I notice a tendency for every question developing into a debate. I would request the hon. Member Sri Mathialagan in particular to put his question direct and elicit any information that he may want.

SRI K. A. MATHIALAGAN : Yes, Sir. I shall put the question direct in one or two sentences.

**திரு. கே. ஏ. மதியழகன் :** துப்பாக்கிப் பிரயோகம் நடந்த உடனே முதல் அமைச்சர் அவர்களுக்கும், ஐ.ஜி. அவர்களுக்கும், தலைமைக் காரியதரிசி அவர்களுக்கும் அதைப்பற்றிய விவரங்களை ரேடியோ மூலமாகவோ, தந்தி மூலமாகவோ அனுப்பவேண்டுமென்று ஒரு ஜி.ஓ. இருக்கிறது. அதன்படி தலைமைக் காரியதரிசியும், முதல் அமைச்சர்அவர்களும் துப்பாக்கி சம்பவ விவரங்களை பெற்று இருக்கவேண்டும். அந்த தஸ்தாவேஜுகளை சபைமுன் வைக்கமுடியுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றவுடனே அங்கிருந்து ஐ.ஜி.-க்கு தகவல் அளிக்கப்படுகிறது. ஐ.ஜி. பிரதம காரியதரிசிக்கும் எனக்கும் தெரிவிக்கிறார். ஆனால் இதை எல்லாம் இங்கே வைப்பதற்கு முடியாது.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் அமைச்சர் அவர்கள் கூறிய பதிலில் இருந்து தனிக் கேள்வி போட்டால் விசாரணை அறிக்கை முடிவு பற்றி அறிவிக்கிறேன் என்று கூறினார்கள் . . .

**கனம் சபாநாயகர்:** அப்படிக் கூறவில்லை. வைக்கலாமா, வேண்டாமா என்று யோசனை செய்கிறேன் என்று சொன்னார்கள்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இன்னுமொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் முடியாது என்று சொன்னார்கள். சட்டசபையில் வைக்கமுடியாவிட்டாலும், அங்கத்தினர்கள் தெரிந்துகொள்ள முடியாத அளவுக்கு என்ன இருக்கிறது ? வெளியே பிரசுரமானால் அபாயம் ஏற்படலாம். சட்ட சபை அங்கத்தினர்களுக்குகூட தெரிவிக்கக்கூடாத ரகசியம் என்ன இருக்கிறது. அங்கத்தினர்கள் பார்வைக்காவது காட்டுவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் ஆட்சேபணை இல்லை என்று கருதினால் நான் தகவல்களை கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.



2nd March 1965]

*Arrest of Socialist Party members*

* 123 Q.—SRI K. A. MATHIALAGAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether Sri K. R. Nallasivam, M.L.A., the Leader of the Socialist Party and several members of the Socialist Party were arrested during the first week of November; and

(b) if so, the reasons for their arrest?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(c) They were taken into custody under Section 151, Criminal Procedure Code, as there was information that they intended to hold a black flag demonstration during the visit of the Prime Minister to Madras City on 6th November 1964, and thereby act in a manner prejudicial to the public peace and tranquillity.

**திரு. க. ர. நல்லசிவம் :** கறுப்புக்கொடி ஆர்பாட்டத்தை பொறுத்தவரை "ராஜ்ய நிர்வாகக் குழு" அங்கத்தினர்கள் மட்டுமே அதில் பங்கு கொள்வார்கள் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால் சுமார் 150 பேருக்குமேல் கைது செய்யப்பட்டதற்கு என்ன காரணம் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** போலீஸாருக்கு யார் யார் மீது தடுப்பு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று தோன்றியதோ அந்த வகையில் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு கே. ஏ. மதியழகன் :** அமைதியாக கறுப்புக்கொடி காட்டுகிறோம் என்று சொல்லியிருந்த காரணத்தால், அமைதியாக இருந்த ஆர்ப்பாட்டங்களைக்கூட தடை செய்ததற்கு சர்க்கார் என்ன சமாதானம் கூற முடியும் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சாதாரணமாக அமைதியென்று சொல்லி செய்கிற ஆர்ப்பாட்டங்கள் அமைதியாக இருப்பதில்லை. இருந்தாலும் இந்தக் கேள்வியில் குறிப்பிடப்பட்டுள்ள விஷயம் பிரதம மந்திரி அவர்கள் வரும்போது அவருக்கு கறுப்புக்கொடி காட்டுவது என்பது. இதை மக்கள் பார்த்துக்கொண்டு இருக்க மாட்டார்கள். தகராறு ஏற்பட்டு அமைதியின்மை ஏற்படலாம். ஆகவேதான் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**திரு. சா. கணேசன் :** கறுப்புக்கொடி காட்டுவது அல்லது அதிருப்தி தெரிவிப்பது என்று முன்வருபவர்களை கைது செய்வதற்கு, சட்டத்தின் எந்தப் பிரிவில் அதுவும் இந்த ஜனநாயக நாட்டில் வழிவகுக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : The hon. Member wants to have legal opinion from the Hon. the Chief Minister.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஜனநாயக நாடு என்பதை அரசாங்கம் நன்றாக உணர்ந்து இருக்கிறது. ஆனால் ஜனநாயகத்திலும் அவரவர்கள் நடந்துகொள்வதற்கு வரம்பு இருக்கிறது.

[2nd March 1965

அமைதிக்கு பங்கம் விளைவிக்கக்கூடிய வகையில் யார் நடந்து கொண்டாலும் போலீஸாரோ, அரசாங்கமோ அவர்கள் கடமையை செலுத்தி பொறுப்பை உணர்ந்து வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டி இருக்கிறது.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** பிரதம மந்திரி அவர்களுக்கு கருப்புக்கொடி காட்டப்பட்டது நியாயமா, இல்லையா என்பது வேறு பிரச்சினை. ஆனால் இந்தச் சபை அங்கத்தினர்கள் உள்ளிட்டு 151 ஆவது பிரிவின்கீழ் பலரைக் கைது செய்திருக்கிறார்கள் என்றால் அதற்கு காக்னிசிபிள் அபென்சு இருக்க வேண்டும். அதன்படி அவர்கள் குற்றம் இழைக்கக்கூடும் என்ற அச்சம் இருக்குமானால்தான் கைது செய்ய வேண்டும். இண்டியன் பீனல் கோடில் உள்ள எந்த செக்ஷன்படி இது குற்றம் என்று அறிய முடியுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இது எல்லாம் கோர்டில் விவாதிக்கப்பட வேண்டிய விஷயம்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** பிரதம மந்திரி அவர்கள் வர இருந்த நேரத்தில் கறுப்புக்கொடி காட்ட இருந்தவர்களைக் கைது செய்தார்கள் என்பது இருக்கட்டும். கடந்த சில மாதங்களுக்கு முன்பு நமது முதல் அமைச்சர் அவர்களுக்கு கறுப்புக்கொடி காட்ட இருந்த தமிழ் அரசுக் கழகத்தினர்கள் கைது செய்யப்பட்டார்கள். இதற்கு முன்பு பல தடவைகளில் கறுப்புக்கொடி காட்டுவது நம் அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. கடந்த ஓராண்டு காலமாக நமது அரசு இத்தகைய கொள்கையை ஏன் கடைப்பிடிக்க வேண்டும்?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கறுப்புக்கொடி காட்டுவதை ஓர் உரிமையாக அரசாங்கம் ஏற்றுக் கொள்ள முடியாது. பிரதம மந்திரி அவர்கள் வந்தபோது கறுப்புக்கொடி காட்ட இருந்தவர்களைக் கைது செய்வானேன் என்பதற்கான காரணங்களை முன்பே விளக்கினேன். யாருக்கு காட்டுவதாக இருந்தாலும் அப்படிக் காட்ட அனுமதிப்பதினால் பொது அமைதிக்குப் பங்கம் ஏற்படும் என்ற நிலைமை ஏற்பட்டால் அரசாங்கம் அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டி இருக்கிறது.

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர்:** 1963-ல் மதுரைக்கு திரு. ராஜாஜி அவர்கள் வந்தபோது கறுப்புக்கொடி காட்டியவர்கள் கைது செய்யப்படவில்லையே, அதற்குக் காரணம் என்ன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதற்கு அந்த அரசாங்கத்தைக் கேட்க வேண்டும்.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** கனம் அவைத் தலைவர் அவர்களே, கறுப்புக்கொடி காட்டக் கூடாது என்பதற்காக இவர்கள் கைது செய்யப்பட்டார்களா? அமைதி இன்மை ஏற்படும் என்ற காரணத்திற்காகக் கைது செய்யப்பட்டார்களா?



2nd March 1965]

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கறுப்புக் கொடி காட்டுகிறவர்களினால் அமைதிக்குப் பாதகம் ஏற்படுமா, ஏற்படாதா என்பது வேறு விஷயம். அவர்கள் அமைதியாகவே காட்டினாலும் மற்றவர்களினால் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் என்றால் அதைத் தவிர்க்க வேண்டியிருக்கிறது.

**திரு. கே. ஏ. மதியழகன்:** இலங்கை வாழ் தமிழர்களுக்கு இங்கு ஏற்படும் வகையில் ஒரு உடன்படிக்கையில் பிரதம மந்திரி அவர்கள் கையெழுத்திட்டார்கள் என்ற காரணத்தால் மக்கள் மனத்தை இவ்விஷயம் கவரும் என்ற காரணத்தினால்தான் திரு. நல்லசிவம் முதலியவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் மறுக்க முடியுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் மறுக்கும் பிரச்சினை இல்லை. இதில் கனம் அங்கத்தினர் தம்முடைய அபிப்பிராயத்தையே வைத்துக் கொள்ளலாம்.

**திரு. சா. கணேசன்:** கனம் சசிவர்ணத் தேவர் அவர்கள் 1963-ல் ராஜாஜி அவர்கள் மதுரைக்கு வந்தபோது கறுப்புக் கொடி காட்டியவர்களை ஏன் கைது செய்யவில்லை என்று கேட்டதற்கு அந்த அரசாங்கத்தை கேட்கவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த அரசாங்கமும், அந்த அரசாங்கமும் ஒன்று என்றுதான் நான் கருதுகிறேன். ஆனதால் அப்போது கைது செய்யப்படாததற்குக் காரணம் என்ன என்பதை இந்த அரசாங்கம் கூறுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் 53-ம் ஆண்டு என்று நினைத்துச் சொன்னேன். 63-ம் ஆண்டு என்றால் இந்தக் கேள்வியில் இருந்தே எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்வதில்லை என்பது விளங்குகிறது.

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர்:** அப்போது கறுப்புக் கொடி காட்டியவர்களுக்கு போலீஸ்காரர்கள் உதவி செய்தார்கள் என்பதாவது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அது கனம் அங்கத்தினருக்குத் தெரிந்திருக்கலாம்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் அமைச்சர் கூறியதிலிருந்து ஒன்று தெரிகிறது. அப்போது கறுப்புக் கொடி காட்டியவர்கள் காங்கிரஸ்காரர்கள். அவர்கள் காட்டும்போது மற்றவர்கள் பலாத்காரத்தில் இறங்கமாட்டார்கள் என்பதனால் அவர்கள் கைது செய்யப்படவில்லையா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** யார் பலாத்காரத்தில் இறங்குகிறார்கள் என்பது பிரச்னை அல்ல. யார் நடவடிக்கை எடுத்தாலும் பலாத்காரம், அமைதி இன்மை, கொந்தளிப்பு ஏற்படும் என்றால் அதை அரசாங்கம் அனுமதிக்காது.

[2nd March 1965

*Chief Ministers' deliberations on communal parties' activities*

* 124 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state the details of the conclusions reached at the conference of the Chief Ministers of States held at New Delhi on 14th December 1964 to curb the activities of communal parties?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Government decline to answer the question in public interest.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** கனம் சபாநாயகர் அவர்களே, அந்த மகாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் இரகசியமாக இருக்கலாம். அந்த மகாநாட்டில் நடந்த விவாதத்தைப் பற்றியும் குறிப்பிடவில்லை. வகுப்புவாதம் பரப்பப்படுவதை தடுக்கவும், வகுப்பு ஒற்றுமையை ஏற்படுத்தவும் என்ன என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பது பற்றித்தான் நான் கேட்டேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்த மாதிரியான மகாநாடுகளின் மூலம் முடிவு ஏற்பட்டால் அதைத் தெரிவிக்கலாம். அதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் அங்கே என்ன பேசப்பட்டது, என்ன விவாதிக்கப்பட்டது என்றெல்லாம் சொல்வதற்கில்லை.

*Cloth Control Scheme*

* 125 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pelased to state :—

(*a*) the details of the cloth control scheme introduced recently in so far as it relates to this State; and

(*b*) the steps taken to ensure adequate supply of controlled categories of cloth in the State?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) A statement (*a*) is placed on the table of the House.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இந்த அறிக்கையின்படி நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு விற்கப்படுகிறதா என்பதைப் பரிசிலனை செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்த மாதிரி புகார் வந்தால் அதை உடனே பரிசீலிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. விலைக் கட்டுப்பாட்டுக்கு அதிகமாக விற்காமல் இருப்பதற்கு அகில இந்தியக் கமிட்டி ஒன்று போட்டு இருக்கிறோம்.

*Industrial Seminars*

* 126 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the names of the districts where industrial seminars have been held and action taken on the resolution of those seminars?

Printed as Appendix on pages 218-220.



2nd March 1965]

THE HON. SRI R. VENKATARAMAN : Industrial seminars were held in Madurai, Ramanathapuram, North Arcot and Salem districts and possibilities of further industrial development in these districts were discussed. No resolutions as such were passed at the seminars.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** இந்த அரங்கில் மதுரை சம்பந்தமாக என்ன என்ன தொழில் ஆரம்பிக்க வாய்ப்பு இருக்கிறது என்று பேசப்பட்டது. அப்படி என்றால் அவைகளை ஆரம்பிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** ஒரு புத்தகம் போட்டு இருக்கிறோம். கனம் அங்கத்தினர் அதைப் படித்துப் பார்த்தால் விவரங்கள் எல்லாம் தெரிந்து கொள்ளலாம்.

*State Farms*

* 127 *Q.*—SRI A. K. SUBBIAH : Will the Hon. the Minister for Home be pleased to state :—

(*a*) whether there is any proposal to start big State Farms on the model of Suratgarh Farm in Rajasthan in this State; and

(*b*) if so, the details of the same?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No Sir.

(*b*) Does not arise.

**திரு. ஆ. கு. சுப்பையா:** தஞ்சை மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கரா சர்க்கார் நிலம் தரிசாகக் கிடக்கிறது. அவற்றிலும் இம் மாதிரி பண்ணை வைக்க அரசாங்கம் யோசிக்குமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** எங்கெல்லாம் விதைப் பண்ணை வைப்பதற்கு லாயக்கான நிலம் இருக்கிறதோ அங்கெல்லாம் வைக்க கவனம் செலுத்தப்படும்.

**திரு. க. ர. நல்லசிவம்:** ஜப்பானிய விவசாய முறை சம்பந்தமாக விவசாயிகளுக்கு மத்தியில் பல வருடங்களாகப் பேசப்பட்டு வருகிறது. ஆனால் அதன்படி என்ன காரியங்கள் செய்தார்கள் என்று தெரியவில்லை. சமீபத்தில் இந்த மாதிரி ஒரு பண்ணையை ஆந்திர சர்க்கார் ஜப்பானிய ஒத்துழைப்புடன் ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது. அதே மாதிரி ஜப்பானிய அரசாங்க உதவியுடன் இங்கேயும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** ராஜஸ்தான் பண்ணை மாதிரி இங்கேயும் ஏற்படுத்த மத்திய அரசாங்கம் ஆலோசனை கேட்டது. அங்கு கிடைத்தது போல இங்கேயும் அதிகமாக நிலம் கிடைக்குமா என்று பரிசீலனை செய்யப்பட்டது. அங்கே 30 ஆயிரம் ஏக்கர் எடுத்திருக்கிறார்கள். அந்த மாதிரி இங்கே கிடைக்கவில்லை. பத்தாயிரம் ஏக்கராவது கிடைக்குமா என்று பார்த்தார்கள், அதுவும் கிடைக்கவில்லை. எங்கெல்லாம் நிலம் கிடைக்கிறது என்று பார்த்து இந்தப் பண்ணை ஏற்படுத்தப்படும். 210. விதைப்

[2nd March 1965

பண்ணை என்ற திட்டத்தில் 200 விதைப் பண்ணைகள் ஏற்படுத்தியாகிவிட்டது. இன்னும் பத்து பண்ணைகள் ஏற்படுத்த முயற்சி எடுக்கிறோம்.

9-00 a.m. **திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, சர்க்கார் விதைப் பண்ணைகள் ஏற்படுத்த தேவைப்படும் நிலங்களை எடுத்துக் கொள்ள, அப்படிப்பட்ட நிலங்கள் வேண்டுமென்று வற்புறுத்தாமல் நிலச்சுவான்தார்களைக் கேட்டு நிலங்களை எடுத்துக் கொள்ள அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்:** நிலங்களைக்கொடுக்க முன்வராவிட்டால் கட்டாயமாக அரசாங்கம் அவைகளை எடுத்துக்கொண்டு பயன்படுத்த ஏற்பாடு செய்து வருகிறது.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, அப்படி அதிகமாக நிலம் உள்ளவர்களிடமிருந்து நிலங்களை எடுத்துக் கொள்வதில் ஆட்சேபணையில்லை. ஆனால், சிறிய நிலச்சுவான்தார்களை, அதாவது மத்தியில் 10 ஏக்கர் 5 ஏக்கர் என்று குறைந்த அளவுக்கு நிலம் வைத்திருப்பவர்களை அவர்கள் சம்மதம் இல்லாமல் வெளியேற்ற அரசாங்கம் முயற்சிக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்:** சிறு நிலச்சுவான்தார்களைக் கட்டாயப்படுத்தி எடுத்துக்கொள்வதென்பது இல்லை. ஆனால் ஒரு பண்ணை ஆரம்பிக்கும்பொழுது நடுவில் கொஞ்சம் நிலம் அகப்பட்டுக் கொண்டால், அதையும் எடுத்துக்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படத்தான் செய்யும்.

**திரு. கரு. சீமைச்சாமி:** சர்க்கார் விதைப் பண்ணை என்ற போர்டு ஒன்றைப் போட்டு வைத்திருக்கிறார்கள். அந்த போர்டுக்குக் கீழே உள்ள நிலத்தின் வளத்தைப் பார்த்தால் சகிக்கவேயில்லை, நன்றாகவும் இல்லை. அப்படி போர்டு போட்டிருக்கும் இடத்திலாவது நல்ல உரத்தைப் போட்டு அந்த நிலத்தை வளமுள்ளதாக ஆக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன். சர்க்கார் பண்ணை ஒரு மாடலாக இருக்க வேண்டும். ஜனங்களுடைய கண்ணுக்குப்படுகிற மாதிரி உள்ள போர்டு போட்டுள்ள நிலங்களையாவது வளமுள்ளதாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்:** கனம் சீமைச்சாமி அவர்கள் எத்தனை விதைப் பண்ணைகளைப் பார்த்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. எல்லா விதைப் பண்ணைகளையும் நன்றாகப் போய்ச் சுற்றிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வி. ஆர். பெரியண்ணன்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிற நேரத்தில், விதைப் பண்ணைக்கு நிலங்களை எடுத்துக்கொள்ளும்போது மத்தியில் ஒரு ஏக்கராவாக இருந்தால் என்ன செய்வது. அதையும் எடுத்துக்கொள்ள வேண்டியதுதான் என்று சொன்னார்கள். அப்படி எடுத்துக்கொள்ளும்பொழுது,



2nd March 1965]

பணம் கொடுப்பதற்குப் பதிலாக, பக்கத்திலேயே நிலங்களைக் கொடுத்து விடுவது போன்ற ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்:** அரசாங்கத்தின் புறம்போக்கு நிலம் பக்கத்தில் இருந்தால் அரசாங்கம் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்.

**திரு. ம. கமலநாதன்:** தலைவர் அவர்களே, இந்த பயனில்லாத கிராம சகாயக் திட்டத்தை ஒழித்துவிட்டு அதிகமாக விதைப் பண்ணைகளை ஏற்படுத்தும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

**கனம் திரு. பூ. கக்கன்:** அது மாதிரி உத்தேசம் எதுவும் கிடையாது. ஆனால் கிராம சகாயக் திட்டத்தில் இந்த மாகாணம் வெற்றி கண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்:** தலைவர் அவர்களே, சர்க்கார் விதைப் பண்ணை முழுதும் நஷ்டத்திலேதான் போய்க்கொண்டிருக்கிறது. விவசாயத்தைப்பற்றி அரசாங்கத்திற்குத் தெரியாதா? என்ன காரணத்தினால் நஷ்டப்படுகிறது என்று சொல்ல முடியுமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** எல்லா விதைப் பண்ணைகளையும் லாபத்திற்காகவே இந்த அரசாங்கம் நடத்தவில்லை. ஆரம்பத்திலே கொஞ்சம் நஷ்டம் இருக்கலாம். ஆனால் எல்லாப் பண்ணைகளிலும் நஷ்டம் ஏற்பட்டது என்பதை ஒப்புக்கொள்ள முடியாது.

**திரு. கரு. சீமைச்சாமி:** அமைச்சர் அவர்கள் சொல்லும் பொழுது நஷ்டம் இருக்கும் என்று சொன்னார்கள். அது எப்படி இருக்கும். செய்வதைச் சரியாக செய்தால் நஷ்டம் இருக்க முடியாது.

MR. SPEAKER: In Napolean's dictionary the word "impossible" was not there.

**கனம் திரு. பூ. கக்கன்:** கனம் சபாநாயகர் அவர்களே, முதலில் அரசாங்கம் சில தனிப்பட்ட நிலங்களை விதைப் பண்ணைக்கு ஏற்பாடு செய்திருந்தது. அதிலே கொஞ்சம் நஷ்டம் வந்தது. ஆரம்ப கட்டத்திலே சில இடங்களிலே நிலங்களை நல்ல தரத்திற்கு கொண்டுவர முடியாது. நன்கு உரமிட்டு வரவரத்தான் உயர்நிலை அடையச் செய்ய முடியும். ஆரம்பக் கட்டத்திலே அதிகமாக லாபத்தை எதிர்பார்க்க முடியாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ம. கமலநாதன்:** தலைவர் அவர்களே, சூரத்கார் பண்ணை எப்படிப்பட்டது என்பதை அமைச்சர் விளக்குவார்களா?

**கனம் திரு. பூ. கக்கன்:** சூரத்கார் பண்ணைக்கு 30,000 ஏக்கர் உண்டு. அதிலே 22,000 ஏக்கர் விவசாயத்திற்கு என்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். 2,000 ஏக்கர் ஆர்ச்சர்ட்ஸுக்காகவும் 1,500

[2nd March 1965

*ஏக்கர் அனிமல் ஹஸ்பெண்ட்ரிக்காகவும், மீதியுள்ள 4,500 ஏக்கர் மண்ணைத் திருத்துவதற்கும், ரோடுகள் போடுவதற்கும், பில்டிங்ஸ் கட்டுவதற்குமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

***திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :*** *அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது, மத்தியிலே சிறு பகுதிகள், குறைந்த நிலங்கள் இருந்தாலுங்கூட அவற்றை எடுத்துக்கொள்ள வேண்டியதுதான் என்று சொன்னார்கள். அப்படியானால், ஒரு விதைப் பண்ணைக்குக் சொந்தமான நிலத்திற்குப் பக்கத்திலே உள்ள நிலத்தை பணத்திற்குப் பதிலாக நிலத்தையே கொடுக்க அரசாங்கம் முன்வருமா?*

***கனம் திரு. பூ. கக்கன் :*** *தனிக் கேள்வி போட வேண்டும்.*

***திரு. மீ. கலியாணசுந்தரம் :*** *அரசாங்கப் பண்ணையைப்பற்றியே பெரும்பாலும் விதைப் பண்ணையைப்பற்றியே இதுவரை விவாதித்து இருக்கிறோம். அது போகட்டும். விவசாயத் துறைக்குப் பொறுப்பு ஏற்று இருக்கக்கூடிய அமைச்சர் சூரத்கார் பண்ணையைப் போய் பார்த்திருக்கிறார்களா? நம்முடைய ராஜ்யத்திற்கு ஏற்ற மாதிரி 5,000 ஏக்கர் சேர்ந்தாற்போல் உள்ள தென் ஆற்காடு ஜில்லா, சேலம் ஜில்லா இருக்கிறது. அரசாங்கம் அப்படிப்பட்ட நிலங்களை எடுத்து பண்ணை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமா?*

***கனம் திரு. எம். பக்தவத்சலம்:*** *ரஷியாவிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் உதவி கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள். நான் விசாரித்துப் பார்த்து புள்ளிவிவரங்களையெல்லாம் பெற்றேன். சேலம் ஜில்லா ஆத்தூர் தாலூகா, மற்ற இடங்களிலும் 5,000 ஏக்கர் இருந்தால்கூட தண்ணீர் வசதிகள் இல்லை. நாங்குனேரித் தாலூகா பற்றியும் விசாரித்துப் பார்த்தேன். தண்ணீர் வசதியுள்ள நிலங்கள் எங்கேயும் புலப்படவில்லை.*

***திரு. பி. முருகையன் :*** *வாளவச்சனூர் அருகில் 400 ஏக்கர் நிலம் இருக்கிறது. சாத்தனூர் திட்டத் தண்ணீர் போகிறது. அந்த இடத்தையாவது பயன்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?*

***கனம் திரு. பூ. கக்கன்:*** *அந்த இடத்தைப்பற்றி எனக்குத் தெரியாது. வட ஆற்காடு ஜில்லாவில் 500 ஏக்கர் நிலம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அது எந்த இடம் என்று தெரியாது.*

*Recovery of value of chemical fertilizers*

* 128 *Q.*—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any scheme is under the examination of the Government for collecting in kind the value of the chemical fertilizers supplied to agriculturists on loan basis; and

(*b*) if so, the details thereof?



2nd March 1965]

***கனம் திரு. பூ. கக்கன்:*** *(அ) இல்லை.*

*(இ) வினாவிற்கு இடமில்லை.*

***திரு. கே. ஏ. மதியழகன்:*** *பரிசீலனை செய்தார்களா? அதனுடைய அவசியம் ஏற்பட்டதா?*

***கனம் திரு. பூ. கக்கன்:*** *பரிசீலனை செய்ய வேண்டியதில்லை. அது நடைமுறையில் நடக்காது.*

***திரு. எம். தண்டாயுதபாணி :*** *தலைவர் அவர்களே, அரசாங்க உரத்தின் விலை அதிகமாக இருக்கிற காரணத்தால் உரம் சரியாகப் பயன்படுத்தப்படவில்லை. விலையைச் சற்றுக் குறைத்துக் கொள்ளும் உத்தேசம் உண்டா?*

***கனம் திரு. பூ. கக்கன்:*** *அரசாங்கம் பரிசீலனை செய்து பின்னால் ஒரு முடிவுக்கு வரும்.*

***திரு. கே. ஏ. மதியழகன்:*** *விதைக்காக தானியத்தைப் பெற்றுக் கொள்வது என்ற திட்டம் என்ன காரணங்களால் ஏன் மேற்கொள்ளப்படவில்லை? காரணங்களை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?*

***கனம் திரு. பூ. கக்கன்:*** *என்ன காரணம் என்பதில்லை. பணம் அதிகமாகச் செலவாகும். அது நடைமுறையில் நடவாது.*

***திரு. ம. கமலநாதன்:*** *தலைவர் அவர்களே, சேலம் மாவட்டைத்தைப் பொறுத்தவரையில் கடன்கள் கொடுக்கிறபோது 30 சதவீதம் ரசாயன உரங்களுக்காகவே கொடுக்கப்பட்டு வருவதைப் போன்று மற்ற மாவட்டங்களிலும் அதை விஸ்தரிக்கத் திட்டம் உண்டா ?*

***கனம் திரு. பூ. கக்கன் :*** *இதுவரை உரம் எங்கெல்லாம் கொடுக்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதோ அங்கெல்லாம் கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யும்.*

***திரு. அ. ராகவ ரெட்டி:*** *இரசாயன உரப் பங்கீடு எந்தெந்த நேரத்திலே எந்தெந்தப் பகுதிக்கு எவ்வளவு தேவை என்பது சரியாகத் தெரியாமலே பங்கீடு நடக்கிறது. அதை ஒழுங்காக காலாகாலத்தில் பங்கீடு செய்வதற்கு அரசாங்கம் தகுதியான ஏற்பாட்டை இந்த வருஷத்திலாவது செய்வார்களா ?*

***கனம் திரு. பூ. கக்கன்:*** *காலாகாலத்தில் கொடுக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தினுடைய கட்டளை. ரெவின்யூ இன்ஸ்பெக்டர் பார்த்து உடனடியாக தாசில்தாருக்கு அனுப்புவார்கள். ரெவின்யூ இன்ஸ்பெக்டரிடமிருந்து வந்து ஒரு வாரத்திற்குள் தாசில்தார் அனுப்ப வேண்டுமென்ற கட்டளை இருக்கிறது.*

***திரு. அ. ராகவ ரெட்டி:*** *எந்த அடிப்படையிலே அந்த உரங்களை கொடுக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.*

[2nd March 1965

**கனம் திரு. பூ. கக்கன்:** எந்தெந்த அடிப்படை என்று சொன்னால் யார் யார் அப்ளை பண்ணுகிறார்களோ (கனம் சபாநாயகர்: டிமாண்டுக்குத் தகுந்தபடி) அதைப் பார்த்துக் கொடுக்கிறார்கள். ஒரு பகுதியில் ரிஜிஸ்டார்டு ஹோல்டர்ஸ் இருந்தால் வேறு யாருக்கும் கொடுக்க மாட்டார்கள். அவ்வாறு இல்லாத இடங்களில் மற்றவர்களுக்குப் பார்த்துக் கொடுக்கிறார்கள்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்:** சர்க்கார் நெல் கொள்முதல் திட்டத்தை வைத்திருக்கிறது. நல்ல நெல் கிடைக்குமென்ற நம்பிக்கை இருக்கிறது. ஆகவே, பண்டமாற்று முறையில் கெமிகல் பர்டிலைசரைக் கொடுத்து அதற்குப் பதிலாக நெல்லை வாங்கிக் கொள்வதை பற்றிப் பரிசீலிக்கப்பட்டதா?

**கனம் திரு. பூ. கக்கன்:** அதிலே அரசாங்கத்தின் பரிசீலனைக்கு இடம் இல்லை.

### கால்வாய்கள் புனரமைப்பு

*** 129 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தாமிரபரணி தீரத்தின் கால்வாய் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா? எப்பொழுது பூர்த்தியடையும்?

(இ) மணிமுத்தாறு திட்டத்தின்கீழ் உள்ள Reserve tank கள் மொத்தம் எத்தனை?

(உ) அவைகளை பூரணமாக திட்டத்தில் சேர்ந்த குளங்களாக ஆக்குவதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) It has been proposed to take up nine channels for remodelling under the Tambaraparani System. Out of these, estimates for the remodelling of three channels, viz., the North Kodamelalagian channel, South Kodameralagian channel and Kodayar channel have been sanctioned by the Government and a portion of the works has been carried out during the last closure period. Further work will be done during the next closure period.

The proposals of the Chief Engineer (Irrigation) for the remodelling of three more channels, viz., Palayam channel, Marudur Keelakal channel and Marudur Melakal channel are under the consideration of the Government.

Proposals for the remodelling of the remaining three channels, viz., Kannadian channel, Tirunelveli channel and Nadhiyurni channel are under various stages of investigation.

(*b*) There are 39 tanks in the reserve list of Manimuthar Reservoir Project.

(*c*) The proposals for inclusion of the above 39 tanks under the Manimuthar system are under the consideration of the Government.



2nd March 1965]

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** சார், எந்த வருஷத்திலும் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு மழை குறைவு காரணமாக அறவே அணைகட்டுகளிலும் கால்வாய்களிலும் தண்ணீர் இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மழை காலத்தில் கால்வாய்களில் தண்ணீர் இல்லாத நிலைமையை உத்தேசித்து எல்லாக் கால்வாய்களின் புனரமைப்பு வேலைகளுக்கும் அரசாங்கம் உடனடியாக சாங்ஷன் கொடுத்து வேலைகளை உடனடியாக மேற்கொள்வார்களா?

**கனம் திரு. வெ. ராமையா:** இந்த வருஷம் திருநெல்வேலி ஜில்லாவில் மழை இல்லாமல் பாதகம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமையில் இந்த புனரமைப்பு வேலைகளை உடனடியாக மேற்கொள்ள என்னென்ன செய்ய வேண்டுமென்று பிரதம எஞ்சினியருடன் ஆலோசனை செய்து விரைவில் அரசாங்கம் ஒரு முடிவுக்கு வரும்.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** தாம்பிரபரணி சிஸ்டத்தில் இருக்கும் புஞ்சை நிலங்களை லோகலைஸ் செய்து நஞ்சை நிலமாக ஆக்கச் செய்வதற்கும் கால்வாய் புனரமைப்புக்கும் சம்பந்தம் இருப்பதால் அந்த நிலங்களை நஞ்சையாக லோகலைஸ் செய்யும் காரியம் தாமதப்படுவது உண்மையா? அவற்றை நஞ்சையாக்க துரித ஏற்பாடு செய்வார்களா?

THE HON. SRI V. RAMAIAH: Sir, I want a separate question.

**திரு. ஆ. கு. சுப்பையா:** திருநெல்வேலி ஜில்லாவில் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டு பயிர்கள் எல்லாம் காய்ந்து விட்டன. அந்த விவசாயிகளுக்கு நில வரியை வஜா செய்ய அரசாங்கம் உத்தேசிக்குமா?

**கனம் திரு. வெ. ராமையா:** போதிய மழை இல்லாத காரணத்தால் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இதிலே கவனம் செலுத்தக் கூடிய முறையிலே போர்டு மெம்பர் உட்பட மற்றவர்களும் சென்று பார்த்து வந்து ஒரு அறிக்கை கொடுத்த பிறகு என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி அரசாங்கம் ஒரு முடிவுக்கு வரும்.

**திரு. க. ர. நல்லசிவம்:** இந்த வாய்க்கால்கள் 'ரீ-மாடலிங்' மட்டும் செய்யப்படுகிறதா அல்லது புதிய முறையில் தண்ணீர் குறைவாகப் பாய்ச்சி பயிரிடுவது என்ற முறையில் அந்த அடிப்படையில் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றனவா?

**கனம் திரு. வெ. ராமையா:** இங்கு மேற்கொள்ளப்படக் கூடிய வேலை 'ரீ-மாடலிங்' தான். இருக்கக்கூடிய நீரைக் கொண்டு எவ்வாறு சாகுபடி செய்வது என்பதைப் பற்றியெல்லாம் தீவிரமாகக் கவனித்து கம்ப்ளீட் ஆக ரீ-இன்வெஸ்டிகேட் செய்து, வைகை போன்ற இடங்களில் செய்வதைப் போன்று செய்ய வேண்டுமென்று நினைக்கிறேன். அதற்காக இப்போது நடக்கக் கூடிய வேலையை நிறுத்தி விடத் தயாராக இல்லை.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கால்வாய் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கிறபோதே, இந்த வேலைகள் பூர்த்தி அடைகிற போது தாம்பிரபரணி திரத்தில் எத்தனை ஆயிரம் ஏக்கர் நிலங்கள் தண்ணிர் வசதி பெறும் என்ற கணக்கை அரசாங்கம் வைத்திருக்கிறதா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** திருநெல்வேலி ஜில்லாவில் இப்போது இருக்கக்கூடிய பாசன முறையின்கீழ் எவ்வளவு ஏக்கர் சாகுபடி செய்யமுடியும் என்ற எஸ்டிமேட்தான் இருக்கின்றன. ஆனால் இன்னும் அதிகமான ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கச் செய்யவேண்டுமென்று விரும்புகிறேன். அதற்கு இன்னும் தீவிரமாக இன்வெஸ்டிகேட் செய்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** ஸ்பெஷல் மைனர் இரிகேஷன் ப்ரோகிராம், ஃபுட் புரொடக்ஷன் ஆகிய இரண்டு துறைகளிலிருந்தும் வேலைகளை, ஜமீன் ஒழிப்புப் பிராந்தியங்களில் மராமத்து செய்கிறார்கள். மராமத்து செய்யப்பட்ட இடங்களில் ரீ-மாடலிங், ரீ-கன்ஸ்ட்ரக்ஷன் மேற்கொள்ள சர்க்கார் யோசிக்குமா ?

THE HON. SRI V. RAMAIAH : Sir, I want a separate question, as this supplementary does not arise from the main question.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** மணிமுத்தாறுத் திட்டத்தின் கீழ் ரிசர்வ் லிஸ்டில் இருக்கக்கூடிய 39 டாங்குகளையும் முறையான டாங்குகளாக சேர்த்து கொள்ள அரசாங்கம் பரிசிலனை செய்வது ஒருபுறம் இருக்க, அந்தக் குளங்கள் எல்லாம் இணைப்புக் கால்வாய்களாகப் பூர்த்தி அடையாமல் இருந்தால் அந்த வேலைகளைத் துரிதமாகச் செய்ய அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

**கனம் திரு. வெ. ராமைய்யா:** தண்ணீர் கொடுக்கும் முடிவு வந்தவுடன் இணைப்புக் கால்வாய்களை ஏற்படுத்துவதில் கஷ்டம் இருக்காது.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** தாம்பிரபரணி திட்டத்தில் இந்தக் கால்வாய்த் திட்ட வேலைகள் தாமதம் அடைந்திருப்பதன் காரணமாக திருச்செந்தூர் தாலுகாவில் இந்த ஆண்டு ஏதோ பத்தாயிரம் ஏக்கருக்குத் தண்ணீர் இருந்தாலும்கூட அவசரமாகக் கிடைக்காத காரணத்தால் பயிர் தீய்ந்து விடுவதைப் பாதுகாக்க முடியாத நிலை இருக்கிறது. இந்தக் கஷ்டத்தைத் தவிர்க்க துரிதமாக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**கனம் திரு. வெ. ராமைய்யா:** முதலிலேயே விவரமாகக் கொடுத்திருக்கிறேன். கனாலை ரீ-மாடலிங் செய்துதான் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். அந்த வகையில் மூன்று கனால்களை முதலிலே எடுத்துக் கொண்டார்கள். அடுத்த மூன்றுக்கு அரசாங்கத்தின் அங்கீகாரம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். வேகமாகச் செய்ய வேண்டுமென்பதை ஒப்புக் கொள்கிறேன்.



**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் :** திருநெல்வேலி ஜில்லாவில் மழை இல்லாமல் நஞ்சைகள் எல்லாம் அதிகமாகத் தீய்ந்து விட்டதால் இந்தத் தருணத்தில் பஞ்ச நிவாரண வேலையாக அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கக் கூடிய வகையில் கால்வாய்ப் புனரமைப்பு வேலைகளை ஒன்றிரண்டு மாதங்களுக்குள்ளாக எடுத்துக் கொள்ள அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா:** இப்போது இருக்கக்கூடிய நிலையைப் பயன்படுத்தி துரிதமாக வேலையைச் செய்ய வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். எங்கெங்கு எஸ்டிமேட்ஸ் பூர்த்தியாகி இருக்கிறதோ அங்கெல்லாம் துரிதமாக வேலைகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இந்த வேலை நடைபெறுததால் பாதிக்கப்பட்டிருக்கும் பகுதிகளில் கிஸ்தி பாக்கி கட்டாயப்படுத்தி வசூல் செய்வதாக தகவல் வந்திருக்கிறது. அந்த பாக்கி வசூல் செய்வதை ஒத்தி போடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா:** வேலை நடந்த பகுதி நடக்காத பகுதி என்ற பிரச்சினை இல்லை. இந்த ஆண்டு திருநெல்வேலி ஜில்லாவில் போதிய மழை இல்லை. அதனால் விவசாயிகளுக்கு பாதகம் ஏற்பட்டிருக்கிறது. இதை எல்லாம் முறையாகப் பரிசிலனை செய்யவேண்டும் என்பதற்காக போர்டு மெம்பர் ஒரு சில தினங்களுக்கு முன்பு அங்கு போய்ப் பார்த்து என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பதற்காக சென்றிருக்கிறார்கள். அவர்கள் ஆலோசனையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஏதோ கிஸ்தி வஜா மட்டும் செய்து விட்டால் போதாது. அங்குள்ள ஏழை விவசாயிகளுக்கு அடுத்த பருவ மழை வரை வேலைவாய்ப்புகள் தேடிக் கொடுக்க வேண்டும். ஆகவே இதை அதி தீவிரமாக கவனிக்க வேண்டுமென்றுதான் போர்டு மெம்பரை போய் பார்த்து வரச் சொல்லியிருப்பது.

*Implementation of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1963.

* 130 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state with reference to Legislative Assembly Question No. 235 answered on 12th March 1964—

(*a*) the present stage of the steps taken to implement the Madras Inam Estates (Abolition and Conversion into Rotwari) Act, 1963;

(*b*) whether the rules have been issued under this Act; and

(*c*) if not, the reasons for the delay?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The Government have sanctioned the appointment of staff for settlement operations under the Act. The rules under the Act have also been issued.

(*c*) Does not arise.

[2nd March 1965

திரு. மீ. கலியாணசுந்தரம்: இந்த விதிகள் பிறப்பிக்கப்பட்டு பத்து தினங்கள்தான் ஆகிறது. ஒன்றரை ஆண்டுகள் கழிந்தாவது அரசாங்கம் இவ்வளவு வேகமாக விதிகள் பிறப்பித்ததற்கு நன்றிதெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக நிர்வாகத்தில் சிலரை நியமித்திருப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் நியமிக்கப்பட்டு பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதில் இனாம் எஸ்டேட் அபாலிஷன் ஆக்ட் முக்கியமானது. அதை அமுல் நடத்த ஏன் உத்தரவுகள் பிறப்பிக்கப்படவில்லை?

THE HON. SRI V. RAMAIAH: I will read my answer again so that the hon. Member can understand it.

"The Government have sanctioned the appointment of staff for settlement operations under the Act".

இப்போது எடுக்காமல் இருந்தால் விரைவில் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இவை சம்பந்தப்பட்டதில் இனாம் எஸ்டேட்ஸ் அபாலிஷன் ஆக்ட்தான் முக்கியமானது. மற்ற சட்டங்கள் பிப்ரவரி 15-ம் தேதியில் இருந்து அமுலுக்கு வருகிறது என்று உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு கெஸட்டில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தச் சட்டத்தை பகுதி பகுதியாக அமுல் நடத்தலாம் என்று உத்தரவிட அரசாங்கத்திற்கு அதிகாரம் இருந்தும், இதுவரையிலும் எந்தவித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. இப்படி இந்தச் சட்டத்தைப்பற்றிய உத்தரவுகள் பிறப்பிக்கப்படவில்லை என்றால் இந்தச் சட்டத்தை திருத்தியும் பிரயோஜனமில்லை. அதிகாரிகளை நியமித்தும் பிரயோஜனம் இல்லை குறிப்பாக அமைச்சர் அவர்களின் தொகுதியான புதுக்கோட்டைப் பகுதிக்கு இது முக்கியமானது. அவருக்கு அங்கே சங்கடமும் ஏற்படும். ஆகவே இந்தச் சட்டத்தை அமுல் நடத்த எவ்வளவு காலத்திற்குள் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று அறியலாமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: அதில் விசேஷ சங்கடங்கள் என்பது எல்லாம் பிரச்சினையல்ல. இந்தச் சட்டத்தின் விதிமுறைகள் ரெடியாக இருக்கிறது. அதை துரிதமாக நடைமுறைக்கு கொண்டுவர வேண்டுமென்று முயற்சிக்கப்படுகிறது. பிப்ரவரி 15-ம் தேதியில் இருந்து ஒரு set of rules தயாராகி நடைமுறைக்கு கொண்டு வந்திருக்கிறோம். மீதி விரைவில் நடைமுறைக்கு வரும் என்பது என் நம்பிக்கை.'

SRI R. V. SWAMINATHAN: Sir, may I know from the Hon. Minister the reason for the delay in framing the rules though the Act was passed more than a year ago? What is the real difficulty?

THE HON. SRI V. RAMAIAH: Rules have to be framed and then published. It has taken some time.



2nd March 1965]

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஒன்றரை ஆண்டுகள் கழிந்து விதிகள் பிறப்பிக்கப்பட்டு விட்டன. இதில் முக்கியமான சட்டம் இனாம் எஸ்டேட்ஸ் அபாலிஷன். அதில் மூன்றாவது பிரிவில் என்ன இருக்கிறது என்றால் அரசாங்கம் அவ்வப்போது உத்தரவுகள் பிறப்பித்து அமுல் நடத்த வேண்டும் என்றிருக்கிறது. அந்த உத்தரவுகள் இன்னும் பிறப்பிக்கப்படவில்லை. அந்தச் சட்டம் இருந்தும், விதிகள் பிறப்பிக்க அதிகாரம் இருந்தும் அது நடைமுறைக்கு வரவில்லை. அந்த உத்தரவுகளை எப்போது பிறப்பிப்பார்கள்?

கனம் திரு. வெ. ராமைய்யா: தனிக் கேள்வி போட்டால் அந்தத் தேதியை திட்டவட்டமாகச் சொல்ல முடியும்.

திரு. க. ர. நல்லசிவம்: இந்தச் சட்டங்கள் துரிதமாக அமுல் நடத்தப்படவில்லை. விதிகள் பிறப்பிக்கப்படவில்லை. ஆகவே, இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சட்டம் அமலுக்கு வந்ததற்குப் பின்னால் ஏதாவது விசேஷ பாதுகாப்பு கொடுக்க சர்க்கார் விசேஷமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: சட்டம் எப்போது நடைமுறைக்கு வந்ததோ அப்போதிருந்து அவர்களுக்கு அந்த பாதுகாப்பு இருக்கிறது.

திரு. செ. மாதவன்: இனாம் எஸ்டேட்ஸ் அபாலிஷன் ஆக்டில் பழைய பாக்கிகளை வசூலிக்க ஒரு தனி செக்ஷனிருக்கிறது. அப்பாயின்டட் டேட்டிலிருந்து அமுலுக்கு வரவேண்டும். செக்ஷன் 3-ன் படி நோட்டிபிகேஷன் வரவேண்டும். ஆனால் இந்த சட்டத்திற்கு நோட்டிபிகேஷன் வரவில்லை. இதனால் சட்டத்தில் குழப்பம் ஏற்படுகிறது. இதை நிவர்த்தி செய்ய அரசாங்கம் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறது?

கனம் திரு. வெ. ராமைய்யா: அங்கத்தினர் அவர்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால் அதை எழுதி அனுப்பினால் அதுபற்றி போதிய கவனம் செலுத்தப்படும்.

### பஞ்சாயத்துக்களிலுள்ள ரேடியோக்கள் (ரிப்பேர்)

* 131. கேள்வி— திரு. இரா. நாராயணன்: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்துக்களில் உள்ள ரேடியோவில் ஏற்படும் ரிப்பேர்களை பஞ்சாயத்தே திருத்திக்கொண்டு அதற்குரிய செலவை பஞ்சாயத்துக் கணக்கில் ஈடு செய்ய வகை செய்யும் உத்திரவு பிறப்பிப்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இல்லை.

திரு. இரா. நாராயணன்: பஞ்சாயத்துக்களில் இயங்கும் ரேடியோக்களில் ரிப்பேராகி மூன்று நான்கு மாதங்களாகியும் ரேடியோ சூப்பர்வைசர் ரிப்பேர் செய்வதில்லை. ஆர்.டி.ஓ.-வைக் கேட்டால் உங்கள் ஆபீஸுக்கு வந்து ரிப்பேர் செய்யப்படும் என்று

[2nd March 1965

உத்தரவு போடுகிறார்கள். எங்கள் பஞ்சாயத்தில் அப்படி உத்தரவு போட்டு இரண்டு மாதங்கள் ஆகின்றன. மக்கள் ரேடியோவை பயன்படுத்த முடியவில்லை, வேறு நலன்களைப் பற்றி அறிய முடியவில்லை. இந்த அளவில் ரேடியோவை வைத்திருப்பதில் பிரயோசனமில்லை. ஆகவே இது குறித்து சர்க்கார் கவனம் செலுத்தி தீவிர நடவடிக்கைகள் எடுப்பார்களா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** 17-12-1964-ல் பஞ்சாயத்து ரேடியோ ஆர்கனைசேஷன், ஸ்பேர் பார்ட்ஸை வாங்கி டிப்பார்ட்மெண்ட் மூலம் பஞ்சாயத்துக்களுக்கு வழங்கி சூப்பர்வைசர் மூலம் துரிதமாக ரிப்பேர்களை சரிசெய்ய உத்தரவு போட்டிருக்கிறோம். கனம் அங்கத்தினர் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தில் ஏதாவது கோளாறு இருந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனிக்கவில்லை என்றால் அதைத் துரிதப்படுத்த முயற்சி செய்கிறேன்.

**திரு. ம. கமலநாதன்:** ஒரு டிவிஷனுக்கு ஒரு ரேடியோ சூப்பர்வைசர் என்றால் ஒரு டிவிஷனுக்கு 300 முதல் 500 வரை பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. ரேடியோ இல்லாத பஞ்சாயத்து கிடையாது. ஆகவே ஒரு சூப்பர்வைசர் எல்லா ரேடியோக்களையும் ரிப்பேர் செய்வது என்பது சாத்தியமல்ல. ஆகவே கமிஷனர்களுக்கு ஓரளவு அதிகாரம் கொடுத்து தேவைப்படும் பொருள்களை வாங்கி ஆபீசில் வைத்து அவற்றை உடனடியாக சூப்பர்வைசரிடம் கொடுக்க வசதி செய்யப்படுமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** ஒரே சமயத்தில் எல்லா ரேடியோக்களும் ரிப்பேராவதில்லை.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** பஞ்சாயத்துக்களுக்கு கொடுக்கப்படுகிற ரேடியோக்களில் பழுது இருந்தாலும் இல்லாவிட்டாலும் 20 ரூபாய் வீதம் வாங்குகிறார்கள். அதை எந்த அடிப்படையில் வாங்குகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** நுட்பம் தெரிந்தவர்கள்தான் அதில் ஒலி குறைவாக இருக்கிறதா, நன்றாக இயங்குகிறதா என்று பார்த்து சரிசெய்ய முடியும். அவற்றைப் பார்த்து ஒழுங்காக பராமரிப்பதற்கும் சர்வீஸிங்-காகவும் 20 ரூபாய் கொடுக்கப்படுகிறது.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** ஒரே நேரத்தில் எல்லா ரேடியோக்களும் பழுதுபடுவதில்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒவ்வொரு நேரத்தில் ஒவ்வொரு ரேடியோ பாட முடியாத அளவிற்கு பழுது அடைந்து ஒரே சமயத்தில் பல ரேடியோக்கள் பழுதுபட்டு விடுகிறது. அதுகுறித்து தக்க நடவடிக்கைகள் எடுக்க முன்வருவார்களா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** அம்மாதிரி என் கவனத்திற்கு வரவில்லை.

**திரு. சா. கணேசன்:** இம்மாதிரி கஷ்டங்கள் இல்லாமல் இருப்பதற்கு அந்தந்த பஞ்சாயத்துக்களுக்கு அடுத்த நகரங்களில் அல்லது பெரிய கிராமங்களில் ரேடியோ ரிப்பேர்காரர்கள் இருக்கிறார்கள். கட்டுப்பாடு விதிக்காமல் ஆங்காங்குள்ள கமிஷனர்கள் அல்லது பிரசிடென்ட்கள், ரேடியோ பெட்டிகளை அங்கு கொடுத்து உடனே ரிப்பேர் செய்து வாங்கி விடலாம் என்பதற்கான அனுமதியை அரசாங்கம் அவர்களுக்குக் கொடுக்குமா?



2nd March 1965]

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** ஸ்டேட் ப்ராட்காஸ்டிங் டிப்பார்ட்மெண்ட் ரேடியோக்களை பராமரிப்பதுபற்றி கண்காணித்து வந்தது. 1961 மார்ச்சில் அதைக் கலைத்து விட்டோம். பின்பு ரேடியோக்களுக்கு பழுது ஏற்பட்டால் டவுனுக்கு அல்லது ஹெட்க்வார்ட்டர்சுக்கு சென்று T.A. போன்று செலவு செய்து பஞ்சாயத்துக்கள் சங்கடப்படுகின்றன என்பது சர்க்கார் கவனத்திற்கு வந்ததால் ஸ்பேர் பார்ட்ஸை சர்க்காரே வாங்கி பஞ்சாயத்துக்களுக்குக் கொடுத்து வேலைகளை துரிதப்படுத்த சமீபத்தில் அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறது.

**திரு. பி. கே. மூக்கையா தேவர்:** ஸார், இப்படி அடிக்கடி பஞ்சாயத்துக்களிலுள்ள ரேடியோக்கள் ரிப்பேர் ஆவதற்கு காரணம் என்ன, இதைப்பற்றி சர்க்கார் ஆராய்ந்ததா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** ரேடியோ என்பது மிக நுட்பமான எலக்ட்ரிக் சாதனம். அதை மிகவும் ஜாக்கிரதையாகவும் கவனமாகவும் ஹான்டில் செய்தால் தவறுகள் ஏற்படாமல் இருக்கும். **9-30. a.m.**

**கனம் சபாநாயகர்:** கேள்விகள் முடிவடைந்தன.

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## III.—POINT OF ORDER *re*: MOTION OF PRIVILEGE MOVED BY THE MINISTER FOR INDUSTRIES.

**திரு. செ. மாதவன்:** ஸார், ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் தொழில் அமைச்சர் அவர்கள் உரிமை பிரச்னை ஒன்றைக் கிளப்பினார்கள். அந்த உரிமைப் பிரச்னை ஒழுங்காக எழுப்பப்படவில்லை என்று சொல்ல விரும்புகிறேன். இதில் முக்கியமாக மூன்று பாயின்ட்களை தங்கள் முன்பு வைக்க விரும்புகிறேன். ஒன்று 184-வது விதிப்படி இந்தச் சபையின் அங்கத்தினர்தான் ஒழுங்குப் பிரச்னையை எழுப்ப முடியும். இரண்டாவது விதிப்படி யார் யார் இந்த சபையில் அங்கத்தினராக இருக்க முடியும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

" A member can raise a privilege motion under Rule 184 of the Legislative Assembly Rules. Who is a member has been defined under Rule 2. 'Member' means Member of the Assembly".

நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் இந்த லெஜிஸ்லேட்டிவ் அசெம்பிளியில் அங்கத்தினரா என்பதைப் பார்க்க வேண்டியிருக்கிறது. மேலும் எப்போது இந்த உரிமைப் பிரச்னையை கிளப்பலாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது இந்த சபை நடவடிக்கை தொடங்குவதற்கு முன்னால் எழுத்து மூலமாக தங்களுக்கு உறுப்பினர்கள் தெரிவித்திருக்க வேண்டும் என்று விதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த முறைப்படிப் பார்த்தாலும் இந்த விதி கனம் தொழில் அமைச்சர் அவர்

[திரு. செ. மாதவன்] [2nd March 1965

களால் மீறப்பட்டிருக்கிறது. மூன்றாவதாக் நேற்று, கவர்னர் அவர்களால் பட்ஜெட் சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட தினம், ஆகவே அதைத் தவிர வேறு எதையும் எழுப்பக் கூடாது என்று தாங்கள் மற்ற மோஷன்களை எல்லாம் ஒத்திவைத்தீர்கள். அவ்விதம் ஒத்திவைத்ததற்குப் பின்னால் கனம் தொழில் அமைச்சர் அவர்கள் இன்னொரு மோஷனை கொண்டுவந்தது சரிதானா என்பதைப் பாக்கவேண்டும். ஆகவே கனம் தொழில் அமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் எழுப்பிய உரிமைப் பிரச்னை இந்த சபை விதிகளுக்கு முரணாக இருக்கிறது, ஒழுங்கற்றது என்பதை த்ங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இது சம்பந்தமாக மற்ற தலைவர்கள் ஏதாவது பேச வேண்டுமென்றால் பேசட்டும், அதன் பின்னால் நான் பேசுகிறேன் . . .

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் சபாநாயகர் அவர்களே, நான் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியின் தரத்தைப்பற்றி அபிப்பிராயம் கூற விரும்பவில்லை. அது உரிமைப் பிரச்னைக்குரிய விஷயமா இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால் நேற்று உரிமைப் பிரச்னை கொண்டு வரப்பட்ட முறை தவறானது, ஆட்சேபகரமானது, சரியானது அல்ல என்பதுதான் என்னுடைய அபிப்பிராயமும்கூட. இந்தச் சபையின் அங்கத்தினர்கள்தான் இந்த சபையின் உரிமைப் பிரச்னையைப் பற்றி எழுப்ப முடியும். அவர்கள் அமைச்சர் என்கின்ற முறையில் அரசாங்கத்தினுடைய அலுவல்களை மட்டும்தான் பிரேரேபிக்க முடியுமே தவிர உரிமைப் பிரச்னையை எழுப்புவதற்கு அவர்களுக்கு உரிமை கிடையாது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். இதைப்பற்றி கனம் முதலமைச்சர் அவர்கள் பிரேரேபித்தால்கூட அரசாங்கக் கட்சித் தலைவர் என்கிற முறையில் இல்லாமல், இந்த சபையின் அங்கத்தினர் என்கின்ற முறையில் இந்த உரிமைப் பிரச்னையை பிரேரேபித்திருக்க முடியும். ஆகவே தொழில் அமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் உரிமைப் பிரச்னையை பிரேரேபித்திருப்பது சரியாக இருக்காது என்பது என்னுடைய அபிப்பிராயம். மேலும் கனம் சபாநாயகர் அவர்களுக்கு 192-வது பிரிவின் படி உரிமைப் பிரச்னை கொண்டு வருவதற்கு சுயமாக அதிகாரம் இருக்கிறது. அவர்களாகவே உரிமைப் பிரச்னை கொண்டு வருவதற்கு அதிகாரமிருக்கிறது.

" The Speaker has no eyes to see or ears to hear except as directed by the House."

சபையில் ஏதாவது ஒழுங்கீனம் நடந்தால் அதை சபாநாயகர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவந்தால் நடவடிக்கை எடுக்கலாம் என்றிருக்கிறது . . . .

MR. SPEAKER : The Speaker can even *suo motu* refer the matter to the Committee of Privileges.

SRI M. KALYANASUNDARAM : The rule says—

" Notwithstanding anything contained in these rules, the Speaker may *suo motu* refer any question of privilege to the Committee of Privileges for examination, investigation or report ".



2nd March 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

நேற்று நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்கு சபாநாயகர் அவர்களே அவர்களுக்கு சரியென்று தோன்றியிருந்தால் எது அவர்களுக்கு உசிதமாகப்படுகிறதோ அதன்படி ஏதாவது நடவடிக்கை எடுத்திருந்தால்கூட நன்றாக இருந்திருக்கும் . . .

**கனம் சபாநாயகர் :** சபாநாயகர் அவர்களுக்கு உசிதமா இல்லையா என்பதைப்பற்றியெல்லாம் பின்னால் பேசிக்கொள்ளலாம்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** அப்படி ஏதாவது முறைகேடு நடந்திருக்குமானால் சபாநாயகர் அவர்கள் நடவடிக்கை எடுத்திருப்பார்கள். . . .

MR. SPEAKER : I want to know this. Supposing some breach of privilege takes place before my very eyes and that too in this House itself. Can I not refer it to the Committee of Privileges?

SRI M. KALYANASUNDARAM : You can refer it, Sir, under Rule 192.

அதற்கு போதுமான அதிகாரம் இருக்கிறது. நேற்றைய ப்ரொஸீடிங்ஸைப் பார்க்கும்போது சபாநாயகர் அவர்களுக்கு உசிதம் என்று தோன்றினால் 192-வது விதிப்பிரகாரம் உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வருவதற்கு சபாநாயகர் அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது. அப்படிப் பார்க்கும்போது எதிர்க்கட்சித் தரப்பில் நடந்தது மட்டுமல்ல, ஆளும் கட்சி உறுப்பினர்கள் தரப்பில் எதிராக சொல்லப்பட்ட வார்த்தைகளையும் கவனித்திருப்பார்கள். என்று நினைக்கிறேன். 'மந்திரி சபை ஒழிக' என்றெல்லாம் கோஷம் போட்டதையும் அதற்குத் தூபம் போடுவது போல் 'வெட்கம்' வெட்கம்' என்று கோஷம் போட்டதையும் நான் சரி என்று சொல்லவில்லை. என்னைப் பொறுத்தவரையில் இவ்விதம் கோஷம் போட்டது தவறு என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். அதில் என்னைப் பொறுத்தவரையில் பொருத்தமும் கிடையாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன் . . . . இரண்டு பக்கத்திலிருந்தும் சத்தங்கள் எழுப்பப்பட்டது . . . .

MR. SPEAKER : I want the hon. Member only to point out the irregularities in the procedure. Just as the hon. Member Sri Madhavan has pointed out the irregularities, the hon. Member Sri M. Kalyanasundaram also can point out the irregularities.

SRI M. KALYANASUNDARAM : The first irregularity is that the Hon. Minister is not a member of this House. Secondly, the motion has not been moved by a member of this House after the Hon. Speaker has held that there was a *prima facie* case.

இறுதியாக நான் கூற விரும்புவது, இந்தச் சபையின் அங்கத்தினராக இல்லாத அமைச்சர் அவர்கள் இந்தச் சபையில் நேற்றைய தினம் கொண்டுவந்த உரிமைப் பிரச்னை செல்லுபடியாகாது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம்.

Sri K. A. Mathialagan rose—

Mr. SPEAKER: As requested by me earlier, I request the hon. Member to point out what the irregularities are.

திரு. கே. ஏ. மதியழகன்: இந்த உரிமைப் பிரச்னை சம்பந்தமாக மூன்று விஷயங்கள் சொல்லப்பட்டன. முதலாவதாக, கனம் தொழில் அமைச்சர் அவர்களுக்கு இந்தச் சபையில் உரிமைப் பிரச்சினை எழுப்புவதற்கு உரிமை இருக்கிறதா என்பது, இரண்டாவது எந்த சந்தர்ப்பத்தில் உரிமைப் பிரச்சினை எழுப்பவேண்டும் என்று சொல்லியிருக்கிறது, அவ்விதம் இருக்கும்போது அமைச்சர் அவர்கள் எந்தவிதமான அனுமதியும் இல்லாமல் உரிமைப் பிரச்னை எழுப்பியது சரியா என்பது, ஒன்று கனம் சபாநாயகர் அவர்களுக்கு எப்போது வேண்டுமென்றாலும் 'ஸூவோ மோட்டோவாக' உரிமைப் பிரச்சினையை கிளப்பக்கூடிய அதிகாரம் இருக்கிறது, அங்கத்தினர்களைப் பொறுத்தவரையில், பிரிவிலேஜ் என்கிற பகுதியில் 'டைம்' என்கிற விஷயத்தில் மிகத் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

"*Time for raising the matter*: A matter of privilege must be raised after the questions and before the list of the business for the day is entered upon."

என்று சொல்லப்பட்டிருக்கிறது. கேள்வி நேரத்திற்குப் பின்னால் இம்மாதிரிப் பிரச்னையை கிளப்பவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த முறையில் பார்த்தாலும் இந்தச் பிரச்னையைப் பொறுத்த வரையில் காலமும் மீறப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்ல, நேற்றையதின ப்ரொஸீடிங்ஸ்ஸைப்பற்றி அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கும் தாளில். . .

"Sri R. Venkataraman, Minister for Industries drew the attention of the Hon. Speaker to the conduct of some of the members of of the Opposition led by Sri V. Krishnamoorthy who had shouted improper slogans and requested that the matter be referred to the Committee of Privileges."

என்றிருக்கிறது. ஒன்று, அவர்களுக்கு இந்தச் சபையில் உரிமைப் பிரச்சினை கிளப்புவதற்கு உரிமை கிடையாது. இரண்டாவது, உரிமைப் பிரச்சினை எழுப்பிய தருணம் தவறானது, முறைப்படி எழுப்பப்படவில்லை, ஆகவே

"The matter of privilege raised is not in order".

என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, இதன் அடிப்படையில் தாங்கள் தீர்ப்பு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

Sri M. KALYANASUNDARAM: With regard to the third point raised by hon. Member Sri S. Madhavan, I am of the opinion that this House cannot surrender its right of raising a matter of breach of privilege at any stage of the sitting of the House. So, I am not in agreement with that part of the point of order raised by him.





Mr. SPEAKER: So, the hon. Member is disagreeing with the third point raised by Sri S. Madhavan.

Sri M. KALYANASUNDARAM: Yes, Sir.

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய சட்ட சபையினுடைய விதிகள் எல்லாம் கான்ஸ்டிட்யூஷன் அடிப்படையில் தான் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன—பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. கான்ஸ்டிட்யூஷனின் 208-வது ஆர்டிகிளில் கூறப்பட்டுள்ளதாவது—

"A House of the Legislature of a State may make rules for regulating, subject to the provisions of this Constitution, its procedure and the conduct of its business".

என்பதாகும். அதனால், கான்ஸ்டிட்யூஷனுக்குப் புறம்பான எந்த விதியையும் பிறப்பிக்க முடியாது. கான்ஸ்டிட்யூஷனுக்கு உட்பட்ட விதிகள் தான் பிறப்பிக்க முடியும். கான்ஸ்டிட்யூஷனை எடுத்துக் கொண்டால், 177-வது ஆர்டிகிளில்

"Every Minister and the Advocate-General for a State shall have the right to speak in, and otherwise to take part in the proceedings of, the Legislative Assembly of the State"

என்று இருக்கிறது.

"Right to take part in the proceedings of the Legislative Assembly".

என்றால், இங்கே மோஷன் மூவ் செய்வது, சட்ட சபையில் பில்கள் கொண்டுவருவது, அமெண்ட்மென்ட் கொண்டுவருவது, பாயின்ட் ஆஃப் ஆர்டர் ரைஸ் பண்ணுவது போன்ற எல்லா உரிமைகளும் உண்டு. ஒரே ஒரு உரிமை, அதாவது மேல் சபையில் அங்கத்தினராக உள்ள மந்திரிகளுக்கு சட்ட சபையிலும், சட்ட சபையில் அங்கத்தினராக உள்ள மந்திரிகளுக்கு மேல் சபையிலும், ஓட்டுச் செய்ய உரிமை கிடையாது. அது ஒன்றைத் தவிர மற்ற எல்லா உரிமைகளும் உண்டு என்று கான்ஸ்டிட்யூஷனில் சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் இந்த கான்ஸ்டிட்யூஷனையொட்டித் தான் நாம் ரூல்ஸ் போட்டிருக்கிறோம். நமது ரூல்ஸை எடுத்துக்கொண்டால், 68-வது ரூலில்—

"A matter requiring the decision of the Assembly is brought forward by means of a motion proposed by a member and a question stated or read out by the Speaker thereon." என்று இருக்கிறது. அதனால் இப்போது கனம் அங்கத்தினர் திரு. மாதவன் சொல்லுகிற அவர்களுடைய கருத்து, அவர்களுடைய எக்ஸ்ப்ளனேஷன் சரி என்று சொன்னால், 68-வது விதியின் பிரகாரம் நான் எந்த மோஷனையும் கொண்டுவர முடியாது. அவ்வாறு இருந்தால் அது கான்ஸ்டிட்யூஷனுக்கு விரோதம். அதே போல, 75-வது ரூல், (3)-வது சப்-ரூலில்

"A Member when replying shall confine himself to matters raised during the debate and shall not introduce new debatable matter".

[திரு ஆர். வெங்கட்டராமன்] . [2nd March 1965

என்று இருக்கிறது. அப்படியென்றால், இந்த ரெஸ்ட்ரிக்ஷன் என்னுடைய சகா, முதல் அமைச்சருக்குத் தான் அப்ளை ஆகுமே தவிர, எனக்கு அப்ளை ஆகாது என்ற இன்ட்டர்ப்ரட்டேஷன் வரும். அதே போல 74-வது விதியை எடுத்துக் கொண்டால்—

"... no member shall speak more than once on any motion ...".

என்று இருக்கிறது. இந்த சட்ட சபையில் அங்கத்தினராக இருக்கிறவர்தான் ஒரு தடவைக்கு மேல் பேச முடியாது, மற்றச் சபையில் அங்கத்தினராக இருக்கக் கூடியவர் ஒரு தடவை அல்ல, இரண்டு தடவை, மூன்று தடவை, எத்தனை தடவைகள் வேண்டுமானாலும் பேசலாம் என்ற இண்ட்டர்ப்ரட்டேஷன் வரும். 88-வது விதியை எடுத்துப் பார்த்தால்—

" Any member desiring to move for leave to introduce a Bill shall give five days' notice ..".

என்றிருப்பதில் 'மெம்பர்' என்று போட்டிருப்பதால் மேல் சபையில் இருந்து வருகிற மந்திரி பில்லை மூவ் செய்யக் கூடாது என்ற இண்ட்டர்ப்ரெட்டேஷன் வரும். அல்லது ஐந்து நாள் நோட்டீஸ் இல்லாமல் மூவ் செய்யலாம் என்ற இன்ட்டர்ப்ரிட்டேஷன் வரும் இதிலே கான்ஸ்ட்டிட்யூஷனைப் பொறுத்துத் தான் விதிகளை இண்ட்டர்ப்ரிட்டேஷன் செய்யவேண்டும். கான்ஸ்ட்டிட்யூஷனில் உரிமை தீவிரமாக அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த உரிமை " To take part in all proceedings " என்ற முறையில் எல்லாவித நடவடிக்கைகளிலும் பங்கு எடுத்துக்கொள்ளுவதற்கு மற்றச் சபை அங்கத்தினர்களுக்கு உரிமை உண்டு. ஆகையால் முதலில் சொன்ன பிரச்னை எழவில்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவது, சட்ட சபை நடந்துகொண்டிருக்கும்போது, சட்ட சபையிலேயே, சபாநாயகர் முன்னிலையிலேயே ஒரு ப்ரீச் ஆஃப் ப்ரிவிலெஜ் நடக்கிறது என்றால், அவ்வாறு நடக்கிற போது சபாநாயகர் தானாகவே ஆக்ஷன் எடுக்கலாம். அல்லது மற்றொரு மெம்பர் இந்த விதமாக நடந்தது என்று சபாநாயகருடைய கவனத்திற்குக் கொண்டுவரலாம். நேற்றைய ப்ரொஸீடிங்ஸை எடுத்துப் பார்த்தால், இந்த விதமான தவறான நடவடிக்கை நடந்தது என்று முதலில் சபாநாயகருடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். அதன் பிறகு சபாநாயகர் அவர்கள் அதற்கு வேண்டிய அப்ரோப்ரியேட் மோஷன் மூவ் செய்யலாம் என்று சொன்னார்கள். இந்த முறையில் விதிகளின்படி தான் செய்யப்பட்டிருக்கின்றது என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இதிலே எந்த விதமான பாயிண்ட் ஆஃப் ஆர்டரும் அரைஸ் ஆகவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. மாதவன் எழுந்தார்—

THE HON. SRI R. VENKATARAMAN : There can be no right of reply.



2nd March 1965]

MR. SPEAKER : As the Hon. Minister has referred to the Constitution, I want to hear the views of the hon. Member Sri S. Madhavan on this point also.

திரு. செ. மாதவன்: கனம் சபாநாயகர் அவர்களே, அரசியலமைப்புச் சட்டத்திலிருந்து பகுதிகளை கனம் தொழில் அமைச்சர் அவர்கள் வாசித்தார்கள். அப்படி வாசித்ததில் "ப்ரொஸீடிங்ஸ்" என்ற வார்த்தை கொடுக்கப்பட்டிருக்கிறதே அதற்கு அரசியலமைப்புச் சட்டத்திலே விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று அவர்கள் சொல்லவில்லை. ஒன்றை கனம் அமைச்சர் சபையினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார். அதை நானும் ஒத்துக்கொள்கிறேன். "மெம்பர்" என்ற வார்த்தைக்கு 2-வது விதியில் விளக்கம் செய்திருப்பது அல்ட்ரா வயர்ஸாக இருக்கலாமோ என்ற முறையில் வாதத்தை எழுப்பினார்கள். நேற்றே நானும் சிந்தித்தேன். பில்லைப் பொறுத்த வரையில் "மெம்பர் இன் சார்ஜ் ஆஃப் எ பில்" என்பதற்கு மினிஸ்டர் என்பதையும் சேர்த்து தனியாக டெஃபனிஷன் இருக்கிறது. அந்த முறையில் பில்களைப் பொறுத்த வரையில் எந்த மினிஸ்ட்டரும் கொண்டு வரலாம். ஆனால் 'மெம்பர்' என்ற வார்த்தை பல விதிகளில் போடப்பட்டிருக்கின்றது என்று பல விதிகளை கனம் அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். ஒத்துக்கொள்கிறேன். குறிப்பாக உரிமைப் பிரச்னையைப் பற்றிய விதிகளில் இருக்கும் 'மெம்பருக்கும்' இரண்டாவது விதியில் டிஃபைன் செய்யப்பட்டிருக்கிற 'மெம்பருக்கும்' ஒற்றுமை இருக்கிறது. ஒற்றுமை இல்லை என்று வாதாட விரும்பினால் இப்போதுள்ள விதி அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்று சொல்வதாகும். அரசியல் அமைப்பு சட்டத்திற்கு முரணானது என்று வாதிக்க இங்கே உரிமையில்லை என்று தாங்களே தெரிவித்திருக்கிறீர்கள். அதைப் பற்றி உயர் நீதி மன்றத்திலே சொல்லலாமே தவிர இந்த மன்றத்திலே அதைப்பற்றி விளக்கம் தரக்கூடாது என்று பல முறை தாங்களே தெரிவித்திருக்கிறீர்கள் . . .

MR. SPEAKER : The hon. Member is quoting a decision as mine. I do not think that I have given such a ruling.

திரு. செ. மாதவன்: ஏற்கனவே இந்த மன்றத்திலே செய்த சட்டம் அரசியலமைப்புச் சட்டப்படி செல்லாது என்ற வாதம் . . .

MR. SPEAKER : Can the hon. Member point out any single ruling of mine to show that in the procedure that we follow we can ignore the Constitution?

திரு. செ. மாதவன்: நான் சொல்ல வந்தது, ஒரு சட்டம் அல்லது ஒரு விதி இந்த மன்றத்தினால் செய்யப்பட்ட நிலையிலும், அது கான்ஸ்ட்டிட்யூஷனுக்கு முரண்பட்டது என்ற முறையில் சொல்லப்படுகிற வாதம் இந்தச் சபைக்கு ஒவ்வாது என்று பல முறை இந்த மன்றத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இப்போது

கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அரசியலமைப்புச் சட்டப்படி இந்த விதி இருக்கிறதா என்ற சந்தேகத்தைக் கிளப்பினார்கள். 2-வது விதிக்கும், கான்ஸ்டிட்யூஷனின் 177-வது ஆர்டிகிளுக்கும் முரண்பாடு இருக்கிறதா இல்லையா என்று கனம் அமைச்சர் அவர்கள் தெளிவாக விளக்கவேண்டும். முரண்பாடு இருக்கிறது என்று விளக்கினால் அல்லது 184-வது விதியில் உள்ள மெம்பருக்கும், 2-வது விதியில் உள்ள மெம்பருக்கும் உரிமைப் பிரச்னை சரியாகப் பொருந்தாது என்பதுதான் என்னுடைய வாதம்.

* **கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விதி அல்ட்ரா வயர்ஸ் என்று நான் சொல்லவில்லை. தங்களுக்கு நன்றாகத் தெரியும், இண்ட்டர்ப்ரட்டேஷன் ஆஃப் ஸ்டாச்சூட்ஸிலே கன்சிஸ்டெண்ட் இண்ட்டர்ப்ரட்டேஷன் கொடுக்கவேண்டும் என்பதும், அதற்கு அபத்தமான இண்ட்டர்ப்ரட்டேஷன் கொடுக்கக் கூடாது என்பதும் அடிப்படையான விதி.

The rule or law should be interpreted consistent with the corresponding legislation and the governing legislation and it cannot be interpreted in a different manner from the governing legislation.

இப்போது நான் எடுத்துக் காட்டியது, இந்த விதிகளையெல்லாம் கவனித்துப் பார்த்து, இவைகளிலே இருக்கிற 'மெம்பர்' என்பது 184-வது விதியிலே இருக்கிற 'மெம்பர்' என்பதற்குப் பொருந்தாது என்று சொன்னால் it leads to absurd construction. 64-வது வருகிற மெம்பருக்கு உண்டு, ஆனால் 184-வது விதியில் வருகிற மெம்பருக்கு ரெஸ்ட்ரிக்ஷன் இருக்கிறது, என்று சொன்னால் தவறான கன்ஸ்ட்ரக்ஷன் ஏற்படுகிறது. ஆகையால் இந்த கன்ஸ்ட்ரக்ஷன் கொடுக்கக் கூடாது என்றுதான் நான் விளக்கிச் சொன்னேன். அது தான் என்னுடைய வாதம்.

MR. SPEAKER: I have to inform the hon. Members that I expected this point of order even yesterday and I am already ready to deal with that. After hearing the hon. Members and the Hon. Minister, I have no doubt in holding that under Article 177 of the Constitution and also under the rules framed under the Constitution, the Hon. Minister for Industries has every right to move the motion because he has every right to take part in all proceedings except voting.

Another point raised by the hon. Member, Sri Madhavan, was, whether it could have been done yesterday when I ruled out the raising of the other motions and adjourned them to the next day. But if the hon. Members made it a point to disturb the proceedings of the House at that particular hour and the exigency arose, I do not think that there is anything wrong in putting the motion for referring the matter to the Committee of Privileges to the vote of the House. In the case of other matters, they can come leisurely with notice and nothing is lost if they are adjourned to the next





day. Anyhow I hold that it is in order. Yesterday I did not like to express my sentiment but now I would like to do so before this House.

Yesterday, immediately after I informed that the notices of Motions would be taken up the next day, the hon. the Leader of the Opposition represented that though the Opposition Members bowed to the decision of the Chair, they did not want to be present in the Assembly when the Hon. Chief Minister presented the Budget. Then the hon. Members of the Opposition staged a walk-out and some of the hon. Members led by Sri V. Krishnamoorthy, shouted improper and offensive anti-Government slogans. The noisy and disorderly conduct of these Members, besides being contrary to the sentiments expressed by the hon. the Leader of the Opposition, was rebellious and undesirable in the Members of a democratic institution. This disorderly conduct, apart from having brought down the dignity of this House, had also impeded the orderly business of the House. Their conduct was likely to bring this August Assembly into contempt and ridicule. The Members on both sides will agree with me that we are anxious to preserve the dignity and decorum of this House and its usefulness. Our own conduct, especially inside the House, should be such as to uphold the same and to enhance the reputation of this House. I am very sorry to say that the conduct of those Members who shouted slogans yesterday was just contrary to the dignity of this House and to the democratic way of conduct and it was a clear offence to this House. Thus those hon. Members have committed a gross breach of privilege of this House. The Hon. Sri R. Venkataraman drew my attention yesterday and this matter was referred to the Committee of Privileges by a decision of this House. Under Rule 192 of the Assembly Rules, I confirm those proceedings and make it free from doubts, if any, in the minds of hon. Members.

## IV.—MOTION EXPRESSING WANT OF CONFIDENCE IN THE MINISTRY.

MR. SPEAKER: Now, what about the other motions—adjournment motions and no-confidence motions?

SRI M. KALYANASUNDARAM: Sir, I want to make a submission. There are some adjournment motions given notice of by me and other hon. Members from this side of the House. There are also motions of censure given notice of under Rule 55 by me, the hon. the Leader of the Opposition and some other hon. Members. That is my information. Now I would request that the motions for censure may be disposed of first and the adjournment motions may be taken up later.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** கனம் அவைத் தலைவர் அவர்களே, நான் ஒத்திவைப்புத் தீர்மானமும் கொடுத்திருக்கிறேன். அதற்குப் பிறகு நம்பிக்கை இல்லாத் தீர்மானமும் கொடுத்திருக்கிறேன். நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை முதலில் எடுத்துக்கொள்ளும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : I think I can take it up. Has the hon. the Leader of the Opposition got anything to say on that?

SRI V. R. NEDUNCHEZHIYAN : Nothing, Sir.

MR. SPEAKER : What about the hon. Member, Sri Kalyanasundaram?

SRI M. KALYANASUNDARAM : Sir, I beg to move—

"That this House disapproves the policy of the Ministry in respect of the anti-Hindi agitation by the students."

That is my motion.

MR. SPEAKER : That is right. The motion given notice of by the hon. Leader of the Opposition is a more comprehensive motion, because it does not mention any specific aspects.

*திரு. சா. கணேசன் :* கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடையதும்கூட அப்படித்தான். எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிக்கொள்ளக்கூடியதாக, பொதுவான முறையில் இருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். அதோடு இப்பொழுது நிறுத்திக்கொள்கிறேன்.

*திரு. இரா. நெடுஞ்செழியன்:* நான் என்னுடைய தீர்மானத்தைப் படிக்க விரும்புகிறேன்.

MR. SPEAKER : I will read that motion.

SRI A. P. DHARMALINGAM rose—

MR. SPEAKER : The hon. Member, Sri Dharmalingam, can rest assured that I will not hush up things.

Now, has the hon. Member, Sri Sasivarna Thevar, got anything to say?

*திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :* கனம் சபாநாயகர் அவர்களே, நான் மந்திரி சபையின் மீது சில குற்றச்சாட்டுகளைக் குறிப்பிட்டு, 'ஸென்ஷர் மோஷன்' கொடுத்திருக்கிறேன்.

MR. SPEAKER : Has the Hon. the Leader of the House got anything to say?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have nothing to say.

MR. SPEAKER : The hon. the Leader of the Opposition, Sri V. R. Nedunchezhiyan, has given notice of the following motion—

"This House expresses its want of confidence in the Council of Ministers".



The hon. Member Sri M. Kalyanasundaram, has given notice of a motion to express disapproval of the policy of the Ministry led by Sri M. Bhaktavatsalam in respect of the anti-Hindi agitation by the students of the State.

The hon. Member Sri Saw Ganesan, has also gien notice of a comprehensive motion expressing want of confidence.

The hon. Member Sri T. L. Sasivarna Thevar, has also given notice of a motion under Rule 55, wherein he has pointed out various reasons for expressing want of confidence in the Ministry.

Now, the main object of all these motions is to criticise the Government for its administration of several departments or a particular department and also to vote it down out of office. In a Parliamentary form of Government, it is a valuable right of the Opposition. In such a Government, the Budget session in which financial business of the Government is transacted is also an important one. It is imperative that the financial business must be finished before the end of March 1965.

(Sri M. Kalyanasundaram rose.)

MR. SPEAKER : As usual, we have allotted six days for general discussion of the Budget and seventeen days for voting on Demands up to the 28th instant. Even then we will be hard-pressed for time and it will be very difficult to satisfy all the hon. Members. If the hon. Members of the Opposition want to criticise any Department of the Government with reference to the law and order situation or education or any other matter or any flaws in the administration, they can vote it down out of office, as they have got ample opportunities during the voting on Demands by bringing proper cut motions to that effect, and if the cut motions are carried out they are not, in any way, less important or less effective than any censure motion. When they have got such opportunities to criticise the Government and vote it down, the motions which have been given notice of amount in effect to obstruction of the business of the House and will be construed as misuse of the privilege. The object of all the rules of procedure is only to ensure fair debates and opportunities for all. Such opportunities exist during the voting on Demands. Considering the exigencies of the financial business and the number of opportunities available to the Opposition to vote down the Government and also in the interests of the proper functioning of an infant democracy like the one in our country, I am of opinion that these motions are not in order and, therefore, I rule them out of order. If the hon. Members think it necessary, they may give notice of fresh motions under Rule 55 at a later stage so that we may take them for consideration at the end of the Budget. 10-00 a.m.

*திரு. மீ. கலியாணசுந்தரம்:* கனம் சபாநாயகர் அவர்களே, தங்களுடைய முடிவு அறிவிக்கப்பட்டு விட்டது, அதன் மீது அபிப்பிராயம் சொல்வதற்கில்லை. ஆனால், இப்பொழுது நான் ஒரு விஷ

*[திரு. மீ. கலியாணசுந்தரம்]* [2nd March 1965

யத்தை என் சார்பில் தெளிவாக்க விரும்புகிறேன். பட்ஜெட் நிறைவேற்றுவதைத் தடை செய்யவேண்டும் என்பது என் தீர்மானத்தின் நோக்கம் இல்லை என்பதைமட்டும் தெரிவிக்கிறேன். பட்ஜெட் நிறைவேறுவதைத் தடை செய்வதற்கு யாராலும் முடியாது. அதுதான் பிரச்சினையாக இருந்தால், பட்ஜெட் விவாத நாட்களில் நாலு நாட்களைக் குறைத்துக்கொண்டு கூட இருக்கலாம். அந்த நாட்களில் இந்தத் தீர்மானங்களை விவாதத்திற்கு எடுத்துக் கொண்டு இருக்கலாம். "அப்ஸ்ட்ராக்ட்" பண்ண வேண்டும் என்பதல்ல நோக்கம். இந்தி கிளர்ச்சி சம்பந்தப்பட்ட மட்டில் . . .

MR. SPEAKER : What is it that the hon. Member is now referring to? The matter is already over.

SRI M. KALYANASUNDARAM : Sir, on a point of persona explanation.

MR. SPEAKER : The hon. Member is criticising my decision

SRI M. KALYANASUNDARAM : I am bowing to your ruling Sir, and I am not criticising it.

MR. SPEAKER : May I know under what provision the hon Member wants to make a personal explanation?

SRI M. KALYANASUNDARAM : I am one of the parties who have given notice of the motions.

MR. SPEAKER : No personal explanation is needed here. There is nothing personal against anybody.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** ஒரு நிமிஷம் எனக்குக் கொடுத்தால், விளக்கிவிடுவேன். இந்தி எதிர்ப்புச் சம்பந்தமாக . . .

MR. SPEAKER : I have already read out the motion to the hon. Member. It is very clear.

**திரு. மீ. கலியாண்சுந்தரம் :** விளக்கம் கொடுக்க ஒரு சந்தர்ப்பம் வேண்டும் என்று கேட்டேன்.

MR. SPEAKER : Everything has been dealt with already and I am not for discussing it over and over again.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** வணக்கத்தோடு தெரிவிக்கிறேன், தாங்கள் ரூலிங் கொடுப்பதற்கு முன்னால் எங்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்டிருக்கவேண்டும் என்பது என் அபிப்பிராயம்.

THE HON. SRI R. VENKATARAMAN : The Hon. Speaker asked the hon. Member Sri Kalyanasundaram and also the Leader of the House as to whether they have anything to say and that was the proper stage at which they should have made representations.



2nd March 1965]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, when you asked me, I said I had nothing to say particularly because the hon. Members in the Opposition, who had the opportunity, had nothing to say in favour of the motion. Therefore I said I had nothing to say.

SRI K. A. MATHIALAGAN : We were not given any opportunity to . . .

MR. SPEAKER : The matter is over, and over that there cannot be any *post mortem* now. We will have to think as to what can be done next as per rules. We have to come to some conclusion. I have already given my decision and if, on that decision, I allow another debate, then there will be no end to it. I, therefore think that there should be no more discussion on this point. We can take up the adjournment motions.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஆன் எ பாயிண்ட் ஆஃப் இன்பர்மேஷன். கனம் அவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் பேரில் தாங்கள் தீர்ப்பு வழங்கியிருக்கிறீர்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எந்த நம்பிக்கையில் கொடுத்தோம் என்றால், அவற்றைத் தாங்கள் எடுத்துக் கொள்ளும் போது விளக்கம் கூறலாம் என்ற தன்மையில் தான் கொடுத்தோம் . . . .

MR. SPEAKER : Again, the hon. the Leader of the Opposition is going into the merits of my ruling. I am sorry for that.

**திரு. இரா. நெஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, அப்படித் தாங்கள் அனுமதித்து இருந்தால், அரசாங்கத்தின் மீது எந்த எந்த அதிருப்தியைத் தெரிவிக்க வேண்டும் என்று நினைத்தோமோ அவற்றைக்கூற சந்தர்ப்பம் இருக்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் தங்கள் தீர்ப்பு அதற்கு இடம் கொடுக்கவில்லை. நாங்கள் தங்கள் தீர்ப்புக்குக் கட்டுப்பட என்றைக்கும் காத்திருக்கிறோம். எங்கள் அதிருப்தியைக் காட்டும் வகையில், வெளிநடப்புச் செய்வதைத் தவிர வேறு வழியில்லை. தங்கள் தீர்ப்புக்கு அல்ல, அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் அதிருப்தியைத் தெரிவிக்கலாம் என்று எண்ணினோம். அந்த வாய்ப்பு இல்லாததால், இப்பொழுது வெளிநடப்பு மூலம் எங்கள் அதிருப்தியைத் தெரிவிக்கிறோம் என்பதைப் பணிவன்போடு தெரிவிக்கிறேன்.

(எல்லா எதிர்க் கட்சி அங்கத்தினர்களும் சபையைவிட்டு வெளியே சென்றனர். காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள், மேசைகளைத் தட்டி ஆரவாரம் செய்தனர்.)

**திரு. சா. கணேசன்:** 'என்கரேஜ்' பண்ணுவதற்கு நன்றி.

MR. SPEAKER : The hon. Members (belonging to the Congress Party) do not seem to be solemn on such occasions. This is not a matter for laughter. There is a serious problem before us,

[2nd March 1965

THE HON. SRI M. BHAKTAVATSALAM : If hon. Members want to express their sense of resentment, they can express it outwardly.

### V.—ADJOURNMENT MOTIONS.

MR. SPEAKER : Let us now take up the adjournment motions.

THE HON. SRI R. VENKATARAMAN : As the hon. Members, who have given notice of them, are not in the House, they shall be deemed to have lapsed.

MR. SPEAKER : The adjournment motions given notice of by Sri V. R. Nedunchezhiyan, Sri Saw. Ganesan, Sri M. Kalyanasundaram, Sri K. R. Nallasivam and Sri M. V. Karivengadam are all deemed to have lapsed, since they are not here to move them.

### VI.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1965—66.

**திரு. ஏ. பி. சி. வீரபாகு :** கனம் சபாநாயகர் அவர்களே, நமது முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த பட்ஜட்டை நான் ஆதரிக்கிறேன்; ஆதரிக்கும் முகத்தான், சில விஷயங்களைத் தங்கள் மூலம் இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கனம் முதல் அமைச்சர் அவர்கள் தங்களுடைய பட்ஜட் உரையில், சென்ற 10, 15 ஆண்டுகளாக, நம்முடைய தமிழ் நாடு பொருளாதாரத் துறையிலே எவ்வளவு வேகமாக முன்னேறி வந்திருக்கிறது, அதற்குக் காரணம் தமிழ் நாட்டின் ஜனநாயகப் பண்பும், மக்களுடைய அமைதியான போக்கும் உறுதுணையாக இருந்து, முன்னேற்றத்திற்கு ஆக்கம் அளித்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே சமயத்தில், இந்தி எதிர்ப்பின் பெயரால், தமிழ் நாட்டிலே நடந்த, சில சம்பவங்களுக்கு வருத்தம் தெரிவித்து, ஜனநாயகத்தின் முறையான பாதுகாப்பிற்காக எதிர்க்கட்சிகளுடைய ஒத்துழைப்பையும் தன்னுடைய பட்ஜட் உரையிலே, அதன் முடிவிலே கோரியிருக்கிறார்கள். ஆனால், இரண்டு நாட்களாக இந்தச் சபையினுடைய நடவடிக்கைகளைக் கவனிக்கும்போது, தமிழ்நாட்டினுடைய அமைதியின்மைக்கு இந்தச் சபையே காரணமோ என்ற ஒரு ஐயப்பாடு எனக்கு எழுகிறது. இதற்கு முன்னால், உண்மையாகவே இந்தியினுடைய வளர்ச்சியினால், பொது மொழியினுடைய வளர்ச்சியினால், தமிழ்நாட்டிற்கும் தமிழுக்கும் பாதகம் வருமோ என்ற பொதுவான . . . .

**கனம் சபாநாயகர் :** 'அமைதியின்மைக்குச் சபையே காரணமோ' என்று கனம் அங்கத்தினர் அவர்கள் எல்லாவற்றையும் சேர்த்துச் சொல்வது போல் இருக்கிறது. That may be objected to by some.

*** திரு. ஏ. பி. ஸி. வீரபாகு :** கனம் சபாநாயகர் அவர்களே, 'இந்தச் சபையில் நடந்த இரண்டு நாள் சம்பவங்கள்' என்று நான் முதலிலேயே குறிப்பிட்டேன். ஒவ்வொரு வார்த்தையையும் எடுத்துக்கொண்டு அர்த்தம் செய்வதென்றால் அதுவே ஒரு 'எக்ஸ்ப்ளனேடரி நோட்' ஆகப் போய்விடும்.



2nd March 1965]

**கனம் சபாநாயகர் :** தவறாக எடுத்துக்கொள்ளக்கூடியவர்களும் இருக்கிறார்கள் என்பதற்காகத்தான் சொன்னேன்.

**திரு. ஏ. பி. சி. வீரபாகு :** Connotation of words சபையிலுள்ள கனம் அங்கத்தினர்களுக்குப் புரியும் என்ற காரணத்தால் அதை நான் குறிப்பிட விரும்பவில்லை. நான் சொல்லும் ஒவ்வொன்றையும் தங்கள் மூலமாகத்தான் சபைக்குச் சொல்கிறேன். இந்தச் சபையில் அசம்பாவிதமாக யார் நடந்துகொண்டார்களோ அவர்களுக்குத்தான் நான் சொல்லியது பொருந்துமே தவிர, இந்தச் சபைக்குப் பொருந்தாது என்று நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ்நாட்டிலே இந்தியினுடைய ஆதிக்கம் வலுவுற்றுத் தமிழுக்கு ஆபத்து வரும் என்று பொதுமக்கள் உண்மையாகவே கருதி, genuine fear அவர்களுக்கு ஏற்பட்டு, அதனால் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி இதுவரை அடைந்திராத அளவுக்கு வலுவுற்றிருந்ததோ என்று நான் எண்ணி இருந்தேன். ஆனால், இரண்டு நாட்கள் சம்பவங்களைப் பார்க்கும்போது, அரசியல் காரணத்திற்காக, ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு வன்முறையை ஒரு முறையாகக் கொண்டு தமிழ்நாட்டு அரசியலில் செயலாற்றுவதென்பது இப்பொழுது அதிகமாக ஆக்கம்பெற்று வருகிறது என்ற எண்ணம் எனக்கு ஏற்படுகிறது. ஜனநாயக வாழ்வில் அக்கறை உள்ளவர்கள், ஜனநாயகப் பாங்குகளையும், சம்பிரதாயங்களையும் வளர்க்க எண்ணுகிறவர்கள் இம்மாதிரிப் போக்கை ஆதரிக்க முடியாது. அதற்கு நேர்மாறாக இந்த மாதிரிப் போக்கை வளர்ச்சியுறாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினால் அது தவறாக இருக்காது என்றே நான் கருதுகிறேன்.

சரித்திரம் தான் நமக்குப் பெரிய வழிகாட்டி. ஃப்ரெஞ்ச் ரெவல்யூஷன் பதினெட்டாம் நூற்றாண்டிலே நடந்தது. ஜனங்கள் புரட்சி செய்தார்கள். புரட்சி செய்த அன்று 'பாஸ்டில் ப்ரிசனை' உடைத்து அங்கே இருந்த க்ரிமினெல்களை விடுதலை செய்தார்கள். அதற்குப் பின்னால் அந்த நாட்டில் என்ன ஏற்பட்டது? நெபோலியன் போனபார்ட்டி ஒரு பெரிய யதேச்சாதிகாரியாகி அந்த நாட்டினுடைய அதிகாரத்தையே கைப்பற்றினான். தமிழ் நாட்டிலே பிப்ரவரி 10-ந் தேதிக்குப் பின்னால் நடந்த இரண்டு, மூன்று நாட்களினுடைய சம்பவங்களைப் பார்த்த போது, இந்த நாட்டிலே ஆட்சி ஸ்தம்பித்துவிட்டதா, ஜனநாயக முறை தோற்றுவிட்டதா என்ற ஐயப்பாடு சிந்திக்கிறவர்களுடைய மத்தியிலே பரிணமிக்க ஆரம்பித்தது. அதிருஷ்டவசமாக, நம்முடைய சர்க்கார் விழிப்பாக இருந்த காரணத்தினால், இரண்டு மூன்று நாட்களிலேயே நிலைமையைச் சமாளித்துவிட்டது. ஆனால், ஜனநாயக முறையிலே உணர்ச்சிக்குக் கட்டுப்பாடு விதித்து, விவாதத்தின் மூலம், பரிசீலனையின் மூலம் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பது என்கிற அடிப்படையை மறந்த காரணத்தினாலோ என்னவோ, எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் விவாதத்திலே நம்பிக்கை வைக்காமல், உணர்ச்சியின் போக்கினைத் தூண்டக்கூடிய வகையிலே

இன்று வரையிலும் நடந்துவருகிறார்கள் என்பதை எண்ணும் போதுதான் ஜனநாயகத்தில் அக்கறை உள்ள என்போன்றவர்களுக்கு மிகுந்த வேதனையையும் கவலையையும் அளிக்கிறது. எதிர்க்கட்சி இல்லாத விவாதம் 'சப்' என்று தான் இருக்கும். ஆனால், கட்சி இல்லையே என்பதற்காக அரசாங்கம் நின்றுவிட முடியாது என்பதை எதிர்க்கட்சியினர் உணர்ந்துகொள்ள வேண்டும். இந்த நாட்டினுடைய ஜனநாயகப் பண்பையும் ஜனநாயக வரலாற்றையும் நல்ல முறையிலே அமைக்க வேண்டும் என்ற பொறுப்பு ஏதோ ஆளும் கட்சிக்கு மாத்திரம் தான் உண்டு என்று எதிர்க் கட்சியிலுள்ளவர்கள் நினைத்துக்கொள்ளக் கூடாது. ஜனநாயகம் இந்த நாட்டில் தோற்றால், அதற்கு அவர்கள்தான் அதிகப் பொறுப்பாளி என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஜனநாயக சம்பிரதாயங்களை நாம் ஏற்படுத்தும்போது, ஜனநாயகத்திற்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய காரியங்களைச் செய்துகொண்டே போனால், அவர்கள் ஜனநாயகத்தை விரும்புகிறார்களா என்பதிலே கூட எனக்கு ஐயப்பாடு ஏற்படுகிறது. ஃப்ரெஞ்ச் ரெவல்யூஷன் பற்றி நான் குறிப்பிட்டேன். அந்தச் சரித்திரச் சான்றை நான் சுட்டிக்காட்டினேன். வன்முறைப் புரட்சிகள் தேசத்திலே ஏற்பட்டால் அது யதேச்சாதிகாரத்தில் போய் முடியும். அது சரித்திரம் நமக்குக் காட்டுகிற மரபு, அது சரித்திரம் நமக்குக் காட்டுகிற படிப்பினை என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சபையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

நம்முடைய ஜீவாதார உரிமைகளைப்பற்றிக் குறிப்பிடும்போது, நமது ஒப்பற்ற தலைவர், காலஞ்சென்ற பண்டித நேரு அவர்கள் 'Democracy is our way of life' என்று சொன்னார். 'ஜனநாயகம் எங்களுடைய வாழ்க்கை முறை', என்றார். அரசியல் முறை மாத்திரமல்ல. இது எங்களுடைய வாழ்க்கை முறை என்று அவர்கள் சொன்னதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். யாரும் ஆட்சியாளராக இருக்கலாம். ஆனால், எல்லா மக்களும் சம சந்தர்ப்பமும், சம சூழ்நிலையும், அரசியலிலே பங்குகொள்ளுவதற்கான வாய்ப்பும் கொடுக்கின்ற இந்த ஜனநாயக முறையை நாம் சரியாகப் பயன்படுத்தாவிட்டால், கொடுங்கோலாட்சி ஏற்பட்டு, சம உரிமையைப் பறிப்பதற்குரிய, ஜனங்கள் மத்தியிலே இருக்கும் உரிமைகளைப் (ப்ரிவிலேஜெஸ்) பறிக்கக்கூடிய ஆட்சி முறைக்குக் கொண்டுபோய் விட்டுவிடும். ஆகவே, அவர்கள் ஜனநாயகத்திற்கு உதவி செய்யாமலிருப்பது மாத்திரமல்லாமல், ஜனநாயகத்திற்கே கெடுதல் விளைவிக்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டை இந்தச் சபையில் எதிர்க்கட்சியினர் மீது நான் சுமத்த விரும்புகிறேன். ஜனநாயகத்திற்குக் கெடுதல் விளைவிக்கக்கூடிய அரங்கமாக இந்தச் சபை விளங்க முடியுமா என்பதை அவர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். நாட்டிலுள்ள சிக்கலான பிரச்னைகளைக் குறித்து விவாதித்துத் தீர்வு காண்பதற்குரிய ஆலோசனைகளை எடுத்துச்சொல்லி, எல்லோருடைய சம்மதத்தையும் (common consent) பெறுவதற்கான ஒரு விவாத அரங்கமாக விளங்கவேண்டிய இந்தச் சபையில் அவர்கள் இம்மாதிரி நடந்துகொண்டது ஜனநாயகப் போக்கா என்பதை





அந்த எதிர்க்கட்சி நண்பர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, தமிழ்நாட்டில் நடந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி, தமிழ் ஆக்கத்திற்காக அல்ல, இந்தி எதிர்ப்புக்காகவும் அல்ல, அரசியல் காரணத்திற்காக அவர்களையும் அறியாமல் ஜனநாயகத்திற்குக் கொடுக்கப்படுகிற பேரடி என்பதை நான் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. ஆகவே, இந்தி மொழி பிடிக்காமல் இருக்கலாம். இந்தி மொழியைக் குறித்துக் கருத்து வேற்றுமை இருக்கலாம். இந்தி மொழியை எந்த விதமாகக் கொண்டுவர வேண்டும் என்பதிலே கூட கருத்து வேற்றுமை இருக்கலாம். ஆனால் இந்தி மொழியை இந்த நாட்டின் பொது மொழியாக ஏற்றுக்கொள்கிறவர்களும் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள் என்பதையும் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். கருத்து வேற்றுமை இருக்கலாம். ஆனால், 'இந்தி வேண்டாம் என்று நான் சொல்கிறேன், ஆகவே, எல்லோருக்கும் இந்தி வேண்டாம்' என்று சொல்லக்கூடிய சூழ்நிலையைத் தமிழ்நாட்டில் அவர்கள் தோற்றுவித்தால், அது அராஜக நிலை அல்லவா? யதேச்சாதிகாரப் போக்கு அல்லவா என்பதை அவர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். சமீபத்தில் நாட்டில் நடந்த கிளர்ச்சி என்ன? 'தமிழுக்கு ஆபத்து வருகிறது' என்று மாணவர்களிடையே சொல்லப்பட்டது. ஆனால், அதே நேரத்தில், 'ஆங்கிலம் நீடிக்கவேண்டும்' என்றும் சொல்லப்படுகிறது. தமிழை ஆட்சிமொழியாக்கவேண்டும் என்று கிளர்ச்சி இல்லை. ஆங்கில மொழியை இந்தியாவின் பொது மொழியாக, இந்தியாவின் ஆட்சிமொழியாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒருசாரார் மாணவர்கள் மத்தியிலே சொல்லி பயத்தை ஏற்படுத்தினார்கள். ஆங்கிலம் படித்தவர்கள், ஆங்கிலம் படிக்கின்றவர்கள் அவ்வாறு மாணவர்களைத் தூண்டினார்கள். இந்தி வேண்டாம் என்று சொல்பவர்கள் யார்? தமிழ் மாத்திரம் படித்தவர்கள், தமிழுக்கு ஆபத்து வருகிறது என்று சொன்னால் அவர்களுக்குச் சமாதானம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்களை ஒத்துக்கொள்ளச் சொல்லவில்லை. ஆனால், ஆங்கிலம் படித்தவர்கள், ஆங்கிலம் படிக்கிறவர்கள் என்ன சொல்கிறார்கள்? இந்த நாட்டின் பொது மொழி ஆங்கிலமாக இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள்.

ஆங்கிலத்தினால் தமிழுக்கு ஆபத்து வராது, இந்தியினால் தான் தமிழுக்கு ஆபத்து வரும் என்ற வாதத்தை ஒத்துக்கொள்ள முடியாது. அந்த வாதத்தை ஒத்துக் கொள்ள முடியாது என்ற காரணத்தினால்தான் விவாதத்தில் கலந்து கொள்ள மறுக்கிறார்கள். விவாதத்தில் கலந்து கொள்வதாக இருந்தால் அவர்கள் சமாதானம் அடையக் கடமைப்பட்டு இருக்கிறார்கள். ஆகையால் தமிழ் நாட்டில் நடந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி அரசியல் கிளர்ச்சி. தமிழ் நாட்டில் நடந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி ஜனநாயக விரோதக் கிளர்ச்சி. தமிழ் நாட்டில் நடந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி ஆங்கிலம் படித்தவர்களுடைய கிளர்ச்சி. தமிழ் நாட்டில் நடந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி ஆங்கிலம் படிக்கின்றவர்களுடைய கிளர்ச்சி. ஆங்கிலம் இந்த தேசத்தின் பொதுமொழியாக இருக்க வேண்டுமா, இல்லையா என்

[திரு. ஏ. பி. சி. வீரபாகு] [2nd March 1965

பதை இந்த முறையில் தீர்மானிக்க முடியாது. இத்தகைய முறையைக் கையாளுவது என்றால் அது தன்னுடைய ஸ்தானத்தையே இழந்துவிடக் கூடும். ஆங்கிலத்தையே வற்புறுத்த வேண்டும் என்று நினைக்கிற நமது முதல் அமைச்சர் அவர்களுக்கு ஒரு இக்கட்டான நிலைமை ஏற்படுகிறது. இந்த நிலைமையைச் சரியாக அரசாங்கம் புரிந்து கொண்டு செயல்பட வேண்டும். ஆளும் கட்சியைச் சேர்ந்த காங்கிரஸ்காரர்களாகிய நாம் இந்திதான் இந்த தேசத்தின் பொதுமொழி என்பதை இன்று ஒத்துக் கொள்ளவில்லை. மகாத்மா காந்திஜீ அவர்கள் என்றைக்கு இந்தியைப் பொது மொழியாகக் கொள்ள வேண்டும் என்று சொன்னார்களோ அன்றைக்கே தமிழ் நாடு மாத்திரம் அல்ல இந்த தேசத்தின் பல் வேறு பாகங்களில் உள்ளவர்களும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்குத் தமிழ் நாட்டில் எதிர்ப்பு ஏற்பட்டது என்றால் அது வங்காளத்திலும் ஏற்பட்டதே என்றால் அது ஸிம்பதடிக் ரீ ஆக்ஷன். பெங்காலில் முன்பு கிளர்ச்சி நடந்தபோது இங்கே வ. உ. சி. அவர்கள் கிளர்ச்சி செய்தார்கள். இப்படி தமிழ் நாட்டில் எது நடந்தாலும் அதன் பிரதிபலிப்பை வங்காளத்தில் பார்க்க முடியும். அப்படியே அங்கே நடப்பதின் பிரதிபலிப்பு இங்கே நடக்கும். இது சரித்திரபூர்வமானது. இங்கே நடந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி அங்கும் நடந்ததே என்றால் அது தேசீய ஒருமைப்பாடு உணர்ச்சி காரணமாக ஏற்பட்டதே. இந்த உணர்ச்சியே தேசீய ஒருமைப்பாட்டுக்கு உதவிகரமாக இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன். 1906-ல் பார்ட்டிஷன் ஆப் பெங்கால் கிளர்ச்சி அங்கே நடந்தபோது இங்கேயும் நடந்தது என்பதை நினைவு கூர்ந்தால் இங்கே இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி நடந்த போது தமிழ்நாட்டு மக்களுக்கு உணர்ச்சி பூர்வமான மதிப்புத் தர பெங்காலில் நடந்தது என்பதைப் புரிந்து கொள்ளலாம். இன்றைக்கு இந்தி பேசாத ராஜ்யங்கள் என்றால் ஆந்திரா, கேரளம், தமிழ்நாடு, பெங்கால், மகாராஷ்டிரா, பஞ்சாப், இவற்றில் உள்ளவர்கள் இன்றைக்கு இந்தியை ஏற்றுக் கொண்டுதானே இருக்கிறார்கள். ஆகவே இவர்கள் சொல்கிற வாதம் எவ்வளவு அபத்தமானது என்பதைப் புரிந்து கொள்ளலாம். பெங்காலில் நடந்தது என்றால் தமிழ் நாட்டு மக்களின் புண்பட்ட உள்ளங்களுக்குக் கொஞ்சம் ஆறுதல் அளிக்கக்கூடியதுதான் அது. ஆனால் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி மூலமாக ஜனநாயகப் போக்குக்கு மாறுதல் ஏற்படுவது மாத்திரம் அல்ல. இந்தி எதிர்ப்பு கிளர்ச்சியின் அடிப்படையில் இந்த நாட்டைப் பிரிக்க சூழ்ச்சி நடக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். இந்தி பொது மொழியாக வேண்டும். இந்தி பேசாத பகுதி மக்கள் விரும்புகிற வரையில் ஆங்கிலம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதற்கு முதல் அமைச்சர் அவர்கள் இடம் கொடுத்துவிட்டார்கள். ஆனால் ஆங்கிலம்தான் பொது மொழியாக இருக்கவேண்டும் என்று அவர்களை வற்புறுத்த நமக்கு என்ன உரிமை இருக்கிறது? எதிர் கட்சிக்காரர்களுக்கு தங்கள் கருத்தை வலியுறுத்த உரிமை உண்டு. பலாத்காரத்தின் மூலமாக பிறர் மீது தங்கள் கருத்தைத் திணிக்க என்ன உரிமை இருக்கிறது. ஒரு சமாதான ஒப்பந்தம் ஏற்படுவதை முறியடிக்க பலாத்காரத்தில் இறங்குவது என்றால் அதை நம்முடைய அரசாங்கம் அனு



2nd March 1965] [திரு. ஏ. பி. சி. வீரபாகு]

மதிக்கக் கூடாது. நம்முடைய சகோதரர்கள் எதிர்க் கட்சி மெம்பர்கள் இனிமேலாவது சட்டசபையில் நடத்துகிற கிளர்ச்சியை இன்றோடு கைவிடுவார்கள் என்ற நம்பிக்கையோடு இத்துடன் இவ்விஷயத்தை நிறுத்திக் கொள்கிறேன்.

பட்ஜெட் விவாதத்தின்போது நாட்டிலே இன்று இருக்கிற சிக்கலான உணவுப் பிரச்சினை பற்றிக்கூட அவர்கள் அக்கறை காட்டவில்லை. க்ரைஸ் ஃபார் மூன் என்று சொல்வார்களே சந்திரன் வேண்டும் என்று அழுவதைப்போல மொழிப் பிரச்சினையை வைத்துக் கிளர்ச்சி செய்கிறார்கள். இன்னும் திருமந்திரம் என்ற நூலை ஆதாரமாகக் காட்டி பதினெட்டு மொழியும் தமிழில் இருந்துதான் வந்தன என்று கூடச் சொல்வார்கள்.

**டாக்டர் பா. நடராஜன்:** அப்படி திருமந்திரத்தில் சொல்லவில்லை, பதினெட்டு பாஷையையும் படிக்க வேண்டுமென்றே சொல்கிறார்கள். நான் அந்தப் பாட்டைப் படித்து இருக்கிறேன். அதை மொழி பெயர்த்தும் வருகிறேன்.

**திரு. ஏ. பி. சி. வீரபாகு:** டாக்டர் அந்தப் பாட்டை படித்திருக்கிறார்கள். நான் அந்தப் பாட்டின் அர்த்தத்தையும் படித்து இருக்கிறேன். சைவ சித்தாந்த கழகத்தாரால் வெளியிடப்பட்டுள்ள புத்தகத்திலேயே இருக்கிறது. சீன மொழியும் கூட தமிழில் இருந்துதான் வந்தது என்று சொல்லக் கூடிய அளவுக்குதான் நிலைமை போகிறது. டாக்டர் எழுதுகிற புத்தகத்தில் வேண்டுமானால் அதை மறுக்கலாம். இப்படி மொழிப் பிரச்சினை எழுப்பப்படுகிற காரணத்தினால் முக்கியமாக உணவுப் பிரச்சினை கூட மங்கிப் போய்விட்டது. இடைக்காலத்தில் ஏற்பட்ட கஷ்டம் ஓரளவுக்கு நீங்கி இருக்கிறது என்றாலும் கூட இந்தப் பிரச்சினை தீர்ந்துவிட்டதாக நாம் நினைக்க முடியாது. காரணம் அன்றாடம் நமக்கு மூன்று வேளை உணவு தேவையாக இருக்கிறது. இது ஏதோ ஓராண்டு பிரச்சினை என்று கருதிவிட முடியாது. திருநெல்வேலி ஜில்லாவை எடுத்துக் கொண்டால் அங்கே உணவு அளிக்கக் கூடிய பிரதேசம் தாம்பிரபரணிப் பிரதேசம். அங்கும் வெள்ளாமை கம்மியாக இருக்கிறது. தஞ்சை ஜில்லாவில் நிறைய நெல் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் இன்றைய தினம் ஒரு ஜில்லாவைவிட்டு இன்னொரு ஜில்லாவிற்கு தானியம் போகக் கூடாது என்ற ரெகுலேஷன் இருக்கிறது. அதன் காரணத்தினால் இன்றுள்ள நிலைமை என்ன? தஞ்சை ஜில்லாவில் ஒரு ரூபாய் பன்னிரண்டு பைசாவுக்கு ஒரு படி அரிசி கிடைக்கிறது என்றால் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளவர்கள் இரண்டு ரூபாய் கொடுத்து ஒரு படி அரிசி வாங்க வேண்டியதாக இருக்கிறது. ஆனால் இன்றுள்ள சட்டம் என்ன? நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக விற்பதும் தப்பு. வாங்கிச் சாப்பிடுவதும் தப்பு. இந்தச் சட்டத்தைக் கொண்டு மக்கள் பயமுறுத்தப்படுகிறார்கள். பசியைப் பயமுறுத்த முடியாது. பணக்காரனைத்தான் பயமுறுத்த முடியும். சட்டத்திற்கு பயந்து பசி உண்டாகாமல் இருப்பது இல்லை. இதற்கு அரசாங்கம் பொறுப்பு இல்லை. நிலைமை அப்படித்தான் இருக்கிறது. அரசாங்கம் அதனுடைய சட்டத்தின்

10–30 a.m.

மூலமாகப் பொறுப்பைத் தாங்கிக் கொண்டிருக்கிறது. நான் ஒரு ஆலோசனை சொல்லிக்கொள்கிறேன். கம்யூனிஸ்டு அன்பர் ஒருவர் இங்கு இருந்தால் எனக்கு செகண்ட் பண்ணுவார். புரொடியூஸர்ஸ் மார்க்கெட் பிரைஸ் என்று ஒரு நிலையை நீங்கள் வைத்து விட்டால் நீங்களே இரண்டு நிலைமைகளையும் சரிசெய்ய முடியும். நான்கு லட்சம் ப்ரொக்யூர் பண்ணுகிறீர்கள். ஆனால் மொத்த விளைவு 40 லட்சம். மீதியுள்ள 36 லட்சம் கண்ட்ரோல் விலைக்கு விற்கப்படவில்லை என்பது இந்த 6, 7 மாத அனுபவத்திலிருந்து நமக்குத் தெரிகிறது. அப்படி விற்கப்படுவதை சட்ட ரீதியாகக் குற்றமாக்கிவிட்டு, குற்றத்தை தண்டிக்காமல் அகப்பட்டவர்களைத் தண்டித்துக் கொண்டிருப்பது சரியான முறையாகாது. பத்து லிட்டருக்கு மேல் கொண்டுபோகக் கூடாது என்று சொல்லப்படுகிறது. அப்படியானால் திருநெல்வேலியில் பட்டினி வந்துவிடும். ஆனால் இப்பொழுது அங்கு பட்டினி இல்லை. நாட்டிலே உற்பத்திப் பற்றாக்குறை என்று சொல்ல முடியாது. விலைவாசி ஏற்றம் அதிகமாகிக் கொண்டு போவதைத் தடுக்கிற நிலைமையினால்தான் பற்றாக்குறை ஏற்படுகிறது. டிஸ்டிரிபியூஷன் பற்றாக்குறை என்று சொல்லலாமே தவிர உற்பத்திப் பற்றாக்குறை என்று சொல்ல முடியாது. நான்கு லட்சம் ப்ரொக்யூர் பண்ணுவதற்குப் பதிலாக ஏன் 30 லட்சம் ப்ரொக்யூர் பண்ணக்கூடாது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** மார்க்கெட்டில் இருக்கிற சர்ப்ளஸ் அவ்வளவும் ப்ரொக்யூர் பண்ணுவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது.

**திரு. ஏ. பி. சி. வீரபாகு:** நீங்கள் சொல்வது சரி, இரண்டு மாதத்திற்குள் ப்ரொக்யூர் பண்ணவேண்டும். இரண்டு லட்சம் வர வேண்டியதில் 3 ஆயிரம்தான் வந்து சேர்ந்திருக்கிறது. டிஸ்டிரிபியூஷன் பண்ணுவதில் எத்தனையோ கஷ்டங்கள் இருக்கின்றன. ஆனால் ப்ரொக்யூர் பண்ணுவதில் கஷ்டமில்லை. உண்மையிலேயே எந்த எந்த இடங்களில் பற்றாக்குறை இருக்கிறதோ அங்கு உடனடியாகத் தானியங்கள் போய்ச் சேரவேண்டும்.

**கனம் திரு. எம் பக்தவத்சலம்:** தனிப்பட்டவர்கள் என்றால் மாத்திரம் லாரி அதிகமாகக் கிடைக்குமா? ரெயில் வேகன் கிடைக்குமா?

**திரு. ஏ. பி. சி. வீரபாகு:** ஓபன் மார்க்கெட்டில் 2 ரூபாய் கொடுத்து வாங்கிச் சாப்பிடுகிறார்கள் என்பதை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா இல்லையா? அதில் சட்ட ரீதியாகக் குற்றவாளிகளா இல்லையா? இந்த நிலைமையை வைத்துக்கொண்டு பிரைஸ் ஃபிக்சேஷன் பாலிசியைத் திட்டவட்டமாகப் பரிசீலனை செய்யாமல் தட்டிக் கழிப்பதில் பிரயோஜனம் இல்லை.

ஜில்லாக்களிலிருந்து சர்ப்ளஸ் பூராவையும் கொடுத்துவிட்டோம். ஆனால் டெஃபிசிட் உள்ள இடத்திற்குச் சரியான முறையில் விநியோகம் செய்யப்படவில்லை. இன்றைக்குத் தஞ்சை ஜில்லாவில் ஒரு படி அரிசி 1 ரூபாய் 2 அணாவுக்கு கிடைக்கிறது என்றால் திருநெல்வேலியில் 2 ரூபாய் கொடுத்து வாங்கவேண்டிய நிலை இருக்கிறது. இதற்குப் பரிகாரம் காணவில்லை. ஆனால் இந்த நிலைமைக்குப் பரிகாரம் காணவேண்டியது அரசாங்கத்தின் கடமை என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.





இன்னொன்று, உற்பத்தியைப் பெருக்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை நாம் பட்ஜெட்டிலே பார்க்கிறோம். அதிலே 4,000 கிணறுகள் தோண்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 2,000 கிணறுகளிலிருந்து 4,000 கிணறுகளாக உயர்ந்திருக்கிறது. இது வரவேற்கத்தக்கதாகும். நம் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மற்ற ஏற்பாடுகளையும் வைத்து துரிதமாகச் செய்ய வேண்டும். ஆனால் இன்று கேள்விக்கு விடையளிக்கும் பொழுது அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், மாதிரிப் பண்ணையில் நஷ்டம் வருகிறது என்று. நிலத்தைப் பண்படுத்துபவர்களுக்கும், நிலத்தை வளப்படுத்துபவர்களுக்கும் அதிகமான செலவு வருகிறது. அதனால் ரிட்டன் காணவில்லை. ரிட்டன் வரவில்லை என்பதைக் கவனிக்கவேண்டும். கிணறு லோன், மாட்டு லோன் என்று கொடுத்துக்கொண்டே போனால் விவசாயம் எப்படி அபிவிருத்தியாகும் என்று எனக்குத் தெரியவில்லை. கொஞ்ச நாளைக்கு முன்னால் மாட்டுத் தீவனத்திற்கு நீங்கள் மானியம் கொடுக்கப் போகிறோம் என்று சபையில் சொன்னீர்கள். ஏன்? இதுபோன்று பல ராஜ்யங்களில் கூடச் சொன்னார்கள். இதை உண்மையாகப் பரிசீலனை பண்ணிப் பார்த்தால் நம்முடைய நாட்டில் நடைபெறுவது கன்ஸம்ஷன் விவசாயம் அல்ல என்பது தெரியும். வேண்டுமானால் 10,000-ல் ஒரு கிணறு வெட்டிக் கொடுங்கள். அதைவிட்டு லோன் தருகிறோம் என்று சொன்னால் அவன் லோனை எப்படித் திருப்பி அடைக்க முடியும். வட்டி. எப்படிச் செலுத்த முடியும். ஆகையால் லோன் கொடுப்பதற்குப் பதிலாக கிணறு வெட்டிக் கொடுத்து விடலாம். எக்ஸிகியூடிவ் என்ஜீனியர்கள் மூலம் சானலைஸ் பண்ணி கிணறு வெட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யலாம். இன்று எத்தனையோ ரூபாய்கள் செலவழிக்கிறார்கள். இந்த விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் அரசாங்கமே கிணறு வெட்டிக் கொடுக்கலாம்.

**ஒரு கனம் அங்கத்தினர்:** சும்மா கொடுங்கள் என்று கூறுகிறீர்களா?

**திரு. ஏ. பி. சி. வீரபாகு:** நான் அப்படிச் சொல்லவில்லை. விவசாயி யாசிக்கிறவன் அல்ல. அவன் முதுகெலும்பு போன்று உள்ளவன். அவன் லோனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் எங்களிடம் வந்து சொல்வான். நாங்கள் கடன் தவணையைத் தள்ளிப் போடுங்கள் என்று சிபாரிசு பண்ணவேண்டியிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சாகுபடி பொய்த்துவிட்டது என்றால் 4 அணா வரிவசூல் செய்கிறார்கள். பாக்கியுள்ள 75 சத விகிதத்தை விவசாயி அனுபவித்தானா. நல்ல விளைச்சலை விரும்பும்பொழுது எப்படி விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகிறார்கள் என்பதைப் பரிசீலனை செய்து பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். I am only giving out my thoughts. நான் என்னுடைய கருத்தைச் சொல்லுகிறேன், பட்ஜெட்டிலே

கிணறுபற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால்தான் இது பற்றி யோசனை செய்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஃபிஷரீஸ் பற்றிச் சொல்லும்பொழுது, இந்த நாட்டிலே 3 லட்சம் அதிகமாக உற்பத்தி செய்யவேண்டுமென்று சொல்லப்படுகிறது. அகில இந்திய டார்ஜெட் 50 லட்சம் டன் என்று விதித்து இருக்கிறார்கள். ஐம்பது லட்சம் டன்னுக்கு 3 லட்சம் டன் மட்டும் உற்பத்தி செய்வதால் டார்ஜெட்டை பூர்த்தி செய்துவிட முடியாது. உணவுத் துறையில் ஃபிஷரீஸ் மிகவும் முக்கியமான டிபார்ட்மெண்ட். ஆகையால் இன்னும் உற்பத்தியைப் பெருக்க வேண்டியதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். நான் எல்லாம் மீன் சாப்பிடக்கூடிய ஆள் இல்லை. கடலில் உணவு இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. கடலில் வெஜிடேஷன், ப்ரோடீன் கண்டெண்ட் ஜாஸ்தியாக இருக்கிறதென்று சொல்கிறார்கள். அதை அப்படியே உபயோகப்படுத்த வேண்டுமென்றால் என்னைப் போன்றவர்களால் முடியாது. ப்ராசஸ் ஃபுட் ஆக 'ஸீ-வெஜிடேஷனை' ஏன் உபயோகப்படுத்தக்கூடாது? எவ்வளவோ 'ப்ராசஸ்ஃபுட்' ஆரம்பிக்கிறோம். இதையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சேல்ஸ் டாக்ஸ், ஸ்டாம்ப் டியூட்டி ஆகியவற்றிலிருந்து நிறையப் பணம் வரும் என்று நினைத்து இந்த வருஷம் 11 கோடி ரூபாய் பற்றாக் குறையை 'கவர்' பண்ணாமல் முதலமைச்சர் அவர்கள் பட்ஜட்டைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். சேல்ஸ்டாக்ஸ் மூலம் நிறையப் பணம் வருகிறது; ஸ்டாம்ப் டியூட்டியிலிருந்து வரும் என்று எதிர்பார்க்கிறோம். அதோடு கூட 'பிஸ்கல் கமிஷன்' வரப்போகிறது. 'கிரேட்டர் அலொகேஷன்' கிடைக்குமென்ற காரணத்தால் ஜனங்களைத் தொந்தரவு பண்ணவேண்டாமென்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அதற்காக நமது பாராட்டுதலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் 'எவேஷன் ஆப் சேல்ஸ்டாக்ஸ் அண்டு ஸ்டாம்ப் டியூட்டி' அதிகமாக இருக்கிறது என்பதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். ஸ்டாம்ப் டியூட்டியில் எவேஷன் அதிகமாக இருக்கிறது. இதிலே எல்லோருக்கும் ஒரு பாலிஸி மெதட் போடுவது நல்லதா என்று பார்க்க வேண்டும். தற்போது சட்டத்தின் மூலமாகப் பயப்படுத்தி எவேஷன் இல்லாமல் தடுக்க முடியும் என்ற ஒரே போக்கில் சிந்தனை போய்க்கொண்டிருக்கிறது. எவேட் பண்ணாமல் தடுக்க என்ன சூழ்நிலைகளை உண்டாக்க வேண்டுமென்று பார்த்தால் நன்றாக இருக்கும். நம்முடைய நாடு ஜனநாயக நாடாக இருப்பதால் அந்த வகையிலே சிந்தித்துப் பார்க்கவேண்டும். என்னதான் இருந்தாலும் சேல்ஸ்டாக்ஸ் எவேட் பண்ணாத வியாபாரி இருப்பான் என்று சொல்லவே முடியாது. இதை எந்த வியாபாரியாக இருந்தாலும் ஒத்துக்கொள்வார்கள். அதே மாதிரி சொத்து வாங்குகிற யாரும் ஸ்டாம்ப் டியூட்டியை எவேட் பண்ணாமல் இருக்க முடியாது. இது தெரிந்த உண்மை. வாங்குகிற சொத்தின் மதிப்பை சர்க்காரே நிர்ணயம் செய்துவிடுவது நல்லது. ஒரு சொத்தை வாங்குகிறவன் 7½ சதவிகிதம் ஆவது





போட்ட மூலதனத்திற்குக் கிடைக்குமா என்று பார்த்துத்தான் வாங்குகிறான். கட்டிடம் இல்லாத நிலத்திற்கு இப்போது 'அர்பன் லாண்ட் டாக்ஸ்' கொண்டு வந்திருக்கிறோம். நிலம் என்ன விலைக்கு விற்றாலும் இந்த 'வால்யூவேஷன்' படி டியூட்டி கட்ட வேண்டுமென்று நிர்ணயித்து விடுகிறோம். ஆகவே, சட்டத்தின் மூலம் மட்டும், சட்டத்தையும் அதிகாரிகளையும் நம்பி மட்டும் இந்த கலெக்ஷனைச் செய்ய வேண்டுமா என்பதைப்பற்றி ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் சமீபத்தில் பத்திரிகையில் ஒன்று பார்த்தேன். எல்லாவற்றையும் 'மல்டி பாயிண்ட் சேல்ஸ்டாக்ஸ்' ஆக மாற்ற வேண்டுமென்றால் அதற்குத் தாங்கள் தயாராக இருப்பதாக மந்திரியவர்கள் ஓரிடத்தில் கூறியிருக்கிறார்கள். அவ்வாறு மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டவர்கள் எல்லாம் மான்யுபாக்சரர்கள். மல்டி பாயிண்ட் சேல்ஸ்டாக்சாக இருந்தாலும் சிங்கிள் பாயிண்ட் சேல்ஸ்டாக்சாக இருந்தாலும் சர்க்காருக்கு ரெவின்யூ கிடைத்து விடுகிறது. நம்முடைய தொழிலமைச்சர் அவர்கள் நிதியமைச்சர் அவர்களுடைய கண்ணோட்டத்திலே பார்த்திருக்கிறார்கள். சர்க்காருக்கு அதனால் அதிகப் பணம் வரும். டாக்டர் லோகநாதன் ரிப்போர்ட் படி வேண்டாமென்று சொன்னால் மல்டி பாயிண்ட் டாக்ஸ் போட ஒத்துக் கொள்கிறோம் என்று மந்திரியவர்கள் உடனே சொல்லியிருக்கிறார்கள். அங்கு வந்திருந்தவர்களில் பெரும்பான்மையோர் மான்யுபாக்சரர்கள். அதிலே கன்ஸ்யூமர் ஸோ, ஹோல்சேல், ரீடெய்ல் டீலர்களோ இல்லை. மறைமுகமாக டாக்ஸ் போடுவது என்பது நம்முடைய ஜனநாயகத்திற்கு உகந்ததல்ல. 'We are partaking in the welfare of the State.' இவ்வாறு மாற்றுவது பரிசீலனையில் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அது நல்லதல்ல. அது டாக்ஸ் எவேஷனுக்குக் கொண்டு போய் விட்டு விடும். ஆகவே, இது பற்றிப் பரிசீலனை செய்யும்போது இந்த விஷயங்களையெல்லாம் பார்த்து ரெவ்யூ செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சேல்ஸ் டாக்ஸ் வசூல் பண்ணுவதைப் பொறுத்து சமீபத்தில் ஹைகோர்ட்டில் ஒரு டெசிஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. கான்ஸ்டிடியூஷன் பிரகாரம் வீட்டுக்குள்ளே போய்ப் பரிசீலனை செய்து கணக்குகளைப் பிடிக்கக்கூடாது என்று கூறியிருப்பது ஒரு பெரிய வரப்பிரசாதம் மாதிரி இருக்கிறது. நானும், ஜனங்களைப் பயப்படுத்தி வாங்கக்கூடிய சூழ்நிலையை அதிகமாக உருவாக்கக் கூடாது என்ற அபிப்பிராயம் உள்ளவன். அதனால்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூட அவர்கள் கணக்குகளைக் காட்ட டைம் கொடுத்தார்கள். இன்கம்டாக்சைப் பொறுத்தும் கூட மத்திய சர்க்கார் டைம் கொடுத்திருக்கிறார்கள். யாராக இருந்தாலும் மூன்று மாதத்திற்குள் கணக்குகளைக் கொடுத்தால் 60 சதவிகிதத்தைக் கட்டிவிட்டு 40 சத விகிதத்தை வரவு வைத்துக் கொள்ளலாம் என்று கூறினார்கள். டாக்ஸ் எவேடரை 'பர்சுவேடு' பண்ணி வாங்குவது, கொயர்ஸ் பண்ணி வாங்குவதால் நான்கு கோடி ரூபாய் வரை வசூலிக்கப்பட்டிருக்கிறது. சில

சமயங்களில் 'கொயர்ஸ்' பண்ணுவது 'எக்ஸஸ்' ஆகப் போய் விடுகிறது. இந்தச் சமயத்தில் நான் ஒரு சம்பவத்தைக் கூற விரும்புகிறேன். ஒரு ஹானஸ்ட் டிரேடர்; சாதாரண ஷாப் கீப்பர். மாதா மாதம் ஒழுங்காக டாக்ஸ் செலுத்தி வருபவன். ஆபீசரைக் கண்டு பயப்படமாட்டான். கடையில் அவன்தான் முதலாளி, அவன்தான் கணக்குப்பிள்ளை. அவனை மூன்று நான்கு நாட்களுக்கு அலைக்கழித்திருக்கிறார்கள் அதிகாரிகள். அந்த அதிகாரி 'இன்னின்ன சாமான்கள் எல்லாம் கொடுத்தால் விட்டு விடுகிறேன்' என்று சொல்லியிருக்கிறார். அந்தச் சாமான்கள் பத்து ரூபாய் பெறுமானமுள்ளவைதான். அந்தக் கடைக்காரன் அவர்கள் கேட்ட சாமான்களை கொடுத்துவிட்டு போலீசுக்குத் தெரிவித்து விட்டான். அந்த அதிகாரி அகப்பட்டுக் கொண்டான். ஆபீசர்களுக்கு அதிக அதிகாரம் கொடுத்திருப்பதால் ஹானஸ்ட் டிரேடர்கூட வீண் தொல்லைகளுக்கு ஆளாக வேண்டியிருக்கிறது. என்ன வேண்டுமென்றாலும் செய்து கொள்; வரியை மட்டும் வசூல் செய்து விடு என்று அளவுக்கு மீறி அதிகாரிகளுக்கு அதிகாரத்தைக் கொடுத்திருப்பதால் ஒரு சாதாரண ஷாப் கீப்பர் கூட 10 ரூபாய் கொடுத்து தன்னுடைய காரியத்தை முடிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும். இது பிரத்தியட்சமான நிலை. டாக்ஸ் எவேஷன் இருந்தாலும் வியாபாரிகள் அத்தனை பேரும் மோசமான ஆட்கள் அல்ல. அதிகாரிகள் என்ன வேண்டுமென்றாலும் பண்ணலாம் என்ற நிலை இருந்தால் என்ன நிலைமைகள் உருவாகும்? அவர்கள் 'அன்சோஷியல் எலிமெண்ட்ஸ்' ஆக மாறினால் கூட ஒன்றும் செய்ய முடியாது. சமீபத்தில் ஹிந்தி எதிர்ப்பு அஜிடேஷன் போது இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பெரிய மில் ஓனர்ஸ் ஈடுபடும் நிலைமை எதனால் ஏற்பட்டது. அவர்களால் நிறைய சம்பாத்தியம் பண்ண முடியவில்லையா? இன்கம்டாக்ஸ் கெடுபிடி அவர்களுக்கு இவ்வளவு ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்குமானால் நாட்டிலே நடக்கக்கூடிய வேறு முயற்சிகளிலே 'அன்சோஷியல் எலிமெண்ட்ஸ்' இடையிலே வரக்கூடிய நிலைமை உருவாகி வருகிறது. ஆகவே, இந்த நிலைமையில் ஜனநாயக சம்மதம் பெற்ற நம்முடைய அரசாங்கமானது வோட்டுப் பெற்றால் கூட நிற்க முடியாது. ஆகவே, ஜனநாயக சர்க்காராக இருந்தபோதிலும் செயல்பட முடியாத நிலைமையை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இதைக் கூறும் நேரத்தில் சேல்ஸ்டாக்சை இழந்துவிட வேண்டுமென்று சொல்லவில்லை; இன்னும் திறமையாக வசூலிப்பதற்குப் பரிகாரத்தைக் காணவேண்டுமென்றுதான் கூற விரும்புகிறேன். என்னென்ன இன்ஸன்டீவ்ஸ், சலுகைகள் கொடுத்தால் டாக்ஸ் வரும் என்று பார்க்கவேண்டும். பயமுறுத்தல், அல்லது சட்டம், நிர்ப்பந்தம் என்ற முறையில் வரி வசூல் செய்யக் கூடாது. வரி வசூல் என்பது ஒரு பேரம் என்ற முறையில் தான் வரி வசூல் நடத்த வேண்டும். கல்வித் துறையில் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. ஏழு கல்லூரிகள் திறக்கப் போகிறோம் என்று முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கது. யூனிவர்சிட்டி எட்யூகேஷனை யூனிவர்ஸல் எட்யூக்கேஷனுக்கும் நிலைமை மாற வேண்டும். எல்லோரும் கல்லூரிப் படிப்பிற்கு லாயக்கு என்ற முடிவிற்கு வரக் கூடாது. தொழில் அமைச்சர் அவர்கள் நடத்தும் தொழில் நுணுக்கப் பள்ளிகள் இருக்கின்றனவே அவை அப்படி எல்லோரும், யூனிவர்சிட்டிக்கு வர முடியாது என்பதைக் காட்டுகின்றன. எனக்கு ஓரளவு மாணவர்களோடு தொடர்பு உண்டு. இப்போது நடந்த மாணவர்கள் கிளர்ச்சியில் இருந்து என்ன தெரிகிறது? (unselected boys, boys who are sure of their failures,) செலக்ஷன் ஆகாத பையன்கள்தான் இதில் அதிகம். இந்த ஆண்டு பாஸ் செய்ய மாட்டோம் என்ற பையன்கள்தான் கிளர்ச்சியை முன்நின்று நடத்தினார்கள். இதற்குக் காரணம் யார்? நாம்தான் காரணம். எல்லோருக்கும் யூனிவர்சிட்டி எட்யூகேஷன் கொடுக்க முற்படுகிறோம். டாக்டர்களாக வருவதற்கும், என்சினியர்களாக வருவதற்கும் சேருவதற்குள்ள கல்லூரிகளில் சேர இவ்வளவு மார்க் வேண்டுமென்று இருக்கிறது. ஏ எடுக்க வேண்டும், பி எடுக்க வேண்டும் என்றிருக்கிறது. கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு எலிஜிபிலிட்டி இருந்தால் போதும், சேர்த்து விடுகிறார்கள். தஞ்சையில் ஒரு பிரின்ஸிபால் 80 பேர்களிடம் நீங்கள் இங்கு வரவேண்டாம், உங்களுக்கும் பணம் தண்டம், எனக்கும் நேரம் போதாது என்று சொன்னார்கள். எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்துவிட்டால் காலேஜ் அட்மிஷன் கிடைக்கும் என்ற நிலைமை இருக்கக்கூடாது. காலேஜ் அட்மிஷன் குறித்து மக்கள் பிரதிநிதிகள் என்ன அபிப்பிராயப்படுகிறார்கள் என்பதை யூனிவர்சிட்டியின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும்.





**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** யூனிவர்சிட்டியே இப்போதுள்ள குறைந்தபட்ச மார்க்கை அதிகப்படுத்துவதாக இருக்கிறார்கள், காலேஜ் அட்மிஷனுக்கு.

**திரு. ஏ. பி. சி. வீரபாகு:** சந்தோஷகரமான செய்தி செகண்டரி எட்யூக்கேஷனை பெர்பெக்டாகக் கொடுத்து விட்டோம் என்று சொல்ல முடியாது. செகன்டரி லெவல், எலிமென்டரி லெவல் எட்யூக்கேஷனுக்கு நிறையப் பணம் வேண்டியிருக்கிறது. எல்லாவற்றையும் பல்கலைக்கழகத்திற்குக் கொண்டு வைப்பது என்றிருக்கக் கூடாது என்று கூறினேன். அந்த முறையில் அவர்கள் எண்ணமும், போக்கும் இருப்பது கண்டு சந்தோஷப்படுகிறேன். அடுத்தபடியாக, ப்ளான் டார்ஜெட். ஆயிரம் கோடிக்கு அண்ணா திட்டம் கொடுத்தார், இரண்டாவது ப்ளானில். இன்று நான்காவது திட்டத்தில் ஆயிரம் கோடிக்கு திட்டம் தீட்டியிருக்கிறார்கள். நம் முதல் அமைச்சர் அவர்கள் 800 கோடிக்கு ப்ளான் செய்திருக்கிறார்கள். சென்டரல் கவர்ன்மென்ட் இன்வஸ்ட்மென்டையும் சேர்த்தால் ஆயிரம் கோடி ரூபாய் ஆகிவிடும். இப்படிப்பட்ட ஆயிரம் கோடித் திட்டத்தை வரவேற்காமல் போய்விட்டார்களே என்றுதான் எனக்கு வருத்தம். நாளைக்கு வருவார்களோ என்னவோ தெரியாது. இன்று வரமாட்டார்கள் என்று நினைக்கிறேன். எனக்கு பேச வாய்ப்பு கொடுத்தாலும் கூட அவர்கள் இருந்து பேச முடியாமல் போய் விட்டதே என்றுதான் எனக்கு வருத்தம். லாண்ட் சீலிங், 60-40 என்று கொண்டு வந்த போது கம்யூனிஸ்ட்கள் என்ன சொன்னார்கள்? நாங்கள் இருந்து

கொண்டு வந்திருக்கிறோம் என்று சொன்னார்கள். இவர்கள் நாங்கள் சொன்னதால் வந்தது. இப்போதாவது முடிந்ததா என்று கேட்பார்கள். நீங்கள் சொன்ன காலத்தில் முடியாது என்று தான் நாங்கள் சொன்னோம். நம் தமிழ்நாட்டு பொருளாதார வளர்ச்சி பட்ஜட்டில் பிரதிபலிக்கிறது. நேற்று மேல் சபை தலைவர் அவர்கள் குறிப்பிடும் போது "பெர் காப்பிட்டா கன்ஸம்ஷன் ஆப் எலக்ரிசிட்டி," கூடி இருக்கிறது என்று சொன்னார்கள். 27-ல் இருந்து 83 ஆகக் கூடியிருக்கிறது என்று சொன்னார்கள். நமது பொருளாதார வளர்ச்சியின் அளவுகோல் இது என்று கரெக்டாகச் சொன்னார்கள். நம் திட்டங்கள் எல்லாம் மக்களுக்கு நல்ல பலன் கொடுக்கக் கூடிய அளவில் நிறைவேறி வருகின்றன. அதன் பயனாக இந்த சர்க்கார் பொது மக்களின் பாராட்டுக்கு உரித்தானதாக இருக்கிறது, நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக இருக்கிறார்கள், அவநம்பிக்கைக்கு அல்ல. ப்ளான் குறித்து ஆலோசித்து, எது எதற்கு எம்பஸிஸ் கொடுத்திருக்கிறார்கள், எது எதற்கு எம்பஸிஸ் கொடுக்கவேண்டும் என்று ஆலோசனை சொல்பவர்கள் பொது மக்களுக்கு சேவை செய்தவர்களாவார்கள். தனிப்பட்டவரின் மூளையை விட இரண்டு மனிதர்களின் மூளை சிறந்தது என்ற அடிப்படையில் ஜனநாயகம் வாழ்கிறது. அந்த அடிப்படையில் தான் சட்டசபைகள் எல்லாம் இயங்குகின்றன. அப்படி அவர்கள் தங்கள் ஆலோசனைகளைக் கூற வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது நோ காண்பிடன்ஸ் மோஷனுக்கு நாலைந்து நாட்கள் ஆகும் அவர்கள் உணர்ச்சி பூர்வமாக இருக்கிறார்கள். விவாதத்திற்கும் தர்க்கத்திற்கும் தங்களை ஆளாக்கிக் கொள்ளவில்லை. நான் பொது மக்களிடம் சொல்வேன் ஆயிரம் கோடிக்கு திட்டமிடப் பட்டிருக்கிறதென்று. அவர்கள் 800 கோடி என்று கூறலாம். மத்திய சர்க்கார் செலவு செய்வதையும் சேர்த்தால் ஆயிரம் கோடி வரும் என்று சொல்வேன். அந்த அளவு நம் பொருளாதார வளர்ச்சி வளர்ந்து கொண்டு வருகிறது. நாம் உணர்ச்சி பூர்வமாக நடப்பவர்கள் என்றாலும் இந்தியா ஒரு தேசம் என்ற மனோபாவம்கூட இல்லாது நடக்கும் பகுதிக்கும் மத்திய அரசாங்கம் 200 கோடி ரூபாய் செலவழிக்க முற்பட்டிருக்கிறார்கள் என்றால் இந்த தேசத்தின் ஒருமைப்பாட்டைப் பற்றி நம் தேசத் தலைவர்கள் எவ்வளவு ஆவலோடு இருக்கிறார்கள் என்பதைத்தான் இது காட்டுகிறது. இதற்கு முன்பு நடந்த திட்டங்களானாலும் சரி, நடக்கப் போகும் திட்டங்களானாலும் சரி தமிழ் நாட்டுக்கு அவை மிக்க பலன் உள்ளதாக இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்று கூறி எனக்குப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கொடுத்ததற்கு கனம் சபாநாயகர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. கி. நாராயணசாமி பிள்ளை:** கனம் சபாநாயகர் அவர்களே, இன்று, நம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் நிதிநிலை அறிக்கையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இது ஒரு மாடல் பட்ஜட் என்று கூற நான் ஆசைப்படுகிறேன். புது வரி ஒன்றுமே கிடையாது என்று





கேட்டதும் மக்கள் யாவருக்கும் குதூகலம் உண்டாகியிருக்கிறது. அதே போல் 6 கோடி 97 லட்சம் துண்டு விழுந்தாலும் கூட அதைச் சரிகட்ட வழிவகை இருக்கிறது என்று சொன்ன மாத்திரத்தில் புதுத் தெம்பு உண்டாகிறது. உணவுப் பிரச்னையைத் தீர்த்து வைப்பதில் நல்லமுறையில் நம் அரசாங்கம் வேண்டிய வசதிகள் எல்லாம் செய்து வருவது போற்றத்தக்கது. இன்னும் உணவு உற்பத்தியை அதிகரிக்க நம் அரசாங்கம் ஆயிரக்கணக்கில் செலவு செய்து அணைகள் கட்டி, வாய்க்கால்கள் வெட்டி, தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கிறார்கள். பாலைவனங்களைச் சோலைவனங்களாக மாற்றி அங்கு இப்போது உழவர்கள் பயிரிட்டு வருகிறார்கள். அது போற்றத் தக்கது. சில சமயங்களில் விவசாயிகள் நெல் பயிரிடுவதில் லாபம் இல்லை என்று நஞ்சை நிலங்களில் சவுக்கை நட ஆரம்பிக்கிறார்கள். இதை சர்க்கார் கவனித்து

(திரு. எஸ். நஞ்சுண்ட ராவ் தலைமை)

அதைத் தடை செய்யவேண்டும், உணவு உற்பத்தியைப் பெருக்க உரம், பொறுக்கு விதைகள், பாசன வசதி போன்றவற்றைச் செய்து நல்ல சாதனைகளைப் புரிந்து வருகிறார்கள் நம் அரசாங்கத்தினர். சிறு கிணறு வெட்டக் கூட 2,000-ல் இருந்து 4,000 வரை பண உதவி செய்வதாகக் காணப்படுகிறது. அதே போல் அநேக இடங்களில் ட்யூப் வெல்ஸ் அமைக்கும் நிலையையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். நெல் கொள்முதல் செய்வதில் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. அறுவடை ஆகி இருப்பதை எடுத்துச் செல்ல வேண்டுமென்றால் சரியான முறையில் நெல்லைக் கொண்டு போக வியாபாரிகள் வருவதில்லை. அதில் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இம்மாதிரியான கஷ்டங்கள் ஏற்படாமல் உடனுக்குடன் ப்ரொக்யூர் செய்வதற்கான வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 11-00 a.m.

அடுத்தபடியாக, நீர்ப்பாசன வசதிகளைப் பொறுத்தவரையில் நமது மாநிலத்திலுள்ள அத்தனை ஆறுகளிலும் அணைகளைக் கட்டி நல்லமுறையில் நீர்ப்பாசன வசதி செய்து தந்துள்ளார்கள். அதோடு அண்டை மாநிலங்களிலுள்ள ஆறுகளிலுள்ள தண்ணீரையும் நல்ல முறையில் நாம் பயன்படுத்திக்கொள்கின்ற முறையில், தக்க முறையில் அணைகளைக்கட்டி கொடுத்து உதவினால் பயனுள்ளதாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் சொல்ல விரும்புவது, ஏற்கனவே பல ஏரிகளின் மூலமாக பல ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. இவைகளை எல்லாம் பழுது பார்க்க வேண்டியது மிகவும் அவசியம். உதாரணமாக வெல்லிங்டன் ஏரி மிகவும் தூர்ந்து போயிருக்கிறது. இதில் சேகரிக்கும் தண்ணீர் மூலமாக 28 ஆயிரம் ஏக்கர் ஆயக்கட்டு சாகுபடி செய்வதற்காக வகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இதில் சரியானபடி நீர்பிடிப்பு இல்லாமல் இருப்பதன் காரணமாக இப்போது சுமார் 28 ஆயிரம் ஏக்கர் நஞ்சை சாகுபடி செய்யமுடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. இதற்கு சாதாரணமாக வெள்ளாற்றிலிருந்து தண்ணீர்

[திரு. கி. நாராயணசாமி பிள்ளை] [2nd March 1965

கொண்டு வந்து நிரப்புவது வழக்கம். இதற்காக ஏடர்பாளையத்தில் அணைகட்டி வெள்ளாற்றில் தண்ணீரைக் கொண்டு வந்து, அதிலிருந்து இந்த ஏரியில் தண்ணீரை நிரப்பலாம் என்று சொல்லப்பட்டது. இப்பொழுது இருக்கும் சப்ளை சானலை அகலப்படுத்த வேண்டும். இதற்காக 12 லட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டம் போடப்பட்டது. அது என்னவாயிற்று என்று தெரியவில்லை. இதைப்பற்றி அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், நெய்வேலியிலிருந்து வெளியேற்றப்படுகின்ற தண்ணீர் மூலமாக ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. இது ஒரு தற்காலிக ஏற்பாடாக இருந்து வருகிறது. இதை ஒரு 'பெர்மெனண்ட் ஸோர்ஸ் ஆஃப் இறிகேஷன்' என்ற முறையில் ஆக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது நாட்டில் ஏறக்குறைய 620 மைல் நீண்ட கடற்கரை இருக்கிறது. இதையொட்டி ஒரு ரோட் போட்டால் மிகவும் வசதியாக இருக்கும். இதற்காக நமது சர்க்கார் மத்திய சர்க்காரோடு கலந்து நல்லதொரு ரோட்டைப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சேது சமுத்திரத்திட்ட வேலை, கடலூர் பரங்கிப்போட்டை, தூத்துக்குடி போன்ற இடங்களில் துறைமுக வேலைகள் இவைகள் எல்லாம் துரிதமாக நடைபெற்றால் நம்முடைய வியாபாரம் நல்லமுறையில் நடப்பதற்கு உதவியாக இருக்கும். ஆகவே இதிலும் சர்க்கார் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய மாநிலம் தொழில் வளர்ச்சியில் மிகவும் முன்னேற்றம் அடைந்து வருகிறது. பல கனரகத் தொழில்களும் ஏற்பட்டு வருகின்றன. நெய்வேலியில் 400 மெகா வாட் என்றிருந்தது. இப்போது 600 மெகா வாட்டாக உற்பத்தி செய்ய வேண்டும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. நிலக்கரியைப் பொறுத்தவரையில் 55 லட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து 65 லட்சம் டன்னாக அதிகப்படுத்துவதற்கும் திட்டமிருக்கிறது. விவசாயிகளுக்கு உற்சாகம் அளிக்கக்கூடிய வகையில் யூரியா உற்பத்தி செய்வதற்கும் வகை செய்திருப்பது மிக்வும் சந்தோஷமான செய்தியாகும். மின்சாரத்தைப் பொறுத்தவரையில் நாம் அதிகமான அளவில் மின்சாரத்தை உற்பத்தி செய்து வருகிறோம். முக்கியமாக ஒகனேக்கல் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மைசூர் சர்க்காரோடு பேச்சுவார்த்தை நடத்தி இந்த திட்டத்தையும் கொண்டு வந்துவிட்டால் இப்போது இருந்துவருகின்ற மின்சாரப் பற்றாக்குறையும் இனிமேல் இராது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் கல்பாக்கத்தில் 44 கோடி ரூபாய் செலவில் அணு மின்சார நிலையத்தை ஏற்படுத்தப் போவதாகத் தெரிகிறது. இதையும் சீக்கிரமாகவே கொண்டு வருவதற்கு முயற்சி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் நம்முடைய நாட்டில், எண்ணூர், பேசின்பிரிட்ஜ் போன்ற இடங்களிலும் அனல் மின்சாரத்தை இன்னும் கூடுதலாக உபயோகித்



2nd March 1965] [திரு. கி. நாராயணசாமி பிள்ளை]

தால் மின்சாரத்தில் நமக்கு இருந்து வருகின்ற எல்லாக் கஷ்டங்களும் போய்விடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய நாட்டிலுள்ள கல்வியைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். படித்துக்கொடுக்கின்ற ஆசிரியர்கள் சரியாக இருந்தால் இப்போது நடந்த கிளர்ச்சிகள் எல்லாம் கூட நடைபெற்றிருக்காது என்பதுதான் என்னுடைய கருத்து. கனம் முதலமைச்சர் அவர்கள் சொன்னது மாதிரி பிஞ்சு உள்ளங்களில் நஞ்சை ஏற்றியது போல் தேசத் துரோகிகள் செய்து விட்டார்கள் என்று தான் சொல்லவேண்டும். இதற்கெல்லாம் நல்ல தொரு முடிவாக நமது முதலமைச்சர் அவர்கள் அவர்களுடைய உரையில் 42-வது பக்கத்தில்—

"இந்தி ஆட்சிமொழியாவது பற்றி அமரர் நேரு அவர்கள் அளித்த வாக்குறுதிகள், தேசத் தலைவர்களால் மனப்பூர்வமாக மீண்டும் ஒப்புக்கொள்ளப்பட்டு, அவை விரைவிலேயே சட்டப் புத்தகத்தில் பொறிக்கப்படும்".

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நிலை மிகவும் மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கிறது. நம்முடைய கல்வித் திட்டத்தின் பயனாக ஆயிரக்கணக்கான குழந்தைகள் படிக்க வருகிறார்கள். மதிய உணவுத் திட்டத்தின் பலனைப் படிக்கின்ற பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகமாகிக்கொண்டு வருகிறது. உயர்நிலைப்பள்ளிகளின் எண்ணிக்கை எல்லாம் அதிகமாகிக்கொண்டிருக்கிறது. இத்தருணத்தில் நான் சொல்ல விரும்புவது ஆண் பிள்ளைகளுக்குப் பள்ளிகளை அதிகரிப்பதை விட, பெண் பிள்ளைகளுக்கான பள்ளிகளை அதிகப்படுத்தினால் நல்லது. அப்படிச் செய்துவிட்டால் பெண் பிள்ளைகள் கிளர்ச்சி போன்றவைகளில் ஈடுபட மாட்டார்கள் என்பது என் கருத்து. ஆகவே பெண் பள்ளிகளை அதிகமாக ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் தாலூகாவைப் பொறுத்தவரை, கொளஞ்சிப்பார் தேவஸ்தானம் ஒன்றிருக்கிறது. அதிலிருந்து நான்கு அல்லது ஐந்து லட்சம் ரூபாய் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள், அதை உபயோகித்து, அந்த இடத்தில் ஒரு பள்ளியை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், தென்னார்க்காடு ஜில்லாவில் ஒரு மருத்துவக் கல்லூரியை நிறுவவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். மேலும் நம்முடைய நாட்டில் ஏழு கல்லூரிகளையும், மாலை நேரத்தில் கல்லூரியில் படிப்பதற்கான வசதிகளையும் கொண்டு வருவது மிகவும் போற்றத்தக்கது.

பொது சுகாதாரத்தைப் பொறுத்தவரையில் குடிதண்ணீர் பிரச்னை மிகவும் சீர்கேடாக இருக்கிறது. என்னுடைய தொகுதியில் சில கிராமங்களில் குடிதண்ணீர் கிடைப்பதற்கு எந்தவிதமான வசதியும் இல்லாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. சில கிராமங்களில் கிடைக்கின்ற தண்ணீர் செம்பட்டையாக இருக்கின்ற காரணத்தால், நரம்புசிலந்தி போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. இதே நிலைமை விருத்தாசலத்திலுள்ள எல்லா கிராமங்களிலும் இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலைமையை மாற்ற

வதற்கு ஏதாவது உடனடி நடவடிக்கை எடுத்தால் மிகவும் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், தென்னார்க்காடு ஜில்லாவில் சவுக்கு, முந்திரி இவை அதிகமாக சாகுபடியாகின்றன. இங்கு முந்திரித் தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்தினால் மிகவும் நலமாக இருக்கும். இதோடு பிளாஸ்டிக் தொழிற்சாலை ஒன்றையும் ஏற்படுத்தலாம். இதையும் அரசாங்கம் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அரிஜனங்களுக்கு நிலங்கள் கொடுப்பதற்காக நம்முடைய சர்க்கார் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து வருகிறார்கள். மனைக்கட்டு வழங்கும் விஷயத்திலும் நிலைமை மிகவும் கடினமாக இருக்கிறது. ஒரு மனைக்கட்டு கொடுப்பதென்றால் அதற்கு நாலைந்து வருடங்கள் ஆகிவிடுகின்றன. ஆகவே எங்கள் பகுதிக்கு மேலும் 2 அரிஜன் வெல்பேர் ஆபீஸர்களை நியமித்தால் நலமாக இருக்கும். முக்கியமாக நிர்வாகக் காரியங்களில் தாமதமில்லாமல் எல்லாக் காரியங்களும் உடனுக்குடன் நடைபெறுவதற்கு வசதியிருக்க வேண்டும்.

அடுத்தபடியாக, ஆசுபத்திரியைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். ஆசுபத்திரியில் வராந்தாவில் நோயாளிகளைப் படுக்க வைத்திருக்கிறார்கள். விருத்தாசலம் தாலூகாவில் திட்டக்குடி என்ற இடத்தில் சர்க்கார் ஆசுபத்திரி இருக்கிறது. அங்குள்ள மக்கள் 20 ஆயிரம் ரூபாய் திரட்டி சுகாதார அமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். அங்குள்ள படுக்கைகளை அதிகரிக்கவேண்டும் என்றும், ஒரு ஆப்ரேஷன் தியேட்டர், எக்ஸ்ரே வசதி போன்றவைகள் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சிமின்ட் பற்றுக்குறை காரணமாக அனேக பள்ளிக்கூடங்கள், இடிந்து விழுந்தவை எல்லாம், சீர் செய்யப் படாமல் இருக்கின்றன. இதைப் போக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் நம்முடைய நாட்டில் சர்க்கரைத் தேவை இன்னும் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. கூட்டுறவு முறையில் கள்ளக் குறிச்சியில் ஆலை ஒன்று ஆரம்பிப்பதற்காக கட்டிடங்கள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதோடு தனிப்பட்ட முறையிலும் பெண்ணாடத்தில் அருணா ஷுகர் மில்ஸ் ஒன்று ஆரம்பிக்க வேலை நடந்து கொண்டிருக்கிறது. அடுத்த ஆண்டு இறுதியில் இந்த ஆலையிலிருந்து சர்க்கரை கிடைக்கும். இம்மாதிரிப்பட்ட பல திட்டங்களை எல்லாம் நிறைவேற்றிக்கொண்டிருக்கும் சர்க்காருக்கு அங்கத்தினர்கள் அனைவரும் தங்கள் ஆதரவைக் கொடுத்தால் இன்னும் நல்லமுறையில் மக்களுக்கு சேவை செய்ய முடியும் என்று சொல்லிக்கொண்டு நிதிநிலை அறிக்கையை வரவேற்று என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. ர. ஜீவரத்னம்: தலைமை தாங்கும் மதிப்புக்குரிய தலைவர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள



நிதிநிலை அறிக்கை மீது சில வார்த்தைகளை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய தேசம் புராதனமான தேசம்—பாரத தேசம். நம்முடைய தேசத்திற்கு ஒத்தாற்போல, நம் கலாசாரத்திற்கு ஒத்தாற்போல நமது தலைவர்கள் அரசியல் நிர்ணய சபையில் நமது தேசத்திற்கு ஜனநாயகம் ஏற்றது என்று அரசியல் சட்டத்தை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அதே போன்று ஜனநாயகத்தில் எதிர்க் கட்சிகளும் வளரவேண்டும், இருக்க வேண்டும், என்று நம் தலைவர்களெல்லாம் அரசியல் சட்டத்திலே நிர்ணயம் செய்திருக்கிறார்கள். இப்போது நம் தேசத்தில் இருக்கக் கூடியவர்கள், இருக்கக் கூடிய எதிர்க் கட்சிகள், குறிப்பாக தமிழ் நாட்டில் இருக்கக் கூடிய எதிர்க் கட்சிகள் ஜனநாயகப் பண்புக்கு ஒத்ததுதானா, ஜனநாயகப் பண்புக்கு ஒத்தவாறு நடந்து வருகின்றனவா என்று பொது மக்களும், அங்கத்தினர்களும், அமைச்சர்களும் சிந்திக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எதிர்க்கட்சிகள் என்றால் சர்க்காருக்குச் சம்மானவை என்பது தான் அதன் பொருள். ஜனநாயகத்தைத் திறம்பட நடத்தக் கூடியவைகளாக எதிர்க்கட்சிகள் இருக்கவேண்டும். இன்று ஒரு கட்சி ஆட்சியில் இருந்தால் அடுத்த முறை எதிர்க்கட்சி ஆட்சியிலிருக்கலாம் என்ற அந்தப் பொறுப்பை எதிர்க்கட்சிகள் உணர்ந்திருக்கிறார்களா என்று சிந்திக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

சுதந்திரப் போராட்டத்திலே நடந்த கிளர்ச்சியின்போது கூட மக்கள் தைரியமாக நிமிர்ந்து நடந்துகொண்டிருந்தார்கள். ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறோம் என்ற உணர்ச்சி மக்களிடத்தில் இருந்தது. ஆனால் இந்தி எதிர்ப்பு என்ற பெயரால், ஜனநாயகம் என்ற பெயரால், எதிர்க்கட்சிகளெல்லாம் ஒன்றாகச் சேர்ந்துக்கொண்டு கடந்த சில நாட்களாக நம் தமிழகத்தில் நடத்தி வருகின்ற நாடகங்களையும், குழப்பங்களையும் முதல் அமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக என்னுடைய ஜில்லாவில் நடந்தவற்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இவையெல்லாம் ஜனநாயகத்தின் பெயரால் நடந்ததாகும். பொது மக்கள் ரயிலிலும் பஸ்ஸிலும் தைரியமாகச் செல்ல முடியாது. சென்ற பஸ்கள் வழி மறிக்கப்பட்டன. சென்ற கார்கள் வழி மறிக்கப்பட்டன. அந்தக் கார்களில் 'இந்தி ஒழிக; தமிழ் வாழ்க' என்று எழுதி விட்டு கார்களில் உள்ளவர்களிடமிருந்து பணத்தைப் பறித்தார்கள். பஸ்காரர்களிடத்திலிருந்து பணத்தைப் பறித்தார்கள். சென்ற ரயில்களிலிருந்த கண்ணாடிகள் தூள் தூள் ஆக்கப்பட்டன. ரயிலில் சென்ற பிரயாணிகள் அடி பட்டார்கள். ரயில் நிலையத்தில் ரயில் சரியாக நிற்க முடியாது சிக்னல்களையெல்லாம் உடைத்தார்கள். ரயில்வேக்கு எவ்வளவு சேதம் ஏற்படுத்த முடியுமோ அவ்வளவு சேதத்தை ஏற்படுத்தினார்கள். இவையெல்லாம் ஜனநாயகத்தின் பெயரால் நடந்தது. ஜனநாய

கத்தைப் பாதுகாக்கக் கூடியவர்களாக இருந்தால் அரசாங்கத்தின் சொத்து மக்களுடைய சொத்து என்பதை உணராமல் அவைகளுக்கு சேதம் ஏற்படுத்தியிருக்க முடியுமா? அரசாங்கம் என்றால் நம்முடையது தான், நாமும் இந்த அரசாங்கத்தை ஏற்று நடத்தும் ஜனநாயக எதிர்க் கட்சியாக இருக்கிறோம் என்று கருதியிருந்தால் அரசாங்கத்தின் சொத்துக்களுக்கு அவர்கள் நஷ்டத்தை ஏற்படுத்தியிருக்க முடியாது. இதை அமைச்சர் அவர்கள் உணர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவைகளெல்லாம் ஜனநாயத்தின் பெயரால் எதிர்க்கட்சிகள் என்று சொல்லிக்கொள்ள ஒன்றும் லாயக்கில்லாத கட்சிகள் என்று தங்கள் முன்பாக நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கட்சிகளுக்கெல்லாம், சுதந்திரப் போராட்டத்தில் யார் யார் விரோதிகளாக இருந்தார்களோ அவர்களெல்லாம் இப்போது தூபம் போடுகிறார்கள். இப்போது எங்கள் ஜில்லாவிலே முஸ்லிம் லீக் என்ற வகுப்புவாதக் கட்சி இருக்கிறது. டிசம்பர் மாதத்தில் முஸ்லிம் லீக் மகாநாடு என்ற அந்த மகாநாட்டில் பெரியவர் ஒருவர் பேசினார் என்று கடந்த சட்ட சபைக் கூட்டத்திலே கூறினேன். "கதர் கட்டிக்கொண்டு, அல்லது கதர் சட்டையைப் போட்டுக்கொண்டு யாராவது வீதியில் சென்றால் சட்டையைப் பிடித்து இழு, சட்டையைக் கிழித்து எறி, அதற்கு சட்டம் கூட இடம் கொடுக்கிறது என்று நான் சொல்லுகிறேன்" என்று பேசினார். கடந்த கூட்டத்தில் நான் இதைப் பற்றி இங்கே கூறினேன். இப்போது நடந்தது அது தான். கதர் கட்டிக்கொண்டு சென்றால் ரோடில் பிடித்து இழுத்து அடிப்பது, அடித்து சட்டையைக் கிழிப்பது, கார்களிலே கண்டபடி எழுதுவது என்ற முறையில் தான் நடந்தது. இது ஜனநாயக உரிமைதானா' இந்த உரிமையை இந்தக் கட்சிகளுக்கு அளிப்பது நியாயம்தானா, மக்கள் எத்தனை காலத்திற்குப் பயந்துகொண்டு இருப்பது, என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் சிந்திக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜனநாயகத்தின் பெயராலே பல நகர சபைகளெல்லாம் இப்போது எதிர்க் கட்சிகளின் சார்பில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. நகரசபைகளில் போடக் கூடிய தீர்மானங்கள், பேசக் கூடிய பேச்சுக்கள், கொஞ்சம்கூட சர்க்காருக்கோ, ஜனநாயகத்திற்கோ நன்மை பயப்பதாக இல்லை. குறிப்பாக என்னுடைய வேலூர் நகர சபையின் தீர்மானங்கள் முற்றிலும் ஜனநாயகத்திற்கு விரோதமானவை, சர்க்கார் கொள்கைக்கு விரோதமானவை: சர்க்காருக்கு விரோதமானவை. நகர சபைகளின் பொறுப்பு என்ன, எந்தெந்தத் தீர்மானத்தைப் போடவேண்டும், எந்தெந்தத் தீர்மானத்தைப் போடக் கூடாது என்று திட்டவட்டமாக நகர சபைகளுக்கு அறிவிக்க வேண்டும். அதை விட்டு, கன்னா பின்னா என்று நகர சபைக் கூட்டத்தைக் கூட்டுவது, போலீசாரைத் தாக்குவது, அமைச்சர்களைத் தாக்குவது இதெல்லாம் முறையா? ஜனநாயகத்தின் பெயரால் எதிர்க்கட்சிகளுக்கு, மாற்றுக் கட்சிகளுக்கு, அளிக்க வேண்டிய சலுகைகள் தானா என்று சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





முஸ்லீம் லீக் என்று ஒரு கட்சி இருக்கிறது என்று நான் முன்பே சொன்னேன். முஸ்லீம் லீக்கின் நிலைமை மற்ற ஜில்லாக்களுக்குத் தெரியாது. வட ஆற்காடு ஜில்லாவில் தான் தெரியும். அந்த ஜில்லாவில் தான் முஸ்லீம்கள் பரந்து கிடக்கிறார்கள். மாநாடு கூட்டி சர்க்காருக்கு விரோதமாக என்னென்ன தீர்மானங்கள் செய்யவேண்டுமோ அதைச் செய்தார்கள். அந்த முஸ்லீம்கள் பேசுவது உருது பாஷை. அவர்களே ஒரு தீர்மானம் போட்டிருக்கிறார்கள் இந்திக்கு எதிர்ப்பு தெரிவித்து. இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிக்கு உதவி செய்வது என்று தீர்மானம் போட்டார்கள். பேரணம்பட்டில் பகிரங்கமாகக் கலந்துகொண்டு போலீஸ் ஸ்டேஷனைத் தாக்கப் போனார்கள். வகுப்புவாதம் வேறு உருவத்தில் தலை விரித்து ஆடுகிறது என்று நான் சென்ற கூட்டத்தில் சொன்னேன். அதைப் பற்றி அமைச்சர் கவனித்ததாகத் தெரியவில்லை. இப்போதாவது அரசியல் கட்சி உருவத்தில் தலையிட்டதால் அதனை நாங்கள், பொது மக்கள் சகித்துக்கொண்டிருக்கிறோம். வகுப்புவாதக் கிளர்ச்சியாக மாறினால் நிலைமை முற்றி விடும் என்று கடந்த கூட்டத்தில் நான் எடுத்துச் சொன்னேன். இப்போதும் சொல்லுகிறேன். வேலூர் நகரத்தைப் பொறுத்த வரையில் எங்கள் மாணவர்கள் நிதானஸ்தர்களாக இருந்தார்கள், எதிர்க்கட்சி வலையில் சிக்காமல் கட்டுப்பாடாக நடந்துகொண்டார்கள். அங்கே இருக்கிற போலீஸ் அதிகாரிகளும் உறுதுணையாக இருந்தார்கள். அந்த அளவுக்கு நிலைமையைச் சமாளித்தோம். மற்ற இடங்களை எடுத்துக் கொண்டால் மோசமான நிலைமை இருந்தது வட ஆற்காடு மாவட்டத்திலே. சதிகாரக் கும்பல் எப்போதும் இப்படித் தான் செய்து கொண்டிருக்கும். சட்டத்தின் மூலமாகத் தப்பித்துக் கொள்ள வழி பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள். இப்போது உள்ள சட்டம் இடம் கொடுக்கவில்லையென்றால், தனியாக ஒரு சட்டத்தை இந்த மன்றத்தில் நிறைவேற்றி அதன் மூலம் அராஜகக் கும்பலைத் தடுக்க வேண்டுமென்று கனம் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தி பாஷையைப் பொறுத்த வரையில் நம் முதல் அமைச்சர் அவர்களும், காங்கிரஸ் கட்சியின் பெரும் தலைவர்களும், பிரதமர் அவர்களும் ஒரு நல்ல வழியை இப்போது பின்பற்றியிருக்கிறார்கள். அந்த வழியை நாம் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு சின்ன சமாசாரத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த தேசம் எப்போது சுதந்திரம் அடைந்ததோ அன்றே இந்த தேசத்தில் இந்தியைப் பரப்ப முயற்சி செய்திருக்கவேண்டும். தேசத்திற்கு சுதந்திரம் வேண்டாமென்று சொன்னவர்கள்தான் இன்று இந்தி வேண்டாமென்று சொல்லுகிறார்கள். அவர்கள் வேண்டாமென்று சொன்னதைக் கேட்காமல் தேசத்திற்குச் சுதந்திரத்தைப் பெற்றோம். இப்போது இந்தி வேண்டாமென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வேண்டாமென்று சொல்லுவதைக் கேட்காமல் இந்தியைப் பரப்ப முயற்சிக்க வேண்டும். அன்றே முயற்சி செய்திருந்தால்

இன்று இந்தத் தொந்தரவு வந்திருக்காது. இனியாவது கனம் முதல் அமைச்சர் அவர்கள் இதற்கு முடிவு எடுத்து நிறைவேற்றினால், அவர்கள் கூறக் கூடிய திட்டத்தைத் தென்னகம் ஏற்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நேரத்தில் கனம் முதல் அமைச்சர் அவர்களுக்கு எங்கள் ஜில்லா சார்பிலும் என்னுடைய சார்பிலும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். திடமனதுடன் இப்பேர்ப்பட்ட குழப்பத்தைச் சமாளித்தார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். அவர்கள் கொஞ்சம்கூட அசைந்து கொடுக்காமல், பக்குவ மனத்தோடு, நிதானத்தோடு, பதட்டம் இல்லாமல், அமைதியை நிலை நாட்டிய பெருமை சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்க வேண்டிய ஒன்றாகும். அவ்வளவு திறமையாக நிலைமையைச் சமாளித்ததற்காக என்னுடைய ஜில்லாவின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே 7 கல்லூரிகள் திறக்கப்போவதாக கனம் முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். அம்மாதிரி ஒரு கல்லூரியை எங்களுடைய ஜில்லாவில், குறிப்பாக வேலூர் நகரத்தில் திறக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் ஏற்கனவே அதற்குரிய தொகையைக் கொடுத்திருக்கிறோம். இந்த ஆண்டில் அதை ஆரம்பிப்பார்கள் என்று நம்புகிறேன். அம்மாதிரி ஆரம்பிக்கும்படி கனம் முதல் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 3 என்ஜினியரிங் கல்லூரிகள் திறக்கப்போவதாக கனம் முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஒரு என்ஜினியரிங் கல்லூரியை வட ஆற்காடு ஜில்லாவில் ஆரம்பிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

போலீஸ்காரர்கள் இந்த நெருக்கடியான நிலைமையை எப்படிச் சமாளித்தார்கள் என்பதை நாம் எல்லோரும் பாராட்டிக்கொண்டிருக்கிறோம். போலீஸ்காரர்கள் பலருக்குக் குடியிருப்பதற்கு வீட்டு வசதி இல்லாமல் இருக்கிறது. அதற்காக நாம் ஓரளவு அவர்களுக்கு வீட்டு அலவன்ஸ் கொடுக்கிறோம். இந்த அலவன்ஸ் போதாது. வருடத்திற்கு இத்தனை வீடுகள் என்று நிர்ணயித்து, எல்லா போலீஸ்காரர்களுக்கும் சர்க்கார் துறையில் வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நான் இதுபற்றி கடந்த நிதிநிலை அறிக்கை விவாதத்தின்போது கூட வற்புறுத்தியிருக்கிறேன். இந்த ஆண்டும் இதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தில் பெரிய குழப்பங்கள் இருந்து, அமைதியை நிலை நாட்டிய பெருமை கனம் முதல் அமைச்சர் அவர்களைச் சாரும் என்று நான் முன்பே சொன்னேன். இந்தக் குழப்பங்களுக்கும் இடையே, நம்முடைய சர்க்கார் ஊழியர்களுக்கு தாராளமாக சம்பள உயர்வு அளித்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

என்னுடைய ஜில்லா அரக்கோணம் பகுதியிலே ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப் போவதாக நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. தொழில் வளர்ச்சிக் கார்பரேஷன் மூலம் அரக்கோணப் பகுதியிலே வார்ப்படத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்





போவதாக இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதற்காக நமது முதல் அமைச்சர் அவர்களையும் தொழில் அமைச்சர் அவர்களையும் பாராட்டிக்கொண்டு, அந்தத் தொழிற்சாலையை அந்தப் பகுதியிலே விரைவிலே ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, துர்க்காபூர் காங்கிரசில் இந்த ஆண்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். தொழில் துறையிலே பின் தங்கிய பகுதி, வளர்ச்சி அடைந்த பகுதி என்று இரு பகுதிகளாகப் பிரித்து, பின்தங்கிய பகுதியிலே தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்கு சர்க்கார் ஆக்கம் அளிக்கவேண்டும் என்று தீர்மானம் போடப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்மானத்தின்படி தொழில் துறையில் பின்தங்கிய ஜில்லா எது, முன்னேறி உள்ள ஜில்லா எது என்பதைக் கணக்கெடுத்து, பின்தங்கிய ஜில்லாவை வளர்ச்சி அடையச் செய்வது நம்முடைய கடமை. ஆகவே, அம்மாதிரி பின்தங்கிய பகுதி வளர்ச்சி அடைய நாம் பாடுபடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வட ஆற்காடு ஜில்லா தொழில் துறையிலே மிகவும் பின்தங்கிய ஜில்லா. பத்து சதவிகிதம்தான் தொழில் வளர்ச்சி அடைந்திருக்கிறது. தொழில் வளர்ச்சி ஓரளவுக்கு ஏற்பட கடந்த ஆண்டில் ஒரு தொழில் கருத்தரங்கு ஏற்பாடு செய்தோம். கனம் முதல் அமைச்சர் அவர்களும் தொழில் அமைச்சர் அவர்களும் அதில் கலந்துகொண்டார்கள். சுமார் 50 கோடி ரூபாய் வரையிலே இந்த ஜில்லாவில் தொழில் வளர்ச்சி ஏற்படவேண்டும் என்று கருத்தரங்கிலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்த அளவுக்கு ஜில்லாவில் பல பகுதிகளிலும் தொழில் வளர்ச்சி ஏற்படவேண்டும் என்பதை மனதில் வைத்துக் கொண்டு, பரவலாகத் தொழில்கள் வளர்ச்சி அடைய உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே மத்திய சர்க்கார் மூலமாக 3 தொழிற்சாலைகளை இந்த மாநிலத்தில் அமைப்பதற்கு ஏற்பாடுகள் நடந்துகொண்டு வருகின்றன. அதற்குத் தகுந்த இடங்களை ஆராய்ந்து பார்ப்பதாகவும் கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த 3 தொழிற்சாலைகளையும் வட ஆற்காடு ஜில்லாவில் நிறுவுவது மிகவும் பொருத்தமானது என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். இதற்கு வேண்டிய தண்ணீர் வசதி, இட வசதி, மின்சார வசதி முதலிய வசதிகளெல்லாம் என்னுடைய ஜில்லாவில் ஏராளமாக இருக்கின்றன. வரக்கூடிய தொழில் நிபுணர்களை வட ஆற்காடு ஜில்லாவில் பல பாகங்களுக்கும் அனுப்பி, இந்த மூன்று தொழிற்சாலைகளையும் எங்கள் ஜில்லாவில் ஆரம்பிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக வேலூர் நகரத்தில் 'இண்டஸ்டிரியல் டிரெயினிங் இன்ஸ்டிடியூட்' ஒன்று இருக்கிறது. இது நகரத்திற்கு சற்று தூரத்தில் இருக்கிறது. அதற்குத் தொடர்பு உள்ளதாக இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் ஒன்று அங்கு ஆரம்பிக்கவேண்டும். அப்பொழுது தான் நகரம் அபிவிருத்தி அடையும். அபிவிருத்தி இல்லை என்றால் மக்களின் வாழ்க்கைத் தரம் உயராது. அடுத்த ஆண்டிலாகிலும் அங்கு இண்டஸ்டிரியல் எஸ்டேட் ஆரம்பிக்கும்படி நான் கனம் தொழில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ர. ஜீவரத்னம்] [2nd March 1965

மதிப்பிற்குரிய அங்கத்தினர் கனம் ஏ. பி. ஸி. வீரபாகு அவர்கள் விற்பனை வரி பற்றியும், மத்திய சர்க்காருடைய இன்கம் டாக்ஸ் பற்றியும் பேசினார்கள். கனம் முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் சில நினைவுகளைக் கொண்டு வர விரும்புகிறேன். வியாபாரிகளை நாம் எப்பொழுதும் சந்தேகக் கண் கொண்டு பார்ப்பது அவ்வளவு உசிதம் அல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம். வியாபாரிகள் ஏன் முறை தவறி நடந்துகொள்கிறார்கள் என்பது பற்றி நாம் சற்று விரிவாக ஆராயவேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை. அந்த அளவுக்கு நான் ஆராய்ச்சி செய்து பார்த்ததில் மத்தியசர்க்காரின் வருமான வரிக் கொள்கைதான் அதற்குக் காரணம் என்பதை நான் தெரியப்படுத்திக்கொள்கிறேன். சாதாரணமாக ஒரு வியாபாரிக்கு ரூ. 20,000 வருமானம் வந்தால், 'கிராஸ் பிராபிட்' வந்தால், இப்பொழுதுள்ள வருமான வரி அமைப்பு விதிகளின்படி அவன் ஏறத்தாழ ரூ. 7,000 வரி கட்டவேண்டும். 'கிராஸ் பிராபிட்' தான் ரூ. 20,000. ஆனால், வியாபாரியின் கைக்கு வந்திருப்பது ரூ. 10 அல்லது 12 ஆயிரம்தான். ஆனால் வருமான வரி அதிகாரிகள் அந்த வியாபாரியின் வருமானம் ரூ. 20,000 என்று நிர்ணயித்து, ரூ. 7,000 வருமான வரி செலுத்திவிடவேண்டுமென்று சொன்னால், அந்த வியாபாரிக்குக் கண்டிப்பாக மனது வராது. அதற்காகத்தான் அவன் ஏதோ மாற்று வழிகளைக் கண்டு பிடிக்க முயலுகிறான். அம்மாதிரி வியாபாரிகள் மாற்று வழிகள் கண்டு பிடிக்காமல் இருக்கவேண்டுமென்று சொன்னால், வருமான வரி விகிதாசாரத்தை மாற்றி அமைக்கவேண்டும். அதற்கு நம்முடைய கையில் அதிகாரம் இல்லையென்றாலும், மத்திய சர்க்காரிடம் நாம் இதுபற்றி தெரியப்படுத்த வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை. இதைக் கனம் முதல் அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விற்பனை வரி பற்றி சோதனையெல்லாம் நம்முடைய ராஜ்யத்தில் பிரமாதமாக நடந்துகொண்டிருக்கிறது. ஆனால், ஹைகோர்ட்டு முடிவு வேறு விதமாக இருக்கிறது. நான் ஒரு வியாபாரி. வியாபாரிகளிடம் நிறை தொடர்பு உடையவன் என்ற முறையில் கூறிக் கொள்ள விரும்புகிறேன். தவறு செய்ய எந்த வியாபாரியும் முன் வர மாட்டான். வியாபாரி பயந்த சுபாவம் உடையவன். விற்பனை வரி சம்பந்தமாக இம்மாதிரி சோதனை போடுவதைக் காட்டிலும், விற்பனை வரி சரியாக நமக்கு வசூல் ஆகவேண்டுமென்ற நிலையில், இந்த முறைகளையெல்லாம் தவிர்த்து, ஆங்காங்கு ஜில்லாக்களில் பல பாகங்களிலும் ஏற்படுத்தியுள்ள செக் போஸ்டுகளில், சரியானபடி வவுசர் இருக்கிறதா, சரியானபடி "பில்" இருக்கிறதா, சரியான முறையில் சாமான் போகிறதா என்று, சரிவர கண்காணித்தால் அதன் மூலம் ஏராளமாக நமக்கு விற்பனை வரி வருமானம் கிடைக்கும். அந்த முறையில் பரீட்சித்துப் பார்க்க வேண்டும் என்று நான் கனம் தொழில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். வியாபாரிகளிடம் நாம் நம்பிக்கை வைக்க வேண்டும். நம்பிக்கை வைத்தால் கண்டிப்பாக வியாபாரிகள் ஒழுங்காக நடந்துகொள்வார்கள். வியாபாரிகள் இந்த தேசத்தினுடைய முதுகெலும்பு. அவர்களை நம்பவேண்டும்.



2nd March 1965] [திரு. ர. ஜீவரத்னம்]

கடைசியாக, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள நிதி நிலை அறிக்கையை நான் மனப்பூர்வமாக ஆதரித்து எனக்குப் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. சங்கரன்** : கனம் தலைவர் அவர்களே, 1965-66-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூறப் பிரியப்படுகிறேன். குறிப்பாக, உணவு உற்பத்தி சம்பந்தமாக என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றிய விவரங்கள் இந்த அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய ராஜ்யத்தினுடைய களஞ்சியமான தஞ்சாவூர் மாவட்டத்தில் இன்னும் அதிகமாக நெல் உற்பத்தி செய்வதற்கு என்னென்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதுபற்றி கூறப்பட்டிருக்கிறது. உதாரணமாக, 4,000 கிணறுகள் தோண்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது ஒரு நல்ல புதிய ரக விதை கண்டுபிடித்திருக்கிறார்கள். அதை அங்கு உபயோகப்படுத்துவதற்கும், கால்வாய்களைச் சீரமைப்பதற்கும். இன்னும் இதுபோன்ற பல நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு, உணவு உற்பத்தியை அதிகரித்து, உணவுப் பிரச்னையை நல்ல முறையில் தீர்ப்பதற்கும் வழிவகைகள் எடுத்துக்கொண்டிருப்பதை நாம் பாராட்டவேண்டும்.

என்னுடைய மாவட்டம் போன்ற இடங்களை எடுத்துக்கொண்டால், பெரியாறு இர்ரிகேஷன் ஏரியாவை எடுத்துக்கொண்டால், கொஞ்சம் பின்னால்தான் தண்ணீர் விடப்பட்டது. சாதாரணமாக மார்ச்சு 1-ம் தேதி தண்ணீர் விடுவது முடியவேண்டிய நேரம். தண்ணீர் கொஞ்சம் பின்னால் விட்டதனால், சுமார் 2 வாரங்களுக்கு இன்னும் தண்ணீர் பின்னால் விடவேண்டிய அவசியமும், நிர்ப்பந்தமும் ஏற்பட்டிருக்கிறது. இல்லாவிட்டால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் பரிந்துபோன பயிர்கள் விளையாமல் நின்று போய் விடும்படியான நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுவிடும். சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வந்தபொழுது இதற்கு ஆவன செய்யவேண்டும் என்று எடுத்துச் சொன்னோம். அதற்கு வேண்டிய வழிகள் செய்யப்படும் என்று அமைச்சர் அவர்களும் உறுதி அளித்தார்கள். கடைசி வரைக்கும் விளையும்படியாக, தண்ணீர்த் தட்டுப்பாடு இல்லாத வகையிலே தண்ணீர் விடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் ஒன்று சொல்ல வேண்டும். கொடைக்- 11-30
கானல் மலையிலிருந்து ஒரு அபாய அறிவிப்பு போன்ற குறை a.m.
பாடு வந்திருக்கிறது. கொடைக்கானல் நகரத்தைப் பொறுத்த வரையில், அது மற்ற நகரங்களைப் போல் அல்லாமல், மலைமேலே இருப்பதால், அங்கே நெல், அரிசி வரமுடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அங்கு பஞ்சம் ஏற்பட்டு அங்குள்ள மக்கள் அரிசி கிடைக்காமல், கஷ்டப்படுகிறார்கள். அங்கிருந்து அப்படிப்பட்ட முறையீடு வந்து கொண்டிருக்கிறது. ஆகவே, நெல், அரிசி கொண்டு போவதை ரொம்பவும் இறுக்கமாகச் செய்யாமல், ஏற்பட்டிருக்கும் பஞ்ச நிலைமையைப் போக்க அரசாங்கம் உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும்.

உணவுப் பிரச்னையைப் பற்றிப் பேசும் போது, பல நாட்களாகச் சொல்லிவந்திருக்கும் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். உணவுப் பண்டங்களை, அதிலும் முக்கியமாக அரிசியை வேமெண்ட் மூலம் கொடுப்பது நலமாக இருக்கும். இதைப் பற்றி பல தடவைகள் சொல்லியிருக்கிறோம். இப்பொழுது இருக்கும், அளவு முறையில் பல தவறுகள் ஏற்படுகின்றன. படியால் அளப்பதனால், அரிசி பதம் போடப்பட்டு அதிகமாக அளவு காட்டுகிறது, வேமெண்ட் மூலம் கொடுத்தால், அப்படி இருக்காது என்றும் கருதப்படுகிறது. அளவு முறையினால் பதம் போடப்பட்டு, தரக் குறைவு, வீச்சம், அளவு வேறுபாடு அதிகமாகி விடுகிறது என்று விவரம் தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால், அதை உடனடியாகச் சர்க்கார் கொண்டு வரமுடியாமல், ஒரு சில வியாபாரிகள் ப்ரெஷர் கொடுப்பதாகத் தெரிகிறது. அதில் அவர்களுக்கு ஆதாயம் இருப்பதால்தான் ப்ரெஷர் கொடுக்கிறார்கள். வேமெண்ட் மூலம் கொடுப்பதனால், காலதாமதம் ஏற்படும் என்றும் சொல்லப்படுகிறது. அது சரியில்லை. சாதாரணமாக ஒரு நகரத்தில் உள்ள ஒரு ரேஷன் கடையில் ஒரு நாளில் அதிகமாகப் போனால் 50 அல்லது 100 பேர்கள் வாங்கப் போகிறார்கள். அவர்களுக்கு வேமென்ட் மூலம் கொடுப்பதால் எவ்வளவு காலதாமதம் ஏற்பட்டு விடப் போகிறது? அப்படியே கொஞ்சம் தாமதம் ஆகிறது என்றாலும் கூட, அது பொது மக்களின் நன்மைக்காகச் செய்யப்படுகிறது என்று சொல்லும்போது, அதற்கு எதிர்ப்பு இருக்க முடியாது. ஆகவே அந்த முறையை சீக்கிரத்தில் அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன். அதே நேரத்தில், சொந்த நெல் கொண்டு போகிறவர்களுக்கும் உதவியாக ஆவன செய்ய வேண்டும். இன்றைக்கு கிராமத்திலிருந்து ஒரு நகரத்திற்கு நெல் கொண்டு போக வேண்டும் என்றால், கிராம அதிகாரிகளிடம் இருந்து அதற்கான பர்மிட் வாங்குவதில் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. பல மாமூல்கள் கொடுக்க வேண்டியிருக்கிறது. கீழே உள்ள அதிகாரிகள் அப்படி இருப்பதாக முறையீடுகள் வருகின்றன. சொந்த நெல் கொண்டுவர உடனடியாக அனுமதிகள் வழங்க சுலபமான முறையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, துவரம்பருப்பு, கொத்துக்கடலை இவற்றைப் பற்றிச் சொல்லும் போது, போதிய அளவு கிடைக்க ஏற்பாடு செய்திருக்கிறோம், இத்தனை ஆயிரம் டன்கள் வருகின்றன, என்றெல்லாம் சொன்னால் மட்டும் போதாது. நம் தேவையைக் கணித்து அந்த அளவுக்குக் கொண்டுவந்து, அன்றாட உபயோகத்திற்கு வேண்டிய பருப்புவகைகள் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மக்கள் உணவில் அன்றாடம் உபயோகிப்பது துவரம் பருப்பு. ஏழை மக்களின் உணவு பொட்டுக்கடலை. பொட்டுக் கடலை தயார் செய்ய கொத்துக்கடலை அல்லது பெங்கால் கிராம் அவசியம். அப்படிப்பட்ட நிலைமையில், மாதக்கணக்கில் ஆகாமல், மக்களுக்குத் தேவையான இந்தப் பொருள்களை உடனடியாகக் கிடைக்கச் செய்ய தக்க ஏற்பாடு செய்யவேண்டும். எல்லாவற்றையும் கோ-ஆபரேடிவ் சொசைடிகளுக்கே கொடுக்க வேண்டும் என்று சொல்வதும் அவ்வளவு சரியாகாது. அங்கேயும் பல தவறு





கள் ஏற்படுகின்றன. நகரத்தில் ரேஷன் கடைகள் இருக்கின்றன, அங்கேயெல்லாம் அரிசி வினியோகம் செய்யப்படுகிறது. அங்கேயே, அங்குள்ள கார்டு ஹோல்டர்களுக்கு இந்தப் பொருள்கள் கொடுப்பதை, அரைப்படியோ அல்லது ஒரு படியோ அதை, அந்தந்தக் கடைகள் மூலமாக நகரங்களில் கொடுக்க ஏற்பாடு செய்துவிட்டால் நலமாக இருக்கும். ஆகவே அந்த வகையில் விரைவில் மக்களுக்கு பருப்பு, கொத்துக்கடலை கிடைக்கச் செய்ய வேண்டும்.

* இதற்கு அடுத்தபடியாக, முக்கியமான பிரச்சினை மொழிப் பிரச்சினை. அது குறிப்பாக நம் நாட்டில் முக்கியத்துவம் அடைநது விட்டது. முதல் அமைச்சர் மகாநாட்டில், நம் முதல் அமைச்சர் கோரியிருப்பதை நாம் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறோம். அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், எல்லா ராச்சியங்களும் ஒத்துக்கொள்ளும் வரைக்கும், ஆங்கிலம் இருக்கவேண்டும் என்று. உண்மையிலேயே அதை நாம் பாராட்ட வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். அப்படி இல்லை யென்றால், முக்கால் பங்கு அல்லது மெஜாரிடி, சம்மதித்தால் மாற்ற வேண்டும் என்றால் பத்து இந்தி பேசாத மாநிலங்கள் இருந்து அவற்றில் எட்டு மாநிலங்கள் ஒத்துக் கொண்டு விட்டால், சம்மதிக்காத இரண்டு மாநிலங்களிலும் இந்தி வந்துவிடும், ஆங்கிலம் போய் விடும். அந்த இரண்டு மாநிலங்களைப் பொறுத்தவரை, இந்தி திணிக்கப் பட்டதாகக் கருதப்படும். அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டு விடாமல் ஒவ்வொரு ராஜ்ஜியமும் ஒத்துக் கொள்ளும் வரை, ஆங்கிலம் நீடிக்க வேண்டும என்று நமது முதல் அமைச்சர் வலியுறுத்தி யிருக்கிறார். அப்படி இல்லா விட்டால், அந்த இரண்டு ராஜ்ஜியமும் தங்கள் மேல் இம்போசிஷன் இருக்கிறது என்று குறைபடுவார்கள். நம் முதல் அமைச்சர் செய்திருப்பது என்னவென்றால், ஒரு இராச்சியமாக இருந்தாலும், அங்கே இம்போசிஷன் இருக்கக் கூடாது, அந்த ஒரு ராஜ்ஜியமும் ஒத்துக்கொள்ளும் வரையில் ஆங்கிலம் நீடித்து இருக்க வேண்டும் என்று. ஆகவே, அதிலே மெஜாரிடி, மைனாரிடி என்று கிடையாது. கடைசியில் ஒரு ராஜ்ஜியமாக இருந்தாலும், அதுவும் ஒத்துக் கொள்ளாத வரை இந்தி புகுத்தப் படமாட்டாது என்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள் நம் முதல் அமைச்சர். அப்படிச் செய்வதால் யாருக்கும் பாதகம் ஏற்படாமல் இருக்கும். அவர்களுடைய யோசனை மிகச் சிறந்தது. அதை எல்லோரும் யோசனை செய்து ஒத்துக்கொள்ளவேண்டும். சாதாரணமாக ஒரு ஆற்றைக் கடக்க வேண்டுமென்றால், படகுக்கு மூங்கிலை ஆதாரமாக வைத்துக் கொண்டு தாண்டவேண்டும் என்றால், அந்த ஆற்றின் அதிக ஆழமுள்ள இடத்திற்கு வேண்டிய நீளம் குச்சி இருந்தால்தான் அந்த ஆற்றைக் கடக்க முடியும். அல்லாமல், ஆழத்தைச் சராசரி எடுத்து அல்லது மெஜாரிடி உள்ள நீளத்தை வைத்துக்கொண்டால் எப்படியோ அப்படி ஆகிவிடும். அப்படிப்பட்ட நீளமுள்ள மூங்கிலை வைத்துக்கொண்டு அதிக ஆழமுள்ள இடத்தில் ஆற்றைக் கடக்க முடியாது. அந்த முறையில்தான் நம் முதல் அமைச்சர் கடைசி ஆள் ஒத்துக்கொள்ளும் வரைக்கும், கடைசி ராஜ்ஜியம் ஒத்துக் கொள்ளும் வரைக்கும், ஆங்கிலம் தொடர்ந்து இருக்க

வேண்டும் என்று நல்ல யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். அதை நிறைவேற்ற வேண்டும். ஆட்சி மொழி சம்பந்தமாக, அந்த சட்டத்தைத் திருத்த வேண்டும். அதில் மூன்றாவது செக்ஷன் தான் முக்கியமானது. அதன் பின்னால் 4-வது 5-வது என்று பல செக்ஷன்கள் வருகின்றன. அதிலே பல ஷரத்துக்கள் இருக்கின்றன. பின்னால் இந்தியைப் பற்றி ஆராய வேண்டும், கமிட்டி போடவேண்டும் என்றெல்லாம் ஏற்பாடு செய்யப் பட்டு அந்த வகையில் சட்டத்தில் மேற்கொண்ட செக்ஷன்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. நம் முதல் அமைச்சர் சொல்வது போல இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் நீடிக்கும் என்று செய்து விட்டால், இந்த ஷரத்துக்கும் இடமே இருக்காது. அதையெல்லாம் நீக்கம் செய்து அபிஷல் லாங்வேஜ் ஆக்டைத் திருத்த ஏற்பாடு செய்யவேண்டும். பின்னால் வரக்கூடிய சந்ததியார்களுக்கு ஆட்சேபணையோ குறைபாடோ இல்லாத முறையில் இப்பொழுதே நன்றாக ஆராய்ந்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதைப் பற்றித் தீர பரிசீலனை செய்து, அவசியம் ஏற்பட்டால், சட்ட நுணுக்கம் தெரிந்தவர்களைக் கொண்டு ஆலோசித்து, அடிப்படை நோக்கம் நிறைவேற, கொண்டுவரும் திருத்தங்களை ஆராய்ந்து செய்ய வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், பின்னால், ஒரு 'க்' விட்டுப் போய்விட்டது, இது சந்தேகம்; அது சந்தேகம் என்ற நிலைமை ஏற்படும். அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டு விடாமல், தக்க முறையிலே தேவைப்படும் திருத்தங்கள் முழுவதையும் செய்ய வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரீட்சை சம்பந்தமாக ஒரு யோசனை நிலவி வருகிறது. பிராந்திய மொழிகளிலும் ஏன் பரீட்சை நடத்தக்கூடாது என்ற யோசனை இருந்து வருகிறது. இந்தி, ஆங்கிலம் எந்த மொழியில் பரீட்சை எழுதினாலும், ஒருவருக்கும் பாதகம் ஏற்படாமல் பார்த்துக்கொள்வதற்கு மாடரேஷன் ஸ்கீம் கொண்டுவரப் போவதாகவும் சொல்லப்படுகிறது. இந்த இரண்டு மொழிகளைத் தவிர, பிராந்திய மொழிகளிலும் பரீட்சை, யூனியன் சர்வீஸ் கமிஷன் வைக்க வேண்டுமென்று சொல்கிறபோது, கோட்டா முறை வரக்கூடிய நிலை இருக்கிறது. எல்லா மொழிகளிலும் பரீட்சை நடத்தும்போது தரத்தை நிர்ணயிப்பது முடியாது என்று எனக்குத் தோன்றுகிறது. தனித்தனியாக மார்க் போட்டு, மாடரேஷன் செய்யும்போது, ஏற்றத்தாழ்வு இருக்கத்தான் இருக்கும். இந்த நிலையில் கோட்டா முறை வரக் கூடும். அதிலும் தரக் குறைவு, 'இன்ஃப்ளுவன்ஸ்' எல்லாம் ஏற்படக்கூடும் என்ற குறைபாடு சொல்லப்படுகிறது.' அதையும் மறுக்க முடியாது. இவற்றையெல்லாம் கருதி, நான் ஒரு யோசனை கூற விரும்புகிறேன். அது நல்ல யோசனையாகக் கருதி ஏற்றுக் கொள்ளக்கூடும் என்று நான் எதிர்பார்க்கிறேன். 'இந்தி ஸோன்' என்றும், 'ஆங்கில ஸோன்' என்றும் 'நோஷனலாக' வைத்து, இந்தியை பரீட்சை மீடியம் ஆகக் கொள்ளக்கூடிய ஸோனுக்கும் ஆங்கிலத்தை பரீட்சை மீடியம் ஆகக் கொள்ளக்கூடிய ஸோனுக்கும் இரண்டு ஸோனில் உள்ள ஜனத்தொகை விகிதப்படி





ஸ்தாபனங்கள் ஒதுக்கிவிடலாம். யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் 1,500 நபர்களைத் தெரிந்தெடுக்கவேண்டுமென்றால், முறையே இந்த இரண்டு ஸோன்களின் ஜனத்தொகை 1 : 2 என்று இருப்பின், இந்தி ஸோனில் இருப்பவர்களில் 500 பேர்களைத் தெரிந்து எடுத்துக் கொண்டுவிட்டு ஆங்கில ஸோனில் இருப்பவர்களில் 1,000 பேர்களைத் தெரிந்து எடுத்துக்கொண்டுவிடலாம். இந்த இரு பகுதிகளும் ஜனத்தொகையில் ஏறத்தாழ 1 : 2 என்ற விகிதத்தில் இருக்கலாம். இந்தி ஸோனில் இந்தியின் மூலமாகவும், ஆங்கில ஸோனில் ஆங்கிலத்தின் மூலமாகவும் பரீட்சை நடத்தி நபர்களைத் தெரிந்தெடுத்துக் கொள்வது என்கிற முறைதான் தற்போது நாட்டில் மொழி சம்பந்தமாக ஏற்பட்டிருக்கிற நெருக்கடி நிலையில் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். தரக் குறைவு ஏற்படுமோ என்கிற அச்சத்திற்கும் இடம் இருக்காது. சுலபமான முறையாகவும் இருக்கும். பிராந்திய மொழிகள் மூலம் யூனியன் சர்வீஸ் கமிஷன் பரீட்சை நடத்துவதை நான் ஆட்சேபிக்கவில்லை. என்றாலும், இது திரிசங்கு நிலையாகத்தான் இருக்கும். ஏனென்றால், யூனியன் பரீட்சைக்குப் பிராந்திய மொழியைக் கொண்டுவருவதற்கு முன்னால், அந்தந்தப் பிராந்தியத்தில் அதை ஆரம்பத்திலிருந்தே பூரணமாகக் கொண்டு வந்திருக்க வேண்டும். நிர்வாகம், நீதி முதலிய எல்லாவற்றிற்கும் அதைக் கொண்டுவந்திருக்கவேண்டும். மெட்ராஸ் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் நடத்தும் எல்லாத் தேர்வுகளுக்குமே தமிழையே பரீட்சை மொழியாக கொண்டுவந்திருக்க வேண்டும். இங்கே கொண்டுவந்தபின்னர்தான் யூனியன் சர்வீஸ் கமிஷன் பரீட்சைக் கட்டத்தில் பிராந்திய மொழிகளைப் பரீட்சை மொழியாகக் கொண்டுவரவேண்டும். அப்படியில்லாமல் உடனடியாக பிராந்திய மொழிகளை யூனியன் கட்டத்தில் கொண்டுவருவதென்பது விவேகமானதாக இருக்காது என்றே நான் கருதுகிறேன். இரண்டு ஸெக்டார், அல்லது இரண்டு ஸோன் வைத்துக்கொண்டு, நான் சொல்லிய யோசனைப்படி, இரு மொழிகளில் பரீட்சை நடத்தினால், தரக் குறைவு இருக்கும் என்று சொல்கிற குறைபாட்டைத் தவிர்க்க முடியும். இரண்டு சாராருக்கும் சமாதானம் செய்ததாகவும் ஆகும். மாணவர்களைக்கூடத் திருப்தி செய்யும் நிலைமை ஏற்படும். இந்த யோசனையைப் பரிசீலிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். பிராந்திய மொழி முக்கிய இடம் பெறுவதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் நடுவிலே ஆரம்பிப்பது அவ்வளவு பொருத்தமாக இருக்காது என்ற முறையிலேதான் என்னுடைய விளக்கத்தைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, கைத்தறி சம்பந்தமாகக் குறிப்பிட விரும்புகிறேன். மதுரை, கைத்தறிக்குப் புகழ் பெற்ற நகரம் ஆகும். கைத்தறித் தொழில் அங்கே விருத்தி அடைந்திருக்கிறது. அந்தப் பகுதியில் கைத்தறித் துணிகளில் தேக்க நிலை பல காரணங்களால் ஏற்பட்டிருக்கிறது. இப்போதுள்ள விலைவாசி உயர்வு காரணமாக கைத்தறித் துணி வாங்குபவர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது. டெரிலின், செயற்கைப் பட்டு போன்ற துணிகளை மக்கள் வாங்குவதன் காரணமாகவும், கைத்தறித் துணிகளுக்குள்ள டிமாண்டு ஓரளவு குறைந்திருக்கிறது. இது போன்ற பல காரணங்

[திரு. வை. சங்கரன்] [2nd March 1965

களினால் பல ஊர்களில் கூட்டுறவு சொஸைடிகளில் பல லட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள கைத்தறித் துணிகள் விற்கப்படாமல் தேங்கிவிட்டன. 'விஷஸ் சர்கிள்' என்பதுபோல, இருக்கிறது. கைத்தறித் துணிகள் தேங்கியிருப்பதால், மேலும் வேலை கொடுக்க முடியவில்லை. அதனால், கடன் கிடைக்காத நிலை இருக்கிறது. கைத்தறித் துணி டைரக்டரும், கூட்டுறவு டெபுடி ரிஜிஸ்ட்ரார்களும் மேலும் கடன் கொடுக்க மறுக்கிறார்கள் இது போன்ற காரணங்களால் மதுரையில் உள்ள கைத்தறிக் கூட்டுறவு சொஸைட்டிகள் மூடப்பட வேண்டிய அபாய நிலையை அணுகிக்கொண்டிருக்கின்றன. இந்த நிலையைத் தவிர்க்கவேண்டும். தேங்கியிருக்கும் துணிகளை அரசாங்கமே உடனடியாக 50 லட்சம் அல்லது 1 கோடி ரூபாய் ஒதுக்கி எடுத்துக்கொள்ள வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். அல்லது, ஸ்பெஷல் ரிபேட் கொடுத்து, துணிகள் விரைவில் விற்பனை ஆவதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டும். இதுபோன்ற பல முறைகளைக் கடைப்பிடித்து, இன்றைக்குள்ள அபாய நிலையைப் போக்கி, கைத்தறி நெசவாளர்களைக் காப்பாற்ற வேண்டும். இல்லாவிட்டால், கைத்தறித் தொழிலே மதுரைப் பிராந்தியத்தில் நசித்து போகும்படியான நிலைமைதான் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே அரசாங்கம் ஆவன செய்யவேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நம்முடைய ராஜ்யத்தில் பல இடங்களில் தொழில் பேட்டைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிலே பல யூனிட்கள் இருக்கின்றன. ஆனால், கச்சாப் பொருட்கள் (ரா மெடிரியல்ஸ்) அவற்றுக்குக் கிடைப்பதில் சிரமம் இருக்கிறது. பல யூனிட்களுக்குத் தேவையான கச்சாப் பொருட்கள் கிடைக்காததால் அவை அன்-இக்கனாமிக் யூனிட்களாக மாறும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் ஆரம்பிக்கும்போது, அதிலுள்ள யூனிட்களுக்கு லைசென்ஸ் கொடுக்கும்போதே, அவற்றுக்குத் தேவையான கச்சாப் பொருள் கிடைப்பதற்கான உத்தரவாதம் இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். அதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் சர்க்கார் நல்ல முறையில் கவனித்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

திருச்சிக்குத் தெற்கே கனரகத் தொழில்கள், பொதுத் துறையிலாகட்டும், தனியார் துறையிலாகட்டும் ஏற்படுத்தப்படவில்லை என்கிற பரிதாப நிலை இருக்கிறது. திருச்சியில் ஒன்றிரண்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அதற்குத் தெற்கே ஒன்றும் துவக்கப்படவில்லை. மதுரை வட்டத்திலே நல்ல கன ரகத் தொழில்கள் சீக்கிரம் ஆரம்பிக்கவேண்டும். டெக்ஸ்டைல் மில்கள் தனியார் துறையில் சில இருப்பதைத் தவிர, வேறு எந்தவிதமான கன ரகத் தொழில்களும் கிடையாது. மதுரைப் பிராந்தியம் இந்தத் துறையில் பின்தங்கியிருக்கிறது. தென் பகுதியில் குறிப்பாக, மதுரையில் கன ரகத் தொழில்கள் ஆரம்பிக்கப்படவேண்டும்.



2nd March 1965] [திரு. வை. சங்கரன்]

கோடைக்கானலுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. உதகையில் இரண்டு தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையில் கோடைக்கானலிலும் சில தொழில்களை ஆரம்பித்தால் அதுவும் நல்ல முறையில் வளர்வதற்கும் பொது மக்கள் வந்து போகவும் வாய்ப்பு இருக்கும். கோடைக்கானலில் தொழில்களை ஆரம்பிப்பதற்கான வகையில் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நெய்வேலி-சேலம் பகுதியில் உருக்குத் தொழிற்சாலை சீக்கிரம் துவக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும். உரம், மின்சாரம், கரி; உருக்கு இரும்பு ஆகிய நான்கு திட்டங்களும் ஒருசேர நடந்தால்தான் இக்கனாமிக்காக இருக்க முடியும். நான்கில் ஏதாவது ஒன்றை நிறுத்திவிட்டாலும், அந்த அளவுக்கு அன்-இக்கனாமிக்காகப் போய்விடும். அதை மத்திய சர்க்காரிடம் வற்புறுத்திக் கூற வேண்டும். சேலம் உருக்காலைத் திட்டம் வரும், வரும் என்று மக்களிடம் சென்ற ஏழெட்டு ஆண்டுகளாக வாக்குறுதி அளிக்கப்பட்டு வந்திருக்கிறது. இப்படிப் பல ஆண்டுகளாக மக்களிடம் வாக்குறுதி அளித்துவிட்ட பிறகு, புதிதாக மற்ற மாநிலங்களின் ஒன்றிரண்டு ப்ரபோசல்களையும் சேர்த்து வைத்து, அதோடு சேலம திட்டத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்பதென்பது பொருந்தாது. இதையும் மத்திய சர்க்காரிடம் வலியுறுத்தி, அந்த உருக்காலையைச் சேலத்தில் நிறுவுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சேது சமுத்திரத் திட்டம், தூத்துக்குடி ஹார்பர் விஸ்தரிப்பு போன்ற திட்டங்களைத் தென் முனையில் நிறைவேற்றப் போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டங்களை நிறைவேற்றும் இதே சந்தர்ப்பத்தில் தூத்துக்குடியிலிருந்து திருச்சி வரைக்கும் ப்ராட் கேஜ் இருப்புப்பாதை போடவேண்டுமென்பதையும் வலியுறுத்திக்கொண்டே வரவேண்டும். இல்லாவிட்டால், அதற்கென்று தனியாக நான்கைந்து ஆண்டுகள் ஆகக்கூடும். தென் பகுதியில் வளர்ந்து வரும் தொழில்களுக்கு ஏற்பவும், ஏற்படவிருக்கும் உப தொழில்களுக்கு ஏற்பவும், தூத்துக்குடி-திருச்சி இருப்புப் பாதையை ப்ராட் கேஜாக மாற்றியமைப்பதற்கான திட்டத்தையும் வலியுறுத்திக்கொண்டே வரவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கல்வியை எடுத்துக்கொள்வோம். அடுத்த ஆண்டிலே, இன்ஜீனீரிங், மெடிகல், இன்னும் மற்ற கலைக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் விஷயத்தில் இப்போதே அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும். எந்த அளவு வருகிற கல்வி ஆண்டில் அட்மிஷன் நிலைமை இருக்கும் என்று இப்போதே கணக்கெடுத்து, அதற்குத் தகுந்தபடி கல்லூரிகளில் இட வாய்ப்புக்கு ஏற்பாடு செய்யவேண்டும். ஏதோ சில கல்லூரிகளை ஏற்படுத்திவிட்டால் மாத்திரம் போதாது. சென்ற ஆண்டில், 400 மார்க் வாங்கிய மாணவனுக்கு பி.யு.ஸி.-யில் இடம் கிடைக்காத பரிதாப நிலை இருந்தது. அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் ஒவ்வொரு வகுப்பிலும் எத்தனை மாணவர்கள் வருவார்கள் என்று இப்போதே கணக்குப்போட்டு, அந்த அளவிற்கு இட வசதிக்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

மாலைக் கல்லூரிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் திறக்கப்பட வேண்டும். தற்போது குறிப்பிட்ட இரண்டு இடத்தோடு மட்டும் நிறுத்திவிடக்கூடாது. நான்-டீச்சிங் ஸ்டாஃப்புக்கும் உபாத்தியாயர்கள் போன்றவர்களுக்கு இருப்பதுபோன்ற சலுகைகள் கொடுக்கப்படவேண்டும். க்ளார்க் போன்றவர்களுக்கு உத்தியோக உயர்வுக்கும் வகை செய்யவேண்டும். மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் யூ.டி.ஸி. தரத்திற்கு கிளார்க் போட்டு க்ளார்க்குகளுக்கும் உத்தியோக உயர்வு அளிக்க வழிவகை இருக்கவேண்டும். அதோடு உபாத்தியாயர்களுக்கு இருப்பது போல சர்வீஸ் செக்யூரிடி கிடையாது. நினைத்தபோது மேனேஜ்மெண்டார் போகச் சொல்ல முடியும். அப்படி இன்றி அவர்களுக்கு சர்விஸ் செக்யூரிடி ஏற்படுத்த வேண்டும். டீச்சிங் ஸ்டாப்புகளுக்கு உள்ள எல்லா வசதிகளும் நான்-டீச்சிங் ஸ்டாப்புகளுக்கும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

விற்பனை வரி மூலமாக இந்த ஆண்டு மூன்றரை கோடிக்கு அதிகமாக வந்திருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். ஆகவே குறிப்பாக இரண்டு மூன்று பொருள்களுக்கு உணவுப் பொருள்களான பால், நெல், அரிசி, கடலை, பட்டாணி போன்றவற்றின் மீதான வரியையாவது எடுத்துவிட்டால் இழப்பு ஒரு கோடிக்குள்தான் இருக்கும். அதை மக்கள் வரவேற்பார்கள். ஆகவே உணவு தானியமாகிய நெல், அரிசி, பால், பட்டாணி, கடலை போன்றவற்றுக்கு விற்பனை வரியைச் சர்க்கார் எடுக்கவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். என்.ஜி.ஓ.-க்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள டி.ஏ. வரவேற்கத்தக்க அம்சம். இன்னும் பல ஆண்டுகளாக ஒவ்வொரு இலாக்காவிலும் சிலர் டெம்பரியாக இருக்கிறார்கள். கூட்டுறவு இலாகாவில் ஓய்வு பெறும் வயது வரையில்கூடச் சிலர் சர்வீஸ் நிரந்தரம் செய்யாமல் இருக்கிறார்கள். இவற்றையும் பரிசீலனை செய்து தொடர்ந்து ஒரு போஸ்டில் இத்தனை ஆண்டுகள் டெம்பரரியாக இருந்தால் போதும், உடனே பர்மெனன்ட் செய்யலாம் என்கிற ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரை மெடிக்கல் ஆஸ்பத்திரியில் வொர்க்கிங் ஸ்டாப் மிகவும் குறைவு. ஒரு நாளைக்கு 1,600 பேர்களுக்கு மேல் வருகிற சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியை விட அதிகமான பேர்கள் வருகிற அந்த இடத்தில் ஸ்டாப் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். இன்னும் ஏர் கண்டிஷன் வசதி, வாட்டர் பெசிலிடி, லாண்டரி வசதி எல்லாம் செய்து கொடுக்கவேண்டும். உலக பாங்க் மதுரை, திருச்சி போன்ற நகரங்களின் அபிவிருத்திக்கு 10 கோடி கடன் கொடுக்க முன் வந்திருக்கிறபோது சீக்கிரம் வாங்கிக் கொடுக்க வேண்டும். மதுரையைப் பொறுத்த வரையில் ஸ்லம் க்ளியரன்ஸில் போதுமான கவனம் செலுத்தப்படவேண்டும். அதையும் சீக்கிரத்தில் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் தலைவர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய வரவு செலவுத் திட்டத்தை வரவேற்கிறேன். குறிப்பாக, கடந்த





வருஷம் மிகவும் சோதனை உள்ள வருஷமாக இந்த ராஜ்யத்தைப் பொறுத்த மட்டில் அமைந்திருந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். பல்வேறு பிரச்சினைகள்—உணவுப் பிரச்னை, ராமேஸ்வரம், தனுஷ்கோடி புயல், மொழிப் பிரச்சினை ஆகிய எல்லாம் ஏற்பட்டும் இந்த அரசாங்கம் உறுதியாக இருந்து இன்றைக்கு ஓர் அமைதியான நிலையைச் சிருஷ்டித்து இருக்கிறது. இது மிகவும் பாராட்டத் தகுந்தது. இந்தவிதமான அமைதியான நிலையை உண்டு பண்ணி இருப்பதைச் சிலர் விரும்பாமல் இருக்கலாம். இந்த ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் சில பத்திரிகைகள் வேண்டுமென்றே தீர்ந்து போன விஷயங்களை, கழிந்துபோன விஷயங்களைப் புதுப்பித்து, புது மெருகு கொடுத்து மக்களுடைய உணர்ச்சியைத் தூண்டிவிடுகிறார்கள். குறிப்பாக நேற்றைய தினம் பத்திரிகையில்கூடப் பார்த்தேன். புதிதாக ஒருவர் இறந்து மாண்டுவிட்டது போன்று அந்தப் பத்திரிகையில் பல தினங்களுக்கு முன்பு மாண்டவரது சரித்திரமே பிரசுரிக்கப்பட்டு இருக்கிறது. அதற்காக நான் வருந்துகிறேன். அரசாங்கம் இந்தமாதிரியாக ஒரு சில பத்திரிகைகள் மக்களின் உணர்ச்சியைத் தூண்டிவிடும் வகையில் செய்திகள் பிரசுரிப்பதைக் கட்டுப்படுத்த எந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள முடியும் என்பதைப் பரிசீலிக்க வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுத்துக் கொள்வது இந்த நாட்டில் அமைதியைக் காப்பாற்றுவதற்கு மிகவும் அவசியமாகும். எதிர்க்கட்சியினர் நேற்றும், இன்றும் நடந்து கொண்ட முறை இந்தச் சபையின் ஒழுங்குக்கு உட்பட்டதா என்பது ஒருபுறம் இருக்க இது நாட்டின் அமைதியைக் குலைக்கும் முயற்சியோ என்று வருந்துகிறேன். இன்றைய தினம் பழைய நிலை திரும்பி வந்து கொண்டிருக்கிற நேரத்தில், மாணவர்களைத் தூண்டியவர்களும் கூட அந்தப் பொறுப்பினின்றும் நீங்கிக் கொண்டிருக்கக் கூடிய நிலை வருவதைப் பார்க்கிறோம். மாணவர்கள் பலாத்காரத்தில் தங்களுக்குச் சம்பந்தம் இல்லை என்று தெளிவாகத் தெரிவித்துவிட்டார்கள். ஆனால் பலாத்காரம் நடந்தது என்பது உண்மை.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

யார் அத்தகைய நிலைமைக்குப் பொறுப்பு என்பதை ஆராய்ந்து அறிய, அதற்குரிய பரிகாரம் தேட, நீதி விசாரணை நடக்க இருக்கிறது. ஆகவே பொறுப்புள்ள எல்லோரும் இன்றைக்கு ஏற்பட்டு இருக்கிற அமைதியைப் பாதுகாக்க முன்வரவேண்டும். இந்த அமைதியைக் குலைக்க முயற்சிக்கிற பத்திரிகைகள் மீது—அதுவும் ஒரு சில பத்திரிகைகள்தான்—தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்றைய தினம் கொடுத்திருக்கக்கூடிய வரவு-செலவுத் திட்டத்தில் இவ்வளவு கஷ்டங்களுக்கும் இடையில் நாம் என்ன என்ன திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று திட்டமிட்டு இருந்தோமோ அவற்றை எல்லாம் நிறைவேற்றி இருக்கிறோம். நிறைவேற்றப்படாமல் எதுவும் விடப்படவில்லை என்பதைப் புள்ளிவிவரங்களே காட்டும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி வருஷத்தில் நாம் குறிப்பிட்ட இலக்கை நிறைவேற்ற இருக்கிறோம். எல்லா ராஜ்யங்களும் நம்மைப் பார்த்து மகிழக் கூடிய, பொறாமைப்படக்

கூடிய அளவுக்கு நம்முடைய திட்ட சாதனைகள் இருக்கின்றன என்பதை இந்த பட்ஜெட் புள்ளிவிவரங்களே காட்டும். 291 கோடி ரூபாய் மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திற்காக ஒதுக்கினோம். அப்படி ஒதுக்கப்பட்ட காலத்தில்கூட 101 கோடி ரூபாய் ராஜ்ய அரசாங்கம் தன்னுடைய நிதியில் இருந்து திரட்ட வேண்டும் என்று சொல்லப்பட்டது. அந்த இலக்கையும் மீறி 147 கோடி ரூபாய் திரட்டி அதை வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்கிறோம் என்பது இந்தக் கணக்கைப் பார்த்தாலேயே தெரியும்.

அதுவும் சென்ற ஆண்டு பந்தோபஸ்து செலவு காரணமாக நிறுத்தப்பட்டிருந்த வேலைகள் எல்லாம் தொடர்ந்து இவ்வாண்டு செயல்படுத்தப்படும் என்பது மகிழ்ச்சிக்குரியதாகும். ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களும், புது நிலையங்களும் எல்லா ப்ளாக்குகளிலும் நிறைவேற்ற வசதி ஏற்பட்டு இருக்கிறது. அதோடு தொழில் துறைக்கு இந்த அரசாங்கம் எல்லா விதமான உதவியும் செய்து வந்தது. அதன் காரணமாக, பெரிய பெரிய தொழில்களை எல்லாம் நிறுவ முடிந்தது. இப்போது ராஜ்ய சர்க்கார் தரப்பில் தனியாக ஒரு கார்ப்பரேஷன் உண்டு பண்ணியிருப்பது நல்ல ஆறுதல் தரும் செய்தி. அதுபோல் கப்பல் தொழிலுக்கும் கப்பல் கார்ப்பரேஷன் நிறுவி இருப்பது சந்தோஷத்திற்குரியது.

குறிப்பாக பருவ நிலைக் கோளாறு காரணமாக ஒரு பக்கம் வெள்ளத்தால் அழிவு, இன்னொரு பக்கத்தில் தண்ணீர் இல்லாக் கஷ்டம் பெரிய அளவுக்கு ஏற்பட்டு இருக்கிறது. குறிப்பாக திருநெல்வேலி ஜில்லாவில் இன்றையதினம் கண்கலங்கக்கூடிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. ஒரு லட்சம் ஏக்கரா சரியாக விளைய முடியாத நிலை ஏற்பட்டு இருக்கிறது. தாம்பிரபாணி தீரத்தில் ஒரு லட்சம் ஏக்கரா தீய்ந்து போகக் கூடிய அல்லது மிகக் குறைந்த மகசூல் காணக்கூடிய அபாயம் இருக்கிறது. இதை கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஒரு பக்கம் தண்ணீர் இருக்கிறது. குறிப்பாக கடம்பாவில் உள்ள தண்ணீர் கடம்பா ஆயக்கட்டு மூவாயிரம் ஏக்கராவுக்குத் தேவையானது போக மீதித் தண்ணீர் தேங்கியிருக்கிறது என்ற நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. அந்தத் தண்ணீரைக் கீழே கொடுத்தால் பத்தாயிரம் ஏக்கரா பாசன வசதி பெறும். சட்டம்
12.00 noon எப்படி இருக்கிறதோ? ஜில்லாவில் இருக்கக்கூடிய உயர்தர அதிகாரிகள் இதுபற்றிப் பரிசீலனை செய்து உடனடியாக பாழாக இருக்கிற பத்தாயிரம் ஏக்கராவைப் பாதுகாக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எந்தத் தாலூகா என்றுகூட இல்லாமல் ஜில்லா முழுமையும், தாலூகாக்களிலும் பெரும் பகுதிகளில் புஞ்சைப் பயிர் மகசூல் தீய்ந்து விட்டது. நஞ்சைப் பயிரும்கூட நல்ல முறையில் மகசூல் இல்லாத நிலைமை இருந்து வருகிறது. ஜில்லா முழுமையும், எல்லாத் தாலூகாக்களிலும் அதிகப்படியான பிரதேசங்களில் பஞ்சத்தின் அறிகுறி தென்படுகிறது. பஞ்சக் கோமன் பிரகாரம் முறையாக 3½ அணுவுக்குக்கூட தொழிலாளர்கள் வேலைக்கு வரும் நிலைமை வந்தால்தான் பஞ்சம் ஏற்பட்டது என்று கருதி பஞ்ச நிவாரண வேலைகள் மேற்கொள்ளப்படும். ஆனால், இப்பொழுதுள்ள நிலைமை





யில் அரசாங்கம் அங்குள்ள நிலைமையைப் பார்த்து வழிசெய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக நஞ்சை நிலங்களும்கூட தீய்வு ஏற்படக்கூடிய நிலையில் இருக்கின்றன. இந்த நிலைமையை உடனடியாக மாற்றியமைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஜில்லாவில் இருக்கக்கூடிய அதிகாரிகள் அந்தந்தப் பகுதிகளுக்கு முறையாக வந்து பார்த்து, அங்குள்ள நிலைமைகளைப்பற்றி அரசாங்கத்திற்குத் தெரிவித்திருக்கிறார்களா என்பதில் நான் சந்தேகம் கொள்கிறேன். ஆகவே, இது விஷயத்தில் அக்கறைகொண்டு பரிகாரம் தேடுவதற்கு முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ராஜ்யம் முழுமையும் நெருக்கடியாக எழுந்த உணவுப் பிரச்னை சம்பந்தமாக அரசாங்கம் தீர்க்கமாக நடவடிக்கை எடுத்தது உண்மை. சென்னையில் உள்ள 20 லட்சம் மக்களுக்கு உடனடியாகப் பரிகாரம் கண்டிருக்கிறார்கள். ஆனால் இதன் காரணமாக இந்த அரசாங்கம் கிராமப் பகுதிகளிலே ஏற்பட்டிருக்கும் விலையேற்றத்தில் அதிகக் கவனம் செலுத்தவில்லை. ஆகவே, கிராமப் பகுதிகளிலும் விலையேற்றத்தைக் குறைக்கவேண்டும். திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு உணவுப் பொருள்கள் கொண்டு போக முடியாது. இதைப்பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால், சென்னை நகரில் ரூ. 1.25-க்குக் கிடைக்கக்கூடிய அரிசி திருச்செந்தூரில் ரூ. 1.75 அல்லது ரூ. 2.00க்குக் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. திருநெல்வேலியின் சுற்றுப் புறங்களிலே இந்த நிலைமை இருக்குமானால், உணவுக் கஷ்ட நிலைமைப் பிரச்னை அரசாங்கத்தின் கவனத்திற்கு முறையாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா? அப்படியானால், அதன் மீது உடனடியாக என்ன பரிகாரம் செய்யப்பட்டது? இந்த விலை விஷயம் மாகாணத்தின் ஒரு பகுதியிலே மிகக் குறைவாகவும், மற்றொரு பகுதியிலே உச்சக் கட்டத்தையும் அடைந்திருக்கிறது. இதைக் கவனத்தில்கொண்டு நிலைமையை மாற்றியமைக்க "ரஷ் சப்ளை" அதாவது சப்ளையை அதிகமாக்கி இந்தக் கஷ்டத்தைப் போக்கவேண்டும். அரசாங்கம் மற்றொரு முடிவு செய்தது. அதாவது கடற் பகுதிகளிலே இருக்கக்கூடிய குறிப்பாக மீன் பிடிப்பவர்கள், பனை ஏறும் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் வாழும் மணற்பாங்கான பகுதிகளுக்கு உணவுப் பொருள் கூடுதல் சப்ளை செய்யப்படும் என்பதுதான் அது. அதாவது விசேஷ கோட்டா கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்தது. முடிவு செய்து ஒரு மாதம் ஆகிறது. போக்குவரத்து முறையாக நடைபெறாத அப்பகுதிகளுக்கு முறையாக உணவுப் பொருள் சப்ளை கிடைக்க அரசாங்கம் விசேஷ சிரத்தை காட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எந்த வேலையில் எது பாக்கி இருக்கிறது என்பதை உன்னிப்பாகக் கவனித்து நடவடிக்கைகள் எடுப்பதின் மூலம் விலையேற்றத்தைத் தவிர்க்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த பட்ஜெட்டிலே, நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நிறைவேற்றக்கூடிய காரியமாக, நல்ல அம்சமாக இருப்பவைகளிலே ஒன்று தென்காசியிலே பாலிடெக்னிக் ஒன்று நிறுவ இருப்பது. இது மிகவும் மகிழ்ச்சிக்குரியது. திருச்செந்தூர் தாலூகாவில் நாசரேத்திலே தனியார் துறையில் பாலிடெக்னிக்

ஏற்படுத்தப்போவதாகச் சொன்னது சித்திபெறவில்லை. திருச்செந்தூரிலே ஏற்ற இடத்திலே ஒரு பாலிடெக்னிக் வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். அதன்படி திருச்செந்தூர் தாலுகாவில் ஏதேனும் ஒரு இடத்தில் ஒரு பாலிடெக்னிக் அமைப்பதற்குத் துணை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருச்செந்தூர் தாலுகாவில் 50 ஹைஸ்கூல்கள் இருக்கின்றன. ஒரு கல்லூரிகூட இல்லை. அந்த ஒரு குறையைப் போக்க வேண்டும். திருச்செந்தூரில் சுப்ரமண்ய சுவாமி தேவஸ்தானம் இருக்கிறது. அதனுடைய நிதி பல்வேறு நற்காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. அதை உபயோகித்துக்கூட, அரசாங்கத்தின் உதவியுடன் திருச்செந்தூரில் ஒரு கல்லூரியை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தனி ஒருவருக்கு ஏற்கனவே இதற்காக அனுமதி கொடுத்திருந்தாலும்கூட அது நிறைவேறவில்லை. ஒன்று அதை நிறைவேற்ற வேண்டும் அல்லது சர்க்கார் தரப்பில் நிறை வேற்ற வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

சேலத்தில் பொறியியல் கல்லூரி ஒன்று ஏற்படப்போவது சந்தோஷமான விஷயம். திருச்செந்தூரில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஒரு என்ஜினியரிங் கல்லூரி நிச்சயமாக வந்துவிடும் என்று நம்பினோம். தனி ஒரு ஸ்தாபனத்தார் இந்தப் பொறுப்பை எடுத்துக் கொண்டதாக 5, 6 வருஷங்களாக இந்த அரசாங்கம் சொல்லிக்கொண்டு வருகிறது. இதுவரை நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. இந்த ஜில்லாவுக்கு வரவேண்டிய என்ஜினிரியங் கல்லூரி வராமல் இருப்பதற்கு நியாயம் இல்லை. திருநெல்வேலியில் பொறியியல் கல்லூரி வருகிறது என்றால் கன்னியாகுமரி ஜில்லாவில் உள்ளவர்கள்கூட ஆறுதல் அடைவார்கள். ஆகவே, இதற்கு அரசாங்கம் வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மெடிகல் காலேஜ்,' திருநெல்வேலியில் வருவது சந்தோஷமான விஷயம். கீழ்ப்பாக்கத்தில் தற்காலிகமாக இருப்பதையாவது 'திருநெல்வேலி மெடிகல் காலேஜ் அட் கீழ்பாக்கம்' என்று பெயரை மாற்றிவிடலாம். இதைச் செய்தால் பிரச்னை தீர்ந்து விடும். எனவே, இந்த வேலையில் அரசாங்கம் பரிகாரம் காணும் என்று நம்புகிறேன்.

தூத்துக்குடி துறைமுக வேலை மந்தமாக நடக்கிறது. மத்திய அரசாங்கத்திடமிருந்து வேகமாகப் பண உதவி கிடைக்கவில்லை என்ற புகார் எனக்குக் கிடைத்துள்ளது. அந்தக் கஷ்டத்திற்குக் காரணம் 'பாட்டில்நெக்ஸ்' இருக்கிறதா என்பதையெல்லாம் பார்த்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தூத்துக்குடித் துறைமுக வேலையையும் சேது சமுத்திர வேலையையும் சேர்த்து நிறைவேற்றினால் 'எக்னமிக்'காக அதாவது சிக்கனமாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தனுஷ்கோடியிலிருந்து இலங்கைக்குப் போக்குவரத்துத் தடைப்பட்டு இருக்கிறது. இராமேஸ்வரத்திலிருந்து துரிதமாக ரயில் போடப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். ஆனால் இலங்கையிலிருந்து இந்தப் பக்கம் வருவதற்குக் கஷ்டங்கள் இருக்கின்றன. லட்சக்கணக்கான மக்கள் இங்கே வந்து சேரப் போகிறார்கள் என்று ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தப் பிரகாரம் தினம் தினம் 100 பேர்களாவது இக் கரைக்கு வர வேண்டிய அவசியம் இருக்கும். அப்படியிருக்கும்பொழுது, சரியான போக்குவரத்து வசதி இல்லாததால் ஆகாய விமானம் மூலமாகத்தான் வந்து சேரவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கும். தபால் போக்குவரத்துக்கூட சரிவர இல்லை. அப்படி விமானத்தில் வர வேண்டுமானால் குறைந்தது ரூ. 500-ஆவது செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அந்தப் பணத்தை செலவு செய்ய எல்லோராலும் இயலுமா? அத்துடன் விமானப் பிரயாணத்திற்கு 7 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் அனுமதி கொடுக்கப்படுகிறது. அந்தக் கஷ்டத்தையும் அவர்கள் உணருவார்கள். எனவே இதைத் தவிர்க்க தூத்துக்குடிக்கும் இலங்கைக்கும் மிக அவசரமாக ஸ்டீமர் சர்வீஸ் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





மலேயாவிலிருந்து எங்கள் பகுதிக்கு வரக்கூடியவர்கள் ஒரு குறைபாட்டை எடுத்துக் கூறினார்கள். அந்தக் கப்பல்களில் உணவுக்கும் சேர்த்துக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. குறைந்த வகுப்பு டிக்கட் வாங்கிப் பிரயாணம் செய்கிறவர்களுக்குக் கொடுக்கப்படுகிற சாப்பாடும், சுகாதார வசதியும் மிகவும் பயங்கரமானதாக இருக்கிறது. கப்பல் வந்து சேருகிற சென்னைத் துறைமுகத்தில் ஏதேனும் புகார் புத்தகமாவது வைத்து என்னென்ன குறைகள் இருக்கின்றன என்பதை அறிந்து அவற்றைப் போக்குவதற்கு குறிப்பாக நம்முடைய பி.டபிள்யூ.டி. அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தாம்பிரபரணி தீரத்தில் கால்வாய்ப் புனரமைப்பு வேலைகளைத் துரிதப்படுத்தி அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 80 லட்சம் டன் உணவுப் பொருள்களை இந்த ராஜ்யத்தில் உற்பத்தி செய்ய வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறோம். இந்த நேரத்திலே 'தண்டத் தீர்வை' என்ற வார்த்தை இருக்கக் கூடாது என்பதை அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொள்வார்கள். இப்போது இருக்கும் அமைச்சர் அவர்களும், இதற்கு முன்னாலே இருந்த அமைச்சர்களும் தண்டத் தீர்வை, தண்ணீர்த் தீர்வை ஆகியவற்றுக்கெல்லாம் பரிகாரம் காண எல்லாவிதமான முயற்சிகளையும் செய்தார்கள். அந்த முயற்சியின் பயனாய் 20 ரேட் என்பது 2 ரேட்டாயிற்று. இரண்டு ரேட்டை ஒன்றாக்கினார்கள். கார் அட்வான்ஸ் கார் காலப் பயிருக்கு 1 ரேட், ஆனால் மழை காலத்தில் ஏராளமான தண்ணீர் ஓடக்கூடிய காலத்தில் புஞ்சையில் நஞ்சைப் பயிர் செய்கிறவர்களுக்கு இரண்டு ரேட் தண்டத் தீர்வை என்று இருக்கிறது. இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்து கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நஞ்சையாக மாற்றிக் கொடுக்கும் காலம் வரையாவது இந்தச் சலுகையைக் கொடுத்து விவசாயிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [2nd March 1965

மீன் பிடிப்புத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் பணம் கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் குறைவுதான். இந்த பட்ஜெட்டிலும் போதுமான அளவுக்கு ஒதுக்கப்படவில்லை. மண்டபம் பகுதியில் நார்வேஜியன் பிராஜக்ட் வேலை நடந்து வருவது சந்தோஷப்படத் தக்கது. ஆனால் கனடியன் எய்டில் தூத்துக்குடிக்கு அடுத்த புன்னைக்காயல் பகுதியில் ஒரு திட்டம் இருந்தது. மூன்றரை லட்சம் ரூபாய் செலவில் புன்னைக்காயலை ஓர் மீன்பிடி துறைமுகமாக்க ஒரு திட்டம் இருக்கிறது என்று இந்தச் சபையிலேயே தகவல் கொடுத்திருக்கிறார்கள். மூன்றாவது திட்ட காலத்தில் எந்தத் தொகையும் ஒதுக்காததோடு இந்த பட்ஜெட்டில்கூட அந்தத் திட்டத்திற்கு ஒரு சிறு அளவுகூடப் பணம் ஒதுக்கப்படவில்லை. இதற்கு என்ன காரணம் என்று புரியவில்லை. அதற்குப் புனர் ஜீவன் கொடுக்க அரசாங்கம் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரிய துறைமுகம் தூத்துக்குடியில் விருத்தி அடைந்து வருகிறபோது அருகில் இருக்கும் சிறு சிறு துறைமுகங்கள் விருத்தி செய்யப்பட வேண்டியது அவசியமாகும். இந்தக் கண் கொண்டு திருச்செந்தூர் தாலூகாவில் குலசேகரப்பட்டினம், காயல்பட்டினம், மணப்பாடு போன்ற துறைமுகங்களை விருத்தி செய்வது பற்றிப் பரிசீலிக்க வேண்டும். ஐந்தாறு வருஷ காலத்திற்கு முன்பு குலசேகரப்பட்டினத் துறைமுகத்தை விருத்தி செய்வதற்காக ஒரு கமிட்டி நிறுவப்பட்டு சிறு அளவு சுங்கம் வசூலிக்கும் பொறுப்பும் கொடுக்கப்பட்டது. ஆனால் இவ்வாண்டுகூட அந்த வேலைக்கான பணம் ஒதுக்கப்படவில்லை. அதிலே என்ன குறை இருக்கிறது என்று அரசாங்கம் பார்க்கவேண்டும்.

திருச்செந்தூர் தாலூகாவில் குதிரைமொழித்தேரி என்ற மணற்பாங்கான ஒரு இடம் இருக்கிறது. கனம் முதலமைச்சர் அவர்கள், ராஜஸ்தானில் இருக்கக்கூடிய பண்ணையைப் போல் அவ்வளவு பெரிய பண்ணையை வைக்க வசதி இல்லை என்று சொன்னார்கள். உண்மைதான். ஆனால் இந்த இடத்தில் 12,000 ஏக்கருக்கு மணற்பாங்கான பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய குளம் நஞ்சை அழிந்து விடுமோ என்ற காரணத்தால் அந்த மணல் மேட்டை ரிசர்வ் பாரஸ்ட் என்று போட்டிருக்கிறார்கள். அதற்காக வருஷம் ஒன்றுக்குப் பல்லாயிரம் ரூபாய் செலவழிக்கப்படுகிறது. மழை காலத்தில் அங்கிருந்து மண் அடித்து வந்து விடுகிறது. ஆகவே, அங்கு மண் அணைத் தடுப்புகள் வேண்டுமென்று கடந்த பத்து வருஷ காலமாக முயற்சி செய்து வருகிறோம். இந்தச் சபையில் பல தரம் அதைப் பற்றி எடுத்துச் சொல்லப்பட்டு வாக்குறுதியும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த வேலை இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை. ஆரம்ப நடவடிக்கை கூட செய்யப்படவில்லை. அங்கே கடம்பா என்ற சமுத்திரம் போன்ற ஏரி பெருகி நேரடியாக திருச்செந்தூர் வரை 12, 13 கால்வாய்கள் மூலம் தண்ணீர் பெறவேண்டும். இதை 'அவாய்டு' செய்ய தனியான ஒரு கால்வாய் மூலமாகத் தண்ணீர் கொண்டு செல்ல ஐந்து லட்சம் ரூபாயில் திட்டமிட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் செலவில் பத்தில் ஒரு பகுதியை அதாவது



2nd March 1965] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

50,000 ரூபாய் வரை அந்தத் தாலூகாவில் இருக்கிற விவசாய சங்கத்தில் இருப்பவர்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். அந்தத் தொகையை வசூல் செய்து கொடுக்கும் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன். அந்தத் திட்டத்தின் காரணமாகப் பத்தாயிரம் ஏக்கர் நிலத்திற்கு இலகுவாகப் பாசன வசதி கிடைக்கும். இந்தக் கஷ்டமான காலத்தில் அதன் மூலமாகப் பல்லாயிரம் கோட்டை நெல், அதிக விளைவு கிடைக்கும். இதற்கு கலெக்டர் அனுமதி வேண்டும். இந்த வேலையை வேகமாகச் செய்ய முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் அங்கத்தினர் சங்கரன் அவர்கள் சுட்டிக் காட்டியது போல் ஹெவி இண்டஸ்ட்ரீஸ் எல்லாம் திருச்சி வரையில்தான் வந்திருக்கிறது. அதற்குக் காரணம் அங்கே பிராட் கேஜ் அமைக்கப்பட்டிருப்பதுதான். அதே போன்று தூத்துக்குடி—திருநெல்வேலியை இணைக்கும் பகுதியையும் பிராட் கேஜாக மாற்றினால் பெரிய இண்டஸ்ட்ரீஸ்களுக்கு ஏராளமான இடம் கிடைக்கவும் வழி ஏற்படும்.

தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தமட்டில் விவசாயிகளுக்குக் கிணற்றுக்காக ரூ. 2,500 கொடுத்து வந்ததை ரூ. 5,000 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். இந்தத் திட்டம் பாராட்டத் தகுந்தது. இதே போன்று திட்டம் திருநெல்வேலி ஜில்லாவிற்கும் பலன் அளிக்கும். அங்கு பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் புஞ்சையாக இருக்கிறது. அந்தப் பகுதியில் இருக்கக் கூடிய புஞ்சை நிலத்தை மத்திய நிதியமைச்சர் அவர்களும், மாநில அமைச்சர் அவர்களும் நேரில் வந்து பார்த்தார்கள். கிணற்றிலிருந்து இறைவை செய்து வருஷம் பூராவும் பயிர் செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. புஞ்சைப் பயிர், நஞ்சைப் பயிர், காஷ் கிராப் எல்லாம் செய்ய முடியும். அரசாங்கத்திலிருந்து 'டீப் போர் பம்புக்கு' வசதி செய்து கொடுத்தால் பெரும் அளவுக்குச் சாகுபடி செய்ய முடியும். இதற்கு மாகாண அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் கூறி பவர் டிரில்ஸ் கொண்டு வர முயற்சி எடுத்திருக்கிறது என்று தெரியும். இந்த முயற்சி சித்தி பெறவில்லை என்ற நிலைமை இருக்கிறது. இதைப் பற்றி மத்திய அரசாங்கத்திடம் முறையிட்டு வெளியே இருந்து பவர் ட்ரில்களை வாங்கி எங்கள் ஜில்லாவிலுள்ள விவசாய மக்களுக்குக் கடன் உதவியோடு அளிக்க முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் எதிர்பார்த்தபடி 12 லட்சம் டன் உணவு தானியங்கள் அதிகமாக உற்பத்தி செய்ய முடிகிறது என்றிருந்தாலும் பற்றாக்குறை இருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 80 லட்சம் டன் உற்பத்தி செய்து கொள்ள முடியும் எனத் திட்டமிடுகிறோம். மூன்றாவது திட்ட காலத்தில் 70 லட்சம் டன் உற்பத்தி செய்திருக்க வேண்டிய நாம் 65 லட்சம் டன்தான் உற்பத்தி செய்ய முடியும் என்ற நிலைமைக்கு வந்திருக்கிறோம். அந்தக் குறையை நீக்க எங்கிருந்தாலும் பணம் திரட்டி நம் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். இன்றையதினம் எல்லாத் துறைகளிலும் இலக்கை மீறி நல்ல காரியங்களைச் செய்து கொண்டு வருகிறோம். அதே போல் உணவு

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [2nd March 1965

உற்பத்தி விஷயத்திலும் நாம் அதிகக் கவனம் செலுத்தி உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். அப்படி உணவு உற்பத்தியைப் பெருக்கினால்தான் சாதாரண மக்களிடையே அமைதியையும், நம்பிக்கையையும் ஸ்திரப்படுத்தும் நிலைமையை இந்த அரசாங்கம் உண்டு பண்ண முடியும். பாஷை சர்ச்சையைப் பொறுத்த மட்டில் இந்த ராஜ்ய அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளைக் கவனித்தால் அமைதியாகவும், புத்தி பூர்வமாகவும் ஸ்திரமாக இருந்து என்னென்ன செய்ய முடியுமோ அதைச் செய்திருக்கிறது. அரைகுறையாக இருக்கும் இந்த வேலையும் கூட முறையாகப் பூர்த்தி அடையும் என்று நம்புகிறேன். இவ்வளவு சோதனைகளுக்கு இடையே, இவ்வளவு வேதனைகளுக்கு இடையே கூட அரசாங்கம் இந்த வேலைகளை எல்லாம் சிறப்பாகச் செய்திருப்பது பாராட்டத் தக்கது. திருப்பூரில் தேச சுதந்திரத்தைப் பெற்றுத் தர, கொடிகாத்தான் குமரன், போலீஸார் சுதந்திரக் கொடியைப் பாதுகாக்க அதே நகரில் வேறு பகுதிகளிலும் உயிரைத் தியாகம் செய்தனர். அக்கடமை வீர பரம்பரையைச் சேர்ந்த அந்த இனத்திற்கு, அந்த போலீஸ் இனத்திற்கு, அந்தச் சிப்பந்திகளுக்கு அரசாங்கம் தக்க தருணத்தில் தகுந்த உயர்வு கொடுத்து தகுந்த உதவி செய்தது பாராட்டத்தக்கது. அத்தகைய உதவி கொடுத்ததுடன், ஏழு கோடி ரூபாய் வரை துண்டு விழும் நிலை இருந்தும் கூட ஒரு பைசா கூட வரி விதிக்காமல் இருப்பது பாராட்டத் தக்கது. அதோடு கூட 5½ கோடி ரூபாய் அளவிற்கு அரசாங்கம் தங்கள் சிப்பந்திகளுக்கு, ஆசிரியர்களுக்கு, பஞ்சாயத்து யூனியன்களில் வேலை செய்யும் சிப்பந்திகளுக்கும் கூட கிராக்கிப் படியை உயர்த்திக் கொடுத்திருப்பது மிகவும் பாராட்டுதலுக்குரியது. இப்படி இந்த இனத்தில் ராஜ்ய சர்க்கார் தங்கள் சிப்பந்திகளுக்குப் பலமுறை உயர்வு கொடுத்த போதிலும் தனியாக உள்ள எலக்ட்ரிசிட்டி போர்ட், காதிபோர்ட் போன்ற போர்ட்களில் பணி செய்யும் சிப்பந்திகளுக்கு இந்த உயர்வுகள் அப்போதைக் கப்போது கிடைக்க முடியாத நிலைமை இருக்கிறது. குறிப்பாக காதி போர்டில் சென்ற தடவை நம் ராஜ்ய அரசாங்கம் தங்கள் சிப்பந்திகளுக்கு உயர்வு கொடுத்தபோது அந்த உயர்வு அங்குள்ள சிப்பந்திகளுக்குக் கிடைக்க முடியாமல் இருந்திருக்கிறது. ஆகவே அவர்களுக்குத் தூண்டுதல் கொடுத்து இங்குள்ள சிப்பந்திகளுக்கு கிடைப்பது போல் அங்குள்ளவர்களுக்கும் கிடைக்க வழி வகைகள் செய்ய முயற்சிக்க வேண்டும். பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. பாஷையின் மீது பக்தியால் உணர்ச்சி வசப்பட்டு தங்களை மாய்த்துக் கொண்டவர்கள், தங்களைப் பலியாக்கிக் கொண்டவர்கள் நம் பரிதாபத்திற்குரியவர்கள், அவர்களை வைத்துக் கொண்டு விலை பேசக் கூடியவர்கள், அவர்கள் பிணத்தை வைத்து விலை பேசும் நிலைமையில் அவர்களின் பிணத்தின் படத்தை வைத்து-விலை பேசும் அளவிற்கு கட்சிகளை விடாமல் பார்த்துக் கொள்வதில் அரசாங்கம் உறுதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். தவறான எண்ணம் கொண்டு எத்தகைய நிலையையும் வைத்து அதைக் காசாக்க நினைக்கும் பத்திரிகைகள் நாட்டில் நடமாடுகின்றன. அந்தப் பத்திரிகைகளின் மேலும் நடவடிக்கைகள் எடுக்க முயற்சித்து வருவது பாராட்டுக் குரியதாகும்.



2nd March 1965] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

நாட்டின் பாதுகாப்பை உத்தேசித்து எத்தகைய அவசர நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமாயினும் இன்றைய சட்டம் உதவியாக இல்லாமல் போனால் அத்தகைய அவசர நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் தயங்கவே கூடாது. இவ்வளவு கஷ்ட நஷ்டங்களுக்கு இடையேயும் தீர்க்கமாகவும், திடமாகவும் இருந்து நம் முதல் அமைச்சர் அவர்கள் தலைமையின் கீழ் இயங்கும் அரசாங்கம் செய்து வந்திருக்கும், செய்ய நினைக்கிற காரியங்கள் எல்லாம் பாராட்டுதல்களுக்குரியது. பதினைந்து ஆண்டு காலமாகத் தீராத ஒரு பிரச்னை கழிந்த ஆண்டு தீர்ந்து விட்டது. கிராமச் சிப்பந்திகளுக்குப் பல கோடி ரூபாய்க்கு உதவி கொடுத்து உதவி செய்திருக்கும் அரசாங்கம், முந்திய மந்திரிசபையால் ஆரம்பிக்கப்பட்டாலும் கூட அதைத் தொடர்ந்து நடத்திக் கொண்டு வருகிற மற்றொரு நல்ல திட்டம் வயது வந்தவர்களுக்குக் கொடுக்கும் பென்ஷன் திட்டம். அதற்காக ஒதுக்கியிருக்கும் தொகையை விட அதிகத் தொகை ஒதுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஒரு ஜில்லாவில் ஆயிரம் பேர்களுக்குப் பென்ஷன் கொடுக்கப்பட்டிருக்குமானால் இந்த ஒரு ஆண்டு காலத்திற்குள் மற்றொரு ஆயிரம் மனுக்கள் ஊரெல்லாம் தேங்கிக் கிடக்கிறது. தாலுக்காக்களில் தேங்கிக் கிடக்கிறது. ஆகவே இத்திட்டத்திற்கு மேற்கொண்டும் அதிகப்படி தொகை ஒதுக்கி அவர்களுக்கு உதவி செய்யவேண்டும். அப்படி அவர்களுக்கு உதவி செய்து அவர்கள் ஆசியைப் பெறும் நிலையில் அத்திட்டத்திற்கு அதிக நிதி ஒதுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் பட்ஜெட் உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. கி. இரா. சம்பந்தம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, முதல் அமைச்சராகவும், நிதி அமைச்சராகவும் இருக்கிற நம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த பட்ஜட்டை நான் மனப்பூர்வமாக ஆதரித்து சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். இந்த பட்ஜெட் மிகச் சிறந்ததொரு பட்ஜட்டாக இருக்கிறது. காரணம் பல ஆண்டுகள் குறைபாடுகள் இருந்து அத்தனை குறைகளும் நீக்கப்பட்டு, அப்படி நீக்கப்பட பெருவாரியான பணம் செலவழிக்கப்பட்ட போதிலும் கூட அதற்காகப் புது வரி ஒன்று கூடப் போடாமல் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்த பட்ஜெட்டைப் பொது மக்கள் அனைவரும் வரவேற்கும் நிலைமையில் இருக்கிறார்கள். ஆனால் எதிர்கட்சிக்கு உப்பு சப்பு இல்லாத ஒரு நிலை இருப்பதின் காரணமாகத்தான் அவர்கள் இங்கிருந்து வெளி நடப்பு கூடச் செய்திருப்பார்களோ என்று ஊகிக்கும் நிலையில் இருக்கிறேன். அமைதியாக அகில இந்தியாவிலும் போற்றத்தக்க முறையில் நம் அரசாங்கம் இயங்கிக் கொண்டிருந்த இந்த நேரத்தில் மொழிப் பிரச்னையைக் கொண்டு வந்து தங்களால் அதை எதிர்த்து நடத்த வாய்ப்பில்லை, வக்கில்லை என்ற நிலைமையில் மாணவர்களைத் தூண்டி விட்டு அவர்கள் இன்று பழி வாங்கப்பட்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் கூட நான் ஒரு உயர்நிலைப் பள்ளி நடத்திக்கொண்டு வருகிறேன், ஒரு உயர் துவக்கப் பள்ளியும் நடத்துகிறேன். இந்த இரண்டு பள்ளிகளிலுள்ள மாணவர்களையும் தங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருந்தார்கள். அதை நான்

முன்கூட்டிப் புரிந்துகொண்டதின் காரணமாகக் காங்கிரஸ் தொண்டர்களை அங்கு அதிகமாக வைத்திருந்ததால் கலாட்டா அதிகரிக்காமல் அமைதியான முறையில் என் தொகுதியில் இந்திப் போராட்டம் நடந்தது. அதில் அதிகாரிகளும், போலீஸ் அதிகாரிகளும் மிகவும் நல்லமுறையில் நடந்துகொண்டார்கள். ஆகவே விபரீதமான ஒரு நிலை ஏற்படவில்லை. இருந்தாலும் அந்த மாணவர்கள் அதைச் செய்யவில்லை என்று நான் அழுத்தம்திருத்தமாகச் சொல்ல/ஆசைப்படுகிறேன். மொழிப் பிரச்னையைத் தீர்ப்பதற்குக் கட்சிகள் இருக்கின்றன. காங்கிரஸும் உடனடியாக இந்தி திணிப்பதை எந்தக் காலத்திலும் ஒத்துக்கொள்ளாது, ஆகவே உங்கள் அரிய நேரத்தை. வீணாக்கக் கூடாது என்று சொன்னபோது அவர்கள் அதற்குக் கட்டுப்பட்டு போய் விட்டார்கள். ஆனால் கல்லூரி மாணவர்கள்தான் இந்த நிலையைச் சாதகமாக பயன் படுத்திக் கொண்டார்கள், இப்போது படிக்காமல் இருக்கக் கூடியவர்களும் அதில் சேர்ந்து கொண்டார்கள். அவர்கள் போக்குதான் விபரீதமான போக்காக மாறி விட்டது. தமிழ் நாட்டில் எந்தக் காலத்திலும் மாணவர்கள் கட்டுப்பாட்டுடனும், கண்ணியத்துடனும் நடந்து கொள்வார்கள் என்ற நல்லெண்ணத்தை மாற்றியமைத்து விட்டது. இதற்கெல்லாம் காரணம் இங்கிருந்த எதிர்கட்சிகள்தான். ஏற்கனவே இங்கு நிதியமைச்சராக இருந்த திரு. சுப்பிரமண்யம் அவர்கள் எதிர்க்கட்சி அங்கத்தினர்களை வைத்துக் கொண்டு அரசியலை மாணவர்களிடம் கொண்டு போகக் கூடாது, அவர்கள் படித்துக் கொண்டிருக்கும்போது அவர்களைக் கட்சிக்காக பயன்படுத்தக் கூடாது என்று இருவரும் பேசி நல்லதொரு முடிவு எடுத்துக் கொண்டார்கள். ஆனால் இப்போதுள்ள எதிர்க்கட்சித் தோழர்கள் அந்த நிலையை மாற்றி தங்களால் செய்ய முடியாத ஒரு காரியத்தை, அவர்கள் செய்வதை விட்டு தலைவர்களுக்கு ஆபத்து வந்து விடுமோ என்று பயந்து சாதாரண சின்னக் 12-30 p.m. குழந்தைகளையும் மாணவர்களையும் ஏவி விட்டு அந்த பெற்றோர்களுக்கு இந்த வயிற்றெரிச்சலை உண்டாக்கியிருக்கிறார்கள். எனக்கு இன்சினியரிங் காலேஜில் படிக்கின்ற மகன் ஒருவன் இருக்கின்றான். இம்மாதிரி எத்தனையோ பெற்றோர்கள் மாணவர்கள் எப்படி பாஸ் செய்யப் போகிறார்கள் என்று இன்றையதினம் கவலையோடு இருந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது வைத்தியக் கல்லூரி, தொழிற் கல்லூரி மாணவர்கள் நான்காவது வருட பாடத்தைப் படிப்பதா அல்லது, அடுத்த வருடம் ஐந்தாவது வருடப் பாடங்களை எல்லாம் படிக்கவேண்டுமா எப்போது பரீட்சை வைக்கப்போகிறார்கள், பரீட்சையே வேண்டாம் என்று சர்க்கார் சொல்லப் போகிறதோ என்னவோ என்றெல்லாம் எண்ணிக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். யாரோ ஒருசிலரின் தூண்டுதலின் பேரில் மாணவர்கள் வீணாகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், நமக்கு இருக்கின்ற பிரச்னை என்ன ? மும்மொழித் திட்டம் இருக்கவேண்டும் என்பது. மும்மொழித் திட்டத்தை இப்போது மட்டுமல்ல, முன்பே எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டிருக்கிறார்கள். அதோடு, இந்தி மொழி ஆட்சிமொழியாக இருப்பது என்பதையும் நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஆனால் இந்தியை உடனடியாகக் கொண்டு வந்ததில் தான் எதிர்ப்பு ஏற்பட்டது. நேருவின் வாக்குறுதி போதிய





அளவு காப்பாற்றப்படவில்லை என்று குறை கூறப்பட்டது. எங்களுடைய நிலைமை மிகவும் கஷ்டமாக இருந்தது. இதைப்பற்றி விவாதித்துக்கொண்டிருந்தோம். அந்த முறையில் எதிர்க்கட்சிக்காரர்களும் செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். அது அரசியலுக்குப் பெருமை தேடிக்கொடுத்த பாம்பரையாக அமைந்திருக்கும். அப்படியில்லாது இல்லாததை எல்லாம் எடுத்துச் சொல்லி, மிகவும் அவக்கேடான நிலை நம்முடைய மாநிலத்திற்கு வரும்படியான அளவில் செயல்கள் நடைபெற்றது மிகவும் வருந்தத்தக்க விஷயம். வெளியில் பார்க்கும்போது எங்கு பார்த்தாலும் தமிழ் வாழ்க, இந்தி ஒழிக என்றெல்லாம் எழுதிப் போட்டிருப்பது மட்டு மல்ல நமது கனம் முதலமைச்சர் அவர்களைப்பற்றிப் பலவாறாக எழுதி வைத்திருக்கிறார்கள். அவ்விதம் எழுதப்பட்டது பல பொது இடங்களில் அப்படியே இருந்து கொண்டிருக்கிறது. அந்த அளவிற்கு மாணவர்களைக் கேவலமான நிலைமைக்கு கொண்டு வந்திருக்கிறார்கள். நிச்சயமாக மாணவர்களாக வந்திருக்க மாட்டார்கள். இதைப்பயன் படுத்திக்கொண்டு ஒரு சில பத்திரிகைகள் எழுதி வந்தன. சற்று முன் வியாபாரிகள் எல்லாம் நல்லவர்கள் தான் என்று சொல்லப்பட்டது. அதை நான். முழுக்க முழுக்க ஆட்சேபிக்கிறேன். மேல் நாட்டில் எல்லாம் வியாபாரிகள் தங்களுடைய வருமானம் இவ்வளவு இத்தனை ரூபாய் தான் சர்க்காருக்கு வரியாகக் கொடுக்கவேண்டும் என்று ஸ்டேட்மெண்ட் கொடுக்கிறார்கள். நாட்டுக்கு நன்மை செய்கிறோம் என்று அவர்கள் இதன் மூலமாகப் பெருமிதம் அடைகிறார்கள். ஆனால் நம்முடைய வியாபாரிகள் மூன்று விதமான கணக்குகள் வைத்திருக்கிறார்கள். ஒன்று பங்குதாரர்களுக்காக, இன்னொன்று சர்க்காருக்கு வரி கொடுப்பதற்காக, இன்னொன்று, தங்களுடைய லாப நஷ்டக் கணக்கைப் பார்த்துக்கொள்வதற்காக. இந்த மாதிரி வைத்துக் கொண்டிருந்தால் எப்படி சர்க்காரை ஏமாற்றாமல் இருக்க முடியும். அந்த முறையில் தான் சில பத்திரிகைகளும் ஏமாந்தவன் தொடையில் திரித்தவரையில் ஆதாயம் என்ற முறையில், கீழ்த்தரமான முறையில், அறிஞர்கள் என்றோ படித்தவர்கள் என்றோ எந்தவிதமான வித்தியாசமும் இல்லாமல் முறையில்லாமல் எழுதி வந்தன. இப்படிப்பட்ட பத்திரிகைகளின் மீது தக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் எப்படி ஒரு ஜனநாயக நாட்டை வெற்றிகரமாக நடத்த முடியும்? இப்போது நமக்கு ஏற்பட்டது ஒரு முதற்கட்ட நிகழ்ச்சி என்று தான் சொல்லவேண்டும். இதிலிருந்து நாம் பாடம் கற்றுக்கொள்ளவேண்டும். மாணவர்கள் மட்டும் நடத்திய நிகழ்ச்சிகளே இவ்வாறு இருக்கிறது என்றால் பொதுமக்களும் சேர்ந்து நடத்தக்கூடிய போராட்டம் வருமானால் அதை எப்படிச் சமாளிப்பது என்கிற ஒரு நிலைமையை ஆராய்ந்து பார்த்து, அப்பேர்ப்பட்ட காலங்களில் அதைத் தடுத்து நிறுத்துவதற்கு வகை செய்தாக வேண்டும். இல்லாவிட்டால் ஜனநாயகம் நல்லமுறையில் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்திருப்பதாகக் கருத முடியாது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் எல்லா வழிகளிலும் புத்துணர்ச்சி அளித்து வருகிறோம். அது மட்டுமல்ல, கல்லூரிகளில் பாடங்கள் எல்லாம் தமிழில் நடைபெற

*[திரு. கி. இரா. சம்பந்தம்]* [2nd March 1965

வேண்டும் என்று திட்டமிட்டு, கோயம்புத்தூர் கல்லூரியில் தமிழ் மீடியமாகக் கொண்டு வரப்பட்டது. அப்படிக் கொண்டு வந்தும் அதில் படிப்பதற்கு ஒரு மாணவர் கூட கழிந்த வருடம் முன் வர வில்லை. தமிழ் வாழ்க, தமிழ் வளர்க என்று சொல்லிவிட்டு படிப்பதற்கு எத்தனை பேர்கள் வருகிறார்கள் என்று பார்த்தால் ஒருவரும் இல்லை என்பதைத்தான் பார்க்கிறோம். நம்முடைய ஆசை என்னவென்றால், விஞ்ஞானம் போன்ற பாடங்கள் கூடத் தமிழில் வரவேண்டும் என்பதுதான். ஆனால் சில முக்கியமான வார்த்தைகள் ஆங்கிலத்தில் சொன்னால் தான் சரியாக இருக்கிறது. 'பாய்ஸ்லா' என்பதைச் சரியான விதத்தில் தமிழில் சொல்வதற்கில்லை. ஆங்கிலத்தில் தான் சொல்ல வேண்டியிருக்கிறது. அதைக் கூட மாற்றவேண்டும் என்று நம்முடைய சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். தமிழ் வாழ்க, வளர்க என்று சொல்லிவிட்டு, மாணவர்களையும் இழுத்து வலையில் சிக்க வைத்து போராட்டங்களை நடத்துவதால் மட்டும் எந்தவிதமான பலனும் இல்லை. சுதந்திரம் அடைந்து பதினேழு ஆண்டுகளாகியும், தமிழுக்கு ஆக்கம் கொடுத்த போதிலும் நாம் நல்லமுறையில் ஒரு நூலைக்கொண்டுவர முடியவில்லை. கலைச் சொற்கள் கலை நூல்கள் இவைகளை எல்லாம் போதிய அளவில் நம்மால் கொண்டுவர முடியவில்லை. திருக்குறளைப்போன்று ஒரு நூலைக் கொண்டு வர முடிகிறதா என்றால் இல்லை என்று தான் சொல்ல வேண்டி இருக்கிறது.

அடுத்தபடியாக, மாணவர்களைப் பொறுத்தவரையில் கட்டுப்பாடு, கடமை, கண்ணியம் இவைகளை எல்லாம் நல்லமுறையில் அவர்களிடையே கொண்டு வருவதற்கு அரசாங்கம் தக்க முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். அத்தகைய ஒரு டிஸிப்ளின் இல்லையென்றால் இந்த நாட்டில் ஜனநாயக நடவடிக்கைகள் ஒன்றுமே சரியாக நடைபெறாது, இதற்காக எத்தகைய கடுமையான நடவடிக்கைகள் எடுத்தாலும், அதை நான் படிக்கின்ற ஒரு மாணவனுடைய தந்தை என்ற முறையில் வரவேற்பேன். இத்தகைய நடவடிக்கை எடுப்பதில் எத்தனை கஷ்டங்கள் வந்தாலும் சரி, இதற்காக எத்தனை உயிர்கள் போனாலும் சரி, மாணவர்களிடையே கட்டுப்பாடு, கண்ணியம், கடமை என்பதைக் கொண்டுவந்தே ஆகவேண்டும்.

அடுத்து, விற்பனை வரியில் இந்த ஆண்டு சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுத்ததின் காரணமாக கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் வரக் கூடிய நிலைமை ஏற்பட்டது. அதே நேரத்தில் ஹைகோர்ட்டில் போடப்பட்ட கேசில், வியாபாரிகளுக்குச் சாதகமாகத் தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் இன்றைக்கு எடுக்கபட்ட கணக்குகள் என்ன ஆகிறது, இதன் மூலமாகக் கிடைக்கவேண்டிய வருமானங்கள் என்ன ஆவது என்பதைப் பற்றிச் சர்க்கார் ஆலோசிக்க வேண்டியிருக்கிறது. கணக்குகளை எடுப்பதற்கு மெயின் ஆக்டில் வழிவகை செய்யப் படவில்லை



2nd March 1965] *[திரு. கி. இரா. சம்பந்தம்]*

என்றும், பின்னால் பிரவிஸோவில் சேர்க்கப்பட்டிருப்பது போதாது என்றும் ஹைக்கோர்ட்டில் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இந்த நிலைமை நீடித்துக் கொண்டிருந்தால் அதிகாரிகள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுப்பதற்கு வழியில்லாமல் போய்விடும். ஆகவே சர்க்கார் உடனடியாக வேண்டிய திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால் ஏமாந்தவர்கள் மட்டும் தான் வரி கொடுக்கவேண்டிய நிலைமையையும் மற்றவர்கள் சாமர்த்தியசாலிகளாகவும் மாறிவிடக்கூடிய நிலைமையும் ஏற்பட்டுவிடும். அதோடு முக்கியமாக சேல்ஸ்டாக்ஸ் அதிகாரிகள் ஏற்படும், அதோடு தொடர்ந்து பதுக்கல் வேலையும் நடந்து கொண்டிருக்கும். ஆகவே உடனடியாக சர்க்கார் வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நாம் போடுகிற சட்டத்தை எல்லாம் நிறைவேற்றுவதற்குப் போலீஸ்காரர்களைத்தான் எதிர்பார்க்கவேண்டியிருக்கிறது. அவர்களுக்கு இப்போது ஓரளவுக்கு சம்பள உயர்வு கொடுத்திருக்கிறோம். அதோடு முக்கியமாக அவர்களுக்கு சில வசதிகள் செய்து கொடுக்கவேண்டியிருக்கிறது. போலீஸ் கான்ஸ்டபிளுக்கு சைக்கிள் கொடுக்கவேண்டும். இப்போது கொடுக்கப்பட்டுவரும் பாட்டா முதலியவைகள் மிகவும் குறைவாக இருக்கிறது. இதன் காரணமாக யார் கேஸ் போடுகிறார்களோ அவர்களிடமே டாக்சியை கொண்டு வர சொல்லவேண்டியதாக இருக்கிறது. அவர்கள் அறிந்தோ அறியாமலோ பிறத்தியாருடைய தயவைத்தான் தேடவேண்டியிருக்கிறது. இதையெல்லாம் நாம் நிவர்த்திக்க வேண்டியிருக்கிறது. ஆகவே கான்ஸ்டபிள்களுக்கு சைக்கிள் கொடுக்கவேண்டியது மிகவும் அவசியம். அதே போன்று தான் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு மோட்டார்-பைக் கொடுக்க வேண்டியது மிக அவசியம். திடீரென்று ஏதாவது ஒரு இடத்திற்குக் குற்றங்களைப்பற்றி விசாரிக்கப் போகவேண்டுமென்றால் பஸ்ஸைத் தான் எதிர்பார்த்து இருக்கவேண்டியிருக்கிறது. பஸ்சில் டிக்கட் ஓவர் ஆகிவிட்டால் யார் வந்தாலும் ஏற்றுவதில்லை. அரைடிக்கட் கூடக் கூடுதலாகப் போட மாட்டார்கள். ஆகவே அவர்களுக்கு மோட்டார்-பைக் இருக்கவேண்டியது மிகவும் அவசியம். இப்போது அவர்களாகவே வாங்கிக் கொள்வதென்றால் அதுவும் மிகக் கஷ்டம். இப்போதுள்ள விலையில் மோட்டார்-பைக்-க்கு 3,000, 4,000 ரூபாய் கொடுக்கவேண்டும். மேலும் இன்ஷூரன்ஸ் கம்பெனி போன்றவற்றில் பீல்ட் ஆபீசர் போன்றவர்களுக்கு மோட்டார்பைக், இன்ஸ்பெக்டர்களுக்கு கார் போன்றவைகள் எல்லாம் வாங்க உதவி செய்கிறார்கள். அந்த முறையில் தங்களுடைய வேலைகளை எல்லாம் நல்ல முறையில் செய்வதற்கு, குற்றங்கள் நடந்தால் உடனடியாகப் போய் கண்டுபிடிப்பதற்கு வசதியாக இருக்கும் அளவில், போலீஸ் கான்ஸ்டபிள்களுக்கு சைக்கிள்களும், சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு மோட்டார் பைக்கும், சூப்ரண்டிங் ஆஃப் போலீஸ்-க்கு ஜீப் வசதியும் கொடுக்க வேண்டியது மிகவும் அவசியம் என்பதைத் தெரிவித்துக்

[திரு. கி. இரா. சம்பந்தம்] [2nd March 1965

கொள்கிறேன். அவர்கள் டிவிஷன் பூராவும் சுற்றிப் பார்க்க கொஞ்சம் வசதி இருந்தால் நல்ல முறையில் செய்யலாம். கார் இருந்தால் வைத்துக்கொண்டு போகலாம், இல்லையென்றால் அங்கு இருக்கக் கூடிய பெரிய மனிதர்களை எதிர்பார்க்கும் நிலைமை இருக்கிறது. இந்த விஷயத்தை உடனடியாகக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஆபீசர்களுக்கு ஓரளவுக்கு என்.ஜி.ஓ. என்று பாராமல் எல்லோருக்கும் கிராக்கிப் படியானது உயர்த்தப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி எல்லோரும் சந்தோஷப்படுகிறார்கள். ஏனென்றால் இன்றைக்கு இருக்கும் பொருளாதாரத் திட்டத்தில் இன்னமும் விலையைக் குறைக்க முடியும் என்று யாராவது சொல்லுவார்களேயானால், அவர்கள் பொருளாதாரத்தைப் புரிந்துகொள்ளாமல் பேசுகிறார்கள் என்று தான் சொல்லவேண்டும். நம் நாட்டில் இருக்கிற விலைவாசியையும், மற்ற நாடுகளில் இருக்கிற விலைவாசிகளையும் பார்த்தால் மலைக்கும் மடுவுக்குமாக இருக்கிறது. அதே முறையில் காலத்திற்கு ஏற்றாற் போல பஞ்சப்படியை உயர்த்தலாமே தவிர விலையைக் குறைக்கலாம் என்று யாரும் எண்ண முடியாது. நெல் விலையைக் குறைக்கவேண்டுமென்று சொன்னால் நெல்லை உற்பத்தி செய்வதற்கு என்ன செலவு ஆகிறது? எவ்வளவு உரம் போட வேண்டியிருக்கிறது? முன்பு ஒரு நாளுக்கு 8 அணா கூலி கொடுத்தால் போதும். இன்று 2 ரூபாய் கூலி கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த முறையில் செலவு செய்து நெல்லை உற்பத்தி செய்து விற்கும்போது அதற்கெல்லாம் கட்டுபடியாகக் கூடிய நிலையில் விலை இருந்தால் தான் மேற்கொண்டு விவசாயிகள் சாகுபடி செய்வதில் இறங்குவார்கள். இல்லையென்றால் சாகுபடி செய்வதை நிறுத்தி விட்டு நிலத்தைத் தரிசாகப் போட்டு விடுவார்கள், அதைக் கவனிக்கவேண்டும். அந்த முறையிலே இன்றைக்கு எல்லோருக்கும் பஞ்சப்படி உயர்வு கொடுத்திருக்கிறார்கள். அது மாத்திரம் அல்ல, நான் ஈவினிங் காலேஜ் வேண்டுமென்று பல வருஷங்களாகச் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறேன். ஏனென்றால் நான் 2-3 பள்ளிகளை வைத்துக்கொண்டிருப்பதால் அதனுடைய அவசியம் எனக்குத் தெரியும். எல்லோரும் படிக்க விரும்புகிறார்கள். வடநாட்டில் ஈவினிங் காலேஜஸ் வைத்திருப்பதன் காரணமாக எல்லோரும் எம்.ஏ., பி.எல்., எல்லாம் படிக்கிறார்கள். வேலை நேரம் போக மற்ற நேரங்களில் படிக்க வசதி ஏற்படும். ஏனென்றால் குடும்பக் கஷ்டத்தை உத்தேசித்து உடனடியாக வேலைக்கு போக வேண்டிய நிலைமை ஏற்பட்டதால் பலர் படிக்காமல் போகலாம். படிக்கவேண்டும் என்ற எண்ணம் மாணவனாக இருக்கும்போது தான் இருக்கும் என்று சொல்ல முடியாது. எந்த வயதிலும் தோன்றலாம். அந்த முறையில் படிக்க ஈவினிங் கல்லூரி வைக்கப் போவது பற்றி நான் மிகவும் வரவேற்கிறேன்.

அதோடு இன்றைக்கு வருமானத்திற்கு, இருக்கக்கூடிய சில குறைபாடுகளை இப்போது கவனித்தால் நல்ல முறையில் மேற்கொண்டு வருமானம் வரும். எங்கு பார்த்தாலும் இல்லிசிட் டாக்சிஸ் ஓடிக்கொண்டிருக்கின்றன. போர்டு போட்ட டாக்சி என்றால்



2nd March 1965] [திரு. கி. இரா. சம்பந்தம்]

மைலுக்கு ஒரு ரூபாய். சென்னை நகரத்தில் தான் சொல்லவில்லை, மற்ற தாலுகா, முனிசிபல் லெவலில் எந்த நகரத்திலும் ஒவ்வொரு ஊரிலும் 20—30 டாக்சிகள் இருக்கின்றன. ஒரு டாக்சிக்குக் கூட வரி கொடுப்பது கிடையாது. இப்போது கும்பகோணத்தில் பார்த்தேன். அங்கு இருக்கும் அதிகாரிகள் நன்றாக டிடெக்ட் செய்து அங்கு இருக்கக் கூடிய ஓட்டை கார் முதல் புதுக் கார் வரையில் எல்லாக் காரிலும் டாக்சி போர்ட் போட்டிருக்கிறார்கள். டிராஃபிக் இன்ஸ்பெக்டர்களுக்கு இந்த மாதிரி டாக்சிகளைப் பற்றி நன்றாகத் தெரியும். ஏனென்றால் சமயத்தில் அவர்களை எடுத்துக் கொண்டு போகிறார்கள். அவர்கள் அந்த முறையில் சமயத்தில் எடுத்துக்கொண்டு போவதால் தான் இப்படி விட்டு வைத்திருக்கிறார்கள். அத்தகைய டாக்சிகளைக் கண்டுபிடித்து அவர்களும் டாக்ஸ் கட்டும் நிலையை உண்டாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது இருக்கக் கூடிய வரிகளை நல்லமுறையில் வசூல் செய்தால், இன்றைக்கு நமக்கு இருக்கக்கூடிய துண்டு விழும் பணத்தை எடுத்துக்கொண்டு விட முடியும். எப்படி சிக்கனமாக நல்லமுறையில் வசூல் செய்யமுடியும் என்று அதைப் பற்றி ஆலோசித்து நல்ல முடிவுக்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக எங்கள் ஜில்லாவில் பூச்சித் தொல்லை தாங்க முடியவில்லை. இந்த வருஷம் ஓரளவு நல்ல கண்டுமுதல் எதிர்பார்த்தோம். ஆனால் கட்டைச்சம்பா நெல்லுக்கு பூச்சி வந்து எல்லாமே குறைவாகப் போய்விட்டது. கிஸ்தி பணம் கட்ட வேண்டியிருக்கிறது. கிஸ்தியைக் கொஞ்சம் உயர்த்தி வைத்திருக்கிறோம். எந்த அளவுக்குக் கட்டவேண்டியிருக்கிறது என்று பார்க்கும்போது 6-ல் ஒரு பங்காக இல்லை, 4-ல் ஒரு பங்காக ஆகிவிட்டது. அப்படி இருக்கும்போது அந்தப் பூச்சியைப் போக்க என் வயலில் மருந்து அடித்தால், அடுத்த வயலுக்குச் சொந்தக்காரரிடத்தில் பணம் இல்லையென்று அடிக்கவில்லையென்றால், பூச்சிகளெல்லாம் அங்கு வந்து சேர்ந்து விடுகின்றன. குடி மராமத்து செய்வது போல ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் அதற்கு வேண்டிய மருந்து கொடுத்து, மெஷின் வைத்து எல்லா வயலிலும் மருந்து அடிக்கக் கூடிய நிலையைக் கொண்டுவரவேண்டும். இப்போது எங்கள் பகுதியிலே 2—3 மெஷின்கள் வந்திருக்கின்றன. கொஞ்சம் முன் கூட்டி வேலை செய்தவர்களுக்கு மெஷின் கிடைக்கும் என்ற நிலைமை இல்லாமல், நிலங்களில் அடிக்கப் போதுமான யந்திரங்களை வைத்துக்கொண்டு, யூனியனிலிருந்து அடித்து, குடி மராமத்து மாதிரி வசூல் செய்துகொள்ளலாம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தஞ்சையில் ஹெவி இண்டஸ்ட்ரீஸ் ஒன்றும் கிடையாது. எல்லா ஊரிலும் சொல்லப்பட்டிருக்கிறது. அங்கே டெக்ஸ்டைல் மில் என்று ஆரம்பித்தோம், அதுவும் நடப்பது கஷ்டமாக இருக்கிறது. சர்க்காரே முன் வந்து ஹெவி இண்டஸ்ட்ரீஸ் ஆரம்பித்தால், 6 மாதங்கள் சாகுபடி செய்ததைத் தவிர மற்றப்படி வேலை இல்லாமல்

[திரு. கி. இரா. சம்பந்தம்] [2nd March 1965

சும்மா இருப்பதால் ஏற்படக் கூடிய பல இடைஞ்சல்களைப் போக்கு வதற்கு வசதியாக இருக்கும். அது நம்முடைய தொழில் அமைச்சருடைய ஜில்லாவாகவும் இருக்கிறது. ஆகையால் என்னுடைய ஜில்லா என்று சொல்லுவதை விட அவர்கள் ஜில்லா விலே உடனடியாக ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். (டாக்டர் பா. நடராஜன் குறுக்கிடு) காவேரி டெல்டாவில் எண்ணை ஊற்று எடுக்கப்படுகிறதே என்றார். அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா. அதுபோல எண்ணை ஊற்று எடுக்கப்பட்டால்தானே இல்லாவிட்டால் அவை எல்லாம் உடனடியாக உருவாகுமென்று சொல்லமுடியாது. அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காவிரிப்பூம்பட்டினத்தில் கனம் முதல் அமைச்சர் அவர்கள் மிகவும் அக்கறை எடுத்துக்கொண்டு பல வித நல்ல வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஒரு தமிழ்க் கலைக் கல்லூரி உருவாக்கப்பட்டிருக்கிறது. அதை ஒரு டூரிஸ்டு சென்டர் ஆக்க கனம் முதல் அமைச்சர் அங்கு வந்தபோது ஒத்துக்கொண்டார்கள். இப்போதே பல பேர்கள் அங்கு வந்துகொண்டிருக்கிறார்கள். அங்கு இருக்கக் கூடிய கண்ணகி சிலை மரப்பாச்சி மாதிரி வைத்திருக்கிறார்கள். இப்படித் தானா கண்ணகி இருந்தாள் என்று வருகிறவர்கள் கேட்கிறார்கள். அந்தக் கண்ணகி எப்படி இருப்பாள் என்பதை நல்ல சிலையாக உருவாக்கி வைத்து, அங்கே ரெஸ்ட் ஹவுஸ் ஏற்படுத்தி வரக் கூடியவர்கள் பார்ப்பதற்கும் தங்குவதற்கும் நல்ல வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை ஜில்லாவிலே பெக்யூலியர் ஆஃபீஸர்ஸ் இருக்கிறார்கள். இரிகேஷன் குமாஸ்தா என்று முழுக்கமுழுக்க எஸ்டிமேட் தயாரிப்பது, பிளான் வரையும் வேலை செய்பவர்கள் அவர்கள் தான். என்ஜினியர்கள் செய்யவேண்டியதை அவர்களே செய்கிறார்கள். போய்ப் பார்க்கிறார்கள், எஸ்டிமேட் தயாரிக்கிறார்கள், ப்ளான் போடுகிறார்கள் எல்லாம் செய்கிறார்கள். என்ஜினீயர் கையெழுத்துப் போட வேண்டியதுதான் பாக்கி என்ற அளவுக்கு வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு அளிக்கப்படும் சம்பளமோ குறைவு ஆனது. நிரந்தரமான சர்க்கார் ஊழியர்களாக இருக்கிறார்கள் என்று நினைத்துக் கொள்ள வேண்டாம். அப்படி இல்லை. அவர்களுக்கு பென்ஷன் கிடையாது. அந்த மாதிரி வேலை செய்கிறவர்கள் ஆயிரக் கணக்கில் இருக்கிறார்கள் என்று நினைத்துக்கொள்ளவேண்டாம். 250 பேர்கள் இருக்கிறார்கள். தஞ்சை ஜில்லாவிலும், அதைச் சார்ந்து இருக்கிற சிதம்பரத்திலும் தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டுமானால் எஸ்.எஸ்.எல்.ஸி. க்வாலிஃபிகேஷன் வேண்டுமென்று போடுங்கள். இருக்கிறவர்களை ரெகுலரைஸ் செய்து சர்விஸ் கமிஷனில் ட்ரெய்னிங் கொடுத்தாவது அவர்களைத் தேர்ந்தெடுத்துப் போடவேண்டும். அகில இந்திய போஸ்டல் டிபார்ட்மெண்டில் ஈ.டி.ஓ. என்று இருப்பது மாதிரி இருக்கிறது. நாம்



2nd March 1965] [திரு. கி. இரா. சம்பந்தம்]

இருப்பது வெல்ஃபேர் ஸ்டேட் என்று சொல்லி எல்லோருக்கும் நன்மை செய்ய வேண்டுமென்று நினைக்கிறோம். வேலையையும் செய்து, லிவிங் வேஜ் என்ற முறையில் உண்மையான ஊதியம் கொடுக்காமல் இருப்பது நியாயம் இல்லை. கனம் விவசாய அமைச்சரும் கனம் முதல் அமைச்சர் அவர்களும் அக்கறை எடுத்துக்கொண்டு இதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* SRI S. NANJUNDA ROW : Mr. Deputy Speaker, Sir, I congratulate the Hon. Chief Minister for presenting a very welcome Budget. Though it is a deficit Budget, the Government have increased the dearness allowance of the N.G.Os. and the N.G.O. community including the Policemen as also the teachers have conveyed their thanks on behalf of themselves and their families. It is a great help to those poor families and I think that our Government richly deserves the thanks of the N.G.Os.

12-40 to 12-50 p.m.

It will be seen from the Budget speech that there has been an all-round progress in many fields and that progress has been acclaimed by everybody. Even though there was food scarcity in our State, our Government have overcome that difficulty and it is a matter for gratification that now we have returned to normalcy in the food front. Still I feel and wish to stress—because I represent a rural constituency and that too a very backward constituency—that schemes relating to food production, Small Savings Scheme, Family Planning Scheme, development of small-scale industries and cattle development should be concentrated in rural areas and unless those schemes are undertaken on a larger and wider scale, the rural areas cannot develop fully and there will not be much improvement among the rural communities. The Community Development Scheme requires re-orientation and revitalisation. I am sorry to state that the Community Development Projects have failed in their expectations. They should have concentrated on food production, small savings and such other schemes. Instead, they had taken more interest in only power-mongering and panchayat elections. Gandhiji gave us the inspiration to start these things. It was he who gave us the inspiration to establish Panchayat Raj. But, it has not been properly utilised. Panchayat Raj is slowly becoming a mockery. Still, there is time. We need not get despaired about the abuses. We will have to look ahead and we should try to revitalise the Community Development Projects and try to concentrate on the developmental activities to make village life a better life and village society a better society.

Though there has been an all-round progress in this State, I may perhaps be considered to be a little selfish if I referred to my own constituency which is a backward area. Just before I came to the Assembly, on ordinary villager told me that just like the revenue Jamabandi at the taluk-level, the Budget Session is Jamabandi at the State-level. He told me that just like the villagers used to get lots of things from the Sub-Collector who attended the taluk-level Jamabandi, I would get lots of things for my constituency at the

[Sri S. Nanjunda Row] [2nd March 1965

State-level Jamabandi, viz., the Budget Session. I took it as a blessing from him. After coming here and after hearing the budget speech of the Hon. the Chief Minister yesterday, of course, I should not say that my constituency has been denied everything. We have got our minimum requirements. In the Fourth Plan under Irrigation Schemes, the Hon. the Chief Minister has been kind enough to give some gifts to the Madurai district, especially the poor, neglected areas of Oddanchattram and Dindigul taluk. We have got some good schemes like the Parappalar Scheme, Palar-Porandalar Scheme and the Marudayar Scheme. The backward areas of Madurai district will no doubt be grateful to our Hon. Chief Minister when these schemes are actually implemented. On behalf of my constituency, I request the Government to include the Kodavanar scheme also. I request that that scheme may be taken up immediately. It will not cost much. That is the only scheme which will give some benefit to my constituency. If this scheme is not implemented, I am afraid Vedasandur will not get anything substantial. I just crave the excuse and pardon of the House for detailing the requirements of my constituency alone. Of course, I know that there are greater problems which require our immediate attention and consideration. Still, I felt that I should make some representation about my own constituency also. I plead that a little more amenities should be given to the Vedasandur area. I request the Government to sanction the Ponds Scheme. It will enrich our resources for carrying on agricultural operations under more prosperous conditions. One Pond Scheme has been sanctioned in a part of my area, viz., the Palayam area. I, however, request that the Pond Scheme for Vedasandur area may also be sanctioned at an early date. There are many other things relating to my constituency which I can represent. I shall reserve my suggestions in that regard to a later occasion when the relevant Demands are taken up for consideration.

Now, I wish to make one representation to the Government, especially, to the Hon. the Minister for Industries. Our Industries Minister was kind and gracious enough to sanction a new spinning mill for my Vedasandur area. Though it has been sanctioned two years back, it has not yet been started. I request the Hon. Minister for Industries to use his good offices to see that the mill is started urgently, at least within one year, so that the benefits of the spinning mill may be enjoyed by the people of my area.

I now want to utilise the remaining time at my disposal for referring to some of the bigger problems that our State is faced with. To start with, I may just mention about the Students' demonstrations which took place last month. Of course, our Chief Minister had taken many steps to allay the fears of our student community and he had done a great service to Tamilnad by declaring that he would plead for the statutory provision in the Official Language Act for the continued use of English. But still, we will have to consider how the whole thing had happened, and how things took place. There is no use of looking back and ruminating over these things. But, we may have to look back and when we look back, it is for the



2nd March 1965] [Sri S. Nanjunda Row]

purpose of being careful in future and for the purpose of finding out how the errors took place and how those errors could be avoided. I feel that even though our Government took many precautionary measures and took many other steps to clear the doubts of the student community, the students were misled by eminent people including some Vice-Chancellors. I should not be accused of referring to those who are not present here. But, still, I feel that I should refer to some of the views expressed by them. Our Vice-Chancellors are very eminent philosophers and experienced people. Yet, it appeared as though their experience was wrong or they were inexperienced and the youth—I mean, the young students were right. Because, it has been stated by some people that the students fought for a noble cause and the student community deserved praise. Even some of our respected and learned friends like Mr. K. P. S. Menon who has been considered to be one of the greatest diplomats of our country have encouraged our students. Mr. Menon is reported to have stated that though the students themselves need not have taken to all these methods, they had fought for a noble cause. In my view, only such speeches have encouraged the student community. It looked as though the student community wanted to run a parallel Government. Of course, our Chief Minister was very bold and straightforward. He was very firm. Because of the firm action taken by him, the situation has been brought under control within three or four days. So far as our elder statesmen are concerned, I am very sorry to observe that they had become politicians and did not remain as statesmen. This applies also to our revered Rajaji whom we respect and whose portrait we all see every morning in this House with the words 'Great are his head and heart'. Of course, great were his head and heart. Are they still great now? I am not insulting him. I have my respect for him. Even day-before-yesterday, he is reported to have stated in one of his speeches in Kerala that the Congress and the Congress Government have forgotten Mahathma Gandhi. Does he remember Mahathma Gandhi? Did he make it clear that what the student community did was wrong? He has failed to do it. I am sorry to state that it looked as though Mahathma Gandhi, the Father of the Nation and Pandit Jawaharlal Nehru, the Moulder of the Nation had lived in vain. The methods adopted by the students in their recent demonstrations were not methods which THEY taught us. Gandhiji and Nehruji never asked the student community to take to wrong means. They had always been stressing that means should justify the ends. What were the methods adopted by the students? They took to violence. They took law into their own hands. Surely, this is not what Gandhiji taught us. All his life, he has fought for non-violence. Day-before-yesterday, I happened to witness a picture which is being screened in our City, depicting the life of Mr. Kennedy. It is a great film. It shows what Kennedy was. We can easily realise from that film that Mr. Kennedy was the leader of the youth. Wherever he went, a large number of young men surrounded him and wished to shake hands with him. Here, in our country, our Statesman have failed to inspire our youth.

[Sri S. Nanjunda Row] [2nd March 1965

Of course, they inspired the youth but in a wrong direction and many things have happened. Neither our politicians nor our professors in the universities had sway over the youth at that time. When we the politicians, went out, their shirts and dhoties were torn. When the professors went out, their houses were set on fire and they were insulted by removing their turbans and hats. This is all the story of the agitation. Now what to do ? We have to look ahead. What can be done and what should be done ? Somehow the University education has to be revitalised, just as the Community Development Scheme has to be revitalised to fulfil the targets and to remove poverty from our country and from the village folk. In the same way I feel that our University and secondary education must be revitalised. In this connection, I have a novel suggestion to make. Some M.L.As. and M.L.Cs. and a Minister should be set apart for each district and all the M.L.As. and M.L.Cs. headed by that Minister should go to each college and encourage the students by saying : ' Of course you have taken part in the Hindi agitation. But do not think of the past. You should mould your character in such a way as to enable you to engage in your future activities fruitfully.' I am not making this suggestion with reference to the agitation alone. I feel that as a permanent solution to the problem, all the responsible people in the country should take interest in moulding the character of the youth. Then only after finishing their studies, they could build our country and take charge of the Government later on. I do not think that the youths who participated in the recent agitation can take charge of the Government later on. They only wanted to run a parallel Government and they could not be put in charge of the Government because we know what inexperienced persons our youths are.

Then I want to refer to one other matter and then conclude my speech. Of course, Gandhiji and Nehruji were believers in non-violence and they brought Independence for us. I do not know how many persons still believe in non-violence but still non-violence is the only way and the only solution to our problems. If we are going to forget non-violence, what is going to happen to us. India has forgotten Buddhism but it has not been forgotten in other countries of the world. In the same way Gandhism is being forgotten here but it is resurrected in other parts of the world and persons like Rev. Martin Luther King, the Negro Leader of America who adopted non-violence means got Nobel Prizes. But here we forget Gandhiji and resort to violence. Is this the message that Gandhiji has given us? Is this the way that Gandhiji wanted us to live? Instead of following his message, we have resorted to violence. Of course, Gandhiji and Nehruji wanted that we should continue to maintain the good British traditions. But what are we doing now? In this connection, I want to make it clear that I am not pleading for Hindi. Let Hindi go but what about our Indian tradition and culture ? Maintenance of our tradition and culture is important. We are preaching peace in other parts of the world but inside our State and the country there is no peace. So, if we want to develop



2nd March 1965] [Sri S. Nanjunda Row]

a good society, we must adhere to non-violence and it is only through non-violence that we can build our society on right lines. Thank you Sir.

* **திரு. எஸ். சின்னய்யன்** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1-00 p.m
கனம் முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும், 1965-66-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையைப் பாராட்டி, வரவேற்று சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். நமது நாட்டிலே இப்பொழுது, சென்ற ஆண்டிலும் சரி, இந்த ஆண்டிலும் சரி, நமக்கு ஏற்பட்ட பிரச்சினைகள் மிக அதிகம். பல சிக்கல்கள் நிறைந்த பிரச்சினைகள் எல்லாம் ஏற்பட்டு இருக்கின்றன என்பதை நாம் மறந்துவிட முடியாது. அவற்றில் உணவுப் பிரச்சினை மிக முக்கியமானது. அந்தப் பிரச்சினையைச் சமாளிப்பதற்கு நமது அமைச்சர்கள் பல்வேறு காரியங்களில் ஈடுபட்டிருக்கும் அதே நேரத்தில், வெகு கொடூரமான புயல் ஏற்பட்டு, நமது அமைச்சர்களுக்கும், அரசாங்கத்திற்கும் பெரிய சோதனை காலமாக இருந்தது. அப்படி அவர்கள் மனதெல்லாம் உணவுப் பிரச்சினையையும் புயலால் ஏற்பட்ட கஷ்டங்களைத் தீர்ப்பதிலும் ஈடுபட்டு, அல்லும் பகலும் உழைத்துக் கொண்டிருக்கும் போது, எந்த எந்த வகைகளில் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களைத் தீர்ப்பது என்று கவலைப்பட்டுக்கொண்டிருக்கும், அந்த நேரத்தில், இந்த நாட்டுக்குப் பாதகம் விளைவிக்கும் ஒரு கூட்டத்தார், இந்த நாட்டின் முன்னேற்றத்தில் அக்கறையில்லாதவர்கள், மொழிப் பிரச்சினையை முன்னுக்கு வைத்து, இந்த நாட்டிலே ஒரு அராஜகத்தையே ஏற்படுத்தும் நிலையில் இறங்கினார்கள். இத்தனை பிரச்சினைகளையும் சமாளித்து, இன்றைக்குத் தமிழ் நாட்டில் அமைதியை நிலைநாட்டி, நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்திவந்ததற்காகக் கனம் முதல் அமைச்சரை நாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். இத்தனை பிரச்சினைகளுக்கும் மத்தியில் கனம் முதல் அமச்சர் அவர்கள் தைரியமாக முன் நின்று நல்லவகையில் அவற்றைச் சமாளித்ததற்காக, பல கோயில்களிலும் அவர்கள் நீடூழி வாழவேண்டும் என்பதற்காக, அவர்கள் வாழ்வதோடு மட்டுமின்றி, இந்த நாட்டில் பாமரமக்களும், ஏழை எளியவர்களும் வாழ வேண்டியதற்காக அவர்களுடைய ஆட்சி நிலைத்து நிற்க வேண்டும் என்று, நகரங்களிலும், கிராமங்களிலும் உள்ள கோயில்களில் எல்லாம் பூஜைகள் நடத்தினோம். சமூக விரோத சக்திகள் தலை தூக்கி ஆட்சியைக் கவிழ்க்க, மாணவர்களைத் தூண்டிவிட்டு, இந்த மொழிப் பிரச்சினையை முன்னால் வைத்து, பல கேடுகளை விளைவிக்க முன் வந்தார்கள். என்னுடைய நகரத்திலும் ஒரு மாபெரும் புரட்சியே நடந்தது. அதை மாணவர்கள் செய்தார்களா என்று நன்றாக ஆராய்ந்து அலசிப் பார்க்கும் போது இல்லை மாணவர்கள் அமைதியாகத் தங்களுடைய கோஷங்களை எழுப்பினார்கள், தங்களுடைய விருப்பங்களையும் வெறுப்புகளையும் தெரிவிக்க அமைதியாக ஊர்வலங்கள் நடத்திச் சென்றார்கள், காலையிலே பத்து மணிக்கு எல்லோரும் ஒன்று கூடி தெருத் தெருவாக ஊர்வலம் வந்தார்கள். அப்பொழுது ரெவின்யூ அதிகாரிகளும், போலீஸ் அதிகாரிகளும், மற்ற அதிகாரிகளும், ' நீங்கள் உங்கள் எதிர்ப்பை அமைதியாகத் தெரிவித்துக் கொள்ளுங்கள்

[திரு. எஸ். சின்னய்யன்] [2nd March 1965

என்று சொன்னதற்கு இணங்க அவர்கள் அமைதியாக நடந்து கொண்டு போய்விட்டார்கள். இது காலையில் நடந்தது. ஆனால் மத்தியானத்திற்குப் பின்னால், இந்த நாட்டிலே இருக்கிற, நாச சக்திக்காரர்கள், அந்த நகரத்தில் இருக்கும் பொருள்களைக் கொள்ளை அடிக்க வேண்டும், சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்க வேண்டும் என்பதற்காக இப்படிப்பட்ட மாபாதகமான செயலில் ஈடுபட்டார்கள். நான் வெட்கப்படுகிறேன். இவர்கள் டின்களில் சாராயத்தை கொண்டு வந்து குடித்துவிட்டு, ஊர்வலமாகச் சென்று தீ வைப்பது, நாசம் செய்வது முதலான செயல்களில் ஈடுபட்டார்கள் என்று கேள்விப்பட்டு வெட்கப்பட்டேன். இப்படிப்பட்ட ஒரு கும்பல் இந்த நாட்டில் இருக்க லாயக்கா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும், என்று பொது மக்களையும் அரசாங்கத்தையும் கேட்கிறேன். அந்த அளவுக்குக் கலகங்கள் அங்கே நடந்தன. அந்த ஊரில் இருக்கும் ரெவின்யூ அதிகாரிகள், போலீஸ் அதிகாரிகள், சாமார்த்தியமாக சமாளித்து ஒரு உயிர்கூடப் போகாத வகையில், நல்ல முறையிலே சமாளித்திருக்கிறார்கள். நான் ஊரில் இல்லை. என் வீட்டைத் தாக்க வந்தவர்களின் கூட்டம் 300 இருக்கும் என்று சொன்னார்கள். அத்தனை பேர்கள் என் வீட்டைத் தாக்குவதற்காக வந்தார்கள். அதைப் போலீசார் சமார்த்தியமாகச் சமாளித்திருக்கிறார்கள். அவ்வளவு மோசமான நிலை அன்று இருந்தது. மாணவர்களா அந்தக் காரியத்தைச் செய்தார்கள் என்று நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மாணவர்கள் அப்பாவிகள். அவர்களைத் தாண்டிவிட்டு இவர்கள் மத்தியானத்திலேயே சாராயத்தைக் குடித்துவிட்டு வந்து இம்மாதிரியான காரியங்களையெல்லாம் செய்ய முன்வருவார்களானால், அவர்களுடைய விஷயத்தில் கனம் முதல் அமைச்சர் அவர்களும், மந்திரிசபையும் மிகவும் தீவிரமாக இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். இந்த நிலையை இப்படியே விட்டுக் கொண்டு போனால் இந்த நாட்டில் நல்லவர்கள் வாழ முடியுமா? இந்த நாட்டிலே நல்லவர்கள் உலவுவார்களா? நல்ல காரியங்களைச் செய்கிறவர்களைத்தான் அவர்கள் விட்டு வைப்பார்களா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவ்வளவு மோசமான நிலை ஏற்பட்டது. அந்த நிலை அனைத்தையும் சமாளித்து இன்று ஒரு நல்ல நிலையான, நீதியான அரசாங்கத்தை உருவாக்கியதற்காக மந்திரி சபையிலுள்ள அனைவரையுமே நான் பாராட்டுகின்றேன்.

அதோடு மட்டுமல்ல. இந்த பட்ஜெட்டிலே பல நல்ல காரியங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. வருஷா வருஷம் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை கணக்கெடுத்துப் பார்த்தால், முந்தைய ஆண்டை விட இந்த ஆண்டு அபிவிருத்தி அதிகரித்திருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. இப்படி ஒவ்வொரு துறையிலும் நல்ல பல காரியங்கள் மேலும் மேலும் வளர்ச்சி அடைந்து கொண்டே இருக்கின்றன. நாளுக்கு நாள், மாதத்திற்கு மாதம், வருஷத்திற்கு வருஷம் நமது மாநிலம் முன்னேற்றப் பாதையிலே சென்று கொண்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.



2nd March 1965] [திரு. எஸ். சின்னய்யன்]

விவசாயத் துறையை எடுத்துக்கொண்டால், சிறு பாசனத் திட்டத்தின்கீழ் கிணறுகள் வெட்டுவதற்கு இதற்கு முன்னால் இரண்டாயிரம் ரூபாய் கடன் கொடுத்து வந்ததை, இப்பொழுது ஐயாயிரம் ரூபாய் அளவுக்கு உயர்த்தியிருக்கிறார்கள். விவசாயத் துறையை மேலும் மேலும் அபிவிருத்தி அடையச் செய்யவேண்டும் என்பதற்காக இந்தத் தொகையை உயர்த்த முன்வந்திருக்கிறோம். அது மட்டுமல்ல. உர விநியோகத்தை எடுத்துக்கொண்டாலும் கூட, ஆங்காங்கு இருக்கும் விவசாயிகளுக்கெல்லாம் உரம் நல்ல முறையில் கிடைக்கவேண்டும், விநியோகம் செய்வதிலே தங்கு தடை இருக்கக்கூடாது என்பதற்காக, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. விநியோகத்திலும் எந்த விக்கினமும் இருக்கக்கூடாது என்பதற்காக இதைச் செய்திருக்கிறார்கள். விவசாயிகளுக்குத் தேவையான சமயத்தில் உரம் கிடைப்பதில்லை என்ற குறைபாடு பொதுவாக இருந்து வருகிறது. இதைத் தீர்க்கும் வகையில் நமது அரசு முன்வந்து, தங்கு தடையில்லாமல் உர வகைகள் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். ரசாயன உரங்களை உபயோகப்படுத்தினால் நிலத்தின் தரம் கெட்டுவிடும் என்றெல்லாம் எண்ணிக்கொண்டிருந்த காலம் ஒன்று இருந்தது. இப்பொழுது விவசாயிகள் ரசாயன உரம் உபயோகிப்பதில் உள்ள நன்மையைத் தெரிந்து கொண்டுவிட்டார்கள். ரசாயன உரம் போட்டால் நல்ல விளைச்சலைக் காண முடிகிறது என்ற எண்ணம் விவசாயிகள் மத்தியில் இப்பொழுது பரவலாக ஊன்றி வருகிறது. அவர்களுக்கு இந்த, எண்ணம் ஏற்பட்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில் ரசாயன உரங்கள் அவர்களுக்குத் தாரளமாகக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். தஞ்சை ஜில்லாவில் சுற்று வண்டியில் வைத்து ரசாயன உரங்களை விநியோகம் செய்வதைப் போல, எங்கெங்கே விளைச்சல் அதிகமாக இருக்கிறதோ அங்கெல்லாம் சுற்று வண்டி மூலமாக விநியோகம் செய்யவேண்டும். யார் யார் இந்த உரத்தை உபயோகிக்க முன்வருகிறார்களோ யார் யார் இந்த உரத்தை விரும்பி வாங்க முன் வருகிறார்களோ, அவர்களுக்கெல்லாம் இந்த உர வகைகளை விநியோகம் செய்யலாம் என்ற திட்டத்தை வகுத்து, எல்லா ஜில்லாக்களிலும் இந்தத் திட்டத்தை அமுல்படுத்த முன்வருவார்களானால், விவசாயிகள் இன்னும் நல்ல முறையில் உணவு உற்பத்தியை அதிகரிக்க முடியும். ஆகையால், ஆங்காங்கு இருக்கிற அதிகாரிகளை வைத்துக் கொண்டு, எந்த எந்தப் பகுதிக்கு எவ்வளவு மூட்டை தேவை, அவற்றை எப்படியெல்லாம் விநியோகம் செய்தால் விவசாயிகளுக்குத் தாராளமாகக் கிடைக்கும் என்ற புள்ளி விவரங்களைச் சேகரித்து, சுற்று வண்டிகள் மூலம் விநியோகிக்க ஏற்பாடு செய்யவேண்டும். எங்கள் பக்கத்தில் புரட்டாசி மாதத்தில் நாற்று நடுவார்கள். புரட்டாசி மாதம் நாற்று நட்ட, ஒன்றிரண்டு மாதங்களுக்குப் பின்னால் உரங்கள் தேவையாக இருக்கின்றன. அந்தச் சந்தர்ப்பத்தைப் பார்த்து, நெல் விவசாயம் அதிகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிற இடங்களில் இந்த உரத்தை விநியோகம் செய்யலாம். அந்த இடங்களுக்குச் சுற்று வண்டி மூலமாக உரம் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

உணவு உற்பத்தியைப் பெருக்கத் திட்டத்திலே கூட்டுறவுப் பண்ணைகளின் மூலமாக உணவு உற்பத்தியைப் பெருக்குவதும் நம்முடைய அரசினுடைய முக்கிய நோக்கமாக இருக்கிறது. சேலம் ஜில்லாவைப் பொறுத்தவரையில், சில கூட்டுறவுப் பண்ணைகள் அங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கூட்டுறவுப் பண்ணைகள் அமைக்கப்பட்டிருக்கும் நிலையைப் பார்த்தால் எனக்குச் சற்று வேதனையாகக் கூட இருக்கிறது. இப்பொழுது ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், நானும் சமீபத்தில் ஒரு கூட்டுறவுப் பண்ணை ஆரம்பிக்க உத்தேசித்து, அதுவும் சாங்ஷன் ஆகி, நடைமுறைக்கு வர இருக்கிறது. தேவையான பணத்தையெல்லாம் பெற்று, பாங்கிலே கட்டிவிட்டு வந்திருக்கிறேன். அதற்கான அதிகாரியும் வந்து விட்டார். கூடிய சீக்கிரம் அந்தக் கூட்டுறவுப் பண்ணை இயங்க ஆரம்பித்துவிடும். இதற்கு முன்னால் அந்த ஜில்லாவில் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுப் பண்ணைகள் ஏன் நல்ல முறையில் இயங்கவில்லை என்பதற்கான காரணத்தை நான் யோசித்தேன். அந்தக் கூட்டுறவுப் பண்ணைக்குத் திட்டம் வகுக்கின்றபோது, இருந்த நிலைக்கும், இப்போதைய நிலைக்கும் வித்தியாசம் இருக்கிறது. மாடு வாங்குவதற்காக 400 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் கனம் அங்கத்தினர்களுக்கு விவரம் தெரிந்திருக்கும். ரூ. 400 கொடுத்து வாங்குகிற மாடுகள் எத்தனை வருஷங்கள் உழைக்கும் என்பதை நன்றாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்தத் திட்டத்தைத் தயார் செய்கின்றபோது மாட்டுக்காக ரூ. 400 என்று நிர்ணயித்திருப்பது எப்படி என்று தெரியவில்லை. ரூ. 400-க்கு ஒரு மாடுதான் வாங்க முடியும். ஒரு ஜோடி மாடு வாங்க 800 முதல் ஆயிரம் ரூபாய் வரை ஆகும். அப்படி வாங்கி விவசாயம் செய்தால்தான் விவசாயம் ஓரளவுக்கு ஒழுங்காக இருக்கும். கூட்டுறவு விவசாயப் பண்ணையில் ரூ. 400-க்கு ஒரு ஜோடி மாடு வாங்கி விவசாயம் செய்வதென்றால் விவசாயம் எந்த முறையில் நடைபெற முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

நிலத்தைச் சீர்திருத்தம் செய்வதற்கு ஏகரா ஒன்றுக்கு ரூ. 100 வீதம் கொடுக்கிறார்கள். ஒரு ஏகரா புஞ்சை நிலத்தை ரூ. 100 செலவில் எப்படி நஞ்சையாக மாற்ற முடியும்? புஞ்சையை நஞ்சையாகக் கொண்டுவருவதற்கு, ஏகரா ஒன்றுக்கு ஆயிரம் ரூபாயாவது செலவாகும் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆயிரம் ரூபாய்க்குக் குறைந்து செலவழித்தால் எப்படி ஒரு சமமான பூமியாக நஞ்சை பூமியாகக் கொண்டுவர முடியும்? ஆகையால், கூட்டுறவுப் பண்ணை சம்பந்தமாக உள்ள சட்ட திட்டங்களையெல்லாம் அரசு மறு பரிசீலனை செய்து, இப்போதுள்ள நிலைக்குத் தக்கபடி விவசாயம் நல்ல முறையில் நடக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்தால், கூட்டுறவுப் பண்ணைகள் நல்ல முறையில் நடைபெறும், அதன் மூலமாக உணவு உற்பத்தியை இன்னும் அதிகமாக்க முடியும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மருத்துவத் துறையைப் பொறுத்தவரையிலும் எடுத்துக் கொண்டால் பல கட்டிட வேலைகளை தேசீய நெருக்கடியின் காரணமாக நிறுத்தி வைத்திருந்தார்கள். இப்போது அந்த விதிகளை எல்லாம் தளர்த்தி அந்தக் கட்டிட வேலைகளை எல்லாம் இப்போது ஆரம்பிக்கலாம் என்று சொல்லியிருப்பதை மனமாரப் பாராட்டுகிறேன். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் ஐந்தாறு வருஷங்களாக—நாமக்கல் நகரத்தில் அது ஒரு பெரிய தாலூகா, டெபுடி கலெக்டர் இருக்கக்கூடிய இடம்—அந்த தாலூகாவில் இருக்கிற ஹெட் குவார்டர்ஸ் ஆஸ்பத்திரி ஏதோ ஓடிக் கொண்டே இருக்கிறதே தவிர அதை அபிவிருத்தி செய்ய மார்க்கம் இல்லாமல் இருந்துகொண்டேயிருக்கிறது. அங்கே செய்யப்பட வேண்டிய பல காரியங்கள் தாமதப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்போது அந்த உத்தரவு தளர்த்தப்பட்டு அதை அபிவிருத்தி செய்ய பல நல்ல திட்டங்கள் உருவாகி இருப்பதாக நான் அறிகிறேன். அந்த வேலைகளை உடனடியாகத் துவங்குவதற்கு இந்த பட்ஜெட்டில் வழிவகை செய்யப்பட்டு இருப்பதற்காக நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் குறிப்பாக நாமக்கல் நகரத்தில் நிறுத்தப்பட்ட வேலைகளை உடனடியாகத் துவங்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித் துறையைப் பொறுத்தவரையில் நாம் மற்ற நாடுகள் எல்லாம் பாராட்டக்கூடிய முறையில் வளர்ச்சி கண்டிருக்கிறோம் என்பதை யாரும் மறுக்க முடியாது. அதே சமயத்தில் நாமக்கல்லில் ஒரு கல்லூரியை அமைக்கக்கூடிய வாய்ப்பு, வசதி இருக்கிறது. அதன் சுற்று வட்டாரத்தில் பல உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அந்த நகரத்தில் ஒரே ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளி தான் இருக்கிறது. அங்கே உள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் இட வசதி போதவில்லை. அதற்காக ஷிப்டு முறையில் வகுப்புகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக மாணவிகள் இரவு பத்து மணிக்குக்கூட வீட்டிற்குத் திரும்ப வேண்டிய நிலை ஏற்படுமோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அந்தக் குழந்தைகளின் நிலைமை எப்படி இருக்கும் என்று சிந்திக்க வேண்டும். ஆகவே இவ்வாண்டே அந்தக் பள்ளிக்கு வேண்டிய இட வசதி செய்து கொடுக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும். என்னுடைய பெண்ணே ஒரு நாள் மாலை மிகவும் நேரம் கழித்து வந்தாள். "ஏன் அம்மா இப்படி வருகிறாய்?" என்று கேட்டதற்கு இப்போது மாற்றி அமைக்கப்பட்டுள்ள பள்ளி நேரம் இது தான் என்று சொன்னாள். இப்படி குழந்தைகள் இரவு நேரம் கழித்து வருவதைத் தவிர்க்க அந்தப் பள்ளிக்கு கட்டிடம் கட்ட நில ஆர்ஜிதம் செய்வதற்குத் தகுந்த ஏற்பாடுகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில் நாம் ராட்சத வேகத்தில் முன்னேறி இருக்கிறோம் என்பதைக் கண்டிப்பாகச் சொல்லலாம். மற்ற மாநிலத்தவர்கள் பாராட்டுகிற, பெருமைப்படக்கூடிய அளவுக்கு நாம் முன்னேறி இருக்கிறோம். இன்றைக்கு விவசாயத் துறையாக இருந்தாலும் சரி, தொழில் துறையாக இருந்தாலும் சரி மின்சாரம் நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

[திரு. எஸ். சின்னய்யன்] [2nd March 1965

இன்றைக்கு மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு இருப்பதனாலேயே பல சிறு தொழில்களை ஆரம்பிக்கலாம் என்ற எண்ணம் பலருக்கு வளர்ந்து வருகிறது. அதுவும் இவ்வாண்டு விவசாயத் துறையில் இரண்டு லட்சத்து முப்பதாயிரம் பம்பு செட்டுகளுக்கு இணைப்புக் கொடுக்கப்படும் என்று கனம் அமைச்சர் அவர்கள் தம் உரையில் சொல்லியிருக்கிறார்கள். இவை எல்லாம் பாராட்டுவதற்குரியதுதான். விவசாய மக்களும் பாராட்டுவார்கள். மகிழ்வார்கள். இவ்வாண்டு பிரசங்கம் என் பகுதியில் இருக்கிற விவசாய மக்களுக்கு மிகவும் மகிழ்ச்சியைக் கொடுக்கும். மிக மிக ஆழமான கிணற்றில் இருக்கும் தண்ணீர் சுச்சைத் தட்டியவுடன் குபுகுபுவென்று வெளியே பாய்வது என்றால் அதைப் பார்த்து மகிழாமல் யார் இருக்க முடியும். ஆகவே இது விவசாய மக்களுக்கு மகிழ்ச்சி தரும் விஷயம் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் இதில் ஒரு சின்ன பிரச்சினை இருக்கிறது. இப்பொழுது இரண்டு லட்சத்து முப்பதாயிரம் பம்பு செட்டுகளுக்கு மின்சார கனெக்ஷன் கொடுக்கிறோம். இதற்கு முன்னாலே இந்தக் கிணறுகளில் இருந்து தண்ணீர் எப்படி வெளியே வந்தது? இதை யார் மூலம் பாய்ச்சினார்கள்? இந்தத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் எங்கே? அவர்கள் நிலைமை இப்போது எப்படி இருக்கிறது என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். இதைப்பற்றிக் கடந்த மூன்றாண்டுகளாகவே நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து கொண்டிருக்கிறேன். கிணறுகளுக்கு மின்சார சப்ளை கொடுக்க முன்வந்திருப்பதன் காரணமாக இதுவரை
1-30 p.m. தண்ணீர் பாய்ச்சுவதற்காக பறி தோப்பரை போன்றவற்றைச் செய்து கொடுத்துக் கொண்டிருந்த தொழிலாளர்கள் ஹரிஜனங்கள், அந்த தொழிலாளர்கள்தான் அதிகமாகப் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் சேலம், கோயம்பத்தூர் ஜில்லாக்களில்தான் அந்தத் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு மாற்றுத் தொழில் தேடித் தரவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். இன்றையதினம் தங்களுடைய குறைகளை அவர்களால் முறையாக அரசாங்கத்தினிடம் எடுத்துச்சொல்ல முடியாமல் அவர்கள் மிக்க வேதனைக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அவர்களுடைய கஷ்டத்தைப் போக்க நம்முடைய அரசு நல்ல மாற்றுத் திட்டங்களை வகுத்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக இந்த பட்ஜெட் நல்ல உயர்ந்த முறையில் தயாரிக்கப்பட்டு இருக்கிறது. அதோடு பட்ஜெட்டிலே சேலம் இரும்புத் தொழில் சீக்கிரத்தில் அமைக்கப்படும் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இது எங்கள் ஜில்லாவிற்கே ஒரு வரப்பிரசாதம். இதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆகையால் இப்படி இவ்வாண்டு நமது வரவுசெலவுத் திட்டத்தை எடுத்துக் கொண்டால் பாராட்டுவதற்கும், போற்றிப் புகழ்வதற்கும் உரிய அம்சங்கள் தான் இருக்கின்றன என்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



2nd March 1965]

### VII.—BUSINESS OF THE HOUSE.

MR. DEPUTY SPEAKER : I have to announce to the House that the Business Advisory Committee which met on 1st March 1965 has decided the following programme of business for the present sitting of the Assembly :

| | |
|---|---|
| 2nd to 6th and 8th March 1965 (6 days.) | General discussion on the Budget. |
| 9th to 13th, 15th to 20th and 22nd to 27th March 1965 (17 days.) | Voting on Demands for Grants for the year 1965-66. |
| 25th March 1965 .. | Presentation of Final Supplementary Statement of Expenditure for 1964-65. |
| 27th March 1965 .. | Introduction of Appropriation Bill. |
| 29th March 1965 .. | General discussion on the Final Supplementary Statement of Expenditure for 1964-65 and Voting on Demands for further Grants for 1964-65. |
| | Introduction of Appropriation Bill. |
| 30th March 1965 .. | Consideration and passing of Appropriation Bills. |
| 31st March 1965 .. | Consideration and passing of Official Bills. |
| 1st April 1965 and 2nd April 1965. | Discussion on the Official Language policy. |

The House as usual will sit daily from 8-30 a.m. to 1-30 p.m.

The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow. 1-32 p.m.

The House then adjourned.

### VIII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

#### A. Statutory Rules and Orders.

133. *Notification issued with G.O. Ms. No. 3553, Home, dated 17th November 1964, amending the Madras Rectified Spirit Rules, 1959, published with Home Department Notification S.R.O. No. A-1776 of 1959, dated the 11th March 1959, at pages 169 to 187 of the Rules Supplement to Part I of the Fort St. George Gazette, dated the 25th March 1959 as subsequently amended. [Laid on the Table of the House under section 54 (3) of the Madras Prohibition Act, 1937 (Madras Act X of 1937).]*

## B. Reports, Notifications and other Papers.

27. *Resolutions passed on 8th February 1964 at the first conference of the Madras State Panchayat Officers' Association and orders passed thereon.*

* 28. *Introduction to Budget for the year* 1965–66 (*Tamil and English*).

* 29. *Demands for Grants and Detailed Budget Estimates for the year* 1965–66.

* 30. *Budget Memorandum for the year* 1965–66 (*English and Tamil*).

* 31. *Detailed Public Works Budget for the year* 1965–66.

* 32. *Detailed Irrigation Budget for the year* 1965–66.

* 33. *Government Commercial undertakings.*

* 34. *Detailed Industries Budget for the year* 1965–66.

* 35. *Detailed Budget Estimates* (*Agriculture, Fisheries, Animal Husbandry and Forests*).

* 36. *Notice of Demands for Grants for the year* 1965–66 (*English and Tamil*).

* 37. *Statement of Posts and Scales of Pay for the year* 1965–66.

* 38. *Annual Financial Statement* (*English and Tamil*).

* 39. *Detailed Budget Estimates of Revenue for the year* 1965–66.

* 40. *Speech of the Chief Minister presenting the Budget for the year* 1965–66 *and the Appendices thereto* (*English and Tamil*).

* 41. *Third Five-Year Plan* [*Supplement to the Detailed Budget Estimates for the year* 1965-66 (*English and Tamil*)]

* 42. *Third Five-Year Plan—Review of Progress during* 1961–62 *to* 1964–65 *and Programme for* 1965–66 (*English and Tamil*).

## APPENDIX.

[*Vide* answer to starred question No. 125 on page 134]

## STATEMENT.

With a view to ensuring adequate supply of good cloth of popular varieties at reasonable prices for common mass consumption, the Government of India have introduced price and production controls over the manufacture and sale of mill-made dhoties; saries, long-cloth, drill and shirting, covering about 45 per cent of the total annual mill production excluding sales for exports and defence requirements. These Statutory Controls came into effect on 20th October 1964.

* Laid on the table of the house on 1st March 1965.



2. With the introduction of the statutory Controls, the scheme of voluntary price regulation by the Industry has come to an end. Under the Statutory Controls Scheme, formulae have been prescribed for working out the cost of cotton, the conversion charges for spinning and weaving and the processing charges for processes such as bleaching, dyeing, printing, mercerising, etc., which have gone into the making of a piece of cloth ot the controlled variety. The price so worked out will be stamped on the piece of cloth as the ex-mill price. The retail price of the cloth, the excise duty, the category and description of the cloth, and the "tex-mark" of the mill will also be stamped on the cloth. In addition, the controlled categories of cloth will bear on it the words "controlled cloth". All these details will be printed on the cloth in red colour to distinguish the cloth clearly from cloth of the non-controlled varieties.

3. No mill will produce controlled varieties of Cloth, i.e., dhoties, saries, long-cloth, drill and shirting, in the non-controlled sector. Also no mills will print these words, i.e., dhoties, saries, long-cloth and shirting on any non-controlled varieties. However, the mills will also print the name of the mills; specifications of the cloth; tex-mark number, brand or popular name, if any, of the variety and month of manufacture on non-controlled varieties of cloth in any colour other than red. Mill-made cloth of the non-controlled categories will not be subject to price control.

4. In calculating the retail price of cloth of the controlled categories, a margin of 18 per cent over the ex-mill price (excluding excise) will be allowed to the trade. The retail price and the excise duty will be printed on the cloth. It is expected that, as a result of the introduction of the statutory controls, there will be a reduction of about 5 to 8 per cent in the prices of most of the cloth of the controlled categories as compared with the prices that prevailed under the Voluntary Price Scheme. In a few old varieties of controlled categories (whose prices continue at pre-1961 level, and which constitute less than 5 per cent of the controlled cloth), the new prices may however show an increase by about 7 to 8 per cent.

5. To ensure that the Control Scheme is effectively implemented, a new wing has been created in the Textile Commissioner's Organization under an Additional Textile Commissioner with adequate enforcement staff in every region of the country, particularly where large textile mills complex exist. The Government of India also set up a "Textile Control Advisory Committee" under the Chairmanship of Shri V. P. Naik, Chief Minister of Maharashtra, to advise the Central Government on all aspects of the work relating to the administration of the Controls. This Committee will consist of 15 members and will include representatives of industry, labour, technologists, wholesale traders, retail traders, fair price shops, consumer co-operative societies, consumers, economists and public workers. A Central Vigilance Committee has been set up under the Chairmanship of Sri S. V. Ramasamy, Union Deputy Minister of Commerce.

[2nd March 1965

6. The retail trade will continue to distribute all cloth in the normal way. Fair Price shops and consumer Co-operatives will be supplied as much cloth (controlled and non-controlled varieties) as they would need. If Fair Price shops or consumer Co-operatives experience any hardship, they may contact the Regional offices of the Textile Commissioner.

7. In order to implement the Cloth Control Scheme effectively in the State, the Government are considering the question of setting up of a State Level Vigilance Committee (Textiles).

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Wednesday, 3rd March 1965.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS

*கல்வி நிர்வாகத்தில் மத்திய சர்க்கார் பங்கு*

**132 கேள்வி.— திரு. து. ப. அழகமுத்து: கனம் முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) சமீபத்தில் டெல்லியில் நடந்த கல்வி மந்திரிகள் மாநாட்டில் மத்திய சர்க்கார் தேசத்தின் கல்வி நிர்வாகத்தில் அதிகமாக பங்கு எடுக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருப்பது உண்மையா?*

*(இ) ஆமெனில் மாநில சர்க்கார் தங்கள் அதிகாரத்தை எந்தெந்த முறையில் விட்டுக் கொடுக்கப்போகிறது?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (i) No Sir.

(b) Does not arise.

*தனியார் நிர்வாகப் பள்ளிகளைத் தேசீயமாக்குதல்*

*133. கேள்வி.—திரு. ஏ.சுவாமிதாஸ்: கனம் முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—*

*தமிழ் நாட்டிலுள்ள தனியார் பாட்சாலைகளனைத்தையும் தேசீயமயமாக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?*

THE HON SRI M. BHAKTAVATSALAM : No.

*Boat disaster in Cauvery near Mohanur*

*134 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of casualities in the boat disaster in the Cauvery near Mohanur;

(*b*) the reason for the disaster; and

(*c*) the action taken for the recovery of the dead bodies?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Eight persons died and one is still missing,

(*d*) Heavy overloading and rash rowing while the river was in floods were the causes of the accident,

(*c*) All these available resources and efforts by the Police, Fire fighting units, Armed reserve Sections and Last Grade Government officers were utilised in the rescue and relief operations.

**திரு. கே. ஏ. மதியழகன்:** *சாதாரணமாக படகுகளில் எவ்வளவு பேர்களை ஏற்றிச் செல்கிறார்கள். எவ்வளவுக்கு அதிகமாக ஏற்றிச் செல்லக்கூடாது என்று விதிமுறையிலும்-லைசென்ஸ் முறையிலாக்*

சொல்லப்படுகிறது. இந்த விதிமுறைகளை மாற்றி அமைப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** விதிமுறைகள் இருக்கின்றன. ஓவர்லோடிங் கூடாது, ராஷ் ரோயிங்கூடாது என்று விதிமுறைகள் இருக்கின்றன. அப்படி இருந்தால் அவர்களுடைய லைசை ரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அம்மாதிரி படகை ஓட்டியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு மாஜிஸ்ட்ரேட் விடுதலை செய்திருக்கிறார்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** இம்மாதிரி காவேரி போன்ற பெரிய ஆறுகளில் வெள்ளங்கள் அதிகமாக வருகின்ற நேரத்தில் அசிரத்தையாக ஓட்டியவர்களை கோர்ட்டுகளிலே விடுதலை செய்கின்ற காரணத் ஓட்டியவர்களை கோர்ட்டுகளிலே விடுதலை செய்கின்ற காரணத்தினாலும் பல உயிர்களுக்கு மரண ஆபத்து ஏற்படுகின்ற காரணத்தினாலும் தகுந்த பாதுகாப்பு அளிக்க தகுந்த ஒரு சட்டத்தைக் கொண்டுவர அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நல்ல பாதுகாப்பு அளிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும், மேலும் சட்டத்தைத் திருத்துவதென்றால் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். ஆனால் கோர்ட்டில் விடுதலை செய்வதை நாம் தடுப்பதற்கில்லை. அவர்களுடைய லைசென்ஸ் முறை கண்டிப்பாக கவனிக்கப்பட்டுவருகிறது. இந்த விஷயத்தில் எல்லா நடவடிக்கைகளும் எடுக்க தொடர்ந்து கவனம் செலுத்தப்பட்டுவருகிறது.

**திரு. முனு. ஆதி:** கனம் தலைவர் அவர்களே, எதிர்பாராமல் ஆபத்து ஏற்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இந்தக் கேள்வி இதில் எழவில்லை. தனியாக கேள்வி கேட்டால் அரசாங்கத்திற்கு என்ன பொறுப்பு இருக்கிறது என்று பரிசீலனை செய்து சொல்லப்படும்.

**திரு. எம். வி. கரிவேங்கடம்:** அடிக்கடி படகு விபத்து, ஓவர் லோடிங், ஓவர்ஸ்பீடிங் காரணமாக ஏற்படுவதினால் அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** லைசென்ஸ் முறைகள் கண்டிப்பாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. யார் யார் ஓவர் லோட் ஏற்றிச் செல்கிறார்களோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** நம்முடைய நாட்டில் இந்தப் படகு முறை அவசியமாக இருக்கலாம். இந்தப் படகுகளில் பிரயாணம் செய்கிறவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடிய வகையில் மோட்டார் இன்ஷூரன்ஸ் போன்ற ஒரு இன்ஷூரன்ஸ் திட்டத்தைக் கொண்டுவருவதற்கு அரசாங்கம் ஆலோசிக்குமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதற்குத் தனிக்கேள்வி வேண்டும்.



**திரு. கே. ஏ. மதியழகன்:** இந்தப் படகு விபத்தில் பத்திரிகையில் வந்த எண்ணிக்கைக்கும் சர்க்கார் தந்த தகவலுக்கும் வித்தியாசம் இருக்கிறது. ஆற்றில் மூழ்கிப்போனவர்களின் பல ஆயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள நகைகளை போலீசாரே எடுத்துக் கொண்டார்கள் என்று செய்திகள் வந்திருக்கின்றன. அவைகளை யார் யாருக்குத்திருப்பிக் கொடுக்கவேண்டும், அவைகளின் மதிப்பு என்ன என்பதைத் தெரிவிப்பார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** பத்திரிகை செய்திக்கு அரசாங்கம் பொறுப்பு அல்ல. என்னிடத்திலுள்ள விவரங்களைத் தான் சொன்னேன். மேலும் விவரம் வேண்டுமென்றால் தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. சா. கணேசன்:** இது படகு விபத்தா, பரிசல் விபத்தா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இது கன்ட்ரி போட் விபத்து.

**திரு. எம். வி. கரிவேங்கடம்:** கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றபோது ஓவர்லோடிங்கையும், ஓவர் ஸ்பீடிங்கையும் தவிர்ப்பதற்கு அடிக்கடி செக் செய்ய அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டுவருகிறது என்று அறியவிரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** மோட்டார்கார் ஓவர் ஸ்பீடிங்கையே தடுப்பதற்கு முடிவதில்லை. நாட்டுப்படகுகளாக இருந்தபோதும் ஓவர் ஸ்பீடிங் இருந்தால் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது. மேலும் என்னென்ன செய்யலாம் என்பதை கனம் அங்கத்தினர் சொன்னால் அதை கவனிக்கலாம்.

**திரு. ஜே. மாதா கவுடர்:** சாதாரணமாக மக்கள் அதிகமாக இருக்கும் இடத்தில் மோட்டார் போட்டை உபயோகப்படுத்த அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** மோட்டார் போட்டுகள் ஓரளவுக்கு இருக்கின்றன. நாட்டுப்படகுகளே கூடாது என்று சொல்வதற்கு இல்லை. அதுவும் அந்த இடத்தில் ஒரு மைல் அகலம் தான் இருக்கும் படகுகள் இக்கரைக்கும் அக்கரைக்கும் போய்க் கொண்டிருக்கிறது.

### சோழமண்டலக் கடலுக்கடியில் ஆராய்ச்சி

*135. **கேள்வி.—திரு. மு. கருணாநிதி:
திரு. கே. ஏ. மதியழகன்:** } கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சதுரங்கப்பட்டினத்திற்கும் நாகப்பட்டினத்திற்கும் இடையே கடலுக்கடியில் சோவியத் குழு ஏதேனும் ஆராய்ச்சியை மேற்கொண்டதா?

(இ) ஆம் எனில் அந்தக் குழு அளித்த பரிந்துரைகள் என்ன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** (அ) & (இ) ஆம். ரஷ்யக் குழுவினர் சோழ மண்டலக் கடற்கரையில் 1964 செப்டம்பர்

[3rd March 1965

தொடக்கத்திலிருந்து அக்டோபர் முடிய கடலுக்கடியில் ஆராய்ச்சி நடத்தினர். இங்கு மீண்டும் மே 1965-லிருந்து இந்த ஆராய்ச்சி துவங்கும். இதுவரை கிடைத்துள்ள ஆராய்ச்சிக் குறிப்புகள் கணிக்கப்பட்டு வருகின்றன.

**திரு. கே. ஏ. மதியழகன்:** இதுவரை நமக்குக் கிடைத்த தகவல் படி மேலோட்டமான சில அம்சங்களைத் தெரிவிப்பார்களா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கடலுக்கு அடியில் இருக்கும் எண்ணெய் வளத்தைப்பற்றிய விவரம் வந்திருக்கிறது. ஆராய்ச்சி இன்னும் முடியவில்லை. ஆதலால் இப்பொழுது ஒன்றும் சொல்வதற்கில்லை.

**திரு. இராம. அரங்கண்ணல்:** சதுரங்கப்பட்டினத்திற்கும் நாகப்பட்டினத்திற்கும் இடையே என்று சொன்னால், அந்த இடையிலுள்ள எல்லா இடங்களிலும் எண்ணெய் கிடைக்கும் என்று அர்த்தமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** எண்ணெய் எங்கிருக்கிறது என்று தேடிக்கொண்டிருக்கிறோம். இன்னும் ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** இதுவரை நடந்த பரிசீலனையில் இருந்து நம்பிக்கை ஊட்டக்கூடிய வகையில் ஏதேனும் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** பரிசீலனை என்று சொன்னால் பல பரிசிலனைகள் நடந்திருக்கின்றன. அதனால்தான் கடலுக்கு அடியில் இருக்கின்ற பொருள்களைப்பற்றி இன்னும் சரியான முடிவுள் வரவில்லை. திட்டச்சேரி, காரைக்கால் பகுதிகளில் எண்ணெய்வளம் இருக்கிறதென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அது எவ்வளவு இருக்கும் அதன் மதிப்பு என்ன என்பதைக் கணக்கிடவில்லை. எண்ணெய் வளம் இருக்கிறதென்று புள்ளிகூட காட்டப்பட்டிருக்கிறது.

**திரு. இராம. அரங்கண்ணல்:** ஆராய்ச்சி செய்கிற சோவியத் குழுவோடு நமது அரசாங்க சம்பந்தமான நிபுணர்கள் யாராவது இருக்கிறார்களா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கடலுக்கு அடியில் நடக்கிற ஆராய்ச்சியில் நம் நிபுணர்கள் இல்லை. ஆனால் தரைக்கு அடியில் நடக்கிற ஆராய்ச்சியில் நம் அரசாங்க ஜியாலஜிஸ்ட்டுகளும் அடிக்கடி வேண்டிய உதவி செய்து வருகிறார்கள்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கச்சா எண்ணெய்ப் பொருள்கள்கூட எடுக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். லேபாரடரி பரிசீலனை செய்யப்பட்டதா? அதில் என்னென்ன பொருள்கள் எடுக்க முடியும் என்று முடிவு செய்யப்பட்டது.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** முதலில் அங்கே 'கூழ்' போன்ற ஒரு 'ஸப்ஸ்டென்ஸ்' கிடைக்கிறது. அதைப் பரிசீலனை செய்து அதிலிருந்து எண்ணெய் கிடைக்கிறதா என்று ஆராய்ச்சி செய்யவேண்டும். முதலில் செய்த ஆராய்ச்சியில் எண்ணெய்



3rd March 1965]

இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டது. எண்ணெய் இருந்தால் ரிஃபைனிங் செய்ய வேண்டும் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. இதற்கு புதிய பரிசிலனை தேவையில்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா:** பட்டுக்கோட்டையில் நடந்த ஆராய்ச்சி எந்த நிலையில் உள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** பட்டுக்கோட்டையில் 5000, 6000 அடி சென்றிருக்கிறது. எண்ணெய் இருக்கலாம் என்ற நம்பிக்கை வந்திருக்கிறது. ஆனால் திட்டச்சேரியில் கிடைத்ததைப் போன்ற ஸப்ஸ்டென்ஸ் கிடைக்கவில்லை.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** இந்த ஆராய்ச்சி மத்திய அரசாங்கத்தின் மேற்பார்வையில் நடக்கிறதா அல்லது மாநில அரசாங்கத்தின் மேற்பார்வையில் நடைபெறுகிறதா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இது மத்திய அரசாங்கத்தின் ஆராய்ச்சி.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** தரை மட்டத்தில் நடைபெறும் ஆராய்ச்சி நம்முடைய ராஜ்யத்தில் எந்தெந்த இடங்களில் நடைபெறுகிறது என்று அறியலாமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** பட்டுக்கோட்டை, பரவக்கோட்டை, திட்டுச்சேரி பகுதிகளில் நடந்துகொண்டு இருக்கிறது.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை:** திட்டச்சேரியிலும், அதன் பக்கத்திலுள்ள கிராமங்களிலும் அமைச்சர் தெரிவித்தபடி எண்ணெய் எடுத்து இருக்கிறார்கள். அதற்கு மேல் பகுதியில் எந்தெந்த இடங்களில் எண்ணெய் எடுக்க உத்தேசம்?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இதுபற்றி மத்திய அரசாங்கம் விரிவாக ஆராய்ச்சி நடத்தவேண்டும். ஆராய்ச்சி என்றால் 'டெக்னிகல் எக்ஸாமினேஷன்' என்று அர்த்தம். அங்கே 'எக்ஸ்ப்ளோரேஷன்' நடத்த வேண்டுமென்று மத்திய சர்க்கார் முடிவு எடுத்து இருக்கிறார்கள்.

*Lumpsum loans to Goldsmiths*

* 136 Q.—SRI T. P. ALAGAMUTHU : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to grant loans to the goldsmiths in lumpsum instead of granting in piecemeal; and

(b) if so, the details thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No, Sir

(b) Does not arise.

**திரு. து. ப. அழகமுத்து:** தலைவர் அவர்களே, இந்த பொற்கொல்லர்களுக்குத் தரப்படும் கடன் பகுதி, பகுதியாகப் பிரித்துத் தரப்படுகிறது. முதல் பகுதி வாங்கி அவர்கள் அதைக் கொண்டு தொழில் ஆரம்பித்து, மறு பகுதி வாங்குவதற்கு இடையே கால

தாமதம் ஏற்படுகிறது. அவர்கள் அலைந்து பணத்தை வீணாக செலவழிக்க வேண்டியிருக்கிறது. இதனால் ஒரு தொழிலை உருப்படியாக செய்ய முடியவில்லை. ஆகவே தரப்படுகின்ற கடனை மொத்தமாக கொடுத்தால் தொழில் செய்வதற்கு வசதியாக இருக்கும். அதற்கான ஏற்பாட்டை சர்க்கார் செய்யுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** முதலில் கடன் எவ்வளவு தேவைப்படுகிறது என்று கணக்கெடுக்கிறார்கள். உடனடியாக எவ்வளவு கொடுத்தால் ஒரு தொழிலை ஆரம்பிக்க முடியும என்று கணக்குப் பார்த்து முதல் 'இன்ஸ்டால்மென்ட்' கொடுக்கிறார்கள். எல்லாப் பணத்தையும் ஒரேயடியாகக் கொடுத்துவிட்டால் வேறு வகைகளில் செலவழித்துவிடுவார்கள். தொழில் ஆரம்பித்தார்களா என்று பார்க்க முடிவதில்லை. அதனால்தான் பல இன்ஸ்ட்டால்மென்டில் கொடுக்கப்படுகின்றது.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கடன் பணத்தை 'கொஞ்சங் கொஞ்சமாக கொடுப்பதால் ஏற்படும் கஷ்டம் ஒருபுறம் இருக்க, தவணைகளைப் பெறுவதிலே 'அஸிஸ்டெண்ட் டைரக்டர்' பரிசீலனை செய்யவேண்டுமென்று இருப்பதால், போதுமான 'அஸிஸ்டெண்ட் டைரக்டர்கள்' இல்லாததால் கால தாமதம் ஏற்படுகிறது, ஆகவே விசேஷ அஸிஸ்டெண்ட் டைரக்டர் போட்டாவது துரிதமாய் பரிசீலனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கால தாமதம் ஆகக்கூடாது, இந்த வேலைக்கு 'பிரயாரிடி' கொடுக்கவேண்டுமென்று சர்க்கார் உத்திரவு பிறப்பித்து இருக்கிறது. பரிசீலனையைப் பார்த்தால் கூட அவ்வளவு காலதாமதம் ஆகவில்லை என்பது தெரியும். 26,000 அப்ளிகேஷன்கள் வந்தன. 13,468 அப்ளிகேஷன்களுக்கு கொடுத்து ஆகிவிட்டது. 6,400 அப்ளிகேஷன்கள் ரிஜெக்ட் ஆகியிருக்கின்றன, அவர்களுக்கு கொடுப்பதற்கு உரிமையில்லை, 'ரைட்' இல்லை என்ற காரணத்தால். 6,100 அப்ளிகேஷன்கள் இன்னும் பரிசீலனையில் இருக்கின்றன. ஆக, கால தாமதம் அதிகமாய் ஆகிவிட்டது என்று சொல்வதற்கில்லை. தனி உத்திரவு பிறப்பித்து வேகமாக பட்டுவாடா செய்யவேண்டுமென்று போட்டு இருக்கிறோம்.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** தலைவர் அவர்களே, பொற்கொல்லர்களுக்கு கொடுக்கும் கடன் வசதி தொகையில் ஏற்படும் கால தாமதத்தை போக்குவதற்கு ஓரளவு நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். ஆனால் கோயம்புத்தூர் போன்ற தொழில் நிறைந்த மாவட்டங்களிலே மற்ற தொழில்களுக்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? இதுமாதிரி நடக்கும்போது மார்ச் 31-ம் தேதி வந்த உடனே ஏற்கெனவே நடந்து கொண்டிருந்த தொழில் புகுதிகளுக்கு செய்கின்ற வேலைகளுக்கு குந்தகம் ஏற்பட்டு அந்தப் பகுதியிலே 'லாப்ஸை' தடுக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்த விதமான தகவல் சர்க்காரிடம் இல்லை. எழுதி அனுப்பினால் பரிசீலிக்கப்படும்.



**திரு. எம். எஸ். செல்வராஜன் :** இதுவரை இந்த ராஜ்யம் முழுவதிலுமுள்ள பொற்கொல்லர்களுக்கு வழங்கப்பட்ட தொகை எவ்வளவு என்று கூறமுடியுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ரூ. 1,41,42,000 சில்லரை 'சாங்ஷன்' செய்து இருக்கிறோம். ரூ. 1,04,62,000 சில்லரை பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. மு. சண்முகம்:** அமுலாக்கப்பட்டிருக்கும் தங்கக் கட்டுப்பாட்டினால் இதுவரையில் பொதுமக்கள் கலாசாரத்துறையிலும், பொருளாதாரத் துறையிலும் எந்த அளவுக்கு பயன்பெற்றிருக்கிறார்கள் என்று அமைச்சர் விளக்குவாரா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்தத் தகவல் சர்க்காரிடம் இல்லை.

**திரு. \செ. மாதவன் :** அமைச்சர் அவர்கள் காலதாமதம் இல்லை என்று சொன்னார்கள். புதிய சர்க்குலர் ஒன்று பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. ஏற்கெனவே பொற்கொல்லர்கள் ரெவின்யூ இன்ஸ்பெக்டரிடமோ, தாசில்தாரிடமோ கையெழுத்து வாங்கி, அஸிஸ்டெண்ட் டைரக்டர் ஆஃப் இண்டஸ்ட்ஸுக்கு நேரிடையாக பரிசீலனைக்கு கொடுப்பார்கள். இப்போது அஸிஸ்டெண்ட் டைரக்டர் பார்த்தவுடன் மனுவை கலெக்டருக்கு அனுப்புகிறார்கள். அதை ருட்டீன் விவகாரப்படி கீழ் அதிகாரிகள் பரிசீலனைக்கு அனுப்பி விடுகிறார்கள். மீண்டும் அஸிஸ்டெண்ட் டைரக்டர் பரிசீலனைக்கு போகிறது. அவர்கள் பரிசீலனை செய்கிறார்கள். இந்தவித இரட்டை முறை புகுத்தப்பட்டிருக்கிறது. இதனால் காலதாமதம் ஏற்படுகிறது என்பதை சர்க்கார் பரிசீலிக்குமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஏதாவது ஒரு 'இன்ஸ்டென்ஸ்' கனம் அங்கத்தினர் சொன்ன முறையில் ஏற்பட்டது என்று எழுதி அனுப்பினால் சர்க்கார் பரிசீலனை செய்யும்.

**திரு. து. ப. அழகமுத்து :** தலைவர் அவர்களே, இந்தப் பொற்கொல்லர்களுக்கு கடன் உதவி செய்வதில் 6,000 விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்பட்டன என்று அமைச்சர் கூறினார். தொழிலை ஆரம்பித்து நடத்துகிறார்களா என்பதை பரிசீலனை செய்வதற்கு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ஸ்தலத்திற்குப் போகாமலே தொழில் செய்யவில்லை என எழுதிவைத்துவிடுகிறார்கள் என்று அரசாங்கத்திற்கு புகார்கள் வந்திருக்கின்றனவா? இந்த முறையைத் தடுக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** பணம் கிடைக்காதவர்கள் சொல்லும் புகார்கள் எல்லாம் உண்மை என்று எடுத்துக்கொள்வது கஷ்டம். ஏன் பணம் கொடுக்கவில்லை என்றால் இவர்கள் பொற்கொல்லர்கள் அல்லவென்று விசாரணையில் தெரிந்தது. அல்லது பொற்கொல்லர்களுக்கு வேறு சொத்து இருக்குமானால் கொடுக்க தேவையில்லை என்று விதி இருக்கிறது. இந்தக் காரணங்களினால் அவர்களுடைய மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டு இருக்கின்றன.

[3rd March 1965

**திரு. நா. பா. செங்கோட்டுவேலு** : இந்தக் கடன் தொகையை அதிகரிக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : இப்போது ரூ. 1,41,00,000 ஸாங்ஷன் செய்து இருக்கிறோம். மேற்கொண்டு அவசியமானால் மத்திய அரசாங்கத்திடம் கேட்டு வாங்குவதற்கு தயாராக இருக்கிறோம்.

**திரு. டி. கார்ச்சா கவுடர்** : நமது மாநிலத்திலுள்ள பொற்கொல்லர்கள் குடும்பங்கள் எத்தனை என்று கணக்கு எடுக்கப்பட்டு உள்ளதா? விவசாயத்தில் ஆர்வம் உள்ள பொற்கொல்லர்களுக்கு தரிசு நிலங்களை பட்டா செய்து கொடுக்க சர்க்கார் ஆலோசிக்குமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : பொற்கொல்லர்கள் ராஜ்யத்தில் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்ற கணக்கு இல்லை. ஸென்ஸஸிலே கூட பொற்கொல்லர்கள் என்ற ஒரு வகுப்பு இருக்கிறது. அந்த வகுப்பிலே எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்று சொல்ல முடியும். எத்தனை பேர்கள் பொற்கொல்லர்கள் வேலை செய்கிறார்கள் ' என்று சொல்வதற்கு / இயலாது. நிலம் அஸைன்மென்ட் சம்பந்தமாக நமக்குத் தெரியும், நம் ராஜ்யத்தில் ஜனத் தொகை அதிகம், நிலம் குறைவு, என்று விதிகள் போட்டாலும் நிலம் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. நிலம் இல்லாத பொற்கொல்லர்கள் மனுச்செய்தால் காலி நிலம் இருக்குமானால் கொடுக்கலாம் என்று இருக்கிறது. ஆனால் காலி நிலம் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது.

**திரு. க. ர. நல்லசிவம்** : பொற்கொல்லர்களுக்குக் கொடுக்கிற கடன் தொகையை 'லம்ப்சம்' ஆகக் கொடுக்காமல் பிரித்துப் பிரித்துக் கொடுக்கிற காரணத்தால் அவர்கள் அந்தத் தொகையை அன்றாடச் செலவுக்குப் பயன்படுத்திக் கொள்ளவேண்டிய அளவுக்கு நிலைமை ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, கொடுக்கிற பணத்தை மொத்தமாக ஒரே தடவையில் கொடுக்க வேண்டுமென்று ஏதேனும் கோரிக்கை வந்திருக்கிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : அந்த விதமான கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் ஏதாவது ஒரு தொழிலை அவர்கள் முதலில் கொடுத்த பணத்தை வைத்து ஆரம்பிப்பார்களானால் மீதித் தொகையையும் கொடுக்கலாம். கொடுக்கிற தொகை முழுவதையும் ஒரே சமயத்தில் கொடுத்து விட்டால் அந்தத் தொகை பூராவும் மற்ற வழிகளில் வீணாகிவிடும் என்ற பயம் இருக்கிறது.

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர்**: அவர்களுக்கு நிலம் கொடுப்பதைப் பொறுத்து, நிலம் அதிகமாக இல்லையென்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இருக்கக்கூடிய நிலத்தையாவது கொடுப்பதில் பொற்கொல்லர்களுக்கு 'ப்ரையாரிடி' கொடுக்கப்படுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : அந்த மாதிரி 'ப்ரையாரிடி' கொடுக்கப்பட்டிருக்கிறது.



3rd March 1965]

**திரு. மீ. கலியாணசுந்தரம்** : அவர்களுக்கு நிவாரணம் கொடுப்பது ஒருபுறம் இருக்க, பழைய நகைகளை அழித்து மறுபடியும் செய்யும்போது 14 காரட்டுக்கு மேல் செய்யக்கூடாது என்ற விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றனவா ? அப்படியானால் அதன் விவரம் என்ன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : அந்த விதிகள் மத்திய சர்க்காரால் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. அதைப்பற்றி தகவல் என்னிடத்தில் இல்லை.

**திரு. முனு. ஆதி** : பொற்கொல்லர்கள் ஏற்கனவே அரசினர் நிலத்தில் குடியிருப்பவர்களாக இருந்தால் அவர்களுக்காவது அந்த நிலம் பட்டா செய்து கொடுக்கப்படுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : கலெக்டரிடத்தில் மனுச் செய்து கொள்ள வேண்டும்.

**திரு. எம். வி. கரிவேங்கடம்**: பொற்கொல்லர்கள் கடனுக்காகப் போடுகிற விண்ணப்பத்தை உடனுக்குடன் கவனிக்காமல் காலதாமதம் ஏற்படுகிற காரணத்தால், ஒரு விண்ணப்பத்தை இரண்டு அல்லது மூன்று மாதத்திற்குள்ளாக டிஸ்போஸ் செய்து விட வேண்டுமென்று சர்க்கார் உத்தரவிடுவார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்**: அந்த விதமாகப் போடுவதில் கஷ்டம் இல்லை. ஆனால் டிஸ்போஸ் செய்வதில் அதிகமாக ரிஜெக்ட் செய்கிறார்கள் என்ற புகார் அதிகமாகிவிடும்.

**திரு. சா. கணேசன்** : பொற்கொல்லர்கள் தங்களிடம் கொடுக்கப்படுகிற நகைகளை அப்படியே அழித்துச் செய்யலாம் என்ற விதி முன்பு அமலில் இருந்தது. இப்போது அதற்கு வேறு அல்லது மாற்று விதி வந்திருக்கிறது. எதுவாக இருந்தாலும் 14 காரட்டில்தான் செய்ய வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அதனாலே பொற்கொல்லர்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள்; வேலை வாய்ப்பு இல்லாமல் அல்லற்படுகிறார்கள் என்பதை அரசாங்கம் தெரிந்து மத்திய சர்க்காரோடு கலந்து பேசி இதற்கு ஏதாவது விமோசனம் கிடைக்க வழி காண்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : அந்த மாதிரி மகஜர் ஏதாவது எழுதிக் கொடுத்தால் சர்க்கார் பரிசீலிக்கும்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்** : இது பற்றிய விதிகளை மத்திய சர்க்கார் பிறப்பிக்கிறார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் அவர்கள் விதிகளைப் பிறப்பித்தாலும் கூட அதை அமல் நடத்தும் பொறுப்பு ராஜ்ய சர்க்காருக்குத்தான் என்பதால் அமைச்சர் அவர்கள் அந்த விவரங்களை அறிவிப்பார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : அதற்காக மத்திய சர்க்கார் தனி இன்ஸ்பெக்டர்கள் வைத்திருக்கிறார்கள். எக்ஸைஸ் டிப்பார்ட்மெண்ட் வைத்திருக்கிறார்கள்.

[3rd March 1965

*திரு. எம். எஸ். செல்வராஜன்* : இந்த ராஜ்யத்தின் பொற்கொல்லர்களுடைய புனர் வாழ்விற்காக மத்திய அரசாங்க உதவி உண்டா? உதவியின் விவரம் என்ன?

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்* : இப்போது நான் சாங்ஷன் செய்யப்பட்டதாகச் சொன்ன ஒரு கோடி 42 லட்சம் ரூபாய் மத்திய சர்க்கார் உதவிதான்.

*திரு. மீ. கலியாணசுந்தரம்* : மத்திய சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் பார்ப்பது அந்த விதிகள் மீறப்படாமல் இருக்கின்றதா என்ற அளவிற்குத்தான். பொற்கொல்லர்களுக்கு லைசென்ஸ் வழங்கும் பொறுப்பு ராஜ்ய சர்க்கார் நிர்வாகத்தைப் பொறுத்தது. லைசென்ஸ் வழங்கப்படுவதில் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்* : கனம் அங்கத்தினர் கேட்ட கேள்வி 'என்ஃபோர்ஸ்மெண்ட்' பற்றி. அது மத்திய சர்க்காருடைய பொறுப்பு. லைசென்ஸ் சீக்கிரமாகக் கொடுக்கப்படவில்லை என்ற புகார் இதுவரை இந்தச் சர்க்காருக்கு வரவில்லை. ஒரு ரூபாய் கட்டினால் லைசென்ஸ் கொடுத்து விடுகிறோம். அவ்வாறு லைசென்ஸ் கோருகிறவர்கள் வேறு உதவிகள், உதவிப் பணம் முதலியவற்றை வாங்காமல் இருந்தால் உடனடியாக அவர்களுக்கு லைசென்ஸ் கொடுத்து விடுகிறோம்.

*திரு. டி. கார்ச்சா கவுடர்* : தங்கக் கட்டுப்பாடுச் சட்டம் வந்தது பெண்கள் தங்களுடைய நகை ஆசையைக் குறைத்துக் கொள்ளத்தான். நம்முடைய மாகாணத்தில் பெண்களுக்கு அந்த ஆசை ஓரளவாவது குறைந்திருக்கிறதா?

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்* : இந்த விஷயங்களில் எல்லாம் நான் 'எக்ஸ்பர்ட்' இல்லை.

*

*Irrigational tank in Pallipat*

* 137 *Q*.—SRI C. CHIRANJEEVULU NAIDU : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal for the formation of an irrigation tank near Mahankalipuram in Pallipat sub-taluk in Chingleput district;

(*b*) if so, the estimated cost thereof; and

(*c*) the extent of land likely to be benefited thereby?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes.

(*b*) Rupees Two lakhs (Rs. 2,00,000).

(*c*) Two hundred and six acres (206).



3rd March 1965]

*வெடிவிபத்து தடுப்பிற்கான ஆலோசனைக் குழு*

* 138 *கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி* : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வெடி மருந்து கிடங்குகளில் ஏற்படும் விபத்துக்களைத் தடுக்க ஆலோசனை கூறும் கமிட்டி அமைக்க உத்தேசமுண்டா?

THE HON. SRI P. KAKKAN : No.

*திரு. கரு. சீமைச்சாமி* : வெடி மருந்துக் கிடங்குகளில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதைத் தடுக்க அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

*கனம் திரு. பூ. கக்கன்* : சென்னை நகரில் ஒரு விபத்து ஏற்பட்டது. அது சம்பந்தமாக ஆலோசனை செய்யப்பட்டது. மதிப்புக்குரிய சுகாதார மந்திரி அவர்கள் தலைமையில் பரிசீலனை செய்யப்பட்டது. ஆனால் அது சம்பந்தப்பட்ட சட்டத்தை மத்திய சர்க்கார்தான் போட முடியுமாதலால் பரிசீலனையின் முடிவில் கூறப்பட்ட ஆலோசனைகளை எல்லாம் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

*திரு. இராம. அரங்கண்ணல்* : வடசென்னையில் ஏற்பட்ட அந்த விபத்தில் பல பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் நஷ்ட ஈட்டுத் தொகை வேண்டுமென்று கோரி முயற்சித்திருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்துள்ளதா? அவர்களுக்கு ஏதாவது நஷ்ட ஈட்டுத் தொகை வழங்க உத்தரவிடப்படுமா?

*கனம் திரு. பூ. கக்கன்* : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

*State representation regarding Repatriates from Ceylon*

* 139 *Q*.—SRI T. P. ALAGAMUTHU :
SRI K. A. MATHIALAGAN :
SRI M. V. KARIVENGADAM :
SRI RAMA. ARANGANNAL :
SRI M. KALYANASUNDRAM :
Will the Hon. the Minister for food be pleased to state—

(*a*) whether any representative of this Government was invited to be present during the negotiations between the Prime Minister of India and the Prime Minister of Ceylon regarding repatriation of persons of Indian origin from Ceylon; and

(*b*) if so, the representations, if any, made by this Government?

THE HON. SRI V. RAMAIAH : There was no official correspondence between this Government and the Government of India on the subject matter of the talks between the Prime Ministers of India and Ceylon. The Chief Minister and Minister for Food of this State, however, participated in the discussion.

[3rd March 1965

**திரு. து. ப. அழகமுத்து :** தலைவர் அவர்களே, இலங்கை இந்தியர் பிரச்சினை பற்றிய பேச்சு வார்த்தையில் நம்முடைய மாநில அமைச்சர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே என்ன கருத்துக்கள் என்ன அபிப்பிராயங்கள் கூறப்பட்டன என்பதைக் கூறுவார்களா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இந்தக் கேள்விக்குப் பார்லிமெண்டில் பதில் சொல்லவேண்டும். இருந்தாலும் இந்தப் பிரச்னை சம்பந்தப்பட்ட மட்டில் அதிக அக்கறை காட்ட வேண்டி இருந்ததால் இந்தப் பேச்சு வார்த்தை நடப்பதற்கு முன்னாலேயே நம்முடைய முதலமைச்சர் பிரதம மந்திரியவர்களிடம் இதனால் நம்முடைய ராஜ்யத்தில் ஏற்படக்கூடிய நிலைமைகள், கஷ்டங்கள் ஆகியவை பற்றிக் கூறினார்கள். நமது முதலமைச்சர் அவர்கள் அதைப் பற்றியெல்லாம் பிரதம மந்திரி அவர்களுக்கு விளக்கமாக எடுத்துக் கூறினார்கள். ஆனால் இரண்டு பிரதம மந்திரிகளும் பேச்சு வார்த்தை நடத்தும் சமயத்தில் நாம் ஒன்றும் சொல்லவில்லை.

(அமைச்சர் அவர்கள் பதில் சரியாகக் கேட்கவில்லை என்று சில அங்கத்தினர்கள் கூறியதன் பேரில் மறுபடியும் பதில் கூறினார்.)

**கனம் திரு. வெ. ராமைய்யா :** நமது ராஜ்யத்தின் நிலைமையை நமது நாட்டு பிரதம மந்திரிக்குச் சொல்லவேண்டுமென்ற முறையில் நமது ராஜ்ய முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சர்கள் மகாநாட்டுக்குப் போகக்கூடிய சந்தர்ப்பத்தில் ஒரு நாள் முன் கூட்டியே போய் அந்தப் பிரச்சினையைப் பொறுத்து நமது ராஜ்யத்தில் ஏற்படக்கூடிய பல்வேறு கஷ்டங்களைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். பிரதம மந்திரியவர்கள் நமது கஷ்டங்களை உணர்ந்து 'இந்தப் பிரச்சினையை ராஜ்யப் பிரச்சினையாக விட்டு விடமாட்டேன்' என்று வாக்குறுதி கொடுத்தார்கள். இதனால் ஏற்படக்கூடிய கஷ்டங்களை தேசீயப் பிரச்சினையாக எடுத்துக் கொள்ளத் தயாராக இருப்பதாகக் கூறினார்கள். ஆனால் சிலோன்-இந்தியப் பிரதமர்கள் பேசக்கூடிய அந்த நேரத்தில் இதுபோன்ற சர்ச்சைகள் எழ இடமில்லை.

[illegible]-05 a.m. **திரு. கே. ஏ. மதியழகன் :** இலங்கைத் தமிழர்கள் சம்பந்தமாக பண்டாரநாயகா—சாஸ்திரி அவர்கள் ஒப்பந்தத்திற்கு முழுவதுமே இந்திய சர்க்கார் சார்பில் கையெழுத்திட்டிருந்தாலும் அந்த முடிவுகள் முழுவதற்கும் காரணம் நம் மாநிலத்தின் கனம் முதல் அமைச்சர் அவர்களும், டெல்லியில் இருக்கிற தமிழ் நாடு மந்திரிமார்களும், காங்கிரசின் அகில இந்தியத் தலைவரும்தான் இதை உருவாக்கினார்கள் என்று சாஸ்திரி அவர்கள் திட்டவட்டமாக காங்கிரஸ் மகாநாட்டிலும், மற்ற இடங்களிலும் வலியுறுத்தியிருக்கிறார்கள் . . .

MR. SPEAKER : May I know what the question of the hon. Member is?



3rd March 1965]

**திரு. கே. ஏ. மதியழகன் :** இலங்கையில் உள்ள தமிழர்கள் நடைமுறைப்படி இலங்கை வாழ் குடிமக்களாக இல்லாவிட்டாலும் சர்வ தேச சட்டப்படி இலங்கையின் குடிமக்கள். Though they are not *de facto* citizens, they are *de jure* citizens according to cannons of International Law அப்படியிருக்கும்போது என்ன நியாயத்தின் அடிப்படையில் நம் முதல் அமைச்சர் அவர்கள் அவர்களை அங்கிருந்து இங்கு பரிவர்த்தனை செய்யலாம் என்பதற்கு ஒப்புதல் அளித்தார் என்று தெரிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பிரதம மந்திரி அவர்கள் எங்களை கலந்து ஆலோசித்தேன் என்று சொன்னார்களே தவிர நாங்கள்தான் இந்தத் திட்டத்தை உருவாக்கினோம் என்று அவர்கள் ஒருக்காலும் சொல்லவில்லை. அவ்வாறு அவர்கள் சொன்னார்கள் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது முற்றிலும் தவறு.

**திரு. கே. ஏ. மதியழகன் :** திரு. ஆர் வி. சுவாமிநாதன் அவர்கள் காங்கிரஸ் கமிட்டியில் துர்க்காபூரில் இப்பிரச்னையை எழுப்பிய போது சாஸ்திரி அவர்கள் இந்த விவரத்தை மிகத் தெளிவாக கூறியிருக்கிறார்கள். 'நம் முதலமைச்சர் அவர்கள்தான் முடிவு செய்தார்கள், அந்த அடிப்படையில்தான் இது உருவாக்கப்பட்டது' என்று சொன்னதை இந்த சபையில் நிரூபிக்க முடியும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** திரு. சுவாமிநாதன் அவர்கள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் என்ன பேசினார்கள் என்றெல்லாம் எனக்குத் தெரியாது.

MR. SPEAKER : That cannot be the basis of any question.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** காங்கிரஸ் கட்சிக்குள் எது வேண்டுமானாலும் பேசிக்கொள்ளட்டும், சொல்லிக் கொள்ளட்டும்; அதுகுறித்து இந்த சபையில் கவலைப்படவில்லை. முதல் அமைச்சர் அவர்கள் பிரதம மந்திரி அவர்கள் முதல் அமைச்சர் அவர்களைக் கலந்துதான் இது செய்யப்பட்டது என்று சொன்னார்கள். முடிவு எடுத்தது முதல் அமைச்சர் அவர்கள் என்று கூறவில்லை என்று சொன்னார்கள். ஒப்புக்கொள்கிறேன். எடுக்கப்பட்ட முடிவுகளுக்கும் நம் முதல் அமைச்சர் அவர்கள் கூறிய யோசனைகளுக்கும் வேறுபாடு உண்டா? அப்படியானால் என்ன வேறுபாடு என்று அறியலாமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** விவாதிக்கப்பட்டது. பல பிரச்னைகளைப்பற்றி பிரதம மந்திரி அவர்களும் நாங்களும் விவாதித்தோம். கடைசியில் ஒரு முடிவு ஏற்பட்டது. அந்த முடிவு நானும் பாராட்டக் கூடியதாகத்தான் இருந்தது.

**திரு. இராம. அரங்கண்ணல் :** அந்த முடிவு நானும் பாராட்டக் கூடியதாக இருந்தது என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பிரதம மந்திரியோடு நடந்த பேச்சுவார்த்தைகளில்

இலங்கையிலிருந்து வெளியேறி வருகிற தமிழர்களை யார் ஏற்றுக் கொள்வது என்பது பற்றித்தான் விவாதித்தோம் என்று சொன்னார்கள். நம் அரசாங்கம் அந்தக் கொள்கையை ஒப்புக்கொண்டிருக்கிறது. இலங்கையில் இருந்து வருகிற தமிழர்களை இங்கு வாழ வைக்க என்னென்ன செய்யலாம் என்பதைப் பற்றி பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்களா? அப்படியானால் அந்த விவரங்கள் யாவை?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இந்தப் பிரச்னையைப் பற்றி நான் முன்பே இந்த மன்றத்தில் விளக்கியிருக்கிறேன். அங்குள்ள "ஸ்டேட்லெஸ்" என்று கூறப்படுகிற பிரஜைகளைப் பொறுத்தவரை இங்குமின்றி, அங்குமின்றி ஒரு பிரஜா உரிமை கூட இல்லாத நிலையில் இருக்கிறார்கள். அவர்களை அவ்வாறு நீண்ட நாட்களாக வைத்துக்கொண்டிருப்பது சரியல்ல. ஏராளமானவர்கள் அவர்களாகவே இங்கு வருவதற்கு பிரியப்படுகிறார்கள். அவர்கள் ஒரே மட்டாக வந்தால் தமிழ் நாட்டில் அவர்களை ஒரேமட்டாக ஏற்றுக் கொள்வது கடினம். அது ஒன்று. செய்யப்பட்டிருக்கிற ஏற்பாடு வருடந்தோறும் இவ்வளவு பேர்கள் என்று வந்தால் மதிப்பிற்குரிய சக அமைச்சர் அவர்கள் கூறியபடி, இதை ஒரு தேசிய பிரச்னையாகக் கருத வேண்டும் என்பதை பிரதம மந்திரி அவர்களும் ஏற்றுக் கொண்டார்கள். மற்ற மாநில முதல் அமைச்சர்களோடு பிரதம மந்திரி அவர்கள் எங்கள் முன்னிலையில் இதுபற்றி பேசினார்கள். இவர்கள் குறித்து வேறு பல மாநிலங்களும் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறினார்கள். இவர்களுக்கு புனர்வாழ்வு ஏற்படுத்துகிற பொறுப்பு அதற்கு வேண்டிய செலவு அதையும் மத்திய அரசாங்கம் தங்கள் பொறுப்பாக ஏற்க வேண்டும் என்பதும் இதில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** இலங்கை வாழ் தமிழர்களைப் பொறுத்து இந்த மாநில அரசின் சார்பாக என்னென்ன கோரிக்கைகள் எடுத்து வைக்கப்பட்டன? அந்தக் கோரிக்கைகள் எந்த அளவு ஏற்கப்பட்டன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அந்த நிலை இன்னும் மாறவில்லை. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை மத்திய சர்க்கார் என்னென்ன செய்ய வேண்டும். என்பதையெல்லாம் ஆராய்ந்து தெரிவிக்க வேண்டும். இது தமிழ் நாடு அரசாங்கத்திற்கும் மத்திய அரசாங்கத்திற்கும் இடையே அப்போதைக்கப்போது விவாதத்தில் இருக்கிறது.

**SRI K. A. MATHIALAGAN:** Sir, may I know why the Hon. the Chief Minister wants to withhold the facts which he had discussed with the Prime Minister and whether this Hosue is not entitled to know what representations have been made by the Chief Minister to the Prime Minister?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதில் "வித்ஹோல்ட்". ஒன்றுமில்லை. பிரதமரும் நானும் பேசினோம். பேசியதின் சாராம்சத்தை இங்கு சொன்னேன் அவ்வளவுதான்.



**திரு. சா. கணேசன்:** இலங்கையில் இருக்கிற தமிழர்கள் இந்திய பிரஜைகள் அல்ல, அவர்கள் இலங்கைப் பிரஜைகளும் அல்ல, எனவே அவர்கள் சார்பாக இந்திய சர்க்கார் ஒப்பந்தம் செய்து கொள்வது முறையல்ல என்று பல அறிஞர்கள் சொல்லி வருகிறார்கள். இந்த நிலையில் அவர்கள் இந்திய பிரஜைகள் அல்ல என்று நாமும் மறுத்திருக்கிறோம். அப்படிப்பட்டவர்களை இங்கே வரவழைத்துக் கொள்கிறோம் என்று டெல்லி சர்க்கார் சொல்ல அதனால் பாதிக்கப்படுகிற தமிழர்களின் ஆட்சியான நம் மாநில சர்க்கார் அதை ஒப்புக் கொள்ளலாமா? அதை ஒப்புக் கொண்டதா, மறுத்ததா? மறுக்காவிட்டால் ஏன் மறுக்கவில்லை? என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நம் பிரஜைகள் அல்ல என்று சொன்னதை சொன்னேன், இலங்கை சர்க்கார் அவர்கள் அவர்கள் பிரஜைகள் அல்ல என்று சொன்னார்கள். திரிசங்கு சொர்க்கமாக நீண்ட காலமாக இப்படி இருப்பது அவர்களுக்கு நல்லது அல்ல என்று உணர்ந்துதான் இதில் தீர்வு காணவேண்டுமென்று ஒப்புக் கொண்டோம்.

**திரு. சா. கணேசன்:** அப்படியானால் சம்பந்தப்பட்டவர்களின் சம்மதத்தை பெற்றார்களா? திரிசங்கு சொர்க்கத்தில் இருக்கக் கூடாது என்று அக்கறை கொள்வது நியாயம். அவர்கள் திரிசங்கு சொர்க்கத்தில் இருப்பதை விட்டு விட்டு இங்கு வந்து அல்லல் படுவதையோ அல்லது சேமப்படுவதையோ அவர்கள் விரும்பினார்களா? அவர்கள் விருப்பம் கலக்கப்பட்டதா? கலக்கப்படவில்லையானால் கலக்கப்படாமல் இருந்தது தவறா, இல்லையா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** பொதுவாக அவர்கள் நன்மை பரிபூர்ணமாக கருதப்பட்டுத்தான் இந்த முடிவு ஏற்கப்பட்டது.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** இலங்கை வாழ் தமிழர்கள் என்ன கருதுகிறார்கள்? அவர்கள் விருப்பம் என்ன? என்று அறிவதின் பேரில்தான் இம்மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரையை எடுத்து வைக்க வாய்ப்பு ஏற்படும். அந்த முறையில் அவர்கள் எண்ணங்களை அறிய என்ன முயற்சி எடுக்கப்பட்டது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அந்த விவரங்கள் குறித்து, தனிக்கேள்வி கேட்டால் சொல்லலாம். அவர்கள் நன்மை பாதுகாக்கப்பட வேண்டும் என்று செய்யப்பட்டது. அங்குள்ள சூழ்நிலை என்ன? இலங்கையில் உள்ளவர்கள் இவர்களுக்கு விரோதமாக இருந்தார்கள். முதலில் அவர்கள் விரோதம்தான் இவர்களை பாதித்தது. அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தின்பேரில்தான், இது குறித்து ஆராய்ந்துதான், அரசாங்கம் இந்த முடிவிற்கு வந்தது.

**திரு. எம். வி. கரிவேங்கடம்:** சாஸ்திரி--பண்டாரநாயகா ஒப்பந்தம் அங்குள்ள தமிழர்களுக்கு திருப்தி அளிக்கவில்லை என்று இலங்கைவாழ் தமிழர்கள் பல தீர்மானங்கள்

[3rd March 1965

நிறைவேற்றி அனுப்பியிருக்கிறார்கள். அவர்களைக் கலந்து அவர்கள் சொல்வதை ஏற்று பின்னால் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தால் இது வந்திருக்காது. ஏன் அவர்களைக் கலக்கவில்லை?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இந்தத் தீர்மானங்கள் யார் போட்டது? எப்படி போட்டிருக்கிறார்கள்? என்பதையெல்லாம் நன்கு ஆராய்ந்துதான் அரசாங்கம் முடிவிற்கு வந்தது.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** ராஜ்ய சபாவில் பேசும்போது திரு. ஸ்வரண் சிங் அவர்கள், நம் மாநில முதல் அமைச்சர் அவர்களும், உணவு அமைச்சர் அவர்களும், இரண்டு பேர்களும் சேர்ந்து தான், ஐந்து லட்சத்திற்கு மேற்பட்ட இலங்கையில் உள்ள இந்தியர்கள் இந்தியா வருவதற்கு சம்மதம் தெரிவித்தார்கள், அதற்குப் பிறகுதான் நாங்கள் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டோம் என்று சொல்லி இருக்கிறார்கள், எங்கள் தலைவர் கேட்ட கேள்விக்கு. அவர்கள் இலங்கை குடி மக்களா அல்லது இந்தியர்களா என்ற பிரச்னை குறித்து இரண்டு நாடுகளும் விவாதித்தன, முடிவை ஒப்புக் கொண்டோம் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் பிரச்னையை ஐக்கியநாட்டு சபைக்கு எடுத்துச் செல்லவேண்டும் என்று ஏன் முதல் அமைச்சர் அவர்கள் பிரதமரை வற்புறுத்தவில்லை? ஐக்கிய நாட்டு சபைக்கு எடுத்துச் சென்று அவர்கள் இலங்கை வாழ் குடிமக்களா இந்தியர்களா என்ற முடிவுக்கு வரலாம். அவர்கள் தமிழர்களாக இருந்தாலும் நீண்ட காலமாக இலங்கையிலே வாழும் குடிமக்கள்தாம் என்பதை ஏன் நம் மாநில முதல் அமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்தினிடம் வற்புறுத்தவில்லை?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அந்த மக்களின் நன்மைக்குரிய வகையில் என்ன செய்யவேண்டும் என்று எல்லாம் ஆராய்ந்துதான் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

**திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து வருகின்ற தமிழர்களை இந்திய அரசாங்கம் அல்லது சென்னை அரசாங்கம் கடத்திக்கொண்டு வரப்போகிறதா? அல்லது இங்கே வரவழைத்து பர்மா அகதிகளைப்போல் பிச்சை எடுக்கும் படியான அளவுக்கு விடப்போகிறார்களா? இதில் அரசாங்கத்தினுடைய உத்தேசம் என்ன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் முன்பே சொன்னேன். இலங்கையிலும் இதைப்பற்றி இரண்டு விதமான கருத்துக்கள் இருக்கலாம். ஆகவே இதில் கடத்திக்கொண்டு வருகின்ற பிரச்னை ஒன்றும் எழவில்லை.

**திரு. சா. கணேசன்:** சைனாவோடு நமக்கிருக்கின்ற அபிப்பிராய பேதம் காரணமாக, அல்லது போர் காரணமாக, அடுத்துள்ள இலங்கையரின் நல்லெண்ணத்தைப் பெறவேண்டும் என்ற நோக்கத்திற்காகவே தமிழர்களைப் பலி கொடுக்கவேண்டிய நிலைமை



3rd March 1965]

ஏற்பட்டது என்று சொல்வதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறதா? அப்படியென்றால் எந்த அளவிற்கு அதில் உண்மையிருக்கிறது என்பதை தெரிவிக்க முடியுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதிலிருந்து பிரதிபலிப்பது என்னவென்றால் சைனாவுக்கு அனுதாபம் தெரிவிக்கக்கூடிய வகையிலும் ஒருசில தமிழர்கள் இருக்கிறார்கள் என்பது தான்.

**திரு. சா. கணேசன்:** No... No... No... ஸார், On a point of personal explanation. இந்தியாவினுடைய பாதுகாப்பிற்காக இலங்கையினுடைய அனுதாபத்தை பெறுவதற்காக, தமிழர்களுக்கு என்ன கஷ்டம் வந்தாலும் பரவாயில்லை என்று விட்டுக்கொடுத்துத்தான் இந்த ஒப்பந்தத்திற்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டதா என்கின்ற கருத்தில்தான் நான் சொன்னேன். அதை மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் நான் கனவில் கூட நினைக்க முடியாத படி தமிழர்களில் ஒருசிலர் சைனாவுக்கு ஆதரவாக இருப்பதாக, நான் சொன்னதை . . . (குறுக்கீடு) . . . (மன்னிக்கவேண்டும் என்னை பேசவிடுங்கள்) "இவ்வாறு சொல்வது சரியல்ல" என்று மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. ர. நல்லசிவம்:** இலங்கை முதல் மந்திரியும், இந்திய பிரதம மந்திரியும் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்குப் பின்னால் அங்கே பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. மேலும் தமிழகத்திலுள்ள மக்களுக்கும் இந்த ஒப்பந்தத்தின் காரணமாக மனக் கசப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதைப்பற்றி புனர் பரிசீலனை செய்கின்ற வகையில் இப்பிரச்சினையைப்பற்றி நமது மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு தெரிவிக்குமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இலங்கையில் இன்னும் தேர்தல் முடியவில்லை, முடிந்த பின்னால் இதைப்பற்றி கேள்விகள் எழலாம்.

**திரு. பி. கே. மூக்கையாத் தேவர்:** இலங்கையிலுள்ள தமிழர்கள் விஷயத்தில் செய்யப்பட்ட முடிவு எங்களை கட்டுப்படுத்தாது என்று இலங்கையிலுள்ள தமிழர்கள் தெரிவித்திருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியானால் அரசாங்கத்தினுடைய கருத்து என்ன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** பல விதமான கருத்துக்களை பலர் சொல்லக்கூடும். இலங்கையில் இருக்கின்ற ஆதி தமிழர்கள் என்பவர்கள் இவர்களுக்கு விரோதமாக இருந்தார்கள். இவர்களுக்கு ஏற்பட்ட தொல்லைகளுக்கு காரணமே இந்த ஆதி தமிழர்கள்தான் என்று சொல்லப்படுகிறது.

**திரு. கரு. சீமைச்சாமி:** இலங்கை இந்தியர்கள் பிரச்னை என்பது தமிழ்நாட்டுப் பிரச்னை. இதன் காரணமாக வெளியேற்றப் படுபவர்கள் தமிழ்நாட்டுக்குத்தான் வந்து சேருவார்கள். ஆகவே இதைப்பற்றி இந்திய பிரதம மந்திரியிடம் பேசுவதற்கு முன்பு நமது முதலமைச்சர் அவர்கள் இங்குள்ள எதிர்க்கட்சி தலைவர்களிடம் கலந்து அவர்களுடைய கருத்துக்களையும் அறிந்து சென்றார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[3rd March 1965

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இந்த விஷயத்தில் தமிழ்நாட்டு அரசாங்கத்திற்கு பொறுப்பு இருக்கிறது. அந்த பொறுப்புணர்ச்சியுடன்தான் நடந்து கொண்டிருக்கிறது.

**திரு. ப. உ. சண்முகம்:** இலங்கை இந்தியர்களின் நிலைமைபற்றி தமிழகத்து அரசாங்கம் இந்திய அரசாங்கத்திடம் கருத்து தெரிவிப்பதற்கு இலங்கை வாழ் தமிழர்களுடைய கருத்து என்ன என்பதைப்பற்றி அறிவதற்கு இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டதா ? அவ்விதம் முயற்சி எடுக்கப்படவில்லையானால் அவ்விதம் முயற்சி எடுக்காமல் அவர்கள் விஷயத்தில் முடிவு செய்தது முறையாகுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இந்த அரசாங்கம் நடந்து கொண்டது முறையற்றது என்று கருதவில்லை.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** நாற்பத்து ஆறு கோடி மக்கள் வாழக்கூடிய இந்த இந்திய தாயகத்திற்கு வரக்கூடிய ஐந்து லட்சம் பேர்கள் பெரும் சுமையாக இருக்க முடியாது. கன்னியாகுமரி முதல் இமயமலை வரையிலும் உள்ள பரந்த பாரத நாடு வாழ்வளிக்கும் என்று கருதுவதுதான், இப்பேர்ப்பட்ட முடிவுக்குக் காரணமாக இருக்க முடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் அங்கத்தினர் அவர்கள் கூறுவது அவர்களுடைய அகன்ற மனப்பான்மையைத் தெரிவிக்கக் கூடிய கருத்தாக இருக்கலாம்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** இலங்கை இந்தியர் சம்பந்தமாக ஏற்கெனவே நேரு-கொத்தலவாலா பேச்சுக்கள், மேலும் அதற்கு முன்னாலே இரண்டு நாடுகளின் அதிகாரிகளிடையே பேச்சுக்கள் இவைகளை எல்லாம் இலங்கை சர்க்கார் மீறியிருக்கிறது. இப்போது அவைகளை முகாந்திரமாக வைத்துக்கொண்டு, இப்போது நடைபெற்ற ஒப்பந்தமும் மீறக்கூடிய வகையில்தான் இருக்கிறது. ஆகவே மீண்டும் பரிசீலனை செய்கின்ற வகையில் நம்முடைய சர்க்கார் மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்ல முன் வருமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அத்தகைய உத்தேசம் இந்த அரசாங்கத்திற்கு இல்லை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** தலைவர் அவர்களே, இலங்கை இந்தியர்கள் ஒப்பந்தம் அங்குள்ள தமிழர்களுக்கோ அல்லது அங்கேயுள்ள தமிழ் தலைவர்களுக்கோ திருப்தி அளிப்பதாக இல்லை என்பதை நாம் பத்திரிகைகள் மூலமாக பார்த்துக்கொண்டிருக்கிறோம். இந்த நிலையில் அவர்களையும் கலந்து கொண்டு இந்த முடிவு செய்திருக்கக்கூடாதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதைப்பற்றி நான் முன்பே விடை அளித்திருக்கிறேன்.

**திரு. எம். வி. கரிவேங்கடம்:** தலைவர் அவர்களே, இலங்கை இந்தியர்கள் சம்பந்தமாக செய்து கொண்ட ஒப்பந்தத்தை எதிர்த்து கருத்துக்கள், பல தீர்மானங்கள், பல அபிப்பிராயங்கள் மூலமாக இந்த அரசாங்கத்திற்கு தெரிவிக்கப்பட்டிருப்பதாக தெரிகிறது. இவைகளைப்பற்றி தெரிவிக்க முடியுமா ?



3rd March 1965]

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** பல கருத்துக்கள், நோக்கங்கள் இருக்கலாம். இதை விவரிப்பதற்கு சந்தர்ப்பமில்லை.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** அவைத் தலைவர் அவர்களே, இலங்கை வாழ் இந்தியர்களுடைய பிரச்னை முடிந்துவிட்டதாக கருதப்படுகிறதா? அல்லது இன்னும் பரிசிலனை செய்யவேண்டிய பிரச்னையாக இருந்து வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இப்போதைய நிலை எனக்குத் தெரியாது. மத்திய சர்க்காரிடத்தில் தான் இது சம்பந்தமான முழு விவரங்களும் இருக்கின்றன.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தபடி இலங்கையில் இருக்கின்ற ஆதி தமிழர்களுக்கும் இங்குள்ள ஆதிதமிழர்களுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ரொம்ப வித்தியாசம் இருக்கிறது.

**திரு. இராம. அரங்கண்ணல்:** இலங்கையில் மட்டுமல்ல, கடல் கடந்து ஏராளமான தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இலங்கையில் ஏற்பட்டது போன்று பரந்த மனோபாவத்தோடு, மற்ற இடங்களில் இருக்கின்ற தமிழர்களும் இங்கே வரவேண்டுமென்று விரும்பினால் அவர்களுக்கும் வசதி செய்து கொடுக்க நாம் தயாராக இருக்கவேண்டும் என்று நமது சர்க்கார் மத்திய சர்க்காருக்கு ஏதாவது யோசனை கூறியிருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அம்மாதிரி யோசனை ஒன்றும் கூறவில்லை.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** இலங்கை இந்தியர் ஒப்பந்தப் பிரகாரம் நாடு திரும்பவேண்டியவர்கள் சமீபத்தில் ஏற்பட்ட புயல் காரணமாக ஏற்பட்ட போக்குவரத்து இடையூறு காரணமாகத்தான் திரும்ப முடியாமல் இருக்கலாம். அவர்களுக்கு நிர்ப்பந்தம் ஏற்படாமல் தவிர்க்க என்ன வழிவகை செய்யப்பட்டிருக்கிறது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் இதைப்பற்றி மேல் மன்றத்தில் குறிப்பிட்டிருக்கிறேன். இதன் அடிப்படையில் சேது சமுத்திரத் திட்டத்தின் வேலையும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இலங்கைத் தமிழர்களுக்கு புனர் வாழ்வு அளிப்பதற்காக வசதி செய்து கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையில் சேது சமுத்திரத் திட்டத்திற்கு ஹை பிரையாரிட்டி கொடுத்து கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. சமீபத்தில் ஏற்பட்ட புயல் காரணமாக தடை ஏற்பட்டிருந்தால் அதையும் மனதில் கொண்டு அரசாங்கம் கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. கே. மூக்கையாத் தேவர்:** ஸார், பர்மா தமிழர்கள் பிரச்னை சம்பந்தமாக சரியான முறையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்காமல் இருந்து, அவசரப்பட்டு நடைமுறைக்கு கொண்டு வந்ததின் காரணமாகத்தான் பல பிரச்னைகள் எழுந்தன. ஆகவே

[3rd March 1965

இந்த நாட்டு முதல்வரும், அந்த நாட்டு முதல்வரும் மீண்டும் கூடி பேசி நிதானமாக நல்லதொரு முடிவை எடுக்க அரசாங்கம் உத்தேசிக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது அவர்களுடைய சொந்த கருத்தாக இருக்கலாம். அதை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை.

### அளவை முறையிலிருந்து எடை முறைக்கு மாறுதல்

***140 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) வியாபாரிகள் உணவுப் பொருள்களை அளவை முறையில் கொடுப்பதற்குப் பதிலாக நிறுவை முறையில் கொடுக்கச் செய்ய அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) No. Sir.

(b) Does not arise.

**திரு. து. ப. அழகமுத்து :** அளவு முறையை அனுமதிப்பதால் பொது மக்களுக்கு சரியான அளவில் பொருட்கள் கிடைக்காமல் போய்விடுகிறது. நிறுவை முறை தான் நல்லது என்பதை அரசாங்கம் உணர்ந்து அதைக் கொண்டு வர அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இந்த இரண்டு கருத்துக்களும் அடிக்கடி பரிசீலனை செய்யப்பட்டது. இதில் ஏதாவது ஒரு முறையில் முடிவு செய்யவேண்டும் என்பது தான் என்னுடைய சொந்த கருத்து. இப்போது இருக்கிற அளவு முறை தான் பல கிராமங்களிலும், மற்றும் பல இடங்களிலும் இருந்து வருகிறது. சில இடங்களில் வேண்டுமென்றால் தவறுகள் ஏற்படலாம். இதை தவிர்ப்பதற்கு வெயிட் அண்ட் மெஷர்ஸ் டிப்பார்ட்மெண்ட் தீவிரமாக கவனம் செலுத்தி வருகிறது.

**திரு. வை. சங்கரன் :** கனம் சபாநாயகர் அவர்களே, மற்ற இதர ராஜ்யங்களில் ஏற்கனவே நிறுத்தல் முறை அமலுக்கு வந்து விட்டதாலும், அதோடு அரிசியானது ரேஷன் ஷாப் மூலம் நகரங்களில் கொடுக்கும்போது நிறுத்தல் முறை இல்லாததால் பல தீங்குகள் ஏற்படுவதாலும் அரிசியை ரேஷன் ஷாப்களில் நிறுத்தல் முறையில் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இதில் இருக்கக் கூடிய சாதக பாதகங்களையெல்லாம் தீர்க்கமாகப் பரிசீலனை செய்து தான் இந்த முறையை ஏற்றுக்கொள்ளலாமா என்பதைச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும்.



3rd March 1965]

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** அரசாங்கம் விற்கும்போது நிறுத்துத் தான் கொடுக்கிறார்கள். வாங்குகிற சமயத்தில், வாங்குகிற இடத்தில் அளந்து வாங்குகிற காரணத்தினால் ஒரு மூட்டைக்கு 8 படி, 10 படி அதிகம் ஆகிறது. இந்த லாபம் யாருக்குப் போகிறது என்று தெரியவில்லை. அரசாங்கத்தின் கொள்கை நிறுவை என்று வைத்திருக்கும்போது அளவில் ஏன் செய்யவேண்டும். அதிகாரிகளைக் கேட்டால் அதிகமாக தராசுகள் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். அளந்து போடும் முறையை நிறுத்தி நிறுவை மூலமாகக் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** தராசு கிடைக்காத காரணத்தால் ஒரு கொள்கையை ஏற்றுக்கொள்ளாமல் இல்லை. இதிலுள்ள சாதக பாதகங்கள் அத்தனையையும் பரிசீலனை செய்து தான் ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** வியாபாரிகள் அளப்பது அளவாகவும், சர்க்கார் வாங்குவது எடையாகவும் இருக்கிறது. சர்க்கார் அப்படி அமல் நடத்துவதாக இருந்தால் லைஸென்ஸ்ட் டீலர்ஸ் இரண்டு விதமாகச் செய்வதை அனுமதிப்பது சரியா என்று கேட்க விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இதிலே கருத்துக்களை பலர் பல விதமாகக் கூறிக்கொண்டு இருக்கிறார்கள். அதனால்தான் விரைவிலே இருக்கக் கூடிய கஷ்டங்களைத் தீர்க்கமாகப் பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்று சொல்லுகிறேன்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, உணவுப் பொருள்களைக் கொடுக்கும் நேரத்தில் நிறுத்தல், முகத்தல் ஆகிய இரண்டு அளவுகளும் இருப்பதால் குழப்பம் ஏற்படுகிறது. இது பற்றிப் பரிசீலனை செய்யப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். பரிசீலனை செய்து எந்த முறை நல்ல முறை என்று கண்டறிந்து நடைமுறைப்படுத்த உடனடியாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? முடிவு எப்போது ஏற்படும் ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இது சம்பந்தப்பட்ட அத்தனை அதிகாரிகளையும் மற்றும் வியாபாரத்தில் ஈடுபட்டவர்களையும் கலந்து ஆலோசிக்கவேண்டும். பொது மக்களுடைய நன்மையை மனதில் கொண்டுதான் ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

**திரு. சா. கணேசன் :** நிறுத்தல் முறையையே கையாள வேண்டுமென்று கிட்டத்தட்ட சட்டம் செய்த பிறகு சர்க்காரே அளவை முறையில் அளக்கலாம் என்று சொல்லுவது விதிக்கு அல்லது நீதிக்கு முரண் ஆனது என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இந்த மாறுதலை படிப்படியாகச் செய்ய வேண்டுமென்ற கருத்து அரசாங்கத்திற்கு இருக்கிறது. அப்படிச் செய்யும்போது நமது ராஜ்யத்தில் இருக்கக்கூடிய பழக்கத்தை மனதில் கொண்டு இந்த மாறுதல்களைச் செய்ய

[3rd March 1965

வேண்டும். இல்லாவிட்டால் ஏராள குழப்பங்கள் ஏற்படும் என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. வை. சங்கரன்: அரிசி சம்பந்தப்பட்ட வியாபாரிகள் அம்மாதிரி பதம் போட்டு அதிக அளவு காண்பிக்க ஏது இருக்கிற காரணத்தினால் அளவை முறை தான் வேண்டும், நிறுத்தல் முறை இருந்தால் காலதாமதம் ஆகும் என்று தெரிவிக்கிறார்கள் என்பதை அரசாங்கம் அறியுமா?

கனம் திரு. வெ. ராமையா: கனம் அங்கத்தினர் காரணம் சொல்லுகிறார்.

திரு. எஸ். ஜே. ராம்சாமி: ஹோல்ஸேல் லைசென்ஸ் வாங்கிக் கொண்டிருக்கும் உணவு தானிய வியாபாரிகள் விவசாயிகளிடமிருந்து வாங்குவது மரக்கால் முதலிய அளவில் தான். நிறுத்து வாங்குவது கிடையாது. எங்கள் மாவட்டத்தில் நடக்கின்றது இது. இப்போது இந்தக் கேள்விக்கு பதில் சொல்லக் கூடிய அமைச்சரே உணவு அமைச்சராகவும் இருக்கிறார். ஹோல்ஸேல் லைசென்ஸ் கொடுக்கும் போது ஒரு கண்டிஷன் செய்து அளவை முறையில் செய்வது என்பதை நீக்கி, நிறுத்தல் முறையில் செய்ய வேண்டுமென்ற உத்திரவை லைசென்சுடன் சேர்த்து அனுப்ப அமைச்சர் அவர்கள் வழிவகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: அதுதான் எல்லாவற்றையும் மொத்தமாகப் பரிசீலனை செய்யவேண்டுமென்று சொன்னேன்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: இந்த அளவை முறைக்கு தலைவெட்டி முறை என்று ஆபத்தான பெயர் வைக்கிறார்களே, அது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையா: தலைவெட்டி முறை ஒன்றும் கிடையாது. இப்போது இருக்கிற லிட்டர் முறையிலே கூடக் குறையப் போகாமல் இருக்க என்ன முறையில் செய்யவேண்டுமென்று ஒரு முடிவு செய்திருக்கிறது. ஆகையால் தலைவெட்டி முறை என்று ஒன்றும் கிடையாது.

திரு. வை. சங்கரன்: இந்த அளவை முறையில், பதர், கறுக்காய் முதலியவைகளைக் கலக்க இடம் இருக்கிறது. நிறுவை முறையை வைத்துக்கொண்டால் ஓரளவு இதைத் தவிர்க்கலாம் என்பதை சர்க்கார் உணருமா?

கனம் திரு. வெ. ராமையா: அதுதான் இந்த கஷ்டங்களையெல்லாம் மனதில் கொண்டு என்ன மாறுதல் செய்யவேண்டுமென்று விரைவில் முடிவு செய்யவேண்டுமென்று நான் சொன்னேன்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: 1962-ம் ஆண்டு முதல் அமல் நடத்தப்படுவதாகச் சட்டம் இருக்கிறது. இருக்கிற சட்டத்தை அமல் நடத்தாத காரணம் என்ன? எந்த விதத்தில் மாறுதல் செய்வதாக இருக்கிறது? சட்டத்தையே மாற்றுவதா? அல்லது வேறு எந்த விதமாக மாறுதல் செய்யப்படப் போகிறது?



3rd March 1965]

கனம் திரு. வெ. ராமையா: சட்டத்தை மாற்ற பரிசீலனை செய்ய வேண்டியதில்லை. இருக்கிற சட்டத்தை அமலுக்குக் கொண்டுவரவேண்டும். மக்களுக்கு கஷ்டம் இல்லாமலும் இருக்க வேண்டும். இருக்கின்ற பழக்கத்தை மாற்றும்போது மக்களுக்குக் கஷ்டம் இருக்கக் கூடாது என்று படிப்படியாக அமல் செய்வதை தாமதமாகச் செய்கிறார்கள். இதில் இருக்கக்கூடிய கஷ்டம் லாபம் எல்லாவற்றையும் தீர்க்கமாகப் பரிசீலனை செய்யவேண்டுமென்று தான் சொன்னேன்.

*Licences cancelled under the Drugs Act, 1940.*

* 141 Q.—Sri M. V. KARIVENGADAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state the total number of licences cancelled or suspended during the year 1963 under the Drugs Act, 1940?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: 1963-ம் ஆண்டில், 254 லைசென்ஸ்கள் ரத்து செய்யப்பட்டன. ஒன்றும் நிறுத்திவைக்கப் படவில்லை.

திரு. எம். வி. கரிவேங்கடம்: ரத்து செய்யப்பட்ட லைசென்ஸ்கள் எந்தெந்தக் காரணத்திற்காக ரத்து செய்யப்பட்டன? நிறுத்தி வைக்கப்பட்ட லைசென்சுகள் எந்தெந்தக் காரணத்திற்காக நிறுத்தி வைக்கப்பட்டன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: லைசென்சுகள் ஒன்றும் நிறுத்தி வைக்கப்படவில்லை என்றுதான் என்னுடைய பதிலில் நான் கூறினேன்.

திரு. எம். வி. கரிவேங்கடம்: கான்சல் செய்யப்பட்ட லைசென்சுகள் எந்தக் காரணத்திற்காகச் செய்யப்பட்டன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: கான்சல் செய்யப்பட்ட லைசென்சுகள் இந்த வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கக் கூடியவர்கள் அவர்களாக வந்து சரண்டர் செய்த லைசன்சுகள்.

திரு. ம. கமலநாதன்: அண்மையில் சுகாதார அமைச்சர் அவர்கள் சொந்தத்திற்கு வாங்கிய மருந்தில் கலப்பு இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு மருந்துக்கடைக்காரர் லைசென்ஸ் ரத்து செய்யப்பட்டது என்று சொல்லப்படுகிறதே அது உண்மையா?

THE HON. SRIMATHI JOTHI VENKATACHELLUM: The matter is before the Court and therefore the question cannot be answered.

MR. SPEAKER: Questions are over.

[*Note.*—An asterisk (*) at the Commencement of a speech indicates revision by the member.]

## II.—BUSINESS OF THE HOUSE.

SRI K. A. MATHIALAGAN: Sir, On a point of Order, Rule 23 says— 9-30 a.m.

"(1) On all Thursdays on which the Assembly is sitting, except—

(i) Thursdays allotted for the discussion of financial matters under Articles 202 to 206 of the Constitution, and

[Sri K. A. Mathialagan] [3rd March 1965

(ii) Thursdays allotted for the discussion of any motion on the Governor's address.

The business of non-official members shall have precedence.

Provided that, on a motion made by a Minister for the suspension of this rule, the Assembly may resolve to give precedence to Government business even on those Thursdays on which the business of non-official members has precedence under this rule:

Provided further that where Thursday has been taken over for the transaction of Government business under the abovementioned proviso, the Speaker may allot in lieu thereof any other day for the business of non-official members". . .

கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விதியின் கீழ் நான் ஒரு ஒழுங்குப் பிரச்னையை தங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நேற்றையதினம் கனம் உதவி சபாநாயகர் அவர்கள் இந்த மன்றத்தில் பிசினஸ் அட்வைசரி கமிட்டியின் முடிவுகளை அறிவித்தார். அவர் அறிவித்த நிகழ்ச்சி நிரல் படி, ஏப்ரல் 1-ம் தேதியும், 2-ம் தேதியும் 'அஃபிஷியல் லாங்குவேஜ் பாலிசி' பற்றி விவாதிப்பதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த விதியானது சர்க்காரைச் சாராத தனி உறுப்பினர்களுக்கு ஒரு விலை மதிக்க முடியாத உரிமையை அளித்திருக்கிறது. கவர்னர் அவர்களின் உரையின் பேரில் விவாதம் நடத்தும் நேரத்திலும், பட்ஜெட் விவாதத்தின் போதும் தவிர மற்றைய சமயங்களில் வியாழக்கிழமைகளில் தனி உறுப்பினர்கள் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய அனுபவத்தை எடுத்துக்கொண்டால். . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, 'பாயிண்டு ஆப் ஆர்டர்' என்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். அது 'பிசினஸ் அட்வைசரி கமிட்டி' முடிவுகள் பற்றிய பாயிண்டு ஆப் ஆர்டர் என்று இப்பொழுது தெரிகிறது. 'பிசினஸ் அட்வைசரி கமிட்டியில்' நேற்று முன்தினம் சில முடிவுகள் செய்யப்பட்டன. அந்த முடிவுகளை நேற்று கனம் உதவி சபாநாயகர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். 'பிசினஸ் அட்வைசரி கமிட்டி' முடிவுகளைப் பற்றி அப்படி ஒரு பாயிண்டு ஆப் ஆர்டர் உண்டு என்று தாங்கள் ஏற்றுக்கொள்வதாக இருந்தால், அதற்கு மேலே கனம் அங்கத்தினர் அவர்களை விளக்கச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** நான் சொல்லவேண்டியதை முழுவதும் சொல்லிவிட்டு, பிறகு கனம் அமைச்சர் அவர்கள் கூறிற்கும் பதில் அளிக்கிறேன்.

MR. SPEAKER: The point is that if a non-official day is utilised for transacting financial business or other official business, an alternative day may be allotted by the Speaker for discussion of the non-official business. Does the hon. Member want a non-official day after the Budget is over?



3rd March 1965]

SRI K. A. MATHIALAGAN: I agree with the Hon. Speaker. I want to make one suggestion.

MR. SPEAKER: So the hon. Member's first point is that immediately after the Budget is over, the day instead of being allotted for discussion of the Language policy ought to have been allotted for discussion of non-official business.

SRI K. A. MATHIALAGAN: I agree, Sir.

MR. SPEAKER: In that case, the hon. Member must raise that point.

SRI K. A. MATHIALAGAN: I raise that point.

MR. SPEAKER: Therefore, point No. 1 is that immediately after the Budget, the two days allotted for discussion of the Language policy, ought to have been allotted for transacting non-official business.

SRI K. A. MATHIALAGAN: Further, the day allotted happens to be a Thursday.

MR. SPEAKER: What is the next point of the hon. Member?

**திரு. கே. ஏ. மதியழகன்:** இந்த மன்றத்தில் கடந்த 'நான்-அஃபிஷியல் டே', அதாவது தனி நபர் தீர்மானம் ஜூலை மாதத்தில் விவாதிக்கப்பட்டது. ஏறக்குறைய இதே லாங்குவேஜ் பாலிசியை ஒட்டியே, தமிழை யூனியன் சர்விஸ் கமிஷன் பரீட்சைக்கும் ஒரு மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற என்னுடைய தீர்மானம் முன் மொழியப்பட்டு, விவாதம் பாதியில் நின்று கொண்டிருக்கிறது. இரண்டு கட்சியைச் சார்ந்தவர்களும் சேர்ந்து அந்தத் தீர்மானத்தை ஒருங்கிணைந்து நிறைவேற்றினால் அது பெருமை தரக்கூடிய ஒரு செயலாகும். எனக்கும், என் கட்சிக்கும் அது பெருமை தரக்கூடியதாகும். அந்த உரிமை எனக்கு இருக்கிறது. அம்மாதிரி சர்க்காரைச் சாராத தனி அங்கத்தினர்களுக்கும் இருக்கிறது. அதை சர்க்கார் 'டிரான்ஸ்கிரஸ்' செய்வதாக இருக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** 'பிசினஸ் அட்வைசரி கமிட்டியில்' எல்லாக் கட்சிகளின் பிரதிநிதிகளும் இருக்கிறார்கள். அவர்கள் கூடி முடிவு செய்திருக்கிறார்கள். அந்த முடிவுகள் நேற்று இந்த மன்றத்தில் அறிவிக்கப்பட்டன. அதை மாற்றவேண்டுமானால் நேற்றே அதற்கு ஒரு 'மோஷன்' கொண்டு வந்திருக்கலாம். பிசினஸ் அட்வைசரி கமிட்டியின் முடிவுகளுக்கு ஒரு திருத்தம் கொடுப்பதாயிருந்தால் எனக்கு ஆட்சேபணை இல்லை. இந்த மன்றத்தின் அபிப்பிராயம் அதுவாக இருந்தால் எனக்கு ஆட்சேபணை இல்லை. நேற்றே திருத்தம் கொடுத்திருக்கவேண்டும். இப்பொழுதும் திருத்தம் கொடுப்பதற்கு தங்களுக்கு ஆட்சேபணை இல்லையென்றால் எனக்கும் ஆட்சேபணை இல்லை. அந்த இரண்டு நாட்களில் முதல் நாள் கனம் அங்கத்தினர் அவர்களுடைய தீர்மானம், மற்ற தனி அங்கத்தினர் தீர்மானம், மசோதாக்கள் இவைகளையெல்லாம் விவாதிக்கலாம். அந்த ஒரு நாளை 'நான்-அபிஷியல் டே' ஆக வைத்துக்கொள்ளலாம். ஏப்ரல் 2-ம் தேதி மட்டும்

[திரு. எம். பக்தவத்சலம்] [3rd March 1965

மொழிப் பிரச்னை பற்றி விவாதம் வைத்துக் கொள்ளலாம். அந்த அளவுக்கு பிசினஸ் அட்வைசரி கமிட்டியின் முடிவுகளை இந்த மன்றம் மாற்றுவதாக இருந்தால் எனக்கு அதுபற்றி ஆட்சேபணை இல்லை.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்தப் பிரச்னைபற்றி மறுபடியும் பிசினஸ் அட்வைசரி கமிட்டி கூடும்பொழுது ஆய்ந்து, தனி நபர் தீர்மானத்தை விவாதிப்பதற்கு நாட்களை ஒதுக்கியும், மொழிப் பிரச்னையை விவாதிப்பதற்கு நாட்களை ஒதுக்கியும் முடிவு செய்வதற்கு வழி இருக்கிறது. ஆகவே, அவ்வாறு பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் இதுபற்றி முடிவு செய்யலாம் என்று நான் கருதுகிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியபடி ஏப்ரல் 2-ம் தேதி. . . .

MR. SPEAKER : What does the hon. Member say with regard to the suggestion made by the hon. the Leader of the Opposition?

SRI K. A. MATHIALAGAN : I agree to that Sir.

MR. SPEAKER : The whole thing will be discussed by the Business Advisory Committee. The hon. Member Sri Mathialagan can send his suggestions to me. What the Hon. the Chief Minister points out is that it is not a point of order. If the hon. Member has got any suggestion, he can suggest it in the form of a motion or he can send a letter. It is not a point of order. Anyhow, the matter will be taken up by the Business Advisory Committee.

## III. PRIVILEGE MATTERS.

### (1) PRIVILEGE MOTION *Re.* A PUBLICATION IN THE ' NAVA MANI '.

MR. SPEAKER : Now we shall take up the privilege motion against the daily " Nava Mani " regarding some heading that had appeared in its issue, dated 1st March 1965. The Hon. Chief Minister will move it.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, நேற்று முன்தினம் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் சபையை விட்டு வெளியேறினார்கள். அப்பொழுது கோஷங்கள் கிளப்பப்பட்டன. அது வேறு விஷயம். அவ்வாறு அங்கத்தினர்கள் கோஷங்கள் கிளப்பிய விஷயம் உரிமைக் குழுவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி நான் ஒன்றும் கூறவில்லை. பத்திரிகைகளில் அதைப் பிரசுரித்திருக்கிறார்கள். அப்படி பிரசுரித்த விதத்தைப் பற்றி கூற விரும்புகிறேன். கனம் உறுப்பினர்களுக்கு அந்த உரிமை இருக்கிறதா, இல்லையா என்பது பின்னால் முடிவு செய்ய வேண்டிய விஷயம். ஆனால் பத்திரிகை ஒன்றில் கொட்டை எழுத்தில் 'கொலைகார மந்திரி சபை ஒழிக' என்று இங்கே இருக்கிற உறுப்பினர்கள் கோஷங்கள் கிளப்பினதாக பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இது அதற்கு சாட்சி சொல்வது போல் இருக்கிறது. பத்திரிகையில் இம்மாதிரி பிரசுரித்திருப்பது இந்தச்



3rd March 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

சபையின் உரிமையை பாதிக்கக்கூடியதாக இருக்கிறது. ஆகவே, இந்த விஷயத்தை, 'நவ மணி' பத்திரிகை இம்மாதிரி பிரசுரித்ததை உரிமைக் கமிட்டிக்கு அனுப்பவேண்டும் என்பது என்னுடை பிரேரேபணை.

**திரு. இராம. அரங்கண்ணல் :** நம்முடைய சபையில் முதல்வர் அவர்கள் 'நவ மணி' ஏட்டில் இம்மாதிரி பிரசுரிக்கப்பட்டிருப்பது பற்றி ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். இந்தப் பிரச்னையை நாம் விவாதிக்கின்ற நேரத்தில் ஒன்றை கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். இந்த இந்திய துணைக் கண்டத்தில் இருக்கின்ற பல சட்ட மன்றங்களில் சட்ட மன்ற உறுப்பினர்கள் உரிமைகள் பற்றியும், பத்திரிகைகள் உரிமைகள் பற்றியும் அன்றாட பிரச்னைகள் இருந்துகொண்டிருக்கின்றன. நீதிமன்றங்களுக்கும் சென்றிருக்கின்றன. அந்த வகையில் பார்க்கிற நேரத்தில் பத்திரிகைகளுக்கு இருக்கிற தனிப்பட்ட உரிமைகள் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உரிமைகளாகும். இங்கே நடந்த விஷயங்களை பிரசுரிப்பதற்கு பத்திரிகைகளுக்கு அடிப்படை உரிமைகள் இருக்கின்றன என்ற ஒரு வாதம் எழும்பி, அது கோர்ட்டுக்குப் போய் நம்முடைய மன்றத்தினுடைய நிலைமை சிக்கலானாலும் ஆகலாம். ஆகவே, இந்தப் பிரச்னையை உரிமைப் பிரச்னையாக கருதவேண்டாம் என்று நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**திரு. சா. கணேசன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இம்மாதிரி கோஷங்கள் எழுப்பப்பட்டதை அசெம்பளி நிகழ்ச்சியிலிருந்து கனம் சபாநாயகர் அவர்கள் நீக்கியிருக்கிறார்களா? நீக்கியிருந்தால், அவர்கள், எந்தப் பத்திரிகையோ அந்தப் பத்திரிகை, அதைப் போடக் கூடாது. நீக்கப்படாமல் இருந்தால், போடுவதிலே தவறு இல்லை என்பது என்னுடைய கருத்து.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் சபாநாயகர் அவர்களே, பத்திரிகையில் இந்த விஷயத்தைப் போட்டது முறையா, இல்லையா என்பது வேறு விஷயம். தவறுதலாக இருக்கலாம். ஆனால் அது உரிமைக்கு உரிய விஷயமா என்பதைத்தான் கவனிக்க வேண்டும். கனம் முதல் அமைச்சர் அவர்கள் இதைக் கிளப்பாமல் இருந்திருந்தால், சிறப்பாக இருந்திருக்கும் என்பதுதான் என் அபிப்பிராயம்.

MR. SPEAKER : The hon. Member may confine his remarks to whether the matter comes under ' Privileges '.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இந்த சபையிலே நடந்ததைத் திரித்துக் கூறியிருந்தால் அல்லது மாறுதலாகக் கூறியிருந்தால், அது 'டிஸ்டார்ஷன்' ஆக இருக்கும். அப்படியில்லாமல் இங்கே கூறப்பட்டதை பிரசுரித்திருந்தால் அது உரிமைக்கு உரிய பிரச்னையா என்று பார்க்க வேண்டும். அங்கத்தினர்கள் கோஷங்கள் போட்டார்கள் என்பது இன்னொரு உரிமைப் பிரச்னைக்கு உரிய விஷயம். ஆனால் இங்கே கூறப்பட்டதைப் பிரசுரித்திருப்பதில் எந்த விதமான தவறும் கிடையாது என்பது தான் என் அபிப்பிராயம். அதோடு கூட, கனம் சா. கணேசன் அவர்கள்

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [3rd March 1965

எடுத்துக் காட்டியது போல, அந்த கோஷங்கள் சபாநாயகர் அவர்களால் சட்ட சபை நடவடிக்கைகளிலிருந்து நீக்கப்பட்டிருந்தால், அப்படி நீக்கப் பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தாலொழிய, அதைப் பிரசுரிப்பதில் தவறு இல்லை என்பது தான் என் அபிப்பிராயம்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் சபாநாயகர் அவர்களே. .

MR. SPEAKER : Let the hon. Member please resume his seat.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன் . .

MR. SPEAKER : The hon. Member may like to say something. But, I must give him permission to speak.

SRI V. KRISHNAMOORTHY : I am seeking that permission.

MR. SPEAKER : I am not giving permission. So, let the hon. Member resume his seat.

SRI K. A. MATHIALAGAN rose—

MR. SPEAKER : Is the hon. Member going to raise any new point?

திரு. கே. ஏ. மதியழகன் : எஸ், ஸார். கனம் சபாநாயகர் அவர்களே, இந்த உரிமைப் பிரச்சினையை கனம் முதல் அமைச்சர் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை ஒரு உரிமைப் பிரச்சினையாக கொள்வதாக இருந்தால் இந்த மன்றத்தின் நடவடிக்கைகளைப் பிரசுரிக்க பத்திரிகைகளுக்கு உள்ள உரிமை பாதிக்கப்படுகிறது. பத்திரிகைகள் இப்படி இப்படித்தான் பிரசுரிக்கவேண்டும், இன்ன இன்னதைப் பிரசுரிக்கக் கூடாது என்று கட்டுப்படுத்தப் படுகின்றன. அது பத்திரிகைகள் உரிமையைப் பாதிக்கும்.

MR. SPEAKER : That point has already been covered. The hon. Member is not telling any new point.

திரு. கே. ஏ. மதியழகன்: ஆகவே இது ஒரு உரிமைப் பிரச்சினையாக ஆகமாட்டாது . . . . There is no distortion of misrepresentation. It is hundred per cent true.

கனம் சபாநாயகர்: புரிந்தது, போதும். Everybody has started the same thing. Even the Hon. the Chief Minister has not stated that what has been published in the news paper has not been stated in the House or there is distortion or anything of that kind. He has also not stated that I have expunged certain remarks and the newspaper has published those remarks. அவர்கள் அப்படி சொல்லவில்லை. இதையே மூன்று பேரும் சொல்லியாகிவிட்டது. புதிதாக ஏதாவது சொல்லுவதாக இருந்தால் சொல்லலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : இதில் ஒன்றும் உரிமைப் பிரச்சினை இல்லை.



3rd March 1965]

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : நான் உரிமைப் பிரச்னையில் சம்பந்தப்பட்டிருப்பதால், ஒரு சில வார்த்தைகள் சொல்ல . . .

கனம் சபாநாயகர் : சம்பந்தப்பட்டவர் கலந்துகொள்ளாமல் இருப்பது நல்லது. கனம் அங்கத்தினர் உட்காரலாம்.

THE HON. SRI R. VENKATARAMAN : I do not know what the hon. Member is going to say. Perhaps he is going to say that he did not say what the Paper has published in which case there will be confirmation . . .

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : நாங்கள் வெளி நடப்புச் செய்த சமயத்தில் நான் அந்த வார்த்தைகளை உபயோகித்ததாக தாங்கள் எடுத்துச் சொன்னீர்கள். அதற்கு நான் என்றென்றைக்கும் கடமைப் பட்டிருக்கிறேன் என்பதை முதலிலே சொல்ல விரும்புகிறேன்.

MR. SPEAKER : Let the hon. Member please resume his seat.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : பத்திரிகைகளுக்கு சில உரிமைகள் இருக்கின்றன. நடக்கும் பல்வேறு விவரங்களையும் அவர்கள் போடக் கூடாது என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் கடந்த ஒரு மாதகாலமாக பல பத்திரிகைகளை 'டிஃபென்ஸ் ஆஃப் இந்தியா ஆக்ட்' இன் கீழ் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறார்கள். அதன் சாராம்சமாக இப்பொழுது ப்ரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்பது, பத்திரிகைகளின் ஃபண்டமெண்டல் ரைட்டுகளைப் பாதிக்கும் வகையில், இதை பப்ளிஷ் பண்ணக் கூடாது என்று கெட்ட எண்ணத்தோடு சொல்லுகிறார்கள் . . . .

MR. SPEAKER : The hon. Member may resume his seat.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இந்த மாதிரி எத்தனை உரிமைப் பிரச்சினைகள், ஆயிரம் உரிமைப் பிரச்சினைகள் வந்தாலும், அவற்றைச் சந்திக்க தயாராக இருக்கிறேன்.

MR. SPEAKER : Has the hon. Member raised any new point?

SRI V. KRISHNAMOORTHY : Yes. It is with a *mala fide* motive the Chief Minister has brought forward this motion against the Paper which has published a *bona fide* report.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சட்ட சபையிலே அங்கத்தினர்களுக்குப் பேச சட்டத்தின் மூலம் உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. கான்ஸ்டிட்யூஷனின் 194-வது பிரிவுப்படி சட்ட சபையிலே அங்கத்தினர்கள் என்ன பேசினாலும் அவர்கள் பேசுவதற்கு உரிமை இருக்கிறது. அதன் பேரில் எந்த நடவடிக்கையும் எடுக்கக்கூடாது. ஆனால், இப்படிச் சட்டசபையில் பேசலாம் என்பதற்காக, அப்படி பேசியது உண்மையாக இருந்தாலும், அதைப் பிரசுரிக்கலாம் என்பதற்கு கான்ஸ்டிட்யூஷனிலே உரிமை கிடையாது. 194-வது பிரிவுப்படி சட்ட சபை அங்கத்தினர்களுக்கு எது வேண்டுமானாலும் பேசுவதற்கு உரிமை இருக்கிறது, அதனால் அதைப் பிரசுரிக்க உரிமை கிடையாது. கனம் சபாநாயகர் அவர்களே, தங்களுக்குத் தெரியும், இங்கிலாந்திலே, ஸ்டாக்டேல் வர்ஸஸ் ஹன்ஸார்ட் என்று

ஒரு கேஸ் நடந்தது. பார்லிமெண்டிலே நடந்ததை வெளியிடக் கூடிய உரிமை இருக்கிறதா இல்லையா, அப்படி அந்த வெளியீட்டினால் டிஃபமேஷன் ஏற்பட்டால், வெளியிட்டவர் மீது நடவடிக்கை எடுக்க முடியுமா முடியாதா என்ற பிரச்சினை எழுந்தது. நம் நாட்டிலே பிரசுரிக்கும் உரிமை சட்டப்படி கொடுக்கப்படவில்லை. இந்திய பார்லிமெண்ட் சம்பந்தப்பட்டவரை, அங்கே ஒரு சட்டம் நிறைவேற்றினார்கள். பார்லிமெண்டிலே எதைப் பேசினாலும், பார்லிமெண்ட் அங்கத்தினருக்கு எந்த விதமான ப்ரொட்டெக்ஷன் இருக்கிறதோ அதேமாதிரிப்ரொட்டெக்ஷன் பிரசுரிக்கவும் இருக்கிறது என்று ஒரு சட்டம் இருக்கிறது. ஆனால் ராஜ்ஜிய சட்ட சபையிலே அப்படி எந்தவிதமான சட்டமும் கிடையாது. ஆகவே, இன்றைக்கு இருக்கும் நிலையிலே, சட்ட சபையிலே தவறான வார்த்தை, நடவடிக்கை இவற்றிற்காக சட்டசபை அங்கத்தினர்மீது நடவடிக்கை எடுக்க முடியாவிட்டாலும், அதைப் பிரசுரம் செய்தால், அதன் மீது நடவடிக்கை எடுக்க முடியும். இன்றைக்கு சட்டப்படி இருக்கும் நிலைமை அதுதான். கனம் அங்கத்தினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். அதையெல்லாம் ப்ரிவிலேஜ் கமிட்டியில் வாதாடலாம். பிரிவிலேஜ் கமிட்டிக்கே செல்லக் கூடிய நிலை இல்லை என்று சொல்ல முடியாது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்தப் பிரச்சினையை பிரிவிலேஜ் கமிட்டிக்கு விடுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. சா. கணேசன் :** Sir, I want to make a suggestion. கனம் தொழில் அமைச்சர் அவர்கள் ஆங்கில நாட்டு வழக்கு ஒன்றைக் காட்டியதோடு, இந்திய பார்லிமெண்டில் கொடுக்கப்பட்டிருக்கிற சுதந்திரம் பற்றியும் குறிப்பிட்டார்கள். அத்தகைய ஸ்வாதந்திரியம் ராஜ்ய சட்ட சபையிலே கொடுக்கப்படவில்லை என்றும் சொன்னார்கள். அதே போதும். இந்திய பார்லிமெண்டில் வழி இருக்குமானால், எந்தக் கான்ஸ்டிட்டியூஷனை வைத்து அதைச் செய்திருக்கிறார்களோ, அதே வழிவகை ராஜ்ய சட்டசபைகளையும் கட்டுப்படுத்துவதுதான் நியாயமும், தர்மமும், முறையும் ஆகும். ஆகவே, அந்த உரிமையை மறுப்பது கூடாது. அப்படி அவர்கள் சொன்னதே பத்திரிகைகளுக்கு உரிமை உண்டு என்பதை நிலை நாட்டுவதற்குப் போதிய சான்று ஆகும். ஆகவே, இதை ப்ரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்பவேண்டாம், அது முறையாகாது என்று தங்களுக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சுதந்திரா கட்சித் தலைவர் சொன்னது அப்படி ஒரு சட்டம் இயற்ற வேண்டும் என்பதற்குப் பொருந்தும், அப்படி ஒரு மசோதா வந்தால் அப்பொழுது பேசலாம்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** கனம் தொழில் அமைச்சர் கூறிய இரண்டு காரணங்களும் இது உரிமைப் பிரச்சினைக்குத் தகுதியற்றது. உரிமைக் குழுவிற்கு விடத் தகுதி அற்றது என்பதைத் தான் விளக்குகிறது (ஆரவாரம்). ஏனென்றால், இந்த சட்ட சபையிலே நடந்த நிகழ்ச்சி அது. நடந்த நிகழ்ச்சியை திரித்துக் கூறியோ அல்லது நடக்காததைக் கூறியோ அல்லது நீக்கியதைக்





கூறியோ இருந்தால், அப்போது அது உரிமைப் பிரச்சினைக்கு உகந்ததாக ஆகும். ஆகவே, பத்திரிகைகளுக்கு உரிமை கிடையாது என்பது சரியாகாது. நடக்காததைக் கூறியிருந்தால், பாதிக்கப்பட்டவர் நாட்டில் அமலில் இருக்கும் சட்டத்தை மீறிய குற்றத்திற்காக நீதிமன்றத்திற்குச் செல்லலாம். அப்படிப் பிரசுரித்து இருந்தால் அந்தப் பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்க நீதிமன்றத்திற்குச் செல்லும் உரிமை இருக்கிறது. அதோடு கூட, டிஃபென்ஸ் ஆஃப் இந்தியாரூல்ஸின் கீழே இந்த அரசாங்கத்திற்கும், கனம் முதல் அமைச்சருக்கும், வழக்குகள் போட அதிகாரம் நிறைய இருக்கிறது. அது நீதி மன்றத்திலே செய்யலாம். ஆனால் இது இந்த மன்றத்தின் உரிமைக் குழுவிற்கு அனுப்ப அருகதையற்றது, நியாயமற்றது. It is out of order to raise it as a matter of privilege.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, இன்றைய நிலையில் முதலமைச்சர் அவர்கள் சொல்லியபடியும் தொழில் அமைச்சர் அவர்கள் சொல்லியபடியும், இந்த சட்ட மன்றத்தைப் பொறுத்தவரையில், இது உரிமைப் பிரச்சினைக்கு உட்பட்டதா இல்லையா என்று முடிவு கட்டுவதற்குத் திட்டவட்டமான சட்டம் இல்லை. இங்கே சந்தேகம் ஏற்படுகிற பல்வேறு சூழ்நிலைகளில் நாம் இந்தியப் பாராளுமன்றத்தைத்தான் எடுத்துக்காட்டாக வைத்து, அங்கே என்ன முறைகள், பழக்கங்கள் மேற்கொள்ளப்படுகின்றனவோ அந்த முறைகளைத்தான் நாம் ஏற்றுக்கொள்ளுகிறோம். நேற்று கூட, உரிமைப் பிரச்சினையைக் குறித்துத் தொழிலமைச்சர் அவர்கள் கூறும்போது, இந்தியப் பாராளுமன்றம் எந்த அரசியல் சட்டத்தின் கீழ் இயங்குகிறதோ அதை மேற்கோளாகக் காட்டித்தான், அதையொட்டித்தான் நேற்று எழுப்பப்பட்ட பிரச்சினையில் தமது கருத்தினைக் கூறினார்கள். இங்கே ஒரு சட்டம் இல்லை என்ற நிலைமை ஏற்படும்போது அதற்காக இந்தியப் பாராளுமன்றம் எந்த முறையை மேற்கொள்ளுகிறதோ அதைத்தான் நாமும் நடை முறையில் இங்கே வைத்துக் கொண்டிருக்கிறோம். அதற்கென்று தனிச் சட்டம் நிறைவேற்றி, அந்தச் சட்டத்தின் கீழ் உரிமைப் பிரச்சினை வருகிறதா இல்லையா என்று பரிசீலனை செய்கிற வரையில் உரிமைப் பிரச்சினையின் கீழ் வருவதற்கு வழியில்லை. எனவே உரிமைப் பிரச்சினை இல்லை என்பதைத்தான் நானும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, தவறு ஒன்று ஏற்பட்டால் அதற்குப் பல நிவாரணங்கள் உண்டு. ஒரு நிவாரணம், கோர்ட்டிலே கேஸ் போடுவது. மற்றொரு நிவாரணம், இந்த சட்ட சபைக்கு இருக்கிற கௌரவத்தைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கை எடுப்பது. இந்த சட்ட சபையின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக எடுக்கின்ற நடவடிக்கையைத் தவிர, நாம் மேற்கொண்டு அவர்கள் மீது கேஸ் போடுவதற்கும் உரிமை இருக்கிறது. அதையும் செய்யலாம். இதையும் செய்யலாம். ஆகவேதான், இன்றைக்கு கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் அவர்களுக்கு இதிலே கொஞ்சம் அக்கறை இருக்குமானால் அதையும் செய்ய முடியுமா என்று சர்க்கார் பரிசீலனை செய்யும் என்றும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [3rd March 1965

அடுத்தாற்போல், இன்றைக்கு நம்மிடத்தில் இருக்கும் பிரச்சினை, சபை விஷயங்களைப் பற்றிக் கௌரவக் குறைவாக ஒரு பிரசுரம் ஏற்பட்டிருக்கிறது, அது இந்தச் சபையின் கௌரவத்தைக் குறைக்கும்படியான பிரச்சினையாக இருக்கிறதா என்பதை விசாரணை செய்யலாமா, கூடாதா என்பது. இப்பொழுது தீர்மானம் பண்ணவில்லை, அவர்கள் குற்றவாளி என்று. இப்பொழுது நாம் தீர்மானம் செய்வது இதுதான் சபையின் கௌரவத்தைக் குறைக்கக்கூடிய வகையில் ஒரு தலையங்கமாக, ஒரு வெளியீடாகக் கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தால், இதை உரிமைப் பிரச்சினையாகக் கருதி, உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டும். உரிமைக் குழுவிலே எல்லாவிதமான வாதங்களும் எழுப்பலாம். உரிமைக் குழு எப்படித் தீர்மானம் செய்கிறதோ அதன்படி முடிவு ஏற்படும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** கனம் சபாநாயகர் அவர்களே, நான் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன். இன்று நான் இந்த அசெம்பிளி கட்டடத்திற்குள்ளே வரும்போது, வராந்தாவிலே போலீசார்கள் இருந்தார்கள் என்பதை இந்தச் சபையின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் இப்பொழுது எழுப்பியிருக்கிற பிரச்சினை சபை முன் இருக்கும் பிரச்சினைக்குச் சம்பந்தம் உடையது அல்ல என்று நான் நினைக்கிறேன். Immediately after finishing it, we are not going to run away from here. We will be here. The hon. Member, Sri S. J. Ramaswamy can give written notice containing the points he wants to make and I will take it up tomrrow.

இந்தப் பிரச்சினையைக் குறித்து இருதரப்பிலும் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை நான் கேட்டதில், ஒரு சில இடங்களில் அது அனுமதிக்கப்படுகிறது, இங்கே சட்டம் இல்லை என்பதுதான் தெளிவாகிறது. இதைக் குறித்துத் தீர்மானமாக முடிவு கட்டிச் சொல்லக்கூடிய அளவிலே இன்று சபாநாயகர் இல்லை. எனவே, இதை உரிமைக் கமிட்டிக்கு அனுப்பி அவர்களுடைய தீர்மானத்தை என்னுடைய 'கைடன்ஸ்'ஸுக்கு வைத்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். உரிமைக் கமிட்டியினர் என்ன தீர்மானம் செய்கிறார்களோ, அது எனக்கு மட்டுமல்லாமல் எனக்குப் பின்னால் வருகிறவர்களுக்கும் 'கைடன்ஸ்'ஸாக அமைந்து, இந்தச் சபை நடவடிக்கைகளை நடத்திச் செல்வதற்கு உபயோகமாக இருக்கும் என்ற முறையிலே, இதை நான் உரிமைக் கமிட்டிக்கு அனுப்பவேண்டிய நிலைதான் ஏற்படுகிறது. அது மட்டுமல்ல. இதை இப்படியே விட்டுவிடாமல், அதனால் ஏற்படக் கூடிய விளைவுகள் சட்டசபையைக் குறித்தும், அங்கத்தினர்களைக் குறித்தும் என்ன என்பதையும் நாம் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, சட்டம் ஒன்று அவசியமாக இருக்கிறது. அது வந்துதான் ஆகும். இந்தப் பிரச்சினை உரிமைக் கமிட்டிக்குப் போகவேண்டிய அளவுக்கு இதில் சாதகங்கள் இருக்கின்றன என்று நான் முடிவு செய்து, இந்தப் பிரச்சினையை உரிமைக் கமிட்டிக்கு அனுப்புவதற்காகன ஒரு பிரேரணையைக் கொண்டு வரும்படியும் நான் கோருகிறேன்.



3rd March 1965]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move—

'That the matter of privilege regarding a publication in the 'Nava Mani', dated 1st March 1965 relating to the walk-out in the Legislative Assembly be referred to the Committee of Privileges'.

SRI M. KALYANASUNDARAM : Sir, I oppose the motion.

SRI SAW. GANESAN : Sir, I oppose the motion.

SRI K. A. MATHIALAGAN : Sir, I oppose the motion.

SRI M. KALYANASUNDARAM : Sir, while opposing the motion, I want to say a few words.

There are two ways to move a motion. It is open to any hon. Member to move—

'That the matter may be referred to the Committee of Privileges'.

It is also open to any other hon. Member to move—

'That the matter may be discussed in this House.'

Sir, I move—

'That the matter of privilege regarding a publication in the 'Nava Mani', dated 1st March 1965 relating to the walk-out in the Legislative Assembly be discussed in this House'.

SRI T. L. SASIVARNA THEVAR : Sir, I second it.

MR. SPEAKER : So, the hon. Member has moved the other alternative motion.

SRI M. KALYANASUNDARAM : Yes, Sir.

MR. SPEAKER : Then I will put both the motions to the vote of the House. First I will put the motion of the hon. Member, Sri Kalyanasundaram, to the vote of the House.

The question is—

'That the matter of privilege regarding a publication in the 'Nava Mani', dated 1st March 1965 relating to the walk-out in the Legislative Assembly be discussed in this House'.

The motion was put and declared lost.

**A poll was demanded and the House divided thus :**

10-00 a.m.

***Ayes***

| | |
|---|---|
| **Sri K. R. Nallasivam** | **Sri Rama. Arangannal** |
| **„ V. R. Nedunchezhiyan** | **„ C. Venkidusamy Gounder** |
| **„ K. A. Mathialagan** | **„ P. K. Mookiah Thevar** |
| **„ SAW. Ganesan** | **„ A. K. Subbiah** |
| **„ T. L. Sasivarna Thevar** | **„ Kanchi Manimozhiar** |
| **„ M. Kalyanasundaram** | **„ KR.RM. Kariamanickam Ambalam** |

[3rd March 1965

*Ayes*—*cont.*

Sri A. Perumal
" K. Cheemaichamy
" M. Shanmugam
" N. Rajangam
" V. Arunachalam
Srimathi Manonmani Ammal
Sri S. Madhavan
" T. P. Alagamuthu
" S. Mani
" A. Thiagarajan
" P. Murugaiyan
" V. R. Periannan
" P. V. Sriramulu
" M. Kamalanathan
" S. Muthulingam
Pulavar K. Govindan
Sri C. V. Velappan
" C. Manickam
" T. Chinnasamy
Sri M. R. Krishnamurthy
" Munu Adhi
" S. Murugaiyan
" P. U. Shanmugam
Srimathi Jagadambal Velayudham
Sri M. S Mani
" K. Thirupathy
" M. P. Vadivelu
" R. Nallamuthu
" N. P. Sengottuvelu
" S. Arumugham
" M. V. Karivengadam
" A. G. Balakrishnan
" R. Narayanan
" S. Ramaswamy
" V. Krishnamurthy
" K. R. Munirathnam
" R. Abdul Khaleel
" S. J. Ramaswamy

*Noes.*

Sri K. Parthasarathy
" N. P. M. Chinniah Gounder
" S. Chinnayyan
" M. Alagiriswamy
" C. M. Ambikapathi
" L. Anandan
" S. Angamuthu Naicker
" K. S. Ardhanareeswara Gounder
" A. Appavoo Thevar
" A. Arumugam
" A. B. Balagan
" G. E. Chinnadurai
" S. Chinnakaruppa Thevar
Hon. Sri M. Bhaktavatsalam
" P. Kakkan
" V. Ramaiah
Hon. Srimathi Jothi Vencatachellum
Sri P. Ramachandran
" R. Krishnaswamy Naidu
" A. S. Dhakshinamoorthy Gounder
" M. Dhandayuthapani Pillai
" A. Doraiswamy
" V. Ellama Naidu
" T. P. Elumalai
" K. Gopala Gounder
" K. S. G. Haja Sheriff
" P. Jayaraj
" R. Jeevarathnam
" T. Kadambavana Sundaram
" T. Karcha Gowder
" M. Kulandaiswamy Gounder
" N. Mahalingam
" T. Manavalan
" M. Maruthanayagam Pillai
" J. Matha Gowder
" M. P. Muthukaruppannaswami Gounder
" P. K. Muthuvelappa Gounder
" S. Nanjunda Row
Hon. Sri N. Nallasenapathi Sarkarai Manradiar
" G. Bhuvarahan
" S. M. A. Majied
Srimathi A. Suares
" C. Kolandai Ammal
" P. K. R. Lakshmikantham
" A. S. Ponnammal
" A. Krishnaveni
" B. Lakshiminarasamma
Srimathi Rajathi Kunchitapatham
Kumari D. Sulochana
Sri K. Narayanaswamy Pillai
" K. S. Nataraja Gounder
" N. Duraipandi
" K. P. Palanisamy
" K. N. Palaniswami Gounder
" G. D. Perumal Raju
" R. Ponnappa Nadar
" K. Ponniah
" R. Rajagopalaswamy Naicker
" P. Rajagopal
" G. Rajaram
" A. Ramachandra Rayar
" A. L. Ramakrishna Naidu
" N. S. Ramalingam
" S. Ramalingam
" V. Ramanathan
" A. R. Ramasami
" S. Ramaswamy Naidu
" N. Ramaswamy Udayar
" R. Rangaswamy
" R. V. Swaminatnan
Dr. B. Natarajan
Sri C. Chiranjeevulu Naidu
" A. P. C. Veerabahu
" S. Sangili
" K. R. Sambandam
" V. Sankaran
" P. R. Sreenivasa Padayachi
" M. S. Selvarajan
" R. Sengaliappan
" N. Shanmugasundaram
" S. Sivasubramaniam
" N. Sountharapandian
" C. Srinivasan
" A. R. Subbiah Mudaliar
" R. Subramaniam
" K. S. Subramania Gounder
" N. Subramaniam Chettiar
" T. S. Swaminatha Odayar
" R. Thangavelu
" M. D. Thiagaraja Pillai
" K. Thiruvengadam
" P. Urkavalan
" O. Venkatasubba Reddy
" M. William
" A. Chidambaranatha Nadar.



3rd March 1965]

*Neutral.*

Nil.

Ayes: 50; Noes: 95; Neutral: Nil.

The motion was lost.

MR. SPEAKER: Now I will put the motion of the Hon. the Leader of the House to vote. The question is—

'That the matter of privilege regarding a publication in the "Nava Mani", dated 1st March 1965 regarding to the walk-out in the Legislative Assembly be referred to the Committee of Privileges".

The motion was put and declared lost.

SRI K. A. MATHIALAGAN: Sir, I want that a poll be taken. There is a subtle difference between the motion of Sri M. Kalyanasundaram and this motion.

MR. SPEAKER: The hon. Member can have that. I have no right to reject his demand under the rules.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: If you will permit me, Sir, I would like to submit that it is left to the descrition of the Hon. Speaker to comply with a demand for division. If the Speaker feels that the demand is frivolous, it is for him to decide the matter.

MR. SPEAKER: I will go through the relevant rule.

SRI V. KRISHNAMOORTHY: The hon. Member Sri Mathialagan expects some members belonging to the Congress Party to vote against the motion.

MR. SPEAKER: The Chair has got the discretion to determine or decide the method of taking votes.

The Hon. Speaker requested the Members who were FOR the motion moved by the Hon. the Chief Minister to stand.

All the hon. Members belonging to the Congress party present in the House stood.

The Hon. Speaker then requested all the Members who were AGAINST the motion moved by the Hon. the Chief Minister to stand.

Hon. Members belonging to the Opposition Parties present in the House stood.

MR. SPEAKER: I now declare that the motion moved by the Hon. the Chief Minister is passed.

* * *

(2) OBSTRUCTION IN THE PATHWAY TO THE ASSEMBLY CHAMBER BY THE POLICE.

SRI M. KALYANASUNDARAM: Sir, I wish to raise a matter of privilege. I wish to bring this to the notice of the House through, you, Mr. Speaker. I could have raised it earlier.

*** Expunged as ordered by the Chair.

[Sri M. Kalyanasundaram] [3rd March 1965

I had no time to do it. So, I want to raise it now. Let me explain the facts and leave the rest to the decision of the Speaker. If, after hearing me, the Speaker wants me to move a Privilege Motion, I shall do so. Or, he may take such appropriate action as he may deem necessary. I think the Police here are under the control of the Speaker.

MR. SPEAKER : Yes, certainly.

SRI M. KALYANASUNDARAM : Sir, the white-clad Police is supposed to be—why supposed to be—it is under the control of the Hon. Speaker when the Assembly is in session. Today, when I was proceeding to the Assembly Chamber from the Lounge Room, I found at the same time the Commissioner of the City Police was also just entering. Immediately, all the white-clad Police rushed there and formed a cordon so to say around him, thus obstructing the pathways. This is not proper. I do not object to the Commissioner of Police coming here. He can come here and also observe the Proceedings of the House. I am not afraid of it. Let him be present here. There were occasions when even that was objected to. That is a different matter.

MR. SPEAKER : I think the hon. Member's point is that there should not be any obstruction.

SRI M. KALYANASUNDARAM : Yes. Even when the Hon. Chief Minister enters the Chamber, there is no such rush of the Police. The Hon. Speaker enters the Chamber without any such fuss. That being the case, why should the Police act in a different way when the Commissioner enters the Chamber and thus obstruct the pathways? They did not obstruct me from entering the Chamber. Then, it would have been a different matter. I must be fair to them. They did not obstruct me. However, there was some difficulty for us to wade through the passage. It is unbecoming and spoils the atmosphere of this House. I would request you to take suitable action in the matter.

MR. SPEAKER : I shall give necessary instructions in the matter.

SRI M. KALYANASUNDARAM : That will satisfy me, Sir.

## (3) STATEMENT TO PRESS BY LEADERS OF OPPOSITION PARTIES.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, சென்ற 2, 3 நாட்களாக கனம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நடந்துகொண்ட முறை நூதனமானது. அதற்கு மேலே நான் கூற விரும்பவில்லை. ஆனால் அதை அவர்கள் உரிமையாகவும் கொள்ளலாம். ஆனால் நான் இப்பொழுது எழுப்புகின்ற உரிமைப் பிரச்னை வேறு. நேற்று முன் தினம் பிஸினஸ் அட்வைசரி கமிட்டியிலே எப்படி இந்த நிகழ்ச்சிகள் நிரவ வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அந்த முடிவின்படி இந்தச் சபை நடைபெறுகின்றது.



3rd March 1965] *[திரு. எம். பக்தவத்சலம்]*

அதிலே என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கக்கூடிய ஒரு சந்தர்ப்பம்கூட ஏற்படவில்லை. நான் பத்திரிகைகளிலே பார்த்தேன். நேற்று மெயில் பத்திரிகையிலே பார்த்தேன். இன்னும் சில தமிழ் பத்திரிகைகளிலும் பார்த்தேன். இன்று காலையிலும் ஹிந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ், வேறு சில தமிழ் பத்திரிகைகளிலும் பார்த்தேன். எதிர்க் கட்சித் தலைவர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு ஸ்டேட்மெண்ட் சமர்ப்பித்திருப்பதாகவும், அதில் முதலமைச்சர் அவர்கள் இப்படிச் செய்யவில்லை, இதை மறுத்தார் அதை மறுத்தார் என்பதாக எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். இந்தச் சபை விவகாரங்களை இந்தச் சபையிலேயே தெரிவித்திருக்கலாம். கனம் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் இந்தச் சட்ட மன்ற உறுப்பினர்கள்தாம். ஆகவே, எது சொல்லவேண்டியிருந்தாலும் இந்தச் சபையிலேயே தெரிவித்திருக்கலாம். ஆனால் அப்படியின்றி பத்திரிகைகளில் அறிக்கை கொடுத்திருப்பதைப் பார்த்தேன். அது முறையல்ல. கனம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த மன்றத்திலேயே தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கலாம். அவ்வாறு தெரிவிக்காமல் பத்திரிகைகளில் ஸ்டேட்மெண்டு விடுவது இந்த மன்றத்தின் உரிமையைப் பாதிப்பதாகும் ஆகவே, நான் இந்த உரிமைப் பிரச்னையை எழுப்புகிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** தலைவர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் நூதனமாக நடந்து கொண்டார்கள் என்று குறிப்பிட்டார்கள். இந்த சபை இவ்வளவு நேரம் எவ்வளவு நூதனமாக நடந்து கொண்டு இருக்கிறது என்பதை மக்களும் பார்ப்பார்கள். மற்றவர்களும் பார்ப்பார்கள். தமிழ்நாட்டிலே இதுவரையில் நடைபெறாத பல நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. ஜனவரி மாதம் 25-ம் தேதியிலிருந்து பிப்ரவரி 12 வரையில் பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அந்தப் பிரச்னைகள் இந்தச் சபையில் விவாதிக்கப்படவேண்டும் என்று ஆரம்பத்திலிருந்தே முயற்சி செய்தோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்தச் சபையில் பிஸினஸ் அட்வைசரி கமிட்டி முடிவுகளை வெளியிடுவதற்கு முன்புகூட நாங்கள் அதை வெளியிடவில்லை. பிஸினஸ் அட்வைசரி கமிட்டியினுடைய முடிவுகளுக்கு முரண்பட்ட கருத்துக்களைக்கூட நாங்கள் வெளியிடவில்லை. அப்படி முரணாக ஏதாவது வெளியிட்டிருந்தால், இந்தச் சபையின் அந்தஸ்துக்குப் பாதகமாக வெளியிட்டிருந்தால்தான் உரிமைப் பிரச்னை வரும். அரசாங்கத்தின் கொள்கை சம்பந்தமான பிரச்னைகளையெல்லாம்கூட முதலமைச்சர் அவர்கள் இந்தச் சபையில் சொல்வதற்கு முன்பாக வெளியில் சொல்கிறார்கள். ஆனால் அது பற்றி நாங்கள் இதுவரை ஒன்றும் சொல்லவில்லை. நடந்து முடிந்த விஷயங்கள் பற்றித்தான் அறிக்கை வெளியிட்டோம். வரப்போகிற விஷயங்களைப்பற்றி நாங்கள் எந்தத் தகவலும் சொல்லவில்லை. பட்ஜெட் சமர்ப்பிப்பதற்கு முன்னமேயே இந்த சம்பவங்களைப் பற்றி இந்தச் சபையில் விவாதிக்கவேண்டும் என்பதாக தெரிவிக்கப்பட்ட கருத்தை கனம் முதல் அமைச்சர் அவர்கள் மறுத்ததும் உண்மை. 'நோ கான்பிடன்ஸ் மோஷன்' கொடுத்தோம். நிராகரிக்கப்பட்டு விட்டது. பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் விவா

திக்கவேண்டுமென்று சொன்னோம். அதுவும் மறுக்கப்பட்டது. பட்ஜெட் சமர்ப்பிப்பதற்கு ½ மணி முன்னதாகவே 10 மணிக்கு பிஸினஸ் அட்வைசரி கமிட்டியைக் கூட்டவேண்டுமென்றும் அதன் மூலம் முடிவு எடுக்கலாம் என்றும் உருப்படியாக நான் யோசனை தெரிவித்து ஒரு கடிதம் எழுதி உங்களுக்கு அனுப்பியுள்ளேன். அதன் பிரகாரம் கூடிக் கலந்து பேசியிருந்தால் நேற்று அல்லது முன் தினம் நடந்த பல நிகழ்ச்சிகளுக்கு அவசியமில்லாமல் போயிருக்கும் என்பதை மனப்பூர்வமாக சொல்லிக்கொள்கிறேன். அதன்படி கலந்து பேசியிருந்தால் பல அடிப்படை மாறுபட்ட கருத்துக்களையுடைய நாங்கள் இப்பிரச்னையில் ஒன்று சேர்ந்து நிற்கக்கூடிய அவசியம் இருந்திருக்காது.

MR. SPEAKER: Let the hon member please confine his remarks to whether the matter comes under 'Privileges'.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** முதலமைச்சர் இதுபற்றிக் குறிப்பிட்டுச் சொன்னதால்தான் நான் இதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. இன்றைக்கு, அதாவது 2, 3 தினங்களாக இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று நாங்கள் வற்புறுத்தி எடுத்துச் சொன்னது கனம் முதலமைச்சர் அவர்களுக்கு திருப்தி அளிக்காமல் இருக்கலாம். அவர்கள் ஒன்று நியாயம் என்று சொல்வார்கள். அதை நாங்கள் நியாயம் அல்ல என்று சொல்லலாம். ஆகவே இது இந்த சபையின் அந்தஸ்து சம்பந்தப்பட்ட விஷயமல்ல. அரசியல் சம்பந்தப்பட்டது. இவ்வாறு நாங்கள் அறிக்கை வெளியிட்டது சபையின் அந்தஸ்தையும் கௌரவத்தையும் பாதிக்கிறது என்று சொல்கிறார்கள். இந்த சபையின் அந்தஸ்தும், கௌரவமும் பாதுகாக்கப்படவேண்டுமென்கிற ஆர்வத்தோடுதான்—இது முக்கியமான விஷயம்—இதைப்பற்றி இந்தச் சபையில் விவாதிக்க வேண்டும் என்றெல்லாம் நாங்கள் சொன்னோம். இவ்வளவு முக்கியமான நிகழ்ச்சிகள் பற்றி இந்தச் சபையில் விவாதிக்க வேண்டாம் என்று கூறும் முதலமைச்சர் அவர்கள், இந்தச் சபைக்கு அதிக மதிப்பு கொடுக்கிறாரா? இந்தச் சபையின் அந்தஸ்தில் அதிக அக்கறை இருந்திருக்கிறதா அல்லது எனக்கு அக்கறை இருந்து இருக்கிறதா என்பதுதான் பிரச்னை, ஆகவே, இந்த சபைக்கு யார் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள், யார் இதைக் குறைத்து மதிப்பிடுகிறார்கள் என்பதையெல்லாம் இந்தச் சபையின் முடிவுக்கு நான் விட்டு விடுகிறேன்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, அவையின் முதல்வர் அவர்கள் எதிர்க்கட்சியைச் சேர்ந்த எங்களுடைய கருத்துக்களைப் பொறுத்தும், அதைப் பத்திரிகைகளில் வெளியிட்டதைப் பொறுத்தும் உரிமைப் பிரச்சினையாக இந்த மன்றத்தின் முன்னால் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த மன்றத்திற்கு முரண்பட்ட வகையில் எந்தக் கருத்தையும் நாங்கள் வெளியே எடுத்துத் தெரிவிக்கவில்லை. இங்கே நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி வெளியிலே எடுத்துத் தெரிவிக்கக் கூடிய கருத்துக்களுடைய அடிப்படையிலேதான் எங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறோம். இதிலே எந்தவிதத்திலும் இந்த



மன்றத்தின் உரிமை பாதிக்கப்படவில்லை. அதை இங்கேயே சொல்லியிருக்கலாம் என்று முதல்வர் அவர்கள் தெரிவித்தார்கள். இங்கே சொல்வதற்கான வாய்ப்பு கிடைத்திருக்குமானால் பல கருத்துக்களை இங்கே நாங்கள் எடுத்துச் சொல்லி இருப்போம். இந்த மன்றத்தின் உரிமையைப் பாதிக்கக்கூடிய எந்தக் கருத்தையும் நாங்கள் வெளியே கூறவில்லை என்று கூறி இந்தப் பிரச்சினையை உரிமைப் பிரச்சினையாக்க வேண்டிய அவசியம் இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** கனம் முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டியவர்கள். அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் நான் மரியாதை செலுத்துபவன். அவர்களைப் பற்றி இந்த நேரத்தில் தனிப்பட்ட முறையில் நான் உணராமல் இல்லை. இருப்பினும் அவர்கள் இந்த மாதிரி இந்தச் சபைக்குத் தவறான வழி காட்டுவார்களேயானால் இனி நான் அந்த பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் அங்கத்தினராக இருக்க முடியாது என்பதை இந்தச் சபையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கனம் தி.ரு எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே கனம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள், சமீபத்தில் நடைபெற்ற சம்பவங்களைப்பற்றி விவாதிக்க விரும்பியதற்கு நான் இடம் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். நான் இப்பொழுது கூறுகிறேன்—இப்போதுதான் எனக்கு அதைக் கூறுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது—சமீபத்தில் நடந்த சம்பவங்களைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்ற ஆர்வம் கனம் எதிர்க்கட்சி உறுப்பினர்களை விட எனக்கு அதிகமாகவே இருக்கிறது. அதற்குப் போதிய அவகாசம் பட்ஜெட் வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது இருக்கிறது என்பதை கனம் உறுப்பினர்களும் உணருவார்கள். வரவு செலவுத் திட்ட நடவடிக்கைகளுக்குக் கொஞ்சமும் குந்தகம் இல்லாமல் எவ்வளவு வேண்டுமானாலும் அந்தச் சம்பவங்களைப் பற்றி விமர்சனம் செய்யலாம். குறை கூறலாம், குற்றம் சாட்டலாம், சமாதானம் கொடுக்கலாம். அதையெல்லாம் செய்ய முடியும் என்பது எனது கருத்து. நான் ஏதோ ஒருகுறையைச் செய்துவிட்டேன் என்று கனம் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் இந்த மன்றம் நடந்து கொண்டிருக்கும்போது முதலிலே இந்த மன்றத்தில் கூறியிருக்க வேண்டும். இந்த மன்றத்தில் சொல்லி இருந்தால்தான் நான் அதற்குச் சமாதானம் சொல்ல முடியும். கனம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் கூறியதுபோல் நாம் சிறந்த சம்பிரதாயங்களை ஏற்படுத்த வேண்டும். மற்ற மன்றங்களுக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டும். நடவடிக்கையில் தவறுதல் ஏற்படக்கூடாதே என்ற கவலையோடுதான் நான் இதை உரிமைப் பிரச்சினையாகக் கிளப்பி இருக்கிறேன். இந்த மன்றம் நடந்து கொண்டிருக்கும்போது அதை இந்த மன்றத்தில் எடுத்துக் கூறாமல் பத்திரிகைகளில் விவாதத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருப்பது முறையல்ல. ஆகவே, இதை உரிமைக் கமிட்டிக்கு விட வேண்டுமென்றும், அவர்கள் இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டுமென்றும் இந்த உரிமைப் பிரச்சினையைக் கிளப்பி இருக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : I will give my opinion tomorrow.

But when we are discussing this matter, the hon. Member, Sri Kalyanasundaram has stated that he would withdraw from the Business Advisory Committee. That is not a point for me to consider while deciding this issue.

SRI M. KALYANASUNDARAM : It is left to me.

MR. SPEAKER : Yes, it is left to the hon. Member but I want to know whether the warning of the hon. Member to withdraw from the Business Advisory Committee is a point for me to consider the issue before me.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** அதை நீங்கள் 'கன்ஸிடர்' பண்ண வேண்டுமென்பதற்காக அல்ல; கனம் முதலமைச்சர் அவர்கள் 'கன்ஸிடர்' பண்ண வேண்டுமென்பதற்காகத்தான். இப்போதும் அவர்கள் சொல்லலாம். கனம் முதலமைச்சர் அவர்கள் சபையினுடைய நடவடிக்கைகள் சுமுகமாக நடைபெறவேண்டுமென்பதில் ஆர்வம் காட்டி வேண்டுகோளாக விடுவார்களானால் நான் கூட வரவேற்கத்தக்க சூழ்நிலை உண்டாகலாம். தங்களுக்கு இருக்கக்கூடிய மெஜாரிட்டி பலத்தை வைத்துக்கொண்டு மைனாரிட்டி எதிர்க்கட்சி என்ற முறையில் நடந்துகொள்வது தவறு. மைனாரிட்டி எதிர்க் கட்சிகளின் கருத்தையும் ஏற்று ஒன்றுபட்டு நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்ற எண்ணம் சர்க்கார் கட்சித் தலைவருக்கு, கனம் முதலமைச்சர் அவர்களுக்கு, இல்லையென்பதை அவர்களுடைய போக்கு எடுத்துக் காட்டுகிறது. அப்படி இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்குமானால் பிசினஸ் அட்வைசரி கமிட்டி என்ன முறையில் உதவிகரமாக இருக்கமுடியும்? ஆகவே, இந்த மாதிரி மெஜாரிட்டி பலத்தை வைத்துக்கொண்டு முடிவு எடுத்துக் கொள்கிறார்கள் என்பதற்காகத்தான் நான் அதைத் தெரிவித்தேனே தவிர, கனம் சபாநாயகர் அவர்களுக்கு இடைஞ்சல் கொடுக்க வேண்டுமென்பதற்காக அல்ல.

**கனம் சபாநாயகர்:** எனக்கு ஒன்றும் இடைஞ்சல் இல்லை.

What I say is that that is not a point to be considered along with this matter.

SRI M. KALYANASUNDARAM : Of course, that is a different matter.

**(4) WALK-OUT BY MEMBERS OF OPPOSITION PARTIES.**

MR. SPEAKER : The hon. Member, Sri Nanjunda Row has given notice of another privilege motion regarding the walk-out immediately after the Hon. Speaker disallowed the No-Confidence Motion moved by the hon. the Leader of the Opposition and other hon. Members. I withhold consent to it because we have recognised walk-out as a parliamentary form of protest.





## IV.—ADJOURNMENT MOTIONS

### (1) POSTPONEMENT OF ELECTION OF PRESIDENTS OF PANCHAYATS.

MR. SPEAKER : The hon. Member, Sri T. P. Alagamuthu, has given notice of the following adjournment motion :—

" That the House be adjourned to discuss a matter of urgent public importance viz., the stalemate and dislocation in the Panchayat Administration in the State consequent on the postponement of election of Presidents of Panchayats ".

I do not think that it comes under an adjournment motion.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I would suggest that if the hon. Member puts a short notice question, it can be answered in two or three days.

MR. SPEAKER : That is right. I withhold consent to the adjournment motion

திரு. கரு. சீமைச்சாமி: Sir, on a point of information, இன்று பத்திரிகைகளில் மார்ச் 29-ம் தேதி நடக்க வேண்டிய பஞ்சாயத்துத் தேர்தல்கள் ஏப்ரல் 14, 15 தேதிகளுக்கு மாற்றப் பட்டிருக்கிறது என்று வந்திருக்கிறது. அது உண்மையா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அந்தச் செய்தி சரியல்ல. குறுகிய காலக் கேள்வி ஒன்று கொடுத்தால் எந்தத் தேதியில் நடக்கும் என்பன போன்ற விவரங்களையெல்லாம் கொடுக்கலாம்; உப கேள்விகளும் கேட்கலாம்.

### (2) CLOSURE OF COLLEGES AND HIGH SCHOOLS.

MR. SPEAKER : The hon. Member, Sri Alagamuthu, has also given notice of another adjournment motion, namely :—

' That the House be adjourned to discuss a matter of urgent public importance, viz., the dislocation in the educational system consequent on the closure of colleges and high schools till the 8th March 1965.'

This is also a policy matter which cannot be discussed in an adjournment motion. It can be raised during the discussion on the Education Demand. Therefore, I withhold my consent to this adjournment motion also.

## V.—CALLING ATTENTION TO GRAVE FAMINE CONDITIONS IN TIRUNELVELI DISTRICT.

SRI M. S. SELVARAJAN : Mr. Speaker, Sir, I wish to call the attention of the Hon. Minister for Food to the following matter of urgent public importance, viz., the grave famine conditions prevailing in Tirunelveli district on account of the complete failure of monsoon rain and the consequent failure of both wet and dry crops and the scarcity of drinking water in several taluks and the measures to be taken such as remission of taxes, rushing of food grains, deepening of wells and providing work to the agricultural population. 10-30 a.m.

(Mr. Deputy Speaker in the Chair.)

[3rd March 1965

THE HON. SRI V. RAMAIAH : Mr. Deputy Speaker, Sir, A gist of the seasonal conditions prevailing in the various parts of Tirunelveli district and the relief measures already taken and proposed to be taken is given below :

The North East Monsoon which gives the bulk of the rainfall in Tirunelveli district was a complete failure in this fasli year and consequently some areas have been affected very badly. Though the North East Monsoon set in, in the months of September-October 1964, there was no sustained rainfall in the succeeding months. The months of December-January are regarded as the most crucial period in determining the prospects of both wet and dry crops in Tirunelveli district, but there was a complete failure of rains during this period. The normal monthly rainfall of this district is 814.8 M.M. As against an average monthly rainfall of 651 M.M. received from June 1963 to December 1963 in this district, the average monthly rainfall during the same period in 1964 was only 536.6 M.M. and there is a deficiency of 278.2 M.M. compared to the normal monthly rainfall of 814.8/M.M. The deficiency is relatively large in the months of November and December this year than in the previous year. As a result of the failure of rain, most of the rainfed tanks have not received adequate supply and a few tanks did not receive any supply at all. The Board Member for Land Revenue has recently visited this district and has studied the condition of crops there.

The extent of Pishanam wet cultivation (1st crop) up to December 1964 was 1,93,172 acres, but the crop in an extent of 1,01,390 acres only is expected to come up, while the crop in the remaining extent of 91,782 acres is expected to wither. The areas served by Thambaraparani river alone would come up for harvest. The paddy crops under rainfed tanks and other sources are withering. The Collector has issued instructions for granting seasonal remission for wet lands where crops have failed and for lands left waste for want of water supply excluding mamool waste topes, etc. The probable amount of remission is Rs. 8,36,830. He has also instructed the Tahsildars to suspend temporarily the collection of amounts which are sure to be remitted at Jamabandi.

Dry crops are raised in almost the entire arable dry area. The average extent of area cultivated by the dry crops is 8,50,054 acres. The main dry crops raised are cumbu, ragi, cholam and cotton. The adverse effect of the failure of the North East Monsoon is more pronounced in Nanguneri taluk and Kovilpatti Division. Except in the above area, dry crops in other areas have come up for harvest with fair outturn of 5 annas and above and famine conditions do not prevail there.

*Nanguneri taluk.*—Out of the total extent of 52,400 acres brought under dry crop cultivation, an extent of 8,323 acres which was cultivated with chillies and plantains through well water has yielded a fair outturn. In the remaining extent of 44,077 acres the crops has completely withered. The Collector has recommended



3rd March 1965] [Sri V. Ramaiah]

that land revenue together with local cess and local cess surcharge leviable under Sections 115 and 116 of the Madras Panchayat Act may be remitted. In anticipation of Government sanction, the Collector has postponed the collection of land revenue, cesses and local cess surcharge for the current fasli. The probable amount involved in this recommendation is Rs. 49,826 towards land revenue and cess and Rs. 1,55,811 towards local cess surcharge.

The Collector has also made the following proposals for providing employment to labour and for increasing irrigation facilities :—

(1) that New Well Subsidy scheme may be extended to this taluk, that the loan amount may be enhanced from Rs. 2,000 to Rs. 3,000 with 25 per cent subsidy and that an amount of Rs. 6 lakhs for 200 wells may be allotted;

(2) that 7 Minor Irrigation works may be improved at an estimated cost of Rs. 55,000—;

(3) that 15 road works may be executed at an estimated cost of Rs. 5,56,000.

*Kovilpatti division.*—The adverse effects on crops in Kovilpatti and Sankarankoil taluks due to failure of monsoon are not so severe as in Nanguneri taluk. Yet the condition of these crops is not very bright. Millet crops are the main stay of the ryots in this division. They mainly utilise them for domestic consumption. Due to poor yield there will be no surplus grains for marketing in the majority of cases. The standing cotton crop is also not fair. As the rural population has no other employment except cultivation, the economic condition of the ryots is poor. The Collector has therefore recommended that the collection of dry assessment and cesses including local cess surcharge for Kovilpatti Division due for this fasli (1374) may be suspended. Pending receipt of orders of Government under B.S.O. 14(3) (1), the Collector has postponed the collection of land revenue, cesses and local cess surcharge. The amounts involved in this postponement are Rs. 13,81,058 towards land revenue and cess and Rs. 3,49,268 towards Local cess surcharge.

The Collector has also made the following proposals for providing employment to labour and for increasing irrigation facilities :—

(1) that an allotment of Rs. 18 lakhs may be made for 450 wells at the rate of Rs. 4,000 with 25 per cent subsidy under New Well Subsidy scheme ;

(2) that an amount of Rs. 5,06,300 may be allotted for repairing Minor Irrigation Sources ;

(3) that the tanks may be repaired at an estimated cost of Rs. 5 lakhs ;

(4) that 25 road works may be taken up at an estimated cost of Rs. 4,59,200.

In view of the distressed condition of the agriculturists the Collector has also recommended the postponement of the collection

of loan instalments from the current fasli to fasli 1375 in th concerned taluks as givenbelow :—

| | Rs. |
|---|---|
| Nanguneri taluk ... ... ... ... | 3,73,844 |
| Kovilpatti taluk ... ... ... ... | 3,28,566 |
| Sankarankoil taluk ... ... ... ... | 3,25,000 |

The above proposals are under examination in consultation with the Board of Revenue.

As regards the scarcity of drinking water, it is reported that no difficulty is felt in rural areas. As far as Kovilpatti town is concerned, there will be no scarcity of drinking water in view of the construction of the pipe water supply work at Thoppalam Urani. There is adequate water in all the public and private drinking water wells in Kovilpatti Division. However, the condition is being carefully watched by the Collector and if the situation warrants, action will be taken for the deepening of wells. I may, therefore, inform the House that the District authorities are taking all possible steps to grant remission to the extent permissible to the affected ryots in areas where there has been partial failure of monsoon, resulting in failure of crops.

## VI.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1965-66—*cont.*

* *திரு. ரா. சுப்பிரமணியம்* : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற 1965-66-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். 1965-66 ல் 697 லட்சம் ரூபாய் பற்றாக்குறை இருந்தபோதிலும் கூட வேறு எந்தப் புதிய வரியையும் விதிக்காமல் துண்டு விழக் கூடிய பணத்தை பழைய வரி பாக்கிகளை வசூலிப்பதின் மூலமாகவும், வரியிலிருந்து தப்புகிறவர்களை கண்டு பிடிப்பதின் மூலமாகவும், மோட்டார் வரி, விற்பனை வரி மின்சாரத் தீர்வை ஆகியவற்றின் மூலம் நாம் வசூலிக்கக் கூடிய பணத்திலிருந்து சரிகட்டிவிடலாம் என்ற அபிப்பிராயத்தோடு எந்தவித புது வரியும் விதிக்காமல் இருந்திருப்பது வரவேற்கத் தக்கது. அத்துடன் நான்காம் நிதிக் கமிஷனிடம் நம் நிதித் தேவையை எடுத்துச் சொல்லி அதிக அளவில் நிதியைப் பெறலாம் என்ற நம்பிக்கையையும் தெரிவித்திருக்கிறார்கள். துண்டு விழும் எல்லாத் தொகையையுமே கூடுமான வரையில் மத்திய சர்க்காரிடம் எடுத்து வற்புறுத்தி அவர்களிடமிருந்து அதிகமான பணத்தைப் பெறுவதற்கு சர்க்கார் எல்லாவித முயற்சிகளும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இத்தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்த வரையில் ஏற்கெனவே நாம் திட்டமிட்டது 291 கோடி ரூபாய் அளவிற்கு. நாம் செலவழிக்க முற்பட்டது 340 கோடி ரூபாய். 49 கோடி ரூபாய் அதிகமாக செலவழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த மாதிரி செலவாகும்போது அதிகப்பணத்தை எல்லாம் வளர்ச்சித் துறைக்கு முக்கியமாக செலவுசெய்து, மற்ற இனங்களிலுள்ள செலவை எல்லாம் கட்டுப்படுத்திக்கொண்டு திட்டமிட்டிருப்பது மிகவும் பாராட்டத்தக்க விஷயமாகும். அதிலும்





தொழில் நுட்ப நிர்வாக அமைப்பை நல்ல முறையில் செயல்படுத்துவதற்கான வழியில் நடவடிக்கை எடுத்திருப்பது மிகவும் பாராட்டுவதற்கு உரிய ஒன்றாகும். அத்துடன் கூட, மேலும் வருகின்ற ஐந்தாண்டுத் திட்டத்தில் 750 கோடி ரூபாய் அளவிற்கு திட்டமிடுகிற நிலையில் நாம் இருக்கிறோம் என்றால் படிப்படியாக நாம் வளர்ந்து கொண்டிருப்பதைத்தான் இது காட்டுகிறது. அதற்கேற்ற முறையில் அரசாங்கம் பல திட்டங்களைப்போட்டு நிறைவேற்றிக் கொண்டு வருகிறது என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆனால் நாம் இத்தகைய முறைகளில் எல்லாம் வேலைகளை நல்ல முறையில் வெற்றியுடன் செய்து வருகிறோம் என்றால் இதற்கு காரணம் இந்த நாட்டிலுள்ள அமைதியான சூழ்நிலை தான். கடந்த பத்து, பதினைந்து வருடங்களாக அமைதியான ஒரு சூழ்நிலையை நாம் உருவாக்கியிருப்பது தான் காரணம். இம்மாதிரியான அமைதியான சூழ்நிலையை வேறு எந்த நாட்டிலும் காண முடியாது. ஆனால் கடந்த இரண்டொரு மாதங்களாக இந்த அமைதிக்கு பங்கம் ஏற்படக்கூடிய வகையில் பல காரியங்கள் நடந்து வருகின்றன. பல ஆண்டுகளாக இருந்து வந்த அமைதியான சூழ்நிலையைக் குலைப்பதற்கு இந்தியின் பெயரால் போராட்டங்களும் வன்முறை செயல்களும் நடைபெற்றன. இருந்து வந்த அமைதிக்கு ஊறு விளைவிக்கக்கூடிய முறையில் மாணவர்களுக்கு இந்தியினால் கேடு விளையும் என்று அவர்களை போதிப்பித்து அவர்களை தவறான வழியில் இழுத்துச் சென்றார்கள். இதன் காரணமாக மாணவர்கள் உணர்ச்சி வசப்படுவது சகஜமாகிவிட்டது. அவர்களுடைய கருத்துக்களை எடுத்துச்சொல்வதற்கு ஊர்வலங்கள் நடத்துவதையோ அல்லது இதைப் பற்றி தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்புவதையோ சர்க்கார் அனுமதித்திருந்தார்கள். ஜனவரி 25-ம் தேதி ஊர்வலங்கள் நடத்தி தங்கள் கருத்துக்களை தெரிவித்தார்கள். அதன் பேரில் என்னென்ன செய்யலாம் என்பதைப்பற்றி சர்க்காரும் ஆலோசித்துக்கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் எந்தவிதமான இடையூறும் இல்லாமல் இருந்தது. ஆனால் மாணவர்களை சில சமூக விரோத சக்திகளும், பிரிவினை சக்திகளும் சேர்ந்து பயன்படுத்திக்கொண்டு வன்முறை செயல்களில் இறங்குவதற்கு முன்னோடியாக வைத்துக்கொண்டு, வன்முறை செயல்களில் தாங்கள் ஈடுபடுவதற்குப் பதிலாக மாணவர்களை கிளப்பிவிட்டு பல தகாத செயல்களில் எல்லாம் ஈடுபட்டார்கள். இதை நாம் வன்மையாக கண்டிக்கவேண்டும். அத்துடன் கூட அவர்களுடைய தேவை என்ன என்பதைப்பற்றி பார்க்கும்போது, வர வர இப்போது அதிகப்படுத்திக்கொண்டு போகிறார்கள். முன்னால், ஆட்சிமொழிச் சட்டத்தில் நேருவின் வாக்குறுதி காப்பாற்றப்படவேண்டும் என்று முதலில் சொன்னார்கள். அதன்பிறகு வாக்குறுதியை சேர்ப்பதற்காக மொழிச்சட்டத்தையே திருத்தவேண்டும் என்று சொன்னார்கள். அதற்குபின்னால் அரசியல் சட்டத்தையே இதற்காக மாற்றி அமைக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். கடைசியாக 17-வது அத்தியாயத்தையே எடுத்துவிட வேண்டும் என்று சொல்லி, ஆங்கிலம் தான் இருக்கவேண்டும் என்று அரசியல் சட்டத்தில் சொல்லியாக வேண்டும் என்று, படிப்படியாக டிமாண்ட்களை

[திரு. ரா. சுப்பிரமணியம்] [3rd March 1965

அதிகப்படியாக கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு உண்மையில் நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும் என்பது நோக்கமல்ல, எப்படியாவது தகராறுகள் நடந்து கொண்டிருக்க வேண்டும், அமைதிக்கு பங்கம் ஏற்பட்டுக்கொண்டிருக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடுதான் சமூக விரோத சக்திகள் எல்லாம் ஒன்று சேர்ந்து வேலை செய்து வருகின்றன. இவைகளில் எல்லாம் இனிமேலாவது மாணவர்கள் சிக்காமல் இருக்கவேண்டும் என்று தங்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, உணவு தான்யத்தைப் பொறுத்த வரையில், கழிந்த ஆண்டு 53 லட்சம் மெட்ரிக் டன் என்று நிர்ணயிக்கப்பட்டது, இப்போது 60 லட்சம் டன் என்ற நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. உணவு தான்ய விஷயத்தில் நல்ல உரம், பொறுக்கு விதைகள் இவைகளை எல்லாம் மேலும் மேலும் நல்ல முறையில் விநியோகித்து வருவதால் நல்ல அபிவிருத்தியை கண்டிக்கிறோம் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். நாம் எதிர்பார்த்த அளவிற்கு உரம் கிடைக்கவில்லை என்றாலும் கூட, கிடைக்கின்ற உரத்தை முன்னால் கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாக மட்டும் விநியோகிப்பது என்கிற முறையை மாற்றி தனிப்பட்டவர்கள் மூலமாகவும் விநியோகிப்பது என்கின்ற முறையில் வந்தது விவசாயிகளுக்கு மிகவும் வசதியாக இருக்கிறது. விவசாயிகள் தேவைப்படும்போது வாங்கிக்கொள்வதற்கு வசதியாக தனிப்பட்ட வியாபாரிகளிடத்தில் மேலும் அதிகப்படியாக கொடுத்து, நல்ல முறையில் விநியோகம் செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தஞ்சாவூர் ஜில்லாவைப் பொறுத்த வரை சுற்றுலா வண்டி மூலமாக உர விநியோகம் செய்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது. இது மட்டும் போதாது. மேஜர் பஞ்சாயத்துக்களுக்கு என்று மட்டும் இல்லாமல், தனிப்பட்டவர்களுக்கு கொடுப்பதில் இருக்கின்ற கட்டுப்பாடுகளையும் எடுத்து, விவசாயிகளுக்கு இலகுவில் உரம் கிடைப்பதற்கான வழியில் வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இம்மாதிரியான ஒரு முடிவு எடுத்ததற்காக நான் அரசாங்கத்தை பாராட்டுகிறேன். அதோடு கூட எந்த விதமான பயிரை செய்தாலும் கூட இதற்கு வேண்டிய உரம், விதை இவைகளை எல்லாம் கொடுத்தும் கூட, கதிர் வருகின்ற நேரத்தில், பல தொல்லைகள் ஏற்பட்டு விடுகின்றன. ஒன்று, புயல் அடித்து பயிரை சேதப்படுத்திவிடுகிறது. அதே சமயத்தில் பூச்சித் தொல்லைகளும் ஏற்படுகின்றன. கடந்த இரண்டு, மூன்று வருடங்களாக தஞ்சாவூர் ஜில்லாவில் பூச்சித் தொல்லை அதிகமாக ஏற்பட்டு மகசூல்களை எல்லாம் பாதித்து வருகிறது. இந்த பூச்சி தொல்லையானது தொத்து வியாதியைப் போன்று, அம்மை, காலரா போன்ற நோய்கள் பரவுவது போல் ஒரு வயலுக்கு வந்தால் உடனடியாக அடுத்த வயலுக்கு வரக்கூடிய நிலைமையில் தொல்லை தந்து கொண்டிருக்கிறது. இதைப் போக்குவதற்கு ஒவ்வொரு தனிப்பட்ட முறையில் பூச்சி மருந்து தெளிப்பது என்றால் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. சீக்கிரமாக இந்த தொல்லை பரவிவிடுகிறது.



3rd March 1965] [திரு. ரா. சுப்பிரமணியம்]

ஆகவே பஞ்சாயத்துக்கள் அல்லது பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக பூச்சி மருந்தை தெளித்துவிட்டு, அதற்கான செலவை அந்தந் மிராசுதார்களிடமிருந்து வரியுடன் சேர்த்து வசூலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் கூட, அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளில் எல்லாம் பூச்சிக்கொல்லி மருந்துகளை விமானம் மூலமாக தெளிக்கிறார்கள். இதைப் போன்று தஞ்சாவூர் ஜில்லாவைப் பொறுத்த வரையில் இங்கேயும் விமானம் மூலமாக தெளிக்கலாம், அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு சொல்லப்படுகின்ற தடை என்னவென்றால், மரங்கள் அதிகமாக இருக்கின்றன, ஆதலால், விமானம் மூலமாக தெளிக்க முடியாது என்று. ஆனால் மரங்கள் இல்லாத ஊரே நம் ராஜ்யத்தில் கிடையாது. ஆகவே தகுந்த முறையில் ஏதாவது சிறிய விமானம் மூலமாக இந்த பூச்சி மருந்தை தெளித்தால் இப்போது இருப்பதைவிட இன்னும் 10 சதவிகிதம் அதிகமாக விளைவை எதிர்பார்க்கலாம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, விவசாயிகளுக்கு நல்ல ஊக்கம் தேவை. இப்போது பொதுவாக எல்லா இடங்களிலுமே விவசாயத்தை நல்லமுறையில் மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் நல்ல முறையில் உரமிட்டு பயிரிட்டு வருகிறார்கள். இவ்வாறு எல்லாம் செய்தும், டிசம்பர் மாதத்தில் காற்று வந்ததும், எவ்வளவு வளர்ந்திருக்கிறதோ, அந்த அளவிற்கு காற்றடித்து சேதமடைந்து கீழே விழுந்து விடுகிறது. கதிரும் விடாமல் கெட்டுவிடுகிறது. இப்போது குறுவை நெல்லைப் பொறுத்த வரையில் ஏ.டி.ட்டி. 27, இண்டிகோ ஜப்பானிகா என்ற நெல் ரகத்தை கண்டுபிடித்திருக்கிறார்கள். மா ஒன்றுக்கு 25 கலம் எங்கள் கலத்தில்—இங்கு என்றால் 12½ மூட்டை, 57 கிலோ மூட்டை அளவுக்கு இருக்கும்—விளையக் கூடிய முறையில் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதே மாதிரியாக நீண்ட காலப் பயிர், சம்பாப்பயிர், அதற்கும் ஒரு நெல் ரகம் கண்டுபிடித்து, இந்த மாதிரி காற்றினால் கீழே விழாமல் இருக்கக் கூடிய அளவுக்குக் கண்டுபிடித்துக் கொடுத்தால், தஞ்சாவூர் ஜில்லாவில் 9 லட்சம் ஏக்கருக்கு மேல் சம்பா பயிரிடப்படுகிறது, ஒரு போகம் பயிரிடப்படுகிறது, அவைகளிலிருந்து நல்ல மகசூலை அடையலாம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த விதத்தில் கவனம் செலுத்துமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நெல் விலை பற்றி ஒன்று சொல்ல நான் ஆசைப்படுகிறேன். கடந்த ஆகஸ்ட்-செப்டம்பரில் முதன் முதலாக நெல்லுக்கு விலை கொண்டு வந்தபோது 25 ரூபாயாக இருந்தது. அதை அக்டோபரில் 22, 22½ ரூபாயாக மாற்றினார்கள். சம்பா அறுவடைக்கு 22 ரூபாய் 51 பைசாவாக இப்போது ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் இன்றும் நெல்லுக்குத்தான் கட்டுப்பாடு உண்டு. இந்த நெல்லை உற்பத்தி பண்ணுவதற்கு வேண்டிய மற்ற சாதனங்கள் எவைகளுக்குமே கட்டுப்பாடு கிடையாது. பிண்ணாக்குக்குக் கட்டுப்பாடு கிடையாது. உரத்துக்குக் கட்டுப்பாடு கிடையாது. மற்ற எந்த விதமான சாதனத்திற்கும் கட்டுப்பாடு இல்லாமல் நெல்லுக்கு மட்டும் கட்டுப்பாடு கொண்டு வந்திருப்ப

தால் விவசாயிகளுக்கு அதிகத் தொல்லை ஏற்படுகிறது. நெல்லுக்கு இந்த விலை நிர்ணயித்தது மிகவும் குறைவானது. சாதாரணமாக விவசாயிகளுடைய கணக்கை எடுத்துக் கொண்டு பார்த்தால் இந்த விலை மிகவும் குறைந்தது. முதலில் 25 ரூபாய் என்று போட்டிருந்ததை அடிப்படையாக வைத்து அதன்படி விற்று வரவு-செலவுக் கணக்குகளை ஏற்படுத்திக் கொண்டவர்களுக்குத் திடீரென்று 2½ ரூபாய் குறைந்திருப்பது கஷ்டமான காரியம். ரூபாய் 22.51 என்று இப்போது வைத்திருக்கிறது என்றாலும் இந்த ரூபாய் விவசாயிகளுக்குக் கிடைக்கிறதா என்றும் பார்க்க வேண்டும். இன்றைக்கு விவசாயிகளுக்குக் கிடைப்பதெல்லாம் 21 ரூபாய்தான். 21 ரூபாய்க்கு மேல் தஞ்சாவூர் ஜில்லாவில் யாரும் விற்றது கிடையாது. ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால் அவர்களுக்கு இந்த 21 ரூபாய்க்கே வாங்குவதற்கு, வியாபாரிகள் தாங்கள் வாங்க முடியாது என்று சொல்லுகிறார்கள். முன்பெல்லாம் தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து ஏராளமான நெல்லை வெளியூர் வியாபாரிகள் வந்து பிடித்துக் கொண்டு போவார்கள். இந்த வருஷம் வெளியூர் வியாபாரிகள் வராததால் உள்ளூர் வியாபாரிகள் மூலம் கொள்முதல் செய்ய வேண்டுமென்றிருப்பதால், அவர்கள் அங்கு இருக்கக் கூடிய நெல்லைப் பிடிக்கத் தயங்குகிறார்கள். அதனால் ஆங்காங்கு தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. தேக்கத்தை உடனடியாக நிவர்த்திக்க வேண்டியதோடு கூட, நெல்லைத் தீவிரமாகப் பிடிக்க வழிவகை செய்யவேண்டும். இம் மாதிரி ரூ. 22.51 ஆக இருந்தாலும் கூட ரூ. 21-க்கு மேல் வேண்டாமென்று சொல்லுவதால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது என்பதை இத் தருணத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அத்துடன் கூட இந்த நெல் உற்பத்திக்கு வேண்டிய சாதனங்களாக உள்ள பிண்ணாக்கு, உரம் போன்றவைகளைக் கண்ட்ரோல் விலையில் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தஞ்சாவூர் ஜில்லாவில் தற்போது 2,000 கிணறுகள் வெட்டி, அதன் மூலமாகக் குறுவை சாகுபடியைக் கொஞ்சம் முன்னதாகச் செய்ய ஏற்பாடுகள் நடந்து கொண்டு வருவதாகத் தெரிகிறது. நான் இதை முழுமனதுடன் வரவேற்கிறேன். ஆனால் அதே சமயத்தில் தஞ்சாவூர் ஜில்லாவை எடுத்துக் கொண்டால் ஆறுகளெல்லாம் மேடிட்டிருக்கின்றன. ஆறுகள் மேடிட்டிருக்கின்றன என்றால், நடுவில் திட்டுகளும் ஏற்பட்டிருக்கின்றன. அத்தகைய திட்டுகளில் சில இடங்களில் ஊர்களே அமைந்திருக்கின்றன. அந்த அளவுக்கு ஆறுகள் மேடிட்டிருக்கின்றன. இவைகளைப் பற்றிச் சர்க்காருக்கு நாங்கள் அடிக்கடி எடுத்துச் சொல்லி வந்திருக்கிறோம். சென்ற தடவை கூட கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் 'இவைகளையெல்லாம் சீர்படுத்த 12 கோடி ரூபாயில் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது' என்று சொன்னார்கள். பன்னிரண்டு கோடி ரூபாய் என்பது கடலில் கரைத்த பெருங் காயமாகத் தான் இருக்கும். ஆனாலும், 12 கோடி ரூபாயில் தயாரிக்கப்பட்ட திட்டம் தஞ்சை ஜில்லாவிற்கு இந்த ஆண்டே வரும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் இது நான்காவது



ஐந்தாண்டுத் திட்டத்திற்குத் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. அப்படி நான்காவது திட்டத்தில் வைத்தால் அது பலன் தருவதற்கு 5, 6 வருஷங்கள் ஆகும். ஆகையால் இந்த வருஷம் கால்வாய்ச் சீரமைப்புத் திட்டதைப் பற்றி எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது எங்களுக்கு ஒரு அதிர்ச்சியைக் கொடுக்கிறது என்பதை நான் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகையால் கூடுமான வரையில் இந்த வருஷத்திலேயே 12 கோடி ரூபாயில் தயாரிக்கப்பட்டத் திட்டத்தைத் துவக்க அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, எங்கள் ஜில்லாவிலே ஏரிப் புறம்போக்குகள் நிறைய இருக்கின்றன. ஒரு ஏரி என்றால் ஆயிரம் ஏக்கர் அளவுக்கு இருக்கிறது. ஆனால் 150 ஏக்கர் அல்லது 200 ஏக்கரில்தான் தண்ணீர் இருக்கும். பாக்கி இடமெல்லாம் தண்ணீர் இல்லாமலேயே இருக்கும். சும்மா இருக்கும் இடங்களில் அநேகர் போய் அங்கு விவசாயம் செய்ய ஆரம்பித்து வருகிறார்கள். வருஷா வருஷம் தண்டத் தீர்வை போடுவதும், இவர்கள் மறுபடியும் போய் அங்கு விவசாயம் செய்வதும் இதே வேலையாக இருந்து வருகிறது. ஆகவே அங்கு உள்ள ஏரிகளைச் சர்வே செய்து, உண்மையில் தண்ணீரைத் தேக்கி வைக்க எவ்வளவு நிலம் வேண்டும் என்பதை ஒதுக்கிவிட்டு பாக்கி நிலங்களையெல்லாம் ஆங்காங்குள்ள நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்குக் கொடுப்போமானால் இன்னும் அதிகமாக நெல் விளைவிக்க முடியும். இந்த விஷயத்தில் கவனம் செலுத்தும்படி சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, எங்களுக்குப் பயிர் பாதுகாப்புத் திட்டம் கண்டிப்பாக வர வேண்டும். என்ன காரணத்தினாலோ பயிர்ப் பாதுகாப்புத் திட்டம் இன்னும் வராமல் இருக்கிறது. இப்போது சாதாரணமாக மற்ற இண்டஸ்ட்ரீஸை எடுத்துக் கொண்டால் அவர்களுக்கு எவ்வளவோ சலுகைகளைச் செய்கிறார்கள். இன்றைக்கு 5 கோடி ரூபாய்க்கு ஒரு இண்டஸ்ட்ரீஸ் ஏற்படுத்துகிறார்கள் என்றால் கையிலிருந்து 5 லட்சம் ரூபாய்தான் சொந்தப் பணம் செலவு செய்கிறார்கள். பாக்கிப் பணம், மற்ற எல்லா வழிவகைகளிலும் சர்க்காரே உதவி செய்கிறது. ஆரம்பிக்கக் கூடியவர்கள் கையில் இருக்க வேண்டியது 5 லட்சம் ரூபாய் தான். விவசாயிகளைப் பொறுத்த வரையில் அவர்களிடத்தில் வரி வாங்குவதைத் தவிர, காலா காலத்தில் மழை பெய்தால் தண்ணீரைத் திறந்து விடுவதைத் தவிர, பாக்கி எதுவும் நல்லது செய்வதாக எனக்குப் புலப்படவில்லை. பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தையாவது கொண்டு வந்தால் விவசாயிகளுக்கு நன்மையாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தஞ்சாவூர் ஜில்லாவைப் பொறுத்த வரையில் சென்ற மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே கிழக்குக் கடற்கரை ரோடு போடவேண்டுமென்று முதன் முக்கியத்துவம் கொடுத்து இங்கிருந்து அனுப்பினோம். என்ன காரணத்தினாலோ

பிளானிங் கமிஷன் அதைத் தள்ளி விட்டார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது இதற்கு முதல் முக்கியத்துவம் கொடுத்து இந்த ரோடைப் போட வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டுமென்று அமைச்சர் அவையைக் கேட்டுக்கொள்கிறேன். கிழக்குக் கடற்கரை ரோடு தேச முக்கியத்துவம் பெற்றது. ஏதோ சீனக்காரர்கள் வடக்கேதான் தாக்குகிறார்கள், அங்கே தான் சண்டைக்கு வருவார்கள் என்று சொல்லுவதற்கில்லை. இப்போது சீனக்காரர்கள் வடக்கில் தாக்குவார்களா அல்லது தெற்கிலிருந்து வருவார்களா என்ற ஐயப்பாடு இருக்கிறது. நம் தேசப் பாதுகாப்புக்குக் கடற்கரை ரோடை நல்ல முறையில் வைத்துக்கொள்வது மிகமிக அவசியமாக இருக்கிறது. ஆகையால் இந்த முக்கியத்துவத்தை நம் அமைச்சரவை பிளானிங் கமிஷனுக்காவது எடுத்துச் சொல்லி இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதைப் போட்டு முடித்து விடுவதற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்
10-10 a.m. கொள்கிறேன்.

தஞ்சாவூர் ஜில்லாவைப் பொறுத்த வரையில், அங்கே வேறு எந்த விதமான பெரிய தொழிலும் கிடையாது. தஞ்சாவூர் ஜில்லாவில் பெரிய அளவில் ஒரு காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்கலாம் என்று அடிக்கடி நான் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறேன். காகிதத் தொழிற்சாலைக்கு வேண்டிய கரும்புச் சக்கை, வைக்கோல் மூங்கில் இவைகளெல்லாம் தஞ்சாவூர் ஜில்லாவில் நிரம்பக் கிடைக்கின்றன. நீங்கள் பார்த்தீர்களானால் பெரிய ஆறுகள் நிறைய இருக்கின்றன, சிறிய ஆறுகளும் இருக்கின்றன. ஆறுகளின் இரண்டு கரைகளிலும் நெடுக படுகைகளில் பார்த்தீர்களானால் நிரம்ப மூங்கில் இருக்கின்றது. நான் இதை அடிக்கடி மந்திரிகள் வரும்போதெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கின்றேன். அவ்வளவு வசதிகளும் இருக்கின்றன. வைக்கோல்பற்றிச் சொல்லவேண்டியதில்லை, எங்கள் ஜில்லாவில் 13 லட்சம், 14 லட்சம் ஏக்கர் நிலங்களில் நெல் விளைவிப்பதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை. காகிதத் தொழிற்சாலையைப் பெரிய அளவில் துவக்குவதற்கு எல்லா வசதிகளும் அங்கு இருக்கின்றன. ஆகவே, எங்கள் ஜில்லாவில் ஒரு பெரிய காகிதத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் தஞ்சாவூர் ஜில்லாவைப் பொறுத்தவரையிலே, ரயில்வே பணம் ஒரு கோடி அல்லது 1½ கோடி ரூபாய் இருக்கிறதென்று நாம் ஒவ்வொருவரும் ஏதேதோ சொல்லிக் கொண்டிருக்கிறோம். நிச்சயம் ஒரு கோடிக்கு மேல் அதிகமான ரூபாய் இருக்கிறதாகத் தெரிகிறது. அதை நல்ல முறையில் பயன்படுத்தி, ஏதாவது ஒரு உருப்படியான காரியத்தைச் செய்வதற்கு சர்க்கார் முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியன் சேர்மன்களைக் கேட்டோமானால், 'இந்தப் பணத்தைப் பிரித்துக் கொடுத்து விடுங்கள், நாங்கள் ஏதாவது வேலை செய்து கொள்கிறோம்' என்று சொல்வார்கள். ஒரு கோடிக்கும் அதிகமான பணத்தை நாங்கள் எந்த நோக்கிலும் சேர்க்கவே முடியாது.



ஹைஸ்கூல் ஏற்படுத்தினாலும் பணம் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள், காலேஜுக்கும் பணம் வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அங்கங்கே உள்ளவர்களிடம் போய் அதற்காக நாங்கள் பணம் வசூல் செய்து, ரொம்ப கஷ்டப்பட்டு இம்மாதிரி காரியங்களை யெல்லாம் செய்யவேண்டியிருக்கிறது. இம்மாதிரியான நிலையிலே ஒரு கோடி ரூபாய் சேர்ப்பது என்பது எங்களால் முடியாத காரியம். ஆகவே, இந்தப் பணத்தை வைத்து ஏதாவது ஒரு நல்ல காரியம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாங்கள் 14 லட்சம் ஏக்கராவில் நெல் விளைவித்துக் கொண்டிருக்கிறோம். இம்மாதிரி அதிகமாக விளைச்சல் ஏற்படக்கூடிய எங்கள் தஞ்சாவூர் ஜில்லாவில் இந்தப் பணத்தைக் கொண்டு ஒரு விவசாயக் கல்லூரியும், ஒரு என்ஜினியரிங் கல்லூரியும் ஆரம்பிக்க வேண்டுமென்று நான் மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அந்த முறையில் சர்க்கார் ஒரு நல்ல முடிவு எடுக்க வேண்டும். சர்க்கார்தான் இதுபற்றி முடிவு செய்யவேண்டும். ஏதோ பணம் இருக்கிறது, அதை கொடுக்கப் போகிறார்களோ அல்லது கொடுக்க மாட்டார்களோ என்ற ஐயப்பாடுகள் எழுந்து கொண்டிருக்கின்றன. இம்மாதிரி மொத்தமாக ஒரு தொகையை வைத்துக்கொண்டு, ஒரு நல்ல காரியமாக, நாங்கள் ரொம்ப நாட்களாகக் கேட்டுக் கொண்டிருக்கிற விவசாயக் கல்லூரியையும், என்ஜினியரிங் கல்லூரியையும் எங்கள் ஜில்லாவில் ஆரம்பித்தால், எங்களுக்கு ரொம்பவும் திருப்தியாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. செ. மாதவன் :** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே இந்த அரசாங்கம் சமர்ப்பித்திருக்கிற வரவு செலவுத் திட்டத்தைப்பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். புதுமை இல்லாத ஒரு வரவு செலவுத் திட்டத்தை கனம் முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். மக்களுடைய உணர்ச்சியை அது பிரதிபலிக்கிறதா என்றால், அதுவும் இல்லை என்று கூறக்கூடிய நிலையில்தான் இருக்கிறது. அல்லது, இந்த அரசாங்கம் பேசி வருகிற சோஷலிச சமுதாயத்தை நிறுவுவதற்கு அந்த அடிப்படை உண்மையாவது இந்த வரவு செலவுத் திட்டத்தில் கிஞ்சித்தும் காணப்படுகிறதா என்றால், அதுவும் இல்லை தான். சோஷலிச சமுதாயத்தை அமைப்போம் என்று பல ஆண்டுகளாக வற்புறுத்தி வரக்கூடிய இந்த அரசாங்கம் வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும்பொழுது தங்களுடைய கொள்கைகளை நிறைவேற்றுவதற்கு வழிவகைகள் காணுவதுதான் முறையாகும். அந்த முறையிலே இந்த அரசாங்கம் தவறி வருகிறது என்பதைத்தான் நான் இங்கே சுட்டிக் காட்ட ஆசைப் படுகிறேன். சமதர்ம சமுதாயத்தைச் சிருஷ்டிக்க வேண்டுமானால், வரியற்ற வருமானத்தை இந்த அரசாங்கம் எப்படிப் பெருக்கப் போகிறது, அதன் மூலம் மக்களுக்கு புதிய நன்மைகளை எப்படிச் செய்யப் போகிறது என்பதைத் தெளிவாக்க வேண்டும். அதுவும் தெளிவாக்கப்பட்டதா, வரியற்ற வருமானத்தைப் பெருக்குவதற்கு வழிவகைகள் சொல்லப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. இருக்கிற

ஏற்றத்தாழ்வுகளை, சமுதாயத்திலே ஒரு பக்கமும் மற்றொரு பக்கமும் இருக்கக்கூடிய பொருளாதார வேறுபாடுகளைக் குறைப்பதற்கு இந்த அரசாங்கம் முயற்சி செய்திருக்கிறதா, அதற்காக இந்த பட்ஜெட்டில் ஏதாவது கூறப்பட்டிருக்கிறதா என்றால், அதுவும் இல்லை என்ற குற்றச்சாட்டைத்தான் நாம் கூறவேண்டியவர்களாக இருக்கிறோம். அப்படிப்பட்ட நிலை ஏன் இந்த அரசாங்கத்திற்கு வர வேண்டும்? ஒரு நகராட்சி தான் தன்னுடைய வருமானத்தை எப்படி பெருக்கியிருக்கிறோம் என்பதை தன்னுடைய குடி மக்களுக்கு எடுத்துக் காண்பிக்கும். ஒரு நகராட்சி தான் தாங்கள் போட்டிருக்கக்கூடிய வரியை எப்படி வற்புறுத்தி வசூல் செய்திருக்கிறோம் என்று எடுத்துக் காண்பிக்கும். அந்த முறையிலே வருமானத்தை உயர்த்திக் காண்பித்திருக்கிறோம் என்று பெருமை பேசக்கூடியது நகராட்சி மன்றம்தான். சமதர்ம சமுதாயத்தை உருவாக்கக்கூடிய இந்த அரசாங்கம் செய்யக்கூடிய வேலை இதுதானா என்று எனக்குச் சந்தேகம் வருகிறது. அமைச்சர் அவர்களின் உரையை நான் படிக்கும்பொழுது, இதைப்பற்றித் தான் அவர்கள் விரிவாகக் கூறியிருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது. 'நாங்கள் வருமானத்தைப் பெருக்கிக் காண்பித்திருக்கிறோம், வரியை வசூலித்துக் காண்பித்திருக்கிறோம், பல ஆண்டுகளுக்கு முன்னால் இந்த அரசாங்கத்தினுடைய பட்ஜெட் இத்தனை கோடி ரூபாய், இன்றைக்கு இத்தனை கோடியாக உயர்த்திக் காண்பித்திருக்கிறோம்' என்று பெருமையாகப் பேசப்படுகிறதே ஒழிய, புதியதாக உருவாகக்கூடிய திட்டங்களைப்பற்றி, அவர்கள் சொல்லக்கூடிய கொள்கைகளை எப்படிச் செயல்படுத்தப் போகிறார்கள் என்ற விரிவான விளக்கங்கள் இந்த உரையிலே இல்லை என்பதையும் நான் கூற ஆசைப்படுகிறேன். பொதுவாக இந்த அரசாங்கம் எப்பொழுதும் தன்னுடைய பழைய கருத்துக்களைத் தான் கொண்டிருக்கிறது. வரக்கூடிய வருமானத்தைக் குறைவாக மதிப்பிடுவது, இப்படி மதிப்பிட்டுவிட்டால் பின்னாலே அதை ஈடு செய்துகொள்ளலாம் என்ற ஒரு அடிப்படைக் கருத்தை இந்த அரசாங்கம் தொடர்ந்து பின்பற்றி வருகிறது. அதிலும் புதுமையைக் காண முடியவில்லை. ஆனால், உரையிலே விரிவாகக் கூறியிருக்கிறார்கள், 'ஐந்தாண்டுத் திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்றி வருவதில் நாங்கள் பெருமைப்படுகிறோம்' என்று கூறியிருக்கிறார்கள். அதற்கு அவர்கள் காட்டியிருக்கிற காரணம் 'நாங்கள் அதிகக்கோடி ரூபாய் செலவழித்திருக்கிறோம்' என்று அதற்கு விளக்கம் தந்திருக்கிறார்கள். ரூபாய் அதிகமாகச் செலவழிக்கிறோம் என்ற அந்த அடிப்படையிலே பெருமைப்பட்டுக் கொள்கிறார்களே தவிர, சமதர்ம சமுதாயத்தை உருவாக்கக்கூடிய புதிய திட்டங்களை இந்த அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறதா என்றால், இல்லை என்றுதான் கூறவேண்டும். சோஷலிச சமுதாயம் என்ற அடிப்படையில், தேசியமயமாக்க வேண்டும் என்பதை அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்ள வேண்டியதுதான். அதைப் பற்றி இந்த அறிக்கையில் ஏதாவது ஒரு வார்த்தை இருக்கிறதா என்றால், இல்லை. புதிய தொழில்களை இதுவரையில் அரசாங்கம் எடுத்து நடத்தவில்லை. இனிமேலாவது எடுத்து நடத்துவதற்கு முயற்சி செய்யப்போகிறோம் என்று கூறப்பட்டிருக்கிறதா என்றால்





பட்டும் படாததுமாக, மறைமுகமாகச் சொல்லப்பட்டிருக்கிறதே ஒழிய, தெளிவுபட, திட்டவட்டமாக இந்த அரசாங்கம் எந்த எந்தத் தொழில்களை தேசியமயமாக்க முற்படுகிறது அதன் மூலம் வரியற்ற வருமானத்தை அதிகமாக்கப் போகிறது என்பதற்கு அமைச்சர் அவர்களால் விளக்கம் கூறப்படவில்லை. அப்படிக் கூறப்படாததற்குக் காரணம் என்ன என்பதுதான் எங்களுக்குப் புலப்படவில்லை.

திட்டத்தைப்பற்றி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நாங்களும் இந்த மன்றத்தில் அடிக்கடி வற்புறுத்தி வருகிறோம், மாநிலத்திற்கு என்று ஒரு திட்டக் கமிஷன் வேண்டும், மாநிலத் திட்டங்களைத் தனியாக ஆராய்ந்து செயல்படுத்துவதற்கு ஒரு தனிக் கமிஷன் வேண்டும். எல்லாவற்றிற்கும் மத்திய சர்க்காரை எதிர்பார்க்கக் கூடாது. அவர்கள் கொடுக்கக்கூடிய திட்டங்களை நாம் செயல்படுத்துவதாக மட்டும் இருக்கக் கூடாது, 'நாங்கள் போடக்கூடிய திட்டங்களுக்கு நீங்கள் அனுமதி தாருங்கள், அதற்குப் பொருள் உதவி செய்யுங்கள்' என்று கெஞ்சிக் கேட்கக்கூடிய நிலையில் இருக்கக் கூடாது என்பதை வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். ஸ்டேட் பிளானிங் கமிஷன் இருந்தால் என்ன தவறு என்று எனக்குப் புரியவில்லை. அப்படி மாநிலத்திற்கு என்று ஒரு பிளானிங் கமிஷன் தனியாக இருந்தால்தான், திட்டங்களை அந்தக் கமிஷன் ஆராய்ந்து, அரசாங்கக் கொள்கைகளைச் செயல்படுத்துவதற்கும், புதிய திட்டங்களை உருவாக்குவதற்கும், அதன் மூலம் புதிய வருமானத்தை எப்படிப் பெற முடியும் என்று எல்லாம் ஆராய்ந்து பரிசீலனை நடத்துவதற்கும் ஒரு வாய்ப்பு ஏற்படும். அந்த வாய்ப்பையும் இந்த அரசாங்கம் தொடர்ந்து புறக்கணித்து வருகிறது என்று நான் கூற ஆசைப்படுகிறேன்.

இன்னொன்று, இருக்கக்கூடிய கருத்துக்களில் முரண்பாடான கருத்துக்களைப் பார்க்கிறோம். அந்தக் கருத்துக்களின் உண்மை பற்றிச் சந்தேகப்படக்கூடிய கருத்துக்களாக இருப்பதையும் பார்க்கிறோம். விவசாய உற்பத்தியைப்பற்றி நீண்ட முறையிலே தன்னுடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள் அமைச்சர் அவர்கள். விவசாய உற்பத்தி உண்மையாகக் கூடியிருக்கிறதா? அப்படிக் கூடியிருந்தால் இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கக்கூடிய பஞ்சத்திற்குக் காரணம் என்ன? அதையும் தெளிவு படுத்த வேண்டும். விவசாய உற்பத்தியைக் கூட்டியிருக்கிறோம், அல்லது அடுத்த திட்டத்திலே அதிகரிக்கப் போகிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறதே ஒழிய, 7 லட்சம் டன் அதிகமாக உற்பத்தி செய்திருக்கிறோம் என்ற புள்ளிவிவரம் ஏட்டில் தரப்பட்டிருக்கிறதே ஒழிய, நாட்டிலே உணவுப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறதே. அதற்குக் காரணம் என்னவென்று சொல்லப்படவில்லை. ஒரு தாலுகாவிலிருந்து இன்னொரு தாலுகாவுக்குக்கூட நெல் கொண்டு போகக் கூடாது என்று இந்த அரசாங்கம் உத்தரவு போடக்கூடிய நிலையிலே இருக்கிறதே, அதற்குக் காரணம் என்ன? அதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். உற்பத்தியைப் பெருக்கி இருக்கிறோம் என்ற ஒரு காரணத்தைச் சொல்லி உண்மை நிலையை மறைக்கிறார்களா என்று இந்த மாநில மக்களுக்குச் சந்தேகமாக

இருக்கிறது. இந்த மாநில மக்களுக்குப் பொறுப்பானது இந்த மாநில அரசாங்கம் தான். அறிக்கையில் இது பற்றித் தெளிவாகக் கூறப்படவில்லை, சந்தேகத்திற்குத்தான் இடம் இருக்கிறது.

சேலம் உருக்கு ஆலையைப்பற்றி பல முறை இந்த மன்றத்தில் பேசப்பட்டு, பல அமைச்சர்கள் உறுதி தந்திருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு அதுபற்றி சந்தேகம் இருக்கிறது. அதன் நிலைமையைப் பற்றி தெளிவுபடுத்த வேண்டாமா? என்ன சொல்லி இருக்கிறார்கள்? மறை பொருளாக, 'நாங்கள் நம்புகிறோம்' என்று சொல்லுகிறார்கள். எத்தனை காலத்திற்கு நம்புகிறார்கள்? அதில் ஏற்பட்டிருக்கக்கூடிய கேடு என்ன? அந்தக் கேட்டை நிவர்த்திக்க இந்த மாநில அரசு என்ன செய்திருக்கிறது? ஒரு பக்கம் மத்திய சர்க்கார் மறுக்கும் தொனியில் பேசுகிறது; ஆனால், இங்கே மாநில சர்க்கார் அதை ஆரம்பிப்போம் என்று பேசுகிறது. அப்படி ஆரம்பிக்கும் பட்சத்தில், அது மாநில சர்க்கார் உடைமையாக இருக்குமா அல்லது மத்திய சர்க்கார் உடைமையாக இருக்குமா? அதிலே சந்தேகம். இப்படிப்பட்ட சந்தேகங்களை நிவர்த்திக்க வேண்டாமா? மறைபொருளாகக் குறிப்பிட்டால் மட்டும் போதுமா?

அதே மாதிரித்தான், ஹொகனக்கல் திட்டமும். மைசூர் மாநில சர்க்கார் சம்மதம் அளித்ததா இல்லையா? அவர்கள் தெரிவித்தது என்ன? மத்திய சர்க்காருடைய நிலைமை என்ன? மைசூர் சர்க்கார் ஆட்சேபித்தால், அவர்கள் எதிர்ப்பு என்ன? இதற்கெல்லாம் விளக்கம் வேண்டாமா? அப்படி எந்த விளக்கமும் கொடுக்கப்படவில்லை. ஆனால் ஒரு புதிய வார்த்தை வந்திருக்கிறது இப்பொழுது. தஸ்தூர் கம்பெனி அறிக்கை நமக்குச் சாதகமாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி அதைத் தைரியமாகச் சொன்னதை நான் வரவேற்கிறேன். அப்படிப்பட்ட அறிக்கையை இந்த மன்றத்தின் முன் வைக்கக் கூடாதா? வைக்க வேண்டாமா? நாட்டிலே அது பற்றிய சர்ச்சை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அது பற்றித் தெளிவாகப் பேசக் கூடாதா? பேசினால் என்ன தவறு? இன்றைக்கு உள்ள சூழ்நிலையிலே நமது பொருளாதாரத்திற்கு அது ஒவ்வாதது என்று சொல்கிறார் மத்திய சர்க்காரிலே உள்ள ஒரு அமைச்சர். நம்முடைய வளத்திற்கு அது அவசியம் என்று நம்முடைய தொழில் அமைச்சர் சொல்லுகிறார்கள். இரண்டிற்கும் முரண்பாடு இருக்கிறது. மாநில சர்க்காரும், மத்திய சர்க்காரும் ஒரே கட்சி ஆட்சியில் இருக்கும் போதும், இப்படிப்பட்ட முரண்பாடு ஏற்பட்டிருந்தால், அதற்கான விளக்கம் கொடுக்க வேண்டிய பொறுப்பு இந்தச் சர்க்காருக்கு இல்லையா? பொறுப்பைத் தட்டிக் கழிக்கப் பார்க்கிறார்களா? அல்லது பயப்படுகிறார்களா என்று புரியவில்லை.

வரியை ஏய்ப்பவர்களைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை முழு மனதோடு வரவேற்கிறேன். ஆனால், அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும்போது, அதற்கான முயற்சிகள் எடுக்கும் போது, என்ன என்ன திட்டங்களை வரையறுத்து வைத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. சர்க்காருடைய சட்டமே செல்லாது





என்று உயர் நீதி மன்றத்திலே சொல்லுகிறார்கள். வரியை ஏமாற்றுகிறவர்களைத் தண்டிக்க, வரியை வசூலிக்க பயன்படுத்தும் விதிகள் தவறு என்று உயர் நீதி மன்றம் சொல்லியிருக்கிறது. விதிகளைப் பரிசிலனை செய்ய என்ன முயற்சி எடுத்தார்கள்? சர்க்காருக்கு அதிகாரம் இல்லையா, அதிகாரம் இருந்து அமலுக்குக் கொண்டு வர அஞ்சுகிறதா என்று புரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் தெளிவு. இந்த நாட்டிலே வரியை ஏய்க்கிறவர்கள் இருக்கிறார்கள், கோடிக்கணக்கான ரூபாய்கள் வசூலிக்கலாம், அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தால். அப்படி வசூலிக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது என்பதெல்லாம், இன்றைக்கு 15 ஆண்டுகளுக்குப் பிறகாவது இந்த சர்க்கார் ஒத்துக்கொள்ளுகிறார்கள். வசூல் முறைபற்றி சிந்தித்துக் கொண்டு இருப்பதாக அமைச்சர் அறிக்கையில் இருந்து புலப்படுகிறது. ஆனால் திட்ட வட்டமாக வரி டிமிக்கி கொடுப்பவர்களிடமிருந்து வசூலிப்போம் என்று தெளிவாகச் சொல்லவில்லை.

அமைச்சர் அவர்கள் இறுதியாகத் தம்முடைய உரையில், சில அருமையான வாசகங்களைச் சொல்லி இருக்கிறார்கள். சட்டத்தையும், ஒழுங்கையும் பற்றிப் பேசும்போது, உணர்ச்சி வசப்படாமல் அங்கத்தினர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார்கள். அதை மனப் பூர்வமாக ஆதரிக்கிறேன். ஆனால் உணர்ச்சி வசப்பட்டவர் யார்? உணர்ச்சியைத் தூண்டியவர் யார்? இந்த மாநிலத்திலே நடந்த நிகழ்ச்சிகளினால் அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டதற்கு யார் பொறுப்பு? இந்த மன்றத்திலே போன சட்டசபைக் கூட்டத்திலே இந்தப் பிரச்சினை எழுப்பப் பட்டது. அப்பொழுது நம் முதல் அமைச்சர் பேசிய பேச்சுக்களே விளக்கம் தருகின்றன. என்னென்ன அடக்குமுறைகளைக் கையாள்வார்கள் என்று பேசினார்கள். அமைதியாகக் கூட்டம் போட்டாலும் தடுப்போம், கருப்புக் கொடி கட்டினால் அதை அறுப்போம், அதைப் போலீசார் அறுப்பார்கள் என்று பேசினார்கள். மக்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று பேசினார்கள். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் மக்களிடத்தில் குழப்பம் ஏற்படும் வண்ணம், எழுச்சி ஊட்டும் வண்ணம், வெறியூட்டும் வண்ணம் மாற்றுக் கட்சிகளைப் பற்றிப் பேசி இருக்கிறார்களே என்று இந்த மன்றத்திலே கேட்கப் பட்ட போது, என்ன பதில் சொன்னார்கள்? இன்றைக்குச் சட்டத்தையும் அமைதியையும் பற்றிக் குறிப்பிட்டிருக்கும், அமைச்சர் அன்றைக்கு என்ன சொன்னார்கள்? அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் மட்டும் என்ன, நானும் சொல்லுகிறேன், கருப்பு கொடியை அறுப்போம்; போலீகாரர்கள் அறுப்பார்கள் என்று கூறினார்கள். இதெல்லாம் பலாத்காரத்தைத் தூண்டுவது ஆகாதா? போலீஸ்காரர்களைத் தூண்டிவிடுவது ஆகாதா? அதே சமயத்தில் முதல் அமைச்சருடைய சரித்திரத்தைப் பார்ப்போம். அவர்கள் இயற்கையாக 1957-வது ஆண்டில் பேசியிருக்கிறார்கள். வெள்ளைக்காரர் காலத்தில் தனக்கு என்ன ஏற்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். வெள்ளைக்காரன் காங்கிரஸ் கட்சியை துரோகக் கும்பல், துரோக மனப்பான்மை உள்ள கட்சி என்று

குறிப்பிட்டான்; சென்னை மாநகரத்திலே போலீசார் லத்தி என் முதுகைப் பதம் பார்த்தது, அது வலித்தது என்று 57-ல் இந்த சட்ட மன்றத்திலே இதே முதல் அமைச்சர் சொல்லியிருக்கிறார். இதே முதல் அமைச்சர் இன்றைக்குப் போலீசாரைத் தூண்டுவதற்கு என்ன காரணம்? வெள்ளைக்கார அரசாங்கம் எதிர்க் கட்சியை அன்று துரோகக் கட்சி என்று வருணித்தது, போலீசார் லத்தி கனம் பக்தவத்சலம் முதுகைப் பதம் பார்த்தது. இன்றைக்கு அதே நிலையை இவர்கள் உண்டாக்கியிருக்கிறார்கள் என்று எங்களுக்கு அல்ல, மாநில மக்களுக்குத் தெரிகிறது. அதே தூண்டுதலை இந்த அரசாங்கம் இன்றைக்கு நடத்தியிருக்கிறது. அன்றைக்கு வெள்ளைக்காரன் தர்ப்பார் நடந்தது, இன்றைக்கு வெள்ளைக்காரன் தர்ப்பார் பக்தவத்சலம் தர்ப்பாராக நடக்கிறது. (ஆரவாரம்). அதுதான் மக்கள் உணர்ச்சியைத் தூண்டிவிட்டிருக்கிறது; வெறி உணர்ச்சியை ஊட்டியிருக்கிறது என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன். அன்றைக்கு அவர்கள் பேசிய பேச்சைப் பார்க்க வேண்டும். "அமைதியாக நடந்தாலும் அரசாங்கம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது" என்றார்கள். அமைதிக்குப் பங்கம் வரும் வகையில் பேசினார்களா இல்லையா என்று சிந்திக்க வேண்டும். அவர்கள் அப்படிப் பேசியது பலாத்காரத்தைத் தூண்டியது ஆகாதா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதோடு நின்று விட்டாரா? துக்கம் கொண்டாட வேண்டும் என்றால், வீட்டில் துக்கம் கொண்டாடுங்கள் என்று சொன்னார்கள். அருமையான வாசகங்கள். சட்ட மன்றத்திலே முதல் அமைச்சர் வீட்டிலேயே துக்கம் கொண்டாடுங்கள் என்று சொன்னாரே என்று எங்கள் தலைவர் வீட்டிலேயே துக்கம் கொண்டாடுங்கள் என்று சொன்னார்கள். ஆனால் அதையும் மறுத்தது யார்? கனம் முதல் அமைச்சர் அவர்கள் போன் செய்து, எஸ்.எஸ்.ஆர். வீட்டில் கொடியை அறுக்கச் சொன்னார்கள். இது பலாத்காரம் இல்லையா? . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அங்கத்தினர் பொறுப்போடு பேசவேண்டும். நான் போன் செய்தேன் என்று சொன்னார். தெரிந்து பேசவேண்டும், பொறுப்பை உணர்ந்து பேசவேண்டும். நான் ஒன்றும் சொல்லவில்லை.

**திரு. செ. மாதவன்:** பொறுப்பு? இப்பொழுது இன்னொரு பொறுப்பும் இருக்கிறது. ஒரு தனிப்பட்டவர் வீட்டில் ஏறிக் கொடியை அறுப்பதைத் தடுக்க மறந்துவிட்டார் அமைச்சர் அவர்கள். அதற்காவது போன் செய்தாரா என்று கேட்க விரும்புகிறேன். அதோடு நின்றாரா? மாணவர்கள் ஊர்வலம் அமைதியாக நடந்தது. அவர்கள் உணர்ச்சியை மதித்து, அறிக்கை விட்டார்களா? எவ்வளவு கொந்தளிப்பு ஏற்பட்டிருந்தது. நூற்றுக் கணக்கான மாணவர்கள் தாக்கப் பட்டார்களே, அவர்களுக்கு ஆறுதலாக தங்களுடைய கொள்கையை விளக்கி அறிக்கை விட்டார்களா? அந்த முதல் அமைச்சர் இன்றைக்குப் பேசுகிறார்கள் அமைதியைப்பற்றி. ஆயிரக்கணக்கான மாணவர்கள் பலியான பிறகு இன்றைக்குப் பேசுகிறார்கள், பைலிங்க் வலிஸம், போராடுவேன், வெற்றி பெற்றுத்தான் திரும்புவேன், என்ற முழக்கங்கள் இன்றைக்குச் சொல்லுகிறார்கள். 25-ம் தேதி



இந்தப் பேச்சு ஏன் வரவில்லை? சிந்திக்க வேண்டாமா? ஒரு ஆறுதல் வார்த்தை இந்த முதல் அமைச்சர் சொன்னார்களா? கொலைகள் நடந்தன. கலகங்கள் நடந்தன. எத்தனை உயிர்கள் போயின? ஒரு ஆறுதல் வார்த்தை சொன்னார்களா? பேரப்பிள்ளை எடுத்து, பிள்ளைப் பாசத்தை அறிந்து அனுபவித்த இந்த முதல் அமைச்சர் வாயிலிருந்து ஒரு ஆறுதல் வார்த்தை வரவேண்டாமா? அப்படி வரவில்லையே என்று உண்மையிலேயே வேதனைப்பட வேண்டியிருக்கிறது.

நடந்த புரட்சிக்கும், பலாத்காரத்திற்கும், கொலைகளுக்கும், யார் காரணம்? அதையும் சிந்திக்க வேண்டும். 25-ம் தேதி முதல் நிகழ்ச்சி நடந்தது. அதுதான் காரணம். வன்முறைதான் காரணம்.

மாணவர்கள் அமைதியாக ஊர்வலம் வருவதாக மதுரையில் அறிவித்திருந்தார்கள். ஆனால், என்ன நடந்தது? கலெக்டர் அறிக்கை விட்டிருக்கிறார். அந்த அறிக்கையை இந்தச் சர்க்கார் இதுவரை மறுக்கவில்லை. அது என்ன அறிக்கை? காங்கிரஸ் கட்டடத்தின் முன்னாலே ஊர்வலம் செல்கிறது. காங்கிரஸ் கொடி கட்டிய ஜீப்களில் ரௌடிகள் வந்தார்கள். இதை இல்லையென்று மறுக்கமுடியுமா? அவர்கள் வந்து மாணவர்களைத் துன்புறுத்தினார்கள். காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்திலிருந்து அரிவாளைக் கொண்டுவந்தார்கள். ஆயுதங்களோடு வந்தார்கள். மாணவர்களை வெட்டினார்கள். இதை நாம் சிந்திக்க வேண்டாமா? முதலமைச்சர் அவர்கள் 'இல்லை' என்று மறுக்க முடியுமா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? (திருமதி பி. கே. ஆ. லக்ஷ்மி காந்தம்: அதை நிரூபிக்க முடியுமா?) (அதற்குப் பின்னாலேதான் இவ்வளவு புரட்சிகளும் நடந்திருக்கின்றன. 'நிரூபிக்க முடியுமா?' என்று கேட்பவர்கள்தான் நிரூபிக்க வேண்டும். அவர்கள் அந்த ஊரிலே இருக்கிறவர்கள். வெட்டியது உண்மை என்று தெரிந்தும், வெட்டியவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அதுவும் இந்த மன்றத்திற்குச் சொல்லப்படவில்லை. அமைதியாகச் சென்ற மாணவர்கள் ஊர்வலம் ஓரிடத்திலே மட்டும்—காங்கிரஸ் கட்சி அலுவலகத்திற்கு முன்னால் மட்டும்—தாக்கப்பட்டதற்குக் காரணம் என்ன என்பதை இதுவரை எந்த அதிகாரியும் அமைச்சரும் விளக்க முன்வரவில்லை. அதன் விளைவுதான் அதைத் தொடர்ந்துதான் வன்முறைச் செயல்களில் மாணவர்களை ஈடுபட வைத்ததா என்று நாம் சிந்திக்க வேண்டும். இதற்கெல்லாம் காரணம் என்ன என்பதை இதுவரை எந்த அதிகாரியும் எந்த அமைச்சரும் விளக்க முன்வரவில்லை. அதன் விளைவுதான் அதைத் தொடர்ந்துதான் வன்முறைச் செயல்களில் மாணவர்களை ஈடுபட வைத்ததா என்று நாம் சிந்திக்க வேண்டும். இதற்கெல்லாம் காரணம் யார்? யார் வன்முறைச் செயல்களை முதலில் தூண்டியது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். 'நிரூபிக்க வேண்டும்' என்று சொல்லிய அம்மையாருக்கே நன்றாகத் தெரியும்.

மதுரைக் கல்லூரியில் என்ன நடந்தது? யார் தாக்கப்பட்டார்கள் என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கல்லூரியின் ப்ரின்ஸிபால் தாக்கப்பட்டிருக்கிறார். கல்லூரியின் தலைவர்

தாக்கப்பட்டிருக்கிறார். தாக்கியதற்குப் பின்னால், அவரை ஹாஸ்பிடலில்கூட 'அட்மிட்' செய்யமாட்டேன் என்றார்கள். அங்கேயுள்ள உயர்தர போலீஸ் அதிகாரி—டி. ஐ. ஜி., அவர்கள் உடனே அவரிடம் சென்று மன்னிப்புக் கேட்டார், அடித்ததற்காக. போலீசார் அடித்துவிட்டு, கல்லூரித் தலைவரிடம் சென்று மன்னிப்புக் கேட்டார்கள் என்றால், தவறு யார் மீது என்பதற்கு விளக்கமே தேவையில்லை. இப்படிப்பட்ட நிலை ஏன் ஏற்பட்டது?

மதுரை தியாகராஜர் பொறியியற் கல்லூரியில் என்ன நடந்தது? மாணவர்கள் இருக்கும் ஒரு அறையிலே கண்ணீர்ப் புகை. கதவைச் சாத்திக்கொண்டு கண்ணீர்ப் புகை, ஜன்னலை மூடிவிட்டு உள்ளே கண்ணீர்ப் புகை. அதோடாவது விட்டார்களா? போலீசார் அடித்த அடியிலே, லத்தியிலே இருந்த பூண் அறையிலே விழுந்துவிட்டது. நாம் அந்த நிகழ்ச்சியைப் பார்க்கவில்லையா? அந்தக் கல்லூரியில் நுழைவதற்குப் போலீசார் பர்மிஷன் வாங்கினார்களா? கல்லூரிக்கு உள்ளே போலீசார் சென்று கண்ணீர்ப் புகை விடவேண்டுமென்று சட்டத்திலே இருக்கிறதா? இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த நிகழ்ச்சிகள் போலீசாரால் நடத்தப்படவில்லையா? இது பலாத்காரம் இல்லையா? இதையெல்லாம் மறுக்க முடியுமா, என்று நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்க ஆசைப்படுகிறேன்.

போலீஸ் ஆட்சி இந்த முதலமைச்சர் ஆட்சியிலே வந்துவிட்டது. ரூல் ஆஃப் லா கிடையாது. சட்டத்தின்படியுள்ள ஆட்சி புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டு முதல் அமைச்சரின் விருப்பு வெறுப்புத்தான் நாட்டிலே சட்டமாக இருக்கிறதேயொழிய, உண்மையிலேயே அரசியல் அமைப்புச் சட்டப்படி ரூல் ஆஃப் லா இந்த நாட்டில் கிடையாது என்று நான் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். அதனுடைய விளைவுதான் மிலிடரி ஆட்சி. போலீஸ் ஆட்சியாவது பரவாயில்லை. இன்று மிலிடரியைக் கூட்டிக் கொண்டு வந்து, பதவிக்குப் பக்கபலமாக வைத்துக் கொண்டிருக்கும் ஆட்சியை நாங்கள் மிலிடரி ஆட்சி என்றுதான் குறிப்பிட வேண்டியிருக்கிறது. (எதிர்க் கட்சியில் சில அங்கத்தினர்கள்; ஷேம், ஷேம்.) மிலிடரியைக் கொண்டுவந்த பிறகு என்ன ஆனது? கூடலூரில் பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள். வீடுகளைச் சூறையாடினார்கள் போலீசார். இதை 'இல்லை' என்று சொல்ல முடியுமா? நூற்றுக்கணக்கானவர்கள் கூடலூரில் சுட்டுத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இதையும் 'இல்லை' என்று சொல்ல முடியுமா? இதற்கெல்லாம் யார் பொறுப்பு? அப்படிப்பட்ட மிலிடரி ஆட்சியை இந்த நாட்டில் கொண்டுவந்தார்களே, அதற்குப் பின்னராவது ஒரு இரக்கமான வார்த்தை உண்டா? இவ்வளவு கொலைகள் நடந்துவிட்ட பிறகாவது ஒரு இரக்கமான வார்த்தை உண்டா? இப்போதாவது ஒரு இரக்கமான வார்த்தை வாராதா என்று இந்த நாட்டு மக்கள், மூன்று கோடி மக்கள் எதிர் பார்த்தார்கள். வந்ததா? அதற்குப் பதிலாக என்ன வந்தது, முதல் அமைச்சரிடமிருந்து? "இத்தனை வன்முறைச் செயல்களுக்கெல்லாம் காரணம், இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளும், திராவிட முன்னேற்றக் கழகமும்" என்பது முதலமைச்சர் அவர்களின் ஒரு நாள் அறிக்கை. இன்னும் சில நாட்கள் கழித்து, திடீர் என்று ஒரு அறிக்கை, "இல்லை இல்லை இதற்கெல்லாம் காரணம் சாராயம் காய்ச்சுகிறவர்களும் கள்ளக் கடத்தல்காரர்களும்தான்" என்று வருகிறது. அப்படியானால் திராவிட முன்னேற்றக் கழகத்தினரைக் கள்ளக்கடத்தல்காரர்கள் என்று முதல் அமைச்சர் நினைக்க வேண்டும், இடதுசாரி கம்யூனிஸ்டுக்காரர்களைச் சாராயம் காய்ச்சுகிறவர்கள் என்று கருதி, அவ்வாறு அவர்கள் வர்ணித்திருக்க வேண்டும். முதலமைச்சர் அவர்கள் விட்ட அறிக்கைகளில் இரண்டாவது அறிக்கைதான் சரி என்று ஒப்புக்கொண்டிருக்க வேண்டும். ஆனால், இரண்டு அறிக்கைகளையும் விட்டு அவருடைய ஆட்சியின் கையாலாகாத்தனத்தைக் காட்டிக்கொண்டார்கள், முதல் அமைச்சர் அவர்கள், இதையும் 'இல்லை' என்று கூற முடியுமா? நான் முதல் அமைச்சர் அவர்களுக்குச் சொல்கிறேன். நாங்கள் உங்கள் உள்ளத்தில் இரக்கமான வார்த்தையை எதிர் பார்த்துக் கொண்டிருக்க மேலும், மேலும் மக்களைப் புண்படுத்தும் வார்த்தைகளை ஏன் சொல்கிறீர்கள்? இதையும் சிந்திக்க வேண்டும். இதைப்பற்றிப் பத்திரிகை போட்டால் பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்கக் கடைசி ஆயுதத்தைப் பயன்படுத்தப் பார்க்கிறது இந்த அரசாங்கம். டிஃபென்ஸ் ஆப் இந்தியா ரூல்ஸை இந்த அரசாங்கம் தங்களுடைய சுயதேவைக்காக, தங்களுடைய சுயநலத்திற்காக, தங்களுடைய கட்சி நலத்திற்காக முதல் அமைச்சர் பதவியில் இருக்க வேண்டும் என்ற எண்ணத்திற்காகத் தான் பயன்படுத்துகிறது . .



**கனம் உதவி சபாநாயகர்:** கேஸ் ஏதாவது இருந்தால் அதைப் பற்றிக் குறிப்பிட வேண்டாம்.

**திரு. செ. மாதவன்:** கேஸைப்பற்றி நான் சொல்லவில்லை. டிஃபென்ஸ் ஆப் இந்தியா ரூல்ஸைத் தங்களுடைய சுயநலத்திற்காகப் பயன்படுத்தி வருகிறது இந்த அரசாங்கம் என்ற குற்றச்சாட்டை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். ஒரு அறிக்கை விடுகிறார்கள் என்றால், அந்த அறிக்கையைப் போட்டால் உடனே டிபென்ஸ் ஆப் இந்தியா ரூல்ஸ். இது எப்படி வந்தது? சீனாக்காரனை எதிர்ப்பதற்காகக் கொண்டு வரக்கூடிய பாதுகாப்புச் சட்டத்தை, திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து தங்களுடைய பதவியைப் பாதுகாத்துக் கொள்வதற்கு இந்த அரசாங்கம் பயன்படுத்துகிறது என்ற குற்றச்சாட்டை இங்கே நான் வைக்க விரும்புகிறேன். யார் யார் மீது டிபென்ஸ் ஆப் இந்தியா ரூல்ஸைப் போடுவது? செக்ஷன் 151-இன் கீழ் கேஸ் போட்டால் 'ஹேபியஸ் கார்ப்பஸ்' வந்துவிடும், சர்க்காரிலுள்ள வண்டவாளமெல்லாம் வெளி வந்துவிடும். இதை அமைச்சரும் போலீஸ்காரர்களும் உணருகிறார்கள். உடனே, டிபென்ஸ் ஆப் இந்தியா ரூல்சைப் பயன்படுத்தி, கோர்ட்டுக்குச் செல்ல முடியாத சூழ்நிலையை உருவாக்க வேண்டும், இவர்களை மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்ற தீய எண்ணத்தோடு ஒரு சில—கட்சித் தலைவர்களை—திராவிட முன்னேற்றக் கழகத்தின் உதவித் தலைவர் உட்பட அத்தனை பேரையும்—தங்கள் சுயநலத்திற்காக இந்த அரசாங்கம்

பழிவாங்குவதற்காக இப்படிச் செய்கிறது என்பதையும் நான் இங்கே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மாணவர்களை யார் தூண்டி விட்டது என்பதற்கு இதுவரை விளக்கம் கூறவில்லை. 'தூண்டிவிட்டார்கள்' என்ற சொற்களே தவறானவை என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். காரணம், காங்கிரஸ் கட்சியிலே கூட, பொறுப்பான அமைச்சர்கள் உட்பட பொறுப்பான பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட இந்தச் சபையிலேகூட சில பேர், 'மக்களுடைய எழுச்சி' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். 'மக்களுடைய இந்த எழுச்சிக்குத் தலை வணங்குகிறோம். அதற்காக உண்ணாவிரதம் இருக்கிறோம்' என்று சொல்லக்கூடிய நிலைதான் இந்த நாட்டிலே உருவாகியிருக்கிறதே தவிர, 'ஒருசில கட்சிகளின் தூண்டுகோல்' என்று சொல்வதற்கு யாருமே முன் வரவில்லை, நம்முடைய முதலமைச்சரைத் தவிர. ஏன் அப்படிச் செய்தார்கள்? பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி எதிர்க்கட்சி உறுப்பினர்களின் உரிமையைப் பறித்துத்தான் இந்தப் பதவியில் இருக்க வேண்டுமா? இத்தனை கொலை செய்ததற்குப் பின்னாலும் இந்தப் பதவியில் இருக்க வேண்டுமா? ஜாலியன்வாலாபாக் கொலையைக் காங்கிரஸ் கட்சி வன்மையாகக் கண்டித்தது. டயர் போன்ற வெறியர்கள் சுட்டுக் கொன்றார்கள். இந்த நாட்டு மக்களை அந்த டயர் போன்றவர்கள் சுட்டுக் கொலை செய்ததை இதே காங்கிரஸ் கட்சி அன்று கண்டித்துப் பேசியது. ஆனால், சமீபத்தில் நடந்த நிகழ்ச்சிகளின்போது போலீசார் நடந்து கொண்ட விதத்திற்காகப் போலீசாரைத் தட்டிக் கொடுக்கிறார்கள். போலீசார்களைக் கண்டிப்பதற்கு மனம் வராவிட்டாலும், துன்பப்பட்ட மக்களுக்கு ஆறுதல் சொல்வதற்கு இரக்கம் இல்லாவிட்டாலும், போலீசாரைத் தட்டிக் கொடுக்கிறார்கள் என்றால் இது முறையாகுமா?

இத்தனையும் நடந்ததற்குப் பிறகு ஒவ்வொரு ஊரிலும் நடைபெறுவது என்ன? "யாரோ செய்தார்கள், பெரும் பெரும் கும்பல் செய்தது, ஆயிரக் கணக்கான கூட்டம் செய்தது" என்று இப்படியெல்லாம் அரசாங்கத்தின் குறிப்பேட்டில் இருக்கின்றன. இத்தனைக்கும் பின்னால், இன்றைக்கு நடைபெறுவது என்ன? ஏழை எளியவர்களை, ஆங்காங்கு வேலை செய்கின்றவர்களை, ஆபீசிலே வேலை செய்கின்றவர்களைக்கூட, இன்றைக்கு அரசாங்கம் கைது செய்து வருகின்றது. என்ன காரணம்? தங்களுடைய நிகழ்ச்சியை மூடி மறைப்பதற்காக, மக்களுடைய உள்ளத்தை வேறு பக்கம் திருப்புவதற்காக, இன்றைக்கு யார் யாரையோ கைது செய்து, அவர்கள் மீது வழக்குத் தொடுத்து வருகிறார்கள். அரசாங்கம் பழி வாங்கும் எண்ணத்துடன் செயல் படுகிறது என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

முதல் அமைச்சர் அவர்கள் இங்கே பேசும்போதுகூட, இதைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்வார்கள் என்று நான் எதிர்பார்த்திருந்தேன். பட்ஜெட் உரையிலேகூட, தாங்கள் செய்த தவறுகளை அல்லது போலீசார் செய்த தவறுகளை, இன்ன தவறு இப்படி ஏற்பட்டுவிட்டது என்று விளக்கவில்லை. முதலில் போலீசார் அடக்கு முறையில் ஈடுபடுவதற்கு ஓரளவு தயங்கக்



கூடிய சூழ்நிலை இருந்தது என்றாலும், 'மக்களை அடக்கியே தீருவேன்', 'மக்களை ஒடுக்கியே தீருவேன் பலாத்காரம் மூலமாக' என்று இன்றைய முதலமைச்சர் முடிவு எடுத்த காரணத்தால், மற்ற மாநிலங்களிலிருந்துகூடப் போலீசார்களைக் கடன் வாங்கியிருக்கிறார்கள். இது உண்மையா? இல்லையா, என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வேறு மாநிலத்தவர்களை—பாஷை தெரியாதவர்களை—கூட்டி வந்து, பாஷை தெரியாத காரணத்தால், அடக்கச் சொல்லித் தமிழ் மக்களை அவமானப்படுத்தினார் இந்த முதல் அமைச்சர் என்று நான் குற்றம் சாட்டுகிறேன். குஜராத் போலீஸ், ஆந்திரா போலீஸ், மலபார் போலீஸ், இவை அத்தனையும் வந்து தமிழ் மக்களை வதைப்பதற்கு முதல் அமைச்சர் அவர்கள் காரணமாக இருந்தார் என்பதையும் இங்கே தெளிவு படுத்த விரும்புகிறேன். சட்டத்தை வைத்து இந்த நாட்டை ஆளுவதற்குப் பதிலாக தங்களுடைய ஆட்சியில் இரத்தக் கரை படிவதற்குக் காரணமாக இருந்த முதல் அமைச்சர் பதவியில் இருப்பதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்த அரசாங்கம் நிச்சயம் இந்தச் செயல்களுக்குப் பின்னாலே ராஜினாமா செய்திருக்க வேண்டும் என்று வற்புறுத்தி நான் விடைபெறுகிறேன். வணக்கம்.

* **திரு. ஏ. சிதம்பரநாத நாடார்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே . . .

**கனம் உதவி சபாநாயகர்:** இனி ஒவ்வொரு அங்கத்தினரும் 15 நிமிடங்களுக்குள் தங்கள் உரையை முடித்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. சிதம்பரநாத நாடார்:** நமது முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த நிதி நிலை அறிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேசலாம் என்று நினைக்கிறேன். கழிந்த இந்திப் போராட்டத்தின் காரணமாக இறந்து போன மாணவர்களுக்கும், அதிகாரிகளுக்கும், பொதுமக்களுக்கும் எனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு அஞ்சலி செய்கிறேன். (கைதட்டல்) யாரும் கைத்தட்டுவதற்கு அவசியம் இல்லை. ஸ்ரீமான் மாதவன் அவர்கள் நமது முதல் அமைச்சர் அவர்களைப் பற்றி வாயில் வந்த மாதிரித் திட்டினார்கள். நான் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். மாணவர்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் கையிலும் இல்லை. எங்கள் கையிலும் இல்லை. கம்யூனிஸ்டு கையிலும் இல்லை. மாணவர்கள் கவுன்சில் கூடி அவர்களது அபிப்பிராயப் பிரகாரம், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை வாபஸ் பெற்றார்கள். அவர்கள் இதற்காக ஸ்ரீமான் ராஜகோபாலாசாரி விடுத்த வேண்டுகோளுக்கும் மற்றும் வேறு யாருடைய வேண்டுகோளுக்கும் செவிசாய்க்கவில்லை. நாம் எல்லாம் அவர்களுக்குத் தலைவர்கள் இல்லை. (**திரு. மீ. கலியாணசுந்தரம்:** நமக்கு அவர்கள்தான் தலைவர்கள்.) அவர்கள்தான் வருங்காலத் தலைவர்களாக வரப் போகிறார்கள். அத்தனையும் உண்மை. இந்த பட்ஜெட் உரையின் மீது பேசுவதென்றால் குறிப்பாக மூன்றே மூன்று பிரச்சினைகள்தான் இருந்து கொண்டிருக்கின்றன. ஒன்று உணவுப் பிரச்சினை. இன்னொன்று உத்தி

யோகப் பிரச்சினை. இன்னொன்று இந்திப் பிரச்சினை. இந்த மூன்று பிரச்சினைகளைப் பற்றித்தான் நாட்டில் உள்ள மக்கள் துருவித் துருவிப் பார்த்துக் கொண்டிருக்கிறார்களே தவிர வேறு ஒன்றும் இல்லை. சட்டம் என்ன வேண்டுமானாலும் போடலாம். அவற்றால் ஒன்றும் நடக்கப் போவதில்லை. உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். தவறு இருந்தால் திருத்திக் கொள்ளவேண்டும். இந்த நாட்டுக்கு ஆட்சி மொழியாக எது இருக்க வேண்டும் என்று முன்பே ஆராய்ந்தார்கள். மகாத்மா காந்தி அவர்களுக்கு இந்தத் தேசத்தின் பொதுமொழியாக இந்தி வரவேண்டும் என்று ஆசை இருந்தாலும்கூட நாட்டின் ஒற்றுமைக்காக, தேசிய ஐக்கியத்தை வளப்படுத்த வேண்டும் என்பதற்காக இணைப்பு மொழியாக ஆங்கிலம்தான் இருக்க வேண்டுமென்று ஆசை கொண்டார்கள். இதை அறியாத முறையில் இந்தியை கொண்டு வந்தால் என்ன ஆகும்? தேசிய ஒற்றுமைதான் பாதிக்கப்படும். இன்றைக்கு தேச ஒற்றுமைதான் முக்கியமே தவிர ஆட்சிமொழிப் பிரச்சினை முக்கியமல்ல. ஒற்றுமை குலையக் கூடாது என்ற காரணத்தினால் தான் அண்ணல் காந்தி இந்தியைக் கட்டாயமாகக் கொண்டு வரும் படி சொல்லவில்லை. அதனால்தான் இங்கே இந்திப் பிரசார சபா ஏற்பட்டது. கட்டாயமாகப் படி என்று வற்புறுத்தாத காரணத்தினால்தான் சென்னை மாலத்தில், இதர மாநிலங்களைவிட மிக அதிகமான பேர்கள் இந்தி படிக்க முன்வந்தார்கள் என்பதை நாம் மறுக்கவும் முடியாது, மறைக்கவும் முடியாது.

அடுத்தபடியாக இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்து அரசியல் அமைப்புச் சட்டம் தயாரிக்கப்பட்டபோது "இந்தியை" இந்தியாவின் ஆட்சிமொழியாகக் கொண்டு வரவேண்டும் என்று சிலர் வற்புறுத்தினார்கள். ஓட்டுக்கு விடப்பட்டபோது 77, சாதகமாக வந்தது. கூடாது என்று 77 வந்தது. அதற்குக் காரணம் யார்? தென்னகத்தில் (எதிர்க்கட்சிக்காரர்களைச் சுட்டிக்காட்டி) உங்கள் மாதிரி இருந்த அங்கத்தினர்கள்தான். அவர்கள்தான் "இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன" என்று உதாசீனமாக ஓட்டுப் போடாமல் சும்மா இருந்து விட்டார்கள். எனவே காஸ்டிங் ஓட்டாக ராஜன் பாபு அவர்கள் இந்திக்குச் சாதகமாகத் தம் ஓட்டைக் கொடுத்தார். அவர் தாம் ஒரு பீஹாரியாக இருந்த காரணத்தாலும் இந்திதான் பொதுமொழியாக வரவேண்டும் என்ற கொள்கை உடையவராக இருந்த காரணத்தாலும் அப்படிச் செய்துவிட்டார். அவர் இம் மாதிரிச் செய்திருக்கக் கூடாது. இதை நாம் எல்லோரும் அறிவோம். இந்தச் சந்தர்ப்பத்தில் டாக்டர் சுப்பராயன் அவர்கள் நமக்கு ஆபத்து இல்லாத, முன்னேற்றமுள்ள உருது Lexicologyயைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சொன்னதற்கு யாரும் செவி சாய்த்ததாகத் தெரியவில்லை. காரணம், இந்தி நாட்டின் ஆட்சி மொழியாக வரப் போகிறது என்று யாருமே எதிர்பார்க்கவில்லை. கடைசியில் இந்தித் திணிப்பு வந்தது. (ஆரவாரம்) (எதிர்க் கட்சிகளைப் பார்த்து) நீங்கள் சும்மா இருங்கள் ஐயா. (திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: உங்கள் கருத்தை வரவேற்கிறோம்.) நீங்கள் ஒன்றும் வரவேற்க வேண்டாம். உங்களுக்காகச் சொல்லவில்லை.





உண்மையை எடுத்துச் சொல்கிறேன். தவறுகளைத் திருத்த காங்கிரஸ்காரர்களாகிய எங்களுக்கு நன்றாகத் தெரியும். இன்று இந்தி ஆட்சி மொழித் திணிப்பு வந்த காரணத்தால், நாட்டினுடைய குழப்பத்திற்கும், சமாதான ஒற்றுமைக் குறைவுக்கும், உயிர்ச் சேதங்களுக்கும், பொருட் சேதங்களுக்கும் ஆளாகிவிட்டோம். அதன் காரணமாக மாணவர் சமுதாயத்துக்கும் பெற்றோர்களுக்கும், நிம்மதிக் குறைவும் ஏற்பட்டுவிட்டது. அவர்கள் கடன் வாங்கிப் பிள்ளைகளைப் படிப்புக்காக வெளியூர்களுக்கு அனுப்பி விட்டு—இன்றையதினம் பிள்ளைகள் உயிரோடு வரவேண்டுமே என்ற மனக் குழப்பத்தில் ஆழ்ந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் ஆறுதல் தரக்கூடிய காரியங்களைத்தான் உடனடியாகச் செய்ய வேண்டும். நிச்சயமாக இந்தியை ஆட்சிமொழியாகக் கொண்டு வந்தால் இந்த தேசத்தின் ஒற்றுமை அற்றுப் போகும். இந்த உண்மையை நாம் மட்டும் அல்ல, இந்தி பேசாத ராஜ்யங்களில் ஒன்றான மேற்கு வங்காளத்து அறிஞர்கள் ஒன்று கூடி என்ன தீர்மானம் செய்தார்கள்? அங்கே ஏற்பட்ட பயங்கரக் கொந்தளிப்புக்கு யார் காரணம்? நிச்சயமாக நான் சொல்லமாட்டேன். சர்க்காரைக் குறை சொல்லிப் பயன் இல்லை. மாணவர்களைக் குறை சொல்லிப் பயன் இல்லை. தேச ஒற்றுமை தான் அவசியம் என்றால் இந்தி வர முடியாது. (எதிர்க் கட்சிகளில் பலத்த ஆரவாரம்.) நீங்கள் கொஞ்சம் சும்மா இருங்கள் ஐயா. உங்களை நாங்கள் விடப்போவது இல்லை. உங்கள் கொள்கை வேறு. நாங்கள் சொல்வதன் அடிப்படையே வேறு. ஆங்கிலம் தொடர்ந்து இணைப்பு மொழியாக இல்லாவிட்டால் தேச ஒற்றுமை தான் குலையும். ஆங்கிலம் இல்லை என்றால் காமன்வெல்த் பாண்டேஜ், டிப்ளமாடிக் கல்சர் எல்லாம் போய்விடும். அதற்காக நான் இந்தி பாஷை கூடாது என்று சொல்லவில்லை. எனக்குத் தமிழ் தெரியும். மலையாளம் தெரியும். ஆங்கிலம் தெரியும். "ஹம் இந்தி மாலூம்" என்று சொல்லத் தெரியும். மூன்று பாஷை என்ன, நான்காவது பாஷையையும் ஒருவன் விரும்பிக் கற்றால் அதில் குற்றமில்லை. ஆனால் எந்த பாஷையை ஆகட்டும், கட்டாயமாகக் கற்க வேண்டும் என்று நிர்பந்தப்படுத்த வேண்டாம். கட்டாயம் ஏன்? படித்தேயாக வேண்டுமென்று நிர்பந்திக்கக் கூடாது. நமது சர்க்காரிலே, எனது மதிப்பிற்குரிய ஸ்ரீமான் பக்தவச்சலம் அவர்களுடைய தலைமையில் இப்படிப்பட்ட ஒரு சம்பவம் நடக்காது என்று எண்ணுகின்றேன்.

நம்மைச் சுற்றியுள்ள பாகிஸ்தான், மலேசியா, சிலோன், பர்மா ஆகிய நாடுகள் ஆங்கிலத்தைத்தான் ஆட்சி மொழியாகக் கொண்டிருக்கின்றன. ஏன் கானடா நாட்டில்கூட இங்கிலீஷ்தான் ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்று சொல்லவில்லையா? அப்படி இருக்கும்பொழுது நாம் இங்கிலீஷை ஆட்சி மொழியாகக் கொண்டாலென்ன? அதனால் தமிழை மறக்க வேண்டுமென்ற அர்த்தமல்ல. "தமிழை மறப்பவன், தாயை மறப்பவன்" என்று பிரச்சாரம் செய்கிறார்கள். அது எங்களுக்கும் தெரியும். நாங்கள் தமிழையும் மறக்க மாட்டோம். தாயையும் மறக்கமாட்

[திரு. ஏ. சிதம்பரநாத நாடார்] [3rd March 1965

டோம். எங்கள் கட்சியும் மறக்கவில்லை. எங்களுக்கும் நல்ல முறையில் சட்டபூர்வமாக நடக்கத் தெரியும். இந்தியாவில் என்ன நடக்கிறது என்றால் ஹிந்தியைக் கட்டாயமாகப் புகுத்தியே தீருவோம் என்று சொல்கிறார்கள். ஆனால் இந்தியர்களாகிய நமக்குப் பசியும் பட்டினியும், வேலை இல்லாத் திண்டாட்டமும், ஒரு புறம் தாண்டவம் ஆட, சீனர்களும் பாகிஸ்தானியர்களும் ஒரு பக்கம் எதிர்ப்பைத் தெரிவிக்க, இந்தியைத் திணிப்பதற்காக விலையுயர்ந்த உயிர்களையும் பொருள்களையும் பலியாக்கவேண்டுமானால் ரோம் நகர் எரியும்பொழுது நீரோ ராஜா நிம்மதியாக பிடில் வாசித்த கதையாகும்." அந்த நிலையில்தான் இது இருக்கிறது. அந்த நிலை வரக் கூடாது. அப்படி வராமல் நாங்கள் பாதுகாப்போம். காங்கிரஸ்தான் சரியான கட்சி. இந்த நாட்டுக்குச் சரியான வழிகாட்ட காங்கிரசால்தான் முடியும்.

அடுத்து 1967-ல் தி.மு.க. மந்திரிசபை அமைக்கப் போகிறோம் என்று சொல்கிறார்கள். எங்கே அமைக்கப் போகிறார்கள்? (ஒரு அங்கத்தினர்: அமைக்கத்தான் போகிறோம்.) கட்டாயம் அமைக்கப் போவதில்லை. பார்ப்போம். அது "முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கதையாகும்."

இந்தியாவிலே ஆங்கிலோ-இண்டியன் என்று ஒரு கம்யூனிட்டி இருக்கிறது. அவர்களுக்கு இந்தியாவிலுள்ள ஒரு பாஷையும் சொந்தமில்லை. ஏன்—இந்த 14 பாஷைகளுமே தெரியாது. ஸ்ரீ பிராங்க் அந்தோணிகூட இதைச் சொல்கிறார். இவர்கள் நமது நன்மைக்கும் தீமைக்கும் பங்கு கொண்டவர்கள். அதை மறந்து விடக் கூடாது. இந்தச் சந்தப்பத்தில் மாற்றுக் கட்சித் தோழர்கள் நமது சர்க்காரைக் குறை கூறுகிறார்கள். நமது சர்க்கார் இந்த நாடு குட்டிச் சுவராக வேண்டுமென்று ஒருநாளும் ஆசைப்படாது. நாம் நன்கு வாழ வேண்டும், மாணவர்கள் நன்றாகப் படிக்க வேண்டும் என்றுதான் சர்க்கார் விரும்புகிறது. குற்றம் இல்லாத கட்சியே கிடையாது. நாங்கள் கூட்டம் கூடி திருத்த வேண்டிய இடத்தில் திருத்துவோம், எங்கள் கட்சிச் சார்பில். ஸ்ரீ எஸ். எஸ். ஆர்., கூட ஆழகாக அடிக்கடி "கடமை, கட்சி, கண்ணியம்" என்று சொல்வார்கள். (சிரிப்பு) சிரிக்காதீர்கள்.

**திரு. எஸ். எஸ். ராஜேந்திரன்:** "கடமை கண்ணியம், கட்டுப்பாடு" என்று திருத்திக் கொள்ளவும்.

**திரு. ஏ. சிதம்பரநாத நாடார்:** அந்தக் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எங்களுக்கு மட்டும் இல்லையா? இந்தச் சூழ்நிலையைச் சுமுகமாக வெற்றியடையச் செய்வதற்கு எல்லாக் கட்சித் தோழர்களும் விருப்பு வெறுப்பின்றி நாட்டின் ஒற்றுமைக்காகப் பாடுபட வேண்டும். நமது சர்க்கார் அதே சமயத்தில் மாணவர்கள் பேரிலுள்ள அத்தனை கேஸ்களையும் நிபந்தனை இன்றி வாபஸ் வாங்க அன்பாகக் கேட்டுக்கொள்கிறேன். மாணவர்கள் அத்தனை பேரும் ஒழுங்காகத் தங்கள் தங்கள் பாடசாலைகளுக்கும், கல்லூரிக்கும் சென்று வரப்போகும் தேர்வுகளில் வெற்றி பெற்று அவரவர்களுடைய பெற்றோர்களின் ஆசையை நிறைவேற்றக் கேட்டுக்



3rd March 1965] [திரு. ஏ. சிதம்பரநாத நாடார்]

கொள்ளுகிறேன். மாணவர்கள் தங்கள் தாய்தந்தையார்கள் என்ன நோக்கத்திற்காகத் தங்களை அனுப்பினார்களோ அந்த நோக்கம் நிறைவேறும்படி நடந்துகொள்ள வேண்டும். நன்றாகப் படிக்க வேண்டும். பரிட்சை பாஸ் செய்ய வேண்டும். 'மனிதன் தப்பு தவறைத் திருத்திக் கொள்ள வேண்டும், தவறைத் திருத்திக் கொள்ளக்கூடிய கட்சி இந்த நாட்டில் காங்கிரஸ் கட்சி ஒன்றுதான். தவறிருந்தால் நாங்கள் திருத்திக் கொள்வோம். அதுபற்றி உங்களுக்குக் கவலையே வேண்டியதில்லை. ஆகவே, யார் என்ன சொன்னாலும் நீங்கள் மாணவர்கள் காரியங்களில் தலையிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களும் அவர்களது பொறுப்பை அறிந்து நடந்து கொள்வார்கள். நன்றாகப் படித்தால்தான் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். ஆக வரமுடியும்; இந்த கவுன்சில் தலைவராக வரமுடியும் என்றெல்லாம் மாணவர்களுக்குத் தெரியும். மாணவர்களோடு விளையாடுவது தீயோடு விளையாடுவது என்பது நான் சொல்லாமலே யாருக்கும் தெரியும்.

மாணவர்கள் எப்பொழுதுமே இந்த தி.மு.க. சுதந்திராக் கட்சி எல்லாம் சொன்னால் கேட்கமாட்டார்கள். (ஒரு கனம் அங்கத்தினர்: காங்கிரஸ் சொன்னால் கேட்பார்களா?) (சிரிப்பு).

(மணி அடிக்கப்பட்டது.)

கடைசியாக ஒரு வார்த்தை அரிசியைப்பற்றி. எங்கள் மாவட்டத்தில் 5 லட்சம் ரூபாய் செலவழித்திருக்கிறார்கள், 200 செக் போஸ்டர்கள் வைப்பதற்கு. என்ன பிரயோஜனம்? பசி, பட்டினி எல்லாம் இந்தக் கண்ட்ரோலினால் வந்தது. யாரோ ஒன்றிரண்டு எதிர்க் கட்சித் தலைவர்கள் சொன்னார்கள் என்பதால் கண்ட்ரோல் உண்டாக்கி நாட்டைக் குழப்புகிறார்கள். தஞ்சாவூரிலிருந்து எங்களை அரிசி வாங்குவதற்குச் சம்மதித்தால் நிச்சயமாக இந்தப் பட்டினியும் வராது, பசியும் வராது. இப்படிப்பட்டக் குழப்பமும் ஏற்படாது. மேலும் அரிசி நெல் கட்டுப்பாட்டுக்காக வைத்திருக்கும் செக் போஸ்ட் செலவுக்காக வைத்திருக்கும் ரூபாய்க்கு எங்கள் மாவட்டத்திற்கு அரிசி வாங்கித் தந்தால் இந்த நிலையே வந்திருக்காது.

(உதவி சபாநாயகர் மணி அடித்தார்.)

மன்னிக்கவும். ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

எங்களுக்கு ஒழுங்காக வேலை கிடைப்பது கடினமாக இருக்கிறது. ஸ்டேட் டிரான்ஸ் போர்ட்டில் கூட எங்கள் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்குக்கூட வேலை கிடைக்கவில்லை. கிடைக்குமென்று சொன்னார்கள். சொல்லி ஒரு பயனும் இல்லை. தகப்பனிடம் மகன் அழுகிறான். அதுபோல் நாங்கள் உங்களிடம் சொல்லிக் கொள்கிறோம். இந்தக் கஷ்டத்தைப் போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். கட்சி வித்தியாசமில்லாமல்—எதிர்க் கட்சி, மற்ற கட்சிகள்—எல்லாக் கட்சிகளும் சேர்ந்து கவனித்தால்தான் வெற்றி முழுமையாகக் காண முடியும் என்று தெரிவித்துக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நடந்து கொண்டிருக்கின்ற பட்ஜெட் பொது விவாதத்தில் எனது கருத்துக்களையும் வெளியிட ஆசைப்படுகின்றேன். முதன்முதலாக, முதலமைச்சர் அவர்கள், அறிக்கையில் விவசாயத்தைப்பற்றிய தலைப்புக் கொடுத்திருக்கிறார்கள். விவசாயம் இந்த நாட்டினுடைய முதுகெலும்பு போல் இருக்கிறது. விவசாயத்தைப்பற்றிப் பேசிக்கொண்டே வருகிறார்களே தவிர, விவசாயம் இன்றைய நிலையில் எப்படியிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். பொதுவாக விவசாயம் முன்னேற வேண்டுமென்றால், நிலவளம், நீர்வளம், உரவளம் வேண்டும். இந்த மூன்று வளங்களையும் நோக்க மன வளம் வேண்டும். ஆக இந்த நான்கு வளமும் தேவைப்படுகிறது. அத்தனையும் இருந்தால் கூட கடைசியாகச் சொன்ன இந்த மன வளம் இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. உண்மையிலேயே மனப்பூர்வமாக மன வளம் இருக்கிறதா என்று பார்த்தால் இல்லையென்று நான் கண்டிப்பாக; உறுதியாகச் சொல்ல முடியும். ஒவ்வொரு ஆண்டிலும் விவசாய உற்பத்தி பெருகி வருகிறது என்று அமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலே காணப்படுகிறதே தவிர, 1961-ல் என்ன ஆயிற்று? 1962-ல் என்ன ஆயிற்று? 1963-ல் என்ன ஆயிற்று? 1964-ல் என்ன ஆயிற்று? 1965-ல் என்ன ஆகுமோ? இந்த நிலைமைதான் இருக்கிறதே தவிர உற்பத்தி பெருகிற்று என்று சொல்வதை என்றால் நம்ப முடியவில்லை. இதிலே என்னுடைய பகுதியை ஒப்பிட்டுப் பார்த்தால் உண்மையிலேயே தென்னாற்காடு ஜில்லாவில் நஞ்சை நிலம் எவ்வளவு, புஞ்சை நிலம் எவ்வளவு, நஞ்சை நிலத்தில் எவ்வளவு பயிராகிறது, புஞ்சை நிலத்தில் என்னென்ன பயிராகிறது என்று பார்த்தால் புஞ்சையிலே சவுக்கைப் போடுவதோடு கூட நஞ்சையிலும் சவுக்கைப் போட்டு விடுகிறார்கள் இந்த வேதனையான நிலைமை எங்களுடைய பகுதியில் இருக்கிறது. நஞ்சையில் கூட சவுக்கைப் போடுவது என்பது எந்த விதியின் கீழ் இருக்கிறது என்று தெரியவில்லை. நூறு, நூற்றைம்பது காணி நிலம் உள்ள மிராசுதார் தன்னுடைய நிலம் பூராவும் சவுக்கைப் போட்டு விட்ட காரணத்தால் அதன் அருகில் ஏழைகள் வைத்துள்ள ஒரு காணி, அரைக்காணி நிலத்தில் கூட விவசாயம் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையில் எப்படி விவசாயம் பெருகும் என்று அமைச்சர் அவர்கள் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். எனக்கு மற்ற மாகாணங்களைப் பொறுத்த விஷயங்களோ மற்ற மாவட்டங்களைப் பொறுத்த விஷயங்களோ தெரியாது. இந்த நிலைமையிலே தொன்று தொட்டு நீண்ட நாட்களாகப் பயிர் செய்து வந்த விவசாயிகளை குத்தகைதாரர்கள்—கிட்டத்தட்ட சுமார் 40 குடும்பங்களை—பயிர் செய்யக் கூடாது என்று வெளியேற்றி விட்டார்கள். அவர்கள் அரசாங்கத்திற்கு மனுக் கொடுத்தும் ' நீங்கள் கோர்ட்டில் கேஸ் போடுங்கள் ' என்று சொல்லிவிட்டார்கள். ஏழை ஹரிஜனங்கள் தங்களுடைய குறையைச் சொல்ல தனி இலாகா இருக்கிறதே அந்த இலாகாவிலே கேஸ் போட உதவி செய்யும்படி கேட்டால்,



3rd March 1965] [திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்]

' அதிலே நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது; சொந்தச் செலவிலே கேஸ் போட்டுக் கொள்ளுங்கள் ' என்று சொல்லிவிட்டார்கள். இப்படிச் சொல்வதற்காக அந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு இலாகா தேவைதானா? எதற்காக அந்த இலாகா இருக்கிறது என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அமைச்சர் அவர்கள் தயவு செய்து அதைப் பரிசீலிக்க வேண்டும்.

உர விநியோகம், பொறுக்கு விதை என்றெல்லாம் சொல்கிறார்கள் கரைக்கும்போது அரைக்கிற ஊறுகாயும், நரைக்கும்போது பிறக்கிற பிள்ளையும் ஒன்று என்று கூறுவார்கள். அந்த நிலையிலே தான் இருக்கிறது உர விநியோகம். காலாகாலத்தில் எந்த உரம் வேண்டுமோ அந்த உரம் கொடுப்படுவதில்லை. பாலிடால் கிடைக்கவில்லையென்று டி.டி.சி., கூட்டத்தில் முறையிட்டோம். 'டைரக்டருக்குத் தந்தி கொடுத்து விட்டோம்; இல்லையென்று சொல்கிறார்கள் என்று சொல்லிவிட்டார்கள். ' நாங்கள் என்ன செய்வது?' என்று கை விரித்து விட்டார்கள். இந்த நிலைமையில் விவசாய உற்பத்தி பெருகும் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

பாசனம் என்று சொல்லும்போதே திடீர் திடீரென்று ஒரு அதிர்ச்சி உண்டாகிறது. திண்டிவனம் தாலுகா, செஞ்சி தாலுகா, கள்ளக்குறிச்சி தாலூகா போன்றவை வரட்சியான தாலூகாக்கள். நீர்ப்பாசனம் என்று சொன்னால் எந்தக் கடையில் விற்கிறது; விற்றால் வாங்கிக் கொள்ளலாமே என்று பேசிக் கொண்டிருக்கும் நிலைதான் இருக்கிறது. திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலே, 'தென்னாற்காடு மாவட்டம் வட ஆற்காடு மாவட்டம், செங்கற்பட்டு மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்களும் சுபிட்சம் அடையவேண்டுமென்று சொன்னால் ஆந்திரப் பகுதியில் இருக்கிற கிருஷ்ணா கோதாவரி ஆற்றிலே அணை கட்டிக் கால்வாய் மூலமாக அந்தத் தண்ணீரைக் கொண்டு வந்தாலொழிய வேறு எந்த முயற்சியாலும் பலன் ஏற்படாது' என்று அந்தக் காலத்திலேயே சொன்னார். அதே கருத்தைத்தான் ராஜ்ய சபையில், டெல்லியிலே அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். விவசாய அபிவிருத்திக்காகச் சொன்ன நான்கு கருத்துக்களைப்பற்றி இதுவரை யாராவது பரிசீலனை செய்தார்களா? ஒன்று ஐந்து ஏக்கருக்குக் குறைந்தவர்களுக்கு நில வரியே இருக்கக் கூடாது; இரண்டு கிருஷ்ணா, கோதாவரி நீரைத் தென்னகத்திற்குக் கொண்டு வரவேண்டும். இதுபோன்று இன்னும் இரண்டு கருத்துக்களைச் சொன்னது எனக்கு இப்போது ஞாபகத்திற்கு வரவில்லை. அந்தத் திட்டங்களை எல்லாம் நீங்கள் பரிசீலனை செய்து பார்த்தீர்களா?

சிறுபாசனத் திட்டங்களுக்காகப் பல கோடிகள் ஒதுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. கோடி என்று பார்த்தால் எங்கள் பகுதியில் இருண்டு கிடக்கிற தெருக்கோடியையும், வறண்டு கிடக்கிற எரிக் கோடியையும்தான் பார்க்கிறோம். வேறு எந்தக் கோடியையும் எங்களால் பார்க்க முடியவில்லை. கோடி என்பது யாருக்குப் பயன்படுகிறது என்பது தெரியாத நிலையிலே நாங்கள் தவிக்கிறோம்.

[திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்] [3rd March 1965

கிணறு வெட்டுவதற்காகக் கிணறு ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபாயிலிருந்து ஐயாயிரம் ரூபாய் வரை கொடுப்பதாகச் சொல்கிறார்கள். கிணறு வெட்ட வேண்டுமென்றால் கடன் கொடுக்கிறார்கள். ஆனால் அணை கட்ட வேண்டுமென்றால் சர்க்கார் பணம்—இதிலே என்ன அடிப்படை நியாயம் இருக்கிறது என்று புரிந்து கொள்ள முடியவில்லை. விவசாயம் நீர்ப்பாசன வசதி இல்லாத இடங்களில் நன்றாக நடப்பதற்கு வசதிகளைச் செய்து தரவேண்டும். இப்போது வசதியுள்ளவர்களுக்கு வசதி செய்து கொடுக்கிறார்களே தவிர வசதி இல்லாத இடங்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. தஞ்சையில் கிணறு வெட்ட கடன் கொடுக்கிறார்கள். காய்ந்துபோய்க் கிடக்கிற தென்னாற்காடு மாவட்டத்தில் இந்த மாதிரி உதவிகள் கொடுத்தால் நன்றாக இருக்கும். எங்கள் பகுதியில் 100 அடிக்குக் கீழே தண்ணீர் ஓட்டம் இருக்கிறது என்று நிபுணர்கள் சொல்கிறார்கள். அதற்காக இதுவரை என்ன செய்திருக்கிறார்கள்? இந்தச் சட்டசபையிலே எத்தனையோ முறை எடுத்துச் சொல்லியும் செய்யவில்லை. அடுத்தது நடுத்தரப்பாசனம். எங்கள் பகுதியில் வீடூர் நீர்த்தேக்கம் நடுத்தரப் பாசனத்தில் வரும் என்று நினைக்கிறேன். வீடூரில் அணை கட்டுவதால் தென்னாற்காடு மாவட்டத்தில் திண்டிவனம் தாலூகா பலன் அடையும் என்று நினைத்தோம். ஆனால் என்னுடைய ஊருக்கும் வீடூர் நீர்த்தேக்கத் திட்டத்திற்கும் நான்கு மைல் தூரம் இருக்கிறது. அங்கிருந்து தண்ணீர் பாண்டிச்சேரிக்குப் போகிறது. அந்த அணையைக் கட்டிய செலவு நம்முடைய சர்க்கார் செலவா அல்லது பாண்டி சர்க்கார் செலவா என்று தெரியவில்லை. அது யாருடைய செலவிலே கட்டப்பட்டிருந்தாலும் அது நம்முடைய எல்லையிலே இருப்பதால் நமக்கும் அதில் பங்கு வேண்டும்.

நான் பலமுறை கேட்டேன். ஒரு பக்கமாகக் கொண்டு போகிறீர்களே, நான்கு மைல்களுக்குள் நாங்கள் இருக்கிறோம். இன்னொரு பக்கம் கிளை வாய்க்கால் வெட்டி எங்கள் பகுதிக்குத் திருப்பினால் சுமார் 25 கிராமங்கள் பயன் அடையுமே, விவசாயம் பெருகவும் வசதியாக இருக்கும் என்று கேட்டேன். 3,200 ஏக்கருக்குத்தான் ஆயக்கட்டு இருக்கிறது. அணையை உயர்த்தினால் சில ஊர்கள் அடிபட்டுப்போய்விடுமே என்று கூறினார்கள். பின்னர் நாலைந்து ஆண்டுகள் கழித்து தண்ணீர் எந்த அளவு மிச்சப்படுகிறது என்று பார்த்து யோசனை செய்யலாம் என்று சொன்னார்கள். இதுபற்றி இங்கு கேள்வி கேட்டபோது அமைச்சர் அவர்கள் தனிக் கேள்வி போடுங்கள் என்று சொன்னார்கள். சட்டசபையில் சொல்லும்போது, தனிக் கேள்வி போடுங்கள். தனிக் கேள்வி போடுங்கள் என்று சொன்னால், நான் அறிந்த மட்டில் அப்படி யாரும் தனிக் கேள்வி போட்டதாகத் தெரியவில்லை. இன்று நடப்பது இன்று. நாளைக்கு வேறு என்றுதான் இருக்கிறது. மறுநாள் என்றால் இன்று நடந்ததை விட்டு விட்டு அடுத்த நாள் நிகழ்ச்சி என்ன என்றுதான் இருக்கிறதே தவிர போன காரியத்தைப் பார்க்க முடியவில்லை. வீடூர் நீர்த்தேக்கத்தின் வட புறம் ஒரு காவாய் வெட்ட வேண்டும். அதிகாரிகளைக் கொண்டு அதைப் பரிசீலனை செய்து அப்படி ஒரு காவாயை வெட்டித் திருப்பினால் அங்குள்ள



3rd March 1965] [திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்]

நஞ்சைக்கு பருவக்காலத்திலாவது நாற்று விட உபயோகமாயிருக்கும். அடுத்த படியாக, சாத்தனூர் நீர்த்தேக்கம், இரண்டாவது பகுதியில் இருக்கிறது என்று சொன்னார்கள். நான் 1962-ல் இருந்து சொல்லி வருகிறேன். 1963-ல் சொன்னேன், 1964-ல் சொன்னேன் இப்போதும் சொல்கிறேன். சாத்தனூர் நீர்த்தேக்கத்திலிருந்து திண்டிவனம் தாலூகாவிற்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுப்பது மிகச் சுலபம். அதற்கு லட்சக்கணக்கில் ஒன்றும் செலவு ஆகாது. ஆயிரக் கணக்கில் ரூபாய் இருந்தால் போதும். இதைச் செய்யக் கூடாதா? அங்கிருந்து தண்ணீரை சங்கராபரணி ஆற்றில் இறக்கி விட்டால் வீடூர் வரை வற்றாத நீர் இருக்கும். வீடூர் நீர்த் தேக்கத்தை முதலில் திறக்கும்போது. அப்போது நான் உத்தியோகத்தில் இருந்தேன். அப்போதைய முதல் அமைச்சர் அவர்கள் பேச்சைக் கேட்டேன். தண்ணீர் பாய்ச்சுவதற்குக் கிடைக்காவிட்டாலும் தண்ணீர் தேக்கி வைத்திருந்தால் ஊற்று கிளம்பும். என்ஜின் போட்டு ஜாம் ஜாம் என்று இறைத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். 10, 11 கஜம் தோண்டிப் பார்த்தோம். 15 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நீர் ஊற்று இப்போது இல்லை. எதை வைத்துக் கொண்டு அப்படிச் சொன்னார்கள் என்று தெரியவில்லை. சாத்தனூர் நீர்த்தேக்கத்திலிருந்து சங்கராபரணி ஆற்றுக்கு ஒரு கிளை வாய்க்கால் மூலம் அந்தத் தண்ணீரைத் திருப்பினால் விவசாயத்திற்கு மிக உதவிகரமாக இருக்கும், அப்படிச் செய்தால் அங்குள்ள விவசாயிகள் அமைச்சரவைக்கு நன்றியுடையவர்களாக இருப்பார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்தபடியாக கிருஷ்ணா, கோதாவரி தண்ணீர் தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கல்பட்டு ஆகிய இடங்களுக்கு வந்தாலொழிய அவை உருப்படவே உருப்படாது. ஆகவே திரு. ஓ. பி. ஆர்-ன் அபிப்பிராயப்படி அது நிறைவேறியாக வேண்டும். அந்தத் தண்ணீர் இங்கு வரவேண்டும், மூன்று மாவட்டமும் பாய வேண்டும், விவசாயம் பெருக வேண்டும். அதை தயவு செய்து அமைச்சர் அவர்கள் சிந்தித்து, நடைமுறைக்குக் கொண்டு வந்து செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கா. நா. பழனிசாமி கவுண்டர்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் சமர்பித்திருக்கும் இந்த பட்ஜெட்டை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். இதில் புது வரிகள் எதுவும் போடாத காரணத்தினால் மக்களுக்கு இது மிகவும் திருப்தியை அளித்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் நாட்டுச் சரித்திரத்தில் நடந்திராத அளவில் பெரிய பெரிய சம்பவங்கள் நடந்திருப்பது நமக்கு வேதனையை அளிக்கின்றன. ஜனவரி 25-ம் தேதியிலிருந்து பிப்ரவரி 11-ம் தேதி வரை தமிழ்நாட்டில் பல இன்னல்கள், கேடுகள் விளைந்திருக்கின்றன. இந்தச் சபை அதற்கு வருத்தம் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. அந்த நேரத்தில் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும், அமைதியை நிலைநாட்டவும் முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளைப் பாராட்டுகிறேன். இன்றைய தினம் இந்தி எதிர்ப்புப் பெயரளவில் இருக்கிறதே தவிர

12-00 noon.

*[திரு. கா. நா. பழனிசாமி கவுண்டர்]* [3rd March 1965

இந்தி இன்றைய தினம் புதிதாக வந்து விட வில்லை. சுதந்திரம் பெற்ற பின் 1947-ல் இருந்து நம் நாட்டில் இந்தி வளர்ந்து கொண்டு வருகிறது. பெயரளவில் மாணவர்கள் செய்தார்கள் என்றால் மாணவர்களைத் தூண்டிவிட்டு எதிர்க்கட்சியினர் செய்திருக்கிறார்கள். அது குறித்து நாம் வருத்தப்பட வேண்டியிருக்கிறது. திரு. மாதவன் அவர்கள் அது பற்றி விரிவாகப் பேசினார்கள், வேகமாகப் பேசினார்கள். முதல் அமைச்சர் அவர்களைக் குறை கூறினார்கள், கண்டித்தார்கள். முதல் அமைச்சர் அவர்களிடம் தனிப்பட்டமுறையில் அபிப்பிராயபேதம் இருக்காது, முதல் அமைச்சர் அவர்கள் பல காரிங்களை செய்திருக்காமல் முடியாது, முதல் அமைச்சர் •அவர்களை விரட்டினால் அவர்கள் ஆட்சி பீடத்தை விட்டுப் போய்விடுவார்கள், நாம் வர முடியாதா என்று கூட நினைக்கலாம். எவ்வளவு மிரட்டினாலும் எவ்வளவு பயமுறுத்தினாலும் முதல் அமைச்சர் அவர்கள் விலக மாட்டார் கள் என்று காங்கிரஸ் கட்சி சார்பாக நான் உறுதியாகச் சொல்லி கொள்கிறேன். சட்டசபை என்றால் மரியாதையாகப் பேச வேண்டும்.

* * * *

சட்டசபை என்றால் கட்டுப்பாடுடன் நாம் எப்போதும் கவனித்துப் பேசவேண்டும். எதிர்க்கட்சியினர் தூண்டி விட்டுத் தான் கிளர்ச்சிகள் நடந்தன. கோவையைப் பொறுத்தவரை, திருப்பூரில் சப்-இன்ஸ்பெக்டர்களைக் கொன்றார்கள் என்றால் அதில் 1 சத விகிதம் கூட மாணவர்கள் இல்லை. எதிர்க்கட்சியினரின் தூண்டுதலின் பேரில் தான் செய்தார்கள் என்று நான் அழுத்த மாகச் சொல்லிக்கொள்கிறேன். போலீஸ் விசாரணை இருக்கிறது, சட்ட சபையில் வர இருக்கிறது, எல்லா எதிர்க்கட்சிகளும் சேர்ந்துதான் செய்திருக்கின்றன. திருநெல்வேலி, கோவை, மதுரை போன்ற இடங்களில் காங்கிரஸ்காரர்கள்தான் அடிப் பட்டார்களே தவிர எதிர்க்கட்சியினர் அடிபடவில்லை. எதிர்க் கட்சிக்காரர்களைத் திட்டக் கூட இல்லை. அவர்கள் உதவியால் காங்கிரஸ்காரர்கள் மேல் பாய்ந்தார்கள். எதிர்க்கட்சிகள் என்றால் ஆளும் கட்சிக்கு நல்ல யோசனைகள் கூற வேண்டும். சமீபத்தில் நடந்தது பற்றி நல்ல யோசனைகள் கூறவேண்டும். தக்க நடவடிக்கைகள் இல்லாவிட்டால் 11-ம் தேதி எல்லாமே அழிந்து போயிருக்கும் முதல் அமைச்சர் அவர்களையும் மற்ற அமைச்சர்களையும் சந்தித்து யோசனை சொல்லி ஒத்துழைத்து தமிழ் நாட்டின் பண்பாட்டிற்கு இழுக்கு ஏற்படாத முறையில் செய்திருக்க வேண்டும். அப்படிச் செய்வதை விட்டு குற்றங்கள் சொல்லிக் கொண்டு குற்றவாளிகள் என்று சொல்லிக்கொண்டு போவது தவறு. முதல் அமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சியினருக்கு அதிக இடம் கொடுத்திருக்கிறார்கள். காங்கிரஸ் ஆட்சி எதிர்க் கட்சியினருக்கு அதிக இடம் கொடுத்திருக்கிறது. காங்கிரஸ் ஆட்சிக் குப்பதிலாக ஆங்கிலேயர்கள் ஆட்சி இருந்திருந்தால் அல்லது வேறு கட்சி இருந்திருந்தால் எதிர்க்கட்சிக்காரர்களுக்கு இவ்வளவு

* **Expunged as ordered by the Chair.**



3rd March 1965] *[திரு. கா. நா. பழனிசாமி கவுண்டர்]*

சலுகைகள் கொடுத்திருக்கமாட்டார்கள். முதல் அமைச்சர் அவர் கள் எதிர்க்கட்சியினருக்குக் கொடுத்த இடம்தான் இவ்வளவுக்கும் காரணம். மாணவர்களுக்கு அதிக இடம் கொடுக்கிறார்கள் ஆசிரியர்கள். கட்சிப் பாகுபாட்டின் காரணமாக ஆசிரியர்கள் சிலர் மாணவர்களைக் கெடுக்கிறார்கள். இங்கு காங்கிரஸ் ஆட்சி இல்லாவிட்டால், இன்றையதினம் எதிர்க்கட்சிக்காரர்கள் இவ்வளவு வளர்ந்திருக்க முடியாது. தமிழ்நாட்டில் இவ்வளவு தூரம் வளர்ந்திருக்க முடியாது. முதல் அமைச்சர் அவர்கள் நடவடிக் கைகளை இன்னும் கடினமாக எடுத்திருக்க வேண்டும். 25-ம் தேதியே மாணவர்கள் வந்தபோது முதல் அமைச்சர் அவர்கள் நல்ல தக்க நடவடிக்கைகள் எடுத்திருந்தால் 12 நாட்கள் அது வளர்ந்திருக்காது. கடினமான நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்றுதான் கருதுகிறேன். மற்றவர்களும் அதை ஒத்துக் கொள்கிறார்கள். திருப்பூரில் நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம் அங்குள்ள சரித்திரத்தில் பதிந்திருக்கும். அதே போல் திருநெல்வேலி, மற்றும் இதுபோல் பிற இடங்களில் நடந்த சம்பவங்களும் அந்தந்த இடத்தின் சரித்திரத்தில் பதிந்திருக்கும் மாணவர்கள் மட்டும் இதற்குக் காரணம் என்று சொல்லிவிட முடியாது. எதிர்க்கட்சிக்காரர்கள் தான் இதற்கு முக்கிய காரணம் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எல்லாவற் றிற்கும் மேலாக போலீஸ் பாதுகாப்புத்தான் நமக்கு மிகவும் தேவையாக இருக்கிறது. ஆனால் இப்போதுள்ள முறையில் போலீசுக்குப் போதிய அளவு அதிகாரம் இல்லாமல் இருக்கிறது. நம்முடைய நாட்டில் இருக்கின்ற போலீசுக்குப் போதிய அதிகாரமில்லாத நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. சென்ற 11-ம் தேதி, 12-ம் தேதி இந்த நாட்களில் எல்லாம் மிலிட் டிரி படைகள் இல்லாவிட்டால் இதைவிட இன்னும் மோசமாக 100-க்கு 50 பேர்கள் இறந்து போயிருப்பார்கள். அந்த முறையில் அதிகாரிகள் தகுந்த முறையில் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இத்தகைய அதிகாரிகளுக்கு நிறைய அதிகாரம் கொடுக்க வேண்டி யது மிகவும் அவசியம். நாகர்கோவிலில் நடந்த சம்பவத்தில் பொதுமக்கள் சொன்னதற்கிணங்க நமது முதலமைச்சர் அவர்கள் நல்ல எண்ணத்தோடு, இதில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவிசெய்து இதில் ஈடுபட்ட போலீஸைக் கண்டித்ததின் காரணமாகத்தான் இத்தகைய நிலை ஏற்பட்டது என்று நினைக் கிறேன். முக்கியமாகப் பாதுகாப்பில் ஈடுபட்டிருக்கும் இந்த போலீஸ் அதிகாரிகளுக்கு நாம் தற்காப்புக் கொடுக்க வேண்டியது மிகவும் அவசியம். முக்கியமாக இவர்களுக்குக் கொடுக்கப்பட் டிருக்கும் சம்பளம் மிகக் குறைவாக இருக்கிறது. கான்ஸ்டபிள் களுக்குக் குறைந்தது 100 ரூபாயாவது இருக்க வேண்டும். சாதா ரணமாக மத்திய சர்க்காரிலோ அல்லது பாங்கிலோ வேலை செய்யும் ஒரு ப்யூனுக்குக்கூட 100 ரூபாய் சம்பளம் இருக்கிறது. அந்த முறையில் பார்க்கும்போது நம்முடைய போலீஸ் கான்ஸ்ட பிள்களுக்குக் குறைந்த அளவு 100 ரூபாயாவது சம்பளம் இருக்க வேண்டும், தலைமை கான்ஸ்டபிள்களுக்கு 150 ரூபாய் இருக்க வேண்டும். சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு 250 ரூபாய் இருக்க வேண்டும். ஐ.ஜி.-க்கு 3,000 ரூபாயாவது இருக்க வேண்டும்.

அதோடு இவர்களுக்குச் சாதாரண கான்ஸ்டபின் முதல் மேலுள்ள அதிகாரிகள் வரையிலும் தகுந்த அதிகாரங்கள் கொடுக்க வேண்டும். அவ்விதம் அதிகாரங்களை கொடுத்திருந்தால் சமீபத்தில் ஏற்பட்ட பல நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்காது என்பதுதான் என் அபிப்பிராயம். பொதுமக்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு போலீசுக்கு இருக்கிறது. தமிழ்நாட்டு மக்களுடைய பாதுகாப்பில் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு மிகுந்த அக்கறை உண்டு என்பதை எல்லோரும் அறிவார்கள். அந்த எண்ணத்தில் மக்களுடைய பாதுகாப்பை எண்ணி இனிமேலாவது போலீஸ் அதிகாரிகளுக்குத் தக்க அதிகாரங்கள் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு அவர்களுக்குப் போக்குவரத்து வசதியும் செய்து கொடுக்க வேண்டும். ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் ஒரு ஜீப் வீதமாவது கொடுக்க வேண்டியது மிக அவசியம். பஞ்சாயத்து யூனியன் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு ஜீப் இருக்கிறது. ஒரு லட்சம் ஜனத்தொகை கொண்ட ஒவ்வொரு இடத்திலும் இருக்கிற இடங்களுக்கு எல்லாம் தனிப்பட்ட முறையில் ரிசர்வ் போலீஸ் வைத்திருக்க வேண்டும். அந்த வகையில் போலீஸை ரீஆர்கனைஸ் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் பயமில்லாமல் மக்கள் வாழ முடியும். அதோடு இன்றையதினம் முக்கியமாக நாட்டில் இந்த நிலைமை ஏற்பட்டதற்கு காரணம், எதிர்க்கட்சியால் தூண்டப்பட்டு, நகரங்களிலுள்ள தொழிலாளர்களும், மற்ற உத்யோகஸ்தர்களும் அடிக்கடி தங்கள் குறைகளைத் தெரிவிப்பதும், அதற்குச் சர்க்கார் செவி சாய்ப்பதுமாக இருந்த காரணத்தால், ஊதியத்தை அதிகப்படுத்தினார்கள். அதன் காரணமாக விலைவாசியும் ஏறிக் கொண்டே போனது. ஆனால் விவசாயத்தைப் பொறுத்தவரையில் சர்க்கார் போதிய கவனம் செலுத்தவில்லை. முன்னால் ஒன்றரை ரூபாய் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். விவசாயக் கூலிக்கு, இப்போது ஒன்றேமுக்கால் ரூபாய் வீதம் விவசாயக் கூலிக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் பருப்பு போன்ற தான்யங்களின் விலைகள் எல்லாம் எவ்வளவோ உயர்ந்து கொண்டே போகிறது. இப்போது நிலைமை என்ன என்றால் இரண்டும் கெட்டான் நிலைமையில் இருக்கிறது. ஒரு பக்கத்தில், விலையேறிக் கொண்டே போகிறது; அதே நேரத்தில் விவசாயிகளுடைய நிலைமை முன்னேறாமல் இருந்து கொண்டிருக்கிறது. ரேஷன் கொண்டு வரவேண்டுமென்றால் ஒன்று பூரணமாக ரேஷன் கொண்டு வரவேண்டும். அல்லது உணவுக் கட்டுப்பாட்டை எடுத்துவிட் வேண்டும். இப்போதுள்ள நிலையில் நல்ல மழை பெய்திருக்கிறது. ஆகவே இப்போது அரை குறையாக இருந்து வரும் உணவுக் கட்டுப்பாட்டை எடுத்துவிடுவது தான் நல்லது. முக்கியமாகச் சர்க்காரைப் பொறுத்தவரையில் விவசாயிகளின்மீது சிரத்தை இல்லாமல் இருக்கிறது. மற்றபடி இருக்கின்ற தொழிலாளர்கள், உத்தியோகஸ்தர்கள் இவர்கள் சத்தம் போட்டார்கள் என்றால் உடனே ஊதியத்தை அதிகப்படுத்திக் கொடுத்துவிடுகிறார்கள். விவசாய உற்பத்தியைப்பற்றி விவசாய இலாகா கவனித்துக் கொண்டிருந்தால்கூட, நல்முறையில் விவசாயத்தைப்பொறுத்த





வரையில் இருக்கின்ற முறைகளை எல்லாம் ரீ ஆர்கனைஸ் செய்து, நல்ல உரங்கள், பொறுக்கு விதைகள் இவைகளை எல்லாம் கொடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதுவிலக்கைப் பொறுத்தவரையில், சரியான முறையில் இதை அமல் நடத்த முடியாத நிலைமை தான் இருந்து கொண்டிருக்கிறது. திருப்பூரில் நடைபெற்ற சப்-இன்ஸ்பெக்டர்கள் கொலைக்குக் கூட மதுவிலக்குக் கட்டுப்பாடுதான் காரணம் என்று சொல்லலாம். ஒன்று இதை நல்ல முறையில் அமல் நடத்த வேண்டும். அல்லது அடியோடு இதை எடுத்துவிட வேண்டும். முக்கியமாக இதனால் ஏற்படக்கூடிய தீயச் செயல்களை எல்லாம் தடுக்கின்ற வகையில் சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு கல்வி விஷயத்தில், நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் ஏதோ பொறுப்பில்லாமல் போய்க் கொண்டிருக்கிறது. ஆசிரியர்களை எல்லாம் தேர்ந்தெடுக்கும் போது, அவர்கள் அரசியல் கட்சிகளைச் சேராதவர்களாக இருக்கிறார்களா என்பதை எல்லாம் பார்த்து ஆசிரியர்களை எடுக்க வேண்டும். கட்சிப் பிரசாரத்திற்காகப் பள்ளிக்கூடத்தில் வந்து வேலை செய்யக் கூடாது. இதற்கெல்லாம் இடம் கொடுத்ததின் காரணமாகத்தான் நமக்கு இத்தகைய கஷ்டங்கள் எல்லாம் வந்திருக்கின்றன. ஆகவே இதையும் நல்முறையில் சீர்திருத்தம் செய்யவேண்டும். நமது முதலமைச்சர் அவர்கள் கல்வி அமைச்சராக இருக்கின்ற காரணத்தால் நல்ல முறையில் இதைப்பற்றிப் பரிசீலனை செய்து திருத்தி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நகரசபைகளைப் பொறுத்தவரையில், இவைகளுக்குப் பொருளாதார வசதி மிக மிகக் குறைந்து கொண்டு வருகிறது. திருப்பூர் நகரசபையைப் பொறுத்தவரையில் நாலைந்து வருடங்களாக ரோடுகள் எதுவும் போடுவதற்கு வசதியில்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. நகரசபைகளினுடைய வருவாயைப் பற்றி பரிசீலனை செய்வதற்காக முன்பு ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டு, பற்றாக் குறையாக இருக்கின்ற வருமானத்தைச் சர்க்கார் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. பொதுவாக வெளியிடங்களில் இருந்து வருகிறன்றவர்கள் நகரங்களைப் பார்த்துவிட்டு நம்மைப்பற்றி மதிப்பிடுகிறார்கள். சென்னை ராஜ்யத்திற்கு வருகிறார்கள் என்றால் சென்னை நகரத்தைப் பார்த்துவிட்டுத்தான் மதிப்பிடுகிறார்கள். ஆகவே நகரங்களை நல்ல முறையில் வைத்திருப்பது மிகவும் முக்கியம். ஆகவே நகரசபைகளை நல்ல முறையில் வைத்து நிர்வாகம் செய்வதற்கு வசதியாக வேண்டிய எல்லா உறுதுணைகளையும் அரசாங்கம் செய்துதர வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களை நகரசபைத் தலைவர் என்ற முறையில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியன்கள் அங்கங்கே செயல்படுகின்றன. இவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு ஜீப் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஜீப்களை எடுத்தாவது போலீஸ் ஸ்டேஷன்

களுக்குக் கொடுக்கலாம். பத்துப் பதினைந்து கிராமங்களைக் கொண்டதாகத்தான் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் இருக்கிறது. இதில் பல அதிகாரிகள் இருக்கிறார்கள். எக்ஸ்டென்ஷன் ஆபீஸர்கள் என்று நாலைந்து பேர்கள் இருக்கிறார்கள். அக்ரிகல்சர், ஈ.ஓ. வெட்டரனரி ஆபீஸர் என்றெல்லாம் பல அதிகாரிகள் இருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் ஒரு நாளில் ஐந்து நிமிஷங்கள்கூட அங்கே வேலை கிடையாது. இவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சம்பளத்தைப் பார்த்தால் சுமார் 3,000 ரூபாய் ஒரு மாதத்திற்கு செலவாகிறது. இதைப்பற்றி அடிக்கடி முதலமைச்சர் அவர்களிடத்தில் கூட சொல்லியிருக்கிறேன். நான் அடிக்கடி இதைப் பற்றி சொல்வதைப் பார்த்து அவர்கள் கோபத்தோடு கூட 'ஏன் இதைப்பற்றி அடிக்கடி சொல்லுகிறீர்கள்' என்று கேட்டிருக்கிறார்கள். இவ்விதம் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் 3,000 ரூபாய் செலவாகிறது. 375 பஞ்சாயத்து யூனியன்களையும் எடுத்துக் கொண்டால் எவ்வளவோ பணம் செலவு செய்யப்படுவது தெரியும். இதைப்பற்றியும் கனம் முதலமைச்சர் அவர்கள் நன்கு பரிசீலனை செய்து முடிவு எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தில் பேச அனுமதி கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

* * * *

நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

அவர்களே, இந்த 1965-66-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நமது மாநில முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் பட்ஜெட் மிக மிகத் திறமை வாய்ந்த பட்ஜெட்டாகத் தான் இருக்கிறது என்று சொல்லிக்கொள்ளலாம். ஏனென்றால், வரியே இல்லாமல் குறைவு ஏற்பட்டிருந்தாலும் அந்த குறைவைச் சரிக்கட்டாமல் அப்படியே விட்டு, வரி ஏதும் இல்லாமல் பட்ஜெட்டைக் கொண்டு வந்திருப்பதற்கு நாம் மிக மிக மகிழ்ச்சி அடைகிறோம் என்று நான் சொல்ல முற்படுகிறேன். ஆனால் கிராமங்களில் இருக்கக் கூடியவர்களுடைய நிலைமையை நமது முதலமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்த்து இந்த பட்ஜெட்டிலே வழிவகை செய்திருக்க வேண்டும் என்பது தான் எனது சொந்தக் கருத்தாக இருக்கிறது. நாம் இன்றைக்குப் பார்க்கிறோம், கிராமங்களில் இருக்கக் கூடியவர்களுடைய பொருளாதார நிலை உயர்ந்திருக்கிறதா என்று பார்த்தால் உயரவே இல்லை. நடுத்தர வகுப்பினர், கடை நிலையில் இருக்கக் கூடியவர்கள், சாதாரண சிப்பந்திகள் என்று சொல்லக் கூடியவர்கள் ஆகிய இவர்கள் எல்லாருடைய வருமானம் ஒரு வருஷத்திலாவது, ஒரு மாதத்திலாவது உயர்ந்ததா என்று பார்த்தால் வருமானம் உயர்ந்தாலும், வருமானம் உயர்ந்த அளவுக்குச் செலவினமும் கூடிக்கொண்டு போகிறதே தவிர மிச்சம் ஆவது கிடையாது. கிராமத்தில் இருக்கிற விவசாயிகள் ஆகட்டும், மத்திய தர வகுப்பினர் ஆகட்டும், கீழ்த்தர சிப்பந்திகள் ஆகட்டும் அவர்களுக்குப் பற்றாக்குறை இருந்துகொண்டுதான் இருக்கிறது. அதே போல மாநில அரசாங்கம் பற்றாக்குறை பட்ஜெட்டாக

**** Expunged as ordered by the Chair.





இப்போது அமைந்திருக்கிறது. ஒரு மாதத்தில், விவசாயி ஆகட்டும், மத்திய தர வகுப்பினர் ஆகட்டும், சம்பாதிக்கும் பொருளை வைத்துக்கொண்டு, அவருடைய குடும்பத்தை, மகனுடைய படிப்பு மற்றும் குடும்பச் செலவுகள் அதாவது துணி மணிகள், மளிகை சாமான்கள் இவைகளையெல்லாம் வாங்குவது போன்றவற்றுக்குச் செலவு செய்து மிச்சம் ஏதாவது கையில் இருக்கிறதா என்று பார்த்தால் உண்மையிலேயே மிஞ்சுவது கிடையாது. நாட்டின் பொருளாதார வளர்ச்சி கிராமங்களில் வளர்ந்தாலொழிய, நகரங்களில் வளர்ந்தால் எந்த விதமான பிரயோசனமும் கிடையாது என்று நான் கருதுகிறேன். இன்றைக்கு நாம் நகரத்தில் பார்க்கிறோம். இந்த வருஷம் ஒரு கார் வைத்திருக்கிறார்கள். அடுத்த வருஷம் அந்தக் காரை விற்று விட்டு, வேறு ஒரு புதிய கார், மெருகு அழியாத சொகுசான கார் வைத்துக் கொண்டு போகிறார்கள். கிராமத்தில் இருக்கிறவர்களுக்கு ஒரு மூட்டை சிமெண்ட் கூட கிடைக்காமல் இருக்கிறது. இங்கு இருக்கிற பில்டிங்குகளைப் பார்த்தால் இன்றைக்கு இருக்கிற பில்டிங்கை இடித்து விட்டு புது பில்டிங்கைக் கட்டி விடுகிறார்கள். அந்த அளவுக்கு இங்கே தாராளமாகச் சிமெண்ட் கிடைக்கிறது. இதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். கிராமப் பொருளாதார நிலை எந்த வகையிலும் உயரவில்லை. நகரத்தில் இருக்கிற பொருளாதார நிலை வேண்டுமானால் உயர்ந்திருக்கிறது. சாதாரண விவசாயிகள், சாதாரணமாக கிராமங்களில் இருக்கிறவர்கள், மத்திய தர வகுப்பினர்கள் ஆகியவர்களுக்கு இந்த பட்ஜெட்டில் எந்த விதமான நன்மையும் இருக்கும் என்று எனக்குப் புலப்படவில்லை என்று தான் இந்த பட்ஜெட்டைப்பற்றி நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நிதி நிலை அறிக்கையில் நமது முதல் அமைச்சர் அவர்களால் ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. நடப்பு ஆண்டில் 3.25 லட்சம் மெட்ரிக் டன் வரையில் ரசாயன உர வகைகள் உயரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ரசாயன உர வகைகளைப் பொறுத்த வரையில் எங்கள் மாவட்டத்தில் அவைகள் சரிவரக் கிடைப்பது கிடையாது. இதைப் பற்றி ஒவ்வொரு ஆண்டும் சொல்லிக்கொண்டு தான் வருகிறோம். எட்டிலே மொபைல் வானில் கூடக் கொடுக்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர விவசாயிகளுக்கு நியாயமான விலையில் உர வகைகள் கிடைக்கிறதா என்று பார்த்தால் உண்மையில் கிடைப்பது கிடையாது. 31 ரூபாய் சில்லரை ஒரு மூட்டை யூரியா என்றால் மார்க்கெட்டில் 50 ரூபாய்க்கு விற்கிறது. எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம். எப்படி அந்த அளவுக்கு மார்க்கெட்டுக்கு வந்தது? சர்க்கார் நிர்வாகத்தில் ஓட்டைகள் இருக்கின்றன. அவர்கள் வைத்திருக்கிற கோவாப்பரேட்டிவ் டிபார்ட்மெண்டில் ஓட்டை உடைசல்கள் இருக்கின்றன. அந்த ஓட்டை உடைசல்களைத் தடுத்து நிறுத்தாமல் அதிகமான அளவுக்கு ரசாயன உரங்களைக் கொடுத்து விட்டோம் என்று எட்டில் இருந்தால் என்ன பயன் என்று எனக்குத் தெரியவில்லை,

இந்த நேரத்தில் இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். ஹோல்ஸேல் வியாபாரிகளை வைத்து உணவு தானியங்களை வாங்குகிறார்கள். இதைப் பற்றி நான் முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். எங்கள் பக்கத்திலே மரக்கால் போட்டு அளந்துகொண்டு போகிறார்கள். அது எப்படியாவது போகட்டும். சில்லரையாக வாங்க ஆர்.லி. லைசென்ஸ் வழங்குகிறார்கள். தாசில்தார்கள் அத்தகைய லைஸென்ஸை வழங்குகிறார்கள். அத்தகைய சில்லரை வியாபாரி நெல்லைப் பிடித்து அரிசி ஆக்கி விற்கிறார். அந்த முறையில் நெல்லைப் பிடித்துக்கொண்டு வரும்போது, 'எதற்காக நெல்லைப் பிடித்தாய், தேவை இல்லை' என்று சொல்லி சில்லரை வியாபாரியிடம் இருக்கும் நெல்லைப் பிடுங்கி மொத்த வியாபாரிகளிடத்தில் ஒப்படைக்கிறார்கள். அப்படியென்றால் ஏன் லைஸென்ஸ் கொடுக்க வேண்டும்? இது அரக்கோணத்தில் நடக்கிறது. சில்லரை வியாபாரிகள் கொள்முதல் செய்து சில்லரையாக விற்று விடுகிறார்கள். சர்க்கார் விலை ரூ. 1.24 என்றால் சில்லரை வியாபாரிகள் ரூ. 1.15 க்கு விற்கிறார்கள். இந்த நிலையில் அவர்கள் கொள் முதல் செய்ததை மொத்த வியாபாரிகளிடம் கொடுக்கவேண்டுமென்று சொல்லுவது முறையற்றது என்று இந்த நேரத்தில் கனம் முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்தபடியாகச் சொல்லப் போனால், நமது மாநிலத்திற்கு சென்ற மாதம் 11, 12, 13 ஆகிய தேதிகள் மிகவும் துக்ககரமான நாட்கள் ஆகும். துரதிருஷ்டமான நாட்கள் என்றுகூடச் சொல்லலாம். மாணவர்கள் நடத்திய வன்முறைகள் இருக்கிறதே, போலீஸ் அடக்குமுறைகள் இருக்கிறதே அவைகளைப் பற்றி எனக்கு முன்னே பேசிய கனம் அங்கத்தினர் மாதவன் அவர்கள் குறிப்பிட்டார்கள். நடந்த நிகழ்ச்சிகள் யாரும் வெட்கித் தலை குனிய வேண்டிய நிகழ்ச்சிகள் ஆகும். நான் கட்சி வேறுபாடு இல்லாமல் சொல்லுகிறேன். போலீஸ் வன்முறைகள் நடத்தப்பட்டிருக்கின்றன. மாணவர்கள், சிறு சிறு பிள்ளைகள், மொட்டுக்கள் பிஞ்சுகள் என்று சொல்லக் கூடிய அத்தனை பேர்களும் சிறைகளில் இருந்தார்கள். நானே இதைப் பார்த்தேன். கொஞ்சம் கூட உண்மைக்குப் புறம்பாகச் சொல்லவில்லை. சிறை வாயிலில் நின்று பார்த்திருந்தால் தெரியும். சொல்ல முடியாத கூட்டம். எப்படி எனக்குத் தெரியும் என்றால் எனது மகனும் ஒருவனாக இருந்தான். நான் போலீஸ் கமிஷனர் ஆஃபீஸுக்குப் போய் எனது விஸிட்டிங் கார்டைக் காட்டி 'நான் அரக்கோணம் தொகுதியின் பிரதிநிதி, உள்ளே போலீஸ் கமிஷனரைப் பார்க்க வேண்டும்' என்று அங்கு இருந்த போலீஸ் கான்ஸ்டபிளிடத்தில் கொடுத்தேன். அதற்கு கான்ஸ்டபிள் 'இப்போது பார்க்க முடியாது, அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லுகிறார்' என்று தெரிவித்தார். 'நான் அரக்கோணம் தொகுதியின் பிரதிநிதி, எனது மகனும் சிறையிலே இருக்கிறான், டெபுடி கமிஷனரைப் பார்க்க வேண்டும்', என்று சொன்னபோது 'நீங்கள் மரியாதையாகப் போய் விடுங்கள்' என்று சொன்னார். எனக்கே இந்த மாதிரி அனுபவம் ஏற்பட்டது என்றால் சாதாரணமாக உள்ளவர்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கு





அனுப்பி, போலீசாரால் பிடிக்கப்பட்டு சிறைக்குப் போயிருந்தால் அவர்கள் நிலைமை என்ன ஆவது? தெரிந்தோ தெரியாமலோ மாணவர்கள் செய்து விட்டார்கள். பெரியவர்கள், சொல்லப் 12-30 p.m.
போனால் நமது மதிப்புக்குரிய முதல் அமைச்சர் அவர்கள் இதை ஓரளவுக்குச் சீர்தூக்கிப் பார்த்து மாணவர்களிடத்தில் அவர்களுடைய பரோபகாரத்தைக் காட்டிக் கொள்ள வேண்டும். ஒரு கப்பல் இருக்கிறது என்றால், அந்தக் கப்பல் தலைவன் கடலில் போகும்போது பெரிய பெரிய சுறா மீன்களைக் கண்டு பயப்பட மாட்டான். ஆனால் சிறு சிறு மீன்கள் வரும்போது அவைகளைக் கண்டு பயப்படுவான். ஏனென்றால் அந்தச் சிறு சிறு மீன்கள் கப்பலையே கவிழ்த்து விடுமாம். அதைப் போல, மாணவர்களைக் கூப்பிட்டு ஒரு வார்த்தை அவர்களோடு பேசியிருந்தால், இந்த அளவுக்கு நிலைமை மோசமாகப் போய் இருக்காது என்று தான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மதுரையைப் பற்றிச் சொன்னார்கள். எல்லோருக்கும் பிரின்ஸிபால் ஒரு அறிக்கையை அனுப்பி வைத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையில் ஒரு இடத்தில் சொல்லுகிறார்கள் . . .

**கனம் உதவி சபாநாயகர்** : கனம் அங்கத்தினர் அவர்கள் அதைப் பற்றிக் குறிப்பிட வேண்டாம்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி** : மாநில அரசாங்கமும், மாநில முதல் அமைச்சர் அவர்களும், இந்த நிலைமையில் இதையெல்லாம் கொஞ்சம் சீர்தூக்கிப் பார்த்து மாணவர்கள் மீது போடப்பட்ட வழக்குகளை, அவர்களுடைய வளர்ச்சிக்கு, அவர்களுடைய படிப்புக்கு, எதற்கும் குறுக்கே நிற்காமல், வாபஸ் வாங்கிக்கொண்டு, அவர்களை வாழ விடுங்கள், வாழ விடுங்கள் என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* SRIMATHI B. LAKSHMINARASAMMA : Mr. Deputy Speaker, Sir, I am glad to associate myself in this Budget Debate. The Hon. the Chief Minister has so ably presented a well-planned budget for the coming year which I am sure will be wholeheartedly welcomed by all. A perusal of the budget proposals should convince every one that what is possible has been well done. Every department has been allotted enough funds. But, I submit that the problems of our State cannot be solved by liberal allotments alone to different departments. It is not a case of mere increased expenditure. There has to be a purposive policy and there should be wholehearted, instinctive and spontaneous response from all sections of the people to our Government's programme of development. Otherwise, due to vacillations, delays and mismanagement, there will be a big gap between targets and achievements and our entire planning for the welfare of our people will be in jeopardy.

Sir, we are on the eve of formulating our Fourth Plan for a quick growth of our State's economy and for raising the living standards of our people. The Plan will have to be designed in such a manner that will help rapid growth of our State's industrial and agricultural output. It is only by concentrated effort on specific

[Srimathi B. Lakshminarasamma] [3rd March 1965

factors which promote productivity directly, that it will be possible for us to increase our production in an fronts and control the price level. It will be undesirable that we should dissipate our resources in non-productive helds and thereby incresing inflationary pressure on our economy. So, in the Fourth Plan our outlays must be such that they will augment productivity in all sectors and improve the economic prosperity of our State.

Sir, while the development of our industries and the increase in output of our industrial products in recent years give us great joy and hope, the lag in agriculture damps our enthusiasm and causes us much concern and anxiety. To achieve self-sufficiency in food-grains and increase agricultural production, there is urgent need for adopting a system of new measures by intensification of our agriculture, by better utilisation of the achievements in modern science, engineering and technology and advanced know-how of our research institutions. Till now, our industriatlists have not been taking any direct interest in our agriculture. It is absolutely necessary that they must take such an interest at least in future. At least those who run industries primarily based on agriculture should be asked to evince an interest in agricultural development. Their experience will be useful and it may be possible for them to impart to agriculture the techniques that make the successful running of industries. Steps should also be taken simultaneously to see that large quantities of chemical fertilisers, insecticides, etc., are manufactured in our State for plant growth and protection.

Unlike in some foreign countries like the United States or Japan, the cultivators in our State lack an organisations for collective representation of their grievances or for demanding assistance or protection from the Government. It behoves our State's Agricultural Ministry to take the cultivators into their confidence and consult them while fixing agricultural or food policies. Our ryots should not be neglected or ignored any longer because they lack on organisation to bargain or agitate collectively.

Now, turning to Medicine and Public Health, I wish to say that it is extremely gratifying to note that the Government are doing their very best to promote the growth of the standards of medical and public health services for the people. That the two Departments have been provided with substantially increased allotments clearly indicate that the Government are attaching great importance and significance to health protection. While new and lovely hospitals with the latest and best of equipments and large bed strength are coming up at all important centres, most of the hospitals at taluk headquarters continue to remain neglected with poor facilities and accommodation. Something has to be done in the near future to improve the conditions of these neglected institutions by providing them with better clinical facilities and increased bed strength.



3rd March 1965] [Srimathi B. Lakshminarasamma]

There is yet another important subject that should be tackled by our Health Ministry and that is the problem of providing protected drinking water supply on hygienic lines to some of the growing town panchayats which are also taluk headquarters. Drinking water supply schemes for these areas should be drawn up and implemented in the course of the coming year or two. It is imperative for the development and growth of these townships. In this connection, I request the Minister for Public Health to take early steps for improving the hospital at Tirukoilur and for providing drinking water supply to the Tirukoilur Town Panchayat.

Next, Sir, I wish to refer to the various Commercial Taxes now being levied in the State. Several are the handicaps which the merchant community undergo in the working of these tax system and rules. It will be greatly welcomed by the traders, if the Government were to take steps to simplify and rationalise the commercial tax structure and remove all procedural difficulties experienced by business community. It will also be greatly welcomed by the trade if a uniform low rate of Sales Tax for all goods is fixed by the Government. We need the merchant community in our economic life to facilitate exchange of goods and services between producers and consumers. The Government Officers, particularly of the Sales Tax department think that all traders and merchants are anti-social elements, hoarders, exploiters and tax evaders. It is wrong and erroneous. It is they who pay large amounts by way of sales tax and swell the revenues of our State. It is therefore just and proper that their grievances and various difficulties are promptly and properly looked into and redressed by the Government.

Thank you, Sir, for giving me this opportunity to speak.

***திரு. தா. சின்னசாமி:** கனம் சட்ட மன்ற உதவித் தலைவர் அவர்களே, தற்பொழுது இங்கு நடந்து கொண்டிருக்கும் பட்ஜெட் விவாதத்தின் மீது என்னுடைய கருத்க்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் இந்த விவாதத்தை முன்னிட்டு, நாட்டினுடைய நலன்களைப்பற்றி இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். ஏழைகளுடைய கண்ணீர் கூரிய வாள் என்று சொல்லுவது வழக்கம். என்னுடைய வட்டாரத்தில், கள்ளக்குறிச்சியில், தென் ஆற்காடு ஜில்லாவில் மார்க்கெட் கமிட்டித் திறப்பு விழாவுக்கு நமது முதல் அமைச்சர் அவர்களும் செய்தித் துறை அமைச்சர் அவர்களும் வந்திருந்தார்கள். இம்மாதிரி ஒரு கமிட்டி அமைத்துக் கொண்டு விவசாயிகளிடத்திலிருந்து தானியங்களை, நெல்லைப் பறிமுதல் செய்துகொண்டு, பரிகாரம் செய்வதில் புண்ணியம் இல்லை. எவ்வளவு தூரம் சர்க்கார் அந்த லெவி முறையின் மூலம் தங்கள் கையைப் பொருளாதாரத்தில் வைக்கிறதோ, அவ்வளவு தூரம் அது ஏழைகளுக்குச் சுமையாக இருக்கும், சர்க்காருக்கு அதனால் ஒரு நல்ல பெயரும் கிடைக்காது என்று அன்றைக்கே சொன்னேன். சர்க்கார் உண்மையிலேயே ஏழைகளுக்கு உபயோகமாகச் செய்யவேண்டுமென்றால், நீர்ப்பாசனம் இல்லாத இடங்களுக்கு, இறைத்துப் பிழைக்கக்கூடிய எங்கள் பகுதி போன்ற இடங்களுக்கு மின்

சாரத்தை விரிவுபடுத்தி, ஏழை விவசாயிகளுக்கு மின்சாரம் மூலமாவது வசதி செய்து கொடுத்து, அவர்கள் சொந்தப் பொறுப்பில் கேணிகள் வெட்டியிருந்தாலும் கூட, அவர்களுக்கு வேண்டிய மின்சார வசதியைச் செய்து கொடுத்தால், அவர்கள் உணவுப் பொருள்களை அதிகமாக உற்பத்தி ஆக்குவார்கள் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில், எங்களுடைய வட்டாரங்களில் மின்சாரம் வேண்டும் என்று விரும்பி, எத்தனையோ விண்ணப்பங்களை அனுப்பினோம். ஆனால், மின்சார இலாகாவினர், 2, 3 வருஷங்கள் ஆகியும், கம்பங்களை மட்டும் நட்டுவிட்டு, மற்ற வேலைகள் எதுவும் செய்யாமல் விட்டுவிடுகிறார்கள். அதற்கு என்ன காரணம் என்றே தெரியவில்லை. நான் நினைக்கிறேன், அந்த வட்டாரத்தில் எதிர்க் கட்சிக்காரர் அங்கத்தினராக இருப்பதால்தானோ என்னமோ என்று நினைக்கவேண்டி இருக்கிறது. நம்முடைய முதல் அமைச்சர் இந்தப் பொறுப்பில் இருக்கும் இந்த நேரத்திலே, எந்தக் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினராக இருந்தாலும், எல்லாப் பகுதிகளுக்கும், ஒரு குடும்பம்போல் பரிபாலனம் செய்தால் தான் நன்றாக இருக்கும் என்பதை இந்த முதல் அமைச்சருக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அதே நேரத்திலே இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். எனக்குத் தெரிந்தவரை, ஞாபகம் வந்ததைச் சொல்ல விரும்புகிறேன். ஜனவரி மாதம் 27-ம் தேதி மாவட்ட ஆட்சித் தலைவர் அவசரக் கூட்டம் என்று சொல்லியிருந்தார்கள். நான் கடலூர் கலெக்டர் ஆபீஸ் உள்ளே இருந்தேன். அப்பொழுது ஒரு அபாய அறிவிப்புபோல் செய்தி வந்தது. அப்பொழுது அவர்கள் சிதம்பரத்திற்கு ஜீப்பிலே போய்க்கொண்டு இருந்தார்கள். நான் கவர்ன்மெண்ட் எக்ஸ்பிரஸ் பஸ்ஸில் போய்க்கொண்டு இருந்தேன். அப்பொழுது கேள்விப் பட்டேன், சிதம்பரத்தில் ராணுவம், போலீஸ் இவர்கள் சுட்டார்கள் என்று. என்.சி.சி. பிள்ளைகளும் பாதிக்கப்பட்டார்கள். டுமீல் டமீல் என்று சத்தம் கிளம்பியது. பொது மக்கள் ஓடையிலும் அங்கும் இங்கும் ஓடி ஒளிந்தார்கள். என்னுடைய பையனும் அங்கே பி.எஸ்.சி. படிக்கிறான். ஒரு பிள்ளை சுட்டுக் கொல்லப்பட்டான் என்று கேட்டதும், உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடிப் பார்க்கும்போது அது ராஜேந்திரன் என்று வேறொரு பையன் என்று தெரிந்தது. அங்கே பின்வாங்கி ஓடிக்கொண்டிருந்த மாணவர்களையும் போலீஸ் சுட்டு வீழ்த்தியது. அந்த மாதிரி நிலைமை உருவாகாமல் முதல் அமைச்சர் பார்த்துக்கொள்ளவில்லை.

முன் காலத்து அமைச்சரைப்பற்றிக் கதைகளில் மூலம் தெரிந்து கொள்கிறோம். புதிய அமைச்சர் வந்தாராம், அவரைக் கேட்டார்கள், அரசனுடைய மார்பில் ஒருவன் பாதம் பட்டால், அவனை என்ன செய்ய வேண்டும் என்று கேட்க அந்தப் புதிய மந்திரி அவனுடைய கால்களை முறிக்க வேண்டும் என்று சொன்னானாம். ஆனால், பழைய அமைச்சர், அந்தக் கால்களுக்கு ஆபரணங்கள் பூட்டி ஆதரவுடன் பார்க்க வேண்டும், என்று சொன்னார். ஏனென்றால், அரசனுடைய மார்பில் பாதம் படக்கூடியது, அவருடைய



பிள்ளையினுடையதாகத்தான் இருக்கும். பழைய மந்திரி சொன்னது எவ்வளவு பொறுத்தமானது, சரியானது என்று இந்த மன்றத்திலே உள்ளவர்களுக்குத் தெரியும். ஆகவே, ஒரு குழந்தையைப் பெற்று எத்தனையோ ஆசையுடன் வளர்த்து எடுத்த தாய் தந்தையர்கள், தன்னுடைய பிள்ளை இப்பேர்ப்பட்ட ஆபத்தில் சிக்கினான் என்று கேட்டால் என்ன பாடுபடுவார்கள் என்பதைக் கனம் முதல் அமைச்சர் சிந்தனை செய்து பார்க்க வேண்டும். அர்ஜுனன் ஈசுவரனை மண்டையில் அடித்து வரம் வாங்கியது போல், சர்க்கார் அல்லது அமைச்சர் ஈசுவரனுக்குச் சமமானவர்கள். ஆகையால் பிள்ளைகள் அமைச்சர் மண்டையில் அடித்து வரம் கேட்பதைப்போல் சர்க்காரைக் கேட்பதற்கும் உரிமை உண்டு. மற்ற எல்லாத் தெய்வங்களையும் கும்பிடுவது கிடையாது. அந்தப் பழக்கம் கிடையயாது, எனக்கும் கிடையாது. அறநெறி காப்பவர் அமைச்சர், ஆகவே அமைச்சர் ஈசுவரனுக்குச் சமம். ஆகவே, அப்படிப்பட்டவர்கள், பிள்ளைகள் நல்ல கல்வி கற்றுக் கொள்வதோடு, இம் மாதிரிச் செயல்கள் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். எனக்குத் தெரிந்த வரையில் சொல்லுகிறேன், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் இதெல்லாம் தங்களுக்கு நல்லது என்று நினைக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. துரியோதனாதிகள் பெரும் படையாகத்தான் இருந்தார்கள். சிற்றரசர்கள் அவர்களுடைய அடக்கு முறைக்கு அடங்க வேண்டியிருந்தது. ஆனால், காலம், நேரம் வந்த காலத்தில், படை பலம், பண பலம், ஆள் பலம் அத்தனையும் காணாது போய்விட்டது. இந்த மன்றத்திலே ஆட்சி பீடத்திலே எத்தனை நாளைக்கு இருப்போம் என்பது நமக்கே தெரியாது. ஆகையினால் அதை நினைத்துப் பார்க்க வேண்டும். ஒரு பெரிய முனிவரைக் கண்டபோது அவர் நல்ல எண்ணத்தால்தான் 'நான் 21 பிரமன்களைக் கண்டிருக்கிறேன்' என்று சொன்னாராம். அப்படியெல்லாம் இருக்கும்போது, இப்படி அடக்கு முறையால் ஆட்சி செய்யாமல், ஆட்சி பீடத்தில் நன்றாக இருந்து, நியாயமாக நீதி பரிபாலனம் செய்ய வேண்டும். மாணவர்களின் கல்விக்கு இடையூறு இல்லாமல்—இந்த இயக்கத்தில் ஈடுபட்டு கைது செய்யப் பட்டிருக்கிற மாணவர்களை, அவர்களுடைய குற்றத்தைச் சிறு பிள்ளைகள் செய்ததைப் பெரியோர் பொறுப்பது கடன் என்ற முறையில், மன்னித்து—அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* திரு. டி. கார்ச்சா கவுடர் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய கனம் முதல் அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப் பட்டிருக்கிற இந்த பட்ஜெட்டை ஆதரித்து என்னுடைய உரையை ஆரம்பிக்கிறேன். பட்ஜெட்டை ஆராய்வதற்கு முன்னே, நாட்டிலே சென்ற மாதத்திலே ஏற்பட்ட வன்முறைகளைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். மாணவர்கள், ஹிந்தி எதிர்ப்பு என்று 25-ம் தேதி செய்த கிளர்ச்சி ஏன் என்று தெரிந்து கொள்ள வேண்டும். அதில் எனக்குச் சந்தேகங்கள் இருக்கின்றன. எந்தக் கட்சிக் காரர்கள், தங்கள் கையால் ஆகாததனத்தைக் காட்டாமல் இருக்க, மாணவர்களைத் தூண்டிவிட்டு, தங்களுடைய கட்சியைப் பலப்படுத்த

[திரு. டி. கார்ச்சா கவுடர்] [3rd March 1965

முயன்றார்கள் என்பதற்கு என்னிடமும் சில தகவல்கள் இருக்கின்றன. மாணவர்கள் தலைவராக இருந்த ராமன் என்பவர் எங்கள் ஜில்லாவில் இருந்து சென்னைக்கு வந்து ராஜதானிக் கல்லூரிகளில் படிப்பவர். அவரை நான் பிப்ரவரி 4-ம் தேதி கூப்பிட்டுக் கேட்டேன் : "எதற்கு இப்படிச் செய்கிறீர்கள், மொழிப் பிரச்சினை இருந்தால், நமது முதல் அமைச்சர் இருக்கிறார்களே, அவர்களிடம் சொல்லக் கூடாதா ? அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. காமராஜ் இருக்கிறாரே. இவர்கள் இருவரால் தீர்க்க முடியாததை நீங்கள் எப்படித் தீர்த்துவிடுவீர்கள்" என்று. அதற்கு அவர் சொன்னார், "நாங்கள் ஏதோ இந்திக்காகப் போராட்டம் நடத்த வேண்டும் என்று உத்தேசிக்கவில்லை. திராவிட முன்னேற்றக் கட்சிக்காரர்கள், சில கல்லூரிகளில், அவர்கள் கட்சி அபிப்பிராயம் கொண்ட மாணவர்கள் உள்ள கல்லூரிகளில், இல்லாததை எல்லாம் சொல்லி, இந்த இயக்கத்தை ஏற்படுத்தினார்கள். இயக்கம் நடத்த எங்களுக்குத் தடை இருக்கிறது. ஆகையினால், நீங்கள் நடத்துங்கள் என்று சொல்லி, அவர்களுடைய அனுதாபிகளான மாணவர்களைத் தூண்டிவிட்டதனால், இந்த இயயக்கம் நடந்தது "என்று என்னிடம் சொன்னார். அதுவுமல்லாமல், "இந்த இயக்கத்தை நீங்கள் எப்படி நடத்துகிறீர்கள் ? இந்த இயக்கம் நடத்தப் பணம் எங்கிருந்து கிடைக்கிறது ? இவ்வளவு பெருவாரியான பணம் எங்கிருந்து கிடைக்கிறது ?" என்று நான் கேட்டேன். "ராஜாஜி அவர்களிடம் சென்று பணம் கேட்டோம். அவர் 'ஆலோசனை வேண்டுமானால் தருகிறேன், பணம் தர முடியாது' என்று கூறிவிட்டார். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எங்களுக்குப் பணம் கொடுத்தார்கள். கம்யூனிஸ்டுகள் எங்களுக்குப் பணம் வாரி வாரிக் கொடுக்கிறார்கள்" என்றெல்லாம் என்னிடம் சொல்லியிருக்கிறார். இவ்விதமான சூழ்நிலையிலே தமிழ் நாட்டில் நடந்த இந்தப் பெரும் கொலைகளுக்கும், கொள்ளைகளுக்கும் யார் காரணம் என்பதை இந்தத் தமிழ்நாடு நன்றாக அறியும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மக்களைத் தூண்டிவிட்டு, மாணவர்களைத் தூண்டிவிட்டு, குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தினர் செய்த அட்டூழியங்களை நான் இந்தச் சமயத்திலே இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

அநேகமாக எல்லா ஜில்லாக்களிலும் துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது. கோவை ஜில்லாவில் திருப்பூரில் நடந்த சம்பவத்திலிருந்து, நாமெல்லாம் இருபதாம் நூற்றாண்டில்தான் வாழ்கிறோமா, நாமெல்லாம் நாகரிகமான மக்கள்தானா, அல்லது கற்காலத்திலிருக்கும் காட்டுமிராண்டிகளா என்கிற உணர்ச்சி எனக்கு ஏற்படுகிறது. சட்டத்தையும் அமைதியையும் பாதுகாக்க, மக்களின் உடைமையையும், உரிமையையும், உயிரையும் பாதுகாக்க இருக்கும் போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டர்களைப் பிடித்து, அவர்கள் மீது பெட்ரோலை ஊற்றி, தாகத்திற்குத் தண்ணீர் கேட்கும் போது வாயிலும் பெட்ரோலை ஊற்றி, தீயை வைத்துக் கொளுத்தியிருக்கிறார்கள். இதைவிட மோசமான, காட்டுமிராண்டித்



3rd March 1965] [திரு. டி. கார்ச்சா கவுடர்]

தனமான செய்கை வேறு என்ன—எதிர்க்கட்சி தூண்டி—செய்திருக்க முடியும் என்பதை இந்தச் சபை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**திரு. எஸ். மணி :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். கனம் உறுப்பினர் அவர்கள் பேசும்போது, அந்தப் போலீஸ்காரரின் இறப்புக்குக் காரணம் எதிர்க்கட்சிகளின் தூண்டுதல் என்று குறிப்பிடுகிறார்கள். It is an insinuation. அதற்கும் எந்த எதிர்க்கட்சிக்காரர்களுக்கும் சம்பந்தம் இல்லை. எங்கள் தலைவர்களால் இந்த வன்முறை கண்டிக்கப்பட்டும் கூட, கனம் உறுப்பினர் தொடர்ந்து சொல்வதை நான் பலமாக ஆட்சேபிக்கிறேன். கனம் அங்கத்தினர் சொல்லியதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இது ஒரு பாயின்ட் ஆப் ஆர்டருக்குரியது அல்ல. தனிப்பட்ட யாரையும் கனம் உறுப்பினர் சொல்லவில்லை. ஆகவே, இதிலே பாயின்ட் ஆப் ஆர்டருக்கே இடம் இல்லை. கனம் உறுப்பினர் யாராவது மறுக்க வேண்டுமென்றால், அவர்கள் பின்னால் பேசும்போது மறுத்துப் பேசலாம் என்பது என் அபிப்பிராயம் ஆகும்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இந்தச் சபையில் இருக்கும் எல்லா எதிர்க்கட்சியினரையும் கனம் உறுப்பினர் குறிப்பிடுகிறார்.

The hon. Member must not make vague allegation against representatives of political parties. It is definitely an insinuation and I request the Deputy Speaker to give a ruling on this matter.

**கனம் உதவி சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் பேசும்போது, 'சட்டசபையிலே இருக்கின்ற எதிர்க்கட்சிகள் செய்த தூண்டுதல்' என்று சொல்லவில்லை. 'பொதுவாக, அரசியல் எதிர்க்கட்சிகள்' என்று குறிப்பிட்டார்கள். ஆகையால், இதைப்பற்றி ஒன்றும் ஒழுங்குப் பிரச்சினை எழவில்லை.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் பேசுவதைக் கட்டுப்படுத்த உதவி சபாநாயகராகிய தங்களுக்குத்தான் அதிகாரம் இருக்கிறதே தவிர, எதிர்க்கட்சியினர் எனக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டாம் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, மதுரையில் நடந்த சம்பவத்தைப்பற்றி நான் கூற ஆசைப்படுகிறேன். போலீசார்களை அடித்துக் கொன்றிருக்கிறார்கள். யார் அடித்துக் கொன்றார்கள், யார் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை . . . .

**திரு. செ. மாதவன் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மதுரையில் எந்தப் போலீஸ்காரரை யார் அடித்துக்

[திரு. இராம. அரங்கண்ணல்] [3rd March 1965

கொன்றார் என்று கனம் உறுப்பினர் சொல்லட்டும். உண்மை இல்லாத செய்தியைச் சொல்ல வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** மதுரை ஜில்லாவில் கூடலூரில் நான் சொல்கிற நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது.

அடுத்தபடியாக, சிதம்பரம் சர்வகலாசாலை ரிஜிஸ்டரார் விட்டுக்குப் போகும்படி மாணவர்களைத் தூண்டிவிட்டு, ரிஜிஸ்ட்ராருடைய உடைமைகளையும், துணிமணிகளையும், நகை, ரொக்கம் முதலியவைகளையும் எரிப்பதென்றால், அது நியாயமா ? அதை எதிர்க்கட்சியினர் ஒத்துக்கொள்கிறார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

Sri K. A. MATHIALAGAN : Sir, no opposition party has supported it. We definitely condemn all acts of incendiarism.

**கனம் உதவி சபாநாயகர் :** கனம் அங்கத்தினர், 'நியாயமா ? ஒத்துக் கொள்கிறார்களா?' என்று தான் கேட்கிறார்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** இன்று உலகத்திலேயே மிகச் சிறந்த தத்துவ ஞானி என்று புகழப்படுபவரும், தேசத்தின் தலைவருமான டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்களுடைய திருத்தணி வீட்டுக்குச் சென்று, அங்கே உள்ள லைப்ரரியிலுள்ள மேஜை, நாற்காலிகளை உடைத்து, ஆங்கிலப் புத்தகங்களை எடுத்து எரித்திருக்கிறார்களே, அதுவும் எதிர்க்கட்சியினரின் தூண்டுதல்தான் என்று நான் கூறிக்கொள்ளுகின்றேன்.

Sri K. A. MATHIALAGAN : I object to the vague allegation repeatedly made by the hon. Member against other parties even after a ruling has been given by the Chair.

'எதிர்க்கட்சிகள்' என்று கனம் உறுப்பினர் சொல்லிக் கொண்டே இருக்கிறார். எந்த எதிர்க்கட்சியில் யார் என்று அவர் சொல்லவேண்டும்.

Let him substantiate it. He should not make vague allegations.

**கனம் உதவி சபாநாயகர் :** 'எதிர்க்கட்சிகள்' என்று சொன்னாலும், இங்கே இருக்கின்ற அங்கத்தினர்கள் என்று அவர் குறிப்பிடவில்லை. அரசியல் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களை அவர் குறிப்பிட்டிருக்கலாம். ஆகையால் ஒழுங்குப் பிரச்சினை எழவில்லை.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பாண்டிச்சேரியில் அரவிந்த ஆசிரமத்திலே புகுந்து, செய்யத்தகாத அட்டூழியங்களைச் செய்திருக்கிறார்கள். வாயால் சொல்ல முடியாத அட்டூழியங்களைச் செய்திருக்கிறார்கள். இதை யார் செய்தார்கள் ? 'கடவுள் இல்லை' என்று சொல்பவர்களைத் தவிர வேறு யார் அந்தக் காரியத்தைச் செய்ய முடியும்?

**திரு. பி. முருகையன் :** 'கடவுள் இல்லை' என்ற கொள்கையை உடையவர்கள் காங்கிரசிலே கூட இருக்கிறார்கள்.



3rd March 1965]

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** ரயில்வேக்கள் நமது உடைமைகள், அப்படிப்பட்ட ரயில்வே ஸ்டேஷன்களையும், ரயில் பெட்டிகளையும் சென்னையிலே எரித்திருக்கிறார்கள். எதிர்க்கட்சியால் தூண்டப்பட்ட ரௌடிகளையும், எதிர்க் கட்சியால் தூண்டப்பட்ட சமூக விரோத சக்திகளையும், எதிர்க் கட்சியிலே உள்ள இப்படிப்பட்ட சிலரையும் முதல் அமைச்சர் அவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் அல்லது பீரங்கி வைத்துச் சுட்டு இந்த நாட்டின் மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்திருந்தாலும் நான் வரவேற்றிருப்பேன் என்று இந்தச் சமயத்திலே நான் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அவர் மாத்திரம் போலீசாருக்குச் சுடும் உத்தரவு இட்டிராவிட்டால், இந்தச் சட்டசபையில் நாம் இங்கே கூட முடியுமா என்பதே சந்தேகம்தான். சட்டசபைக் காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள் உயிருடன் இங்கே வந்து சேர்ந்திருக்க முடியுமா ! என்பதும் சந்தேகமே. ஏனென்றால், அவ்வளவு ஆபத்தான நிலைமை இருந்திருக்கிறது என்பதை இந்தச் சமயத்திலே நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இவ்வளவு தூரம் மாணவர்களைத் தூண்டி விட்டும்கூட, இப்பொழுது அமைதியான சூழ்நிலை வந்திருக்கிறது. மாணவர் தலைவர்கள் முதல் அமைச்சர் அவர்களை நேற்று பார்த்திருக்கிறார்கள். "நாங்கள் எட்டாந் தேதி பள்ளிக்கூடத்திற்குப் போய்விடுகிறோம், முதல் அமைச்சர் மொழிப் பிரச்னை சம்பந்தமாகச் சொல்லியிருப்பதொடல்லாமல் எங்களுக்கு மன நிறைவு அளிக்கிறது" என்று சொன்ன பிறகும் கூட, இன்று கனம் உறுப்பினர் திரு. மாதவன் அவர்கள் நமது முதல் அமைச்சரைப் பார்த்து, சொல்லாத மொழிகளையெல்லாம் சொல்லியிருக்கிறார்.

Sri S. MADHAVAN : The Hon. Speaker has allowed me to speak.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** அவரைத் தனிப்பட்ட முறையில் குறைகூறிப் பேசினதைப்பற்றி நான் மிகவும் வருத்தம் அடைகிறேன். இந்த இயக்கம் ஆரம்பித்ததை நாம் சற்று கவனத்தில் கொள்ளவேண்டும். 'இந்தி ஒழிக' என்ற இயக்கத்தைக் காட்டிலும், முதல் அமைச்சரின் மேலிருக்கும் அத்தனை பொறாமையையும், அத்தனை வெறுப்பையும் காட்டக்கூடிய அளவில் எதிர்க்கட்சிகள் மாணவர்களைத் தூண்டிவிட்டு இருக்கிறார்கள். 'இந்தி ஒழிக' என்றிருந்தாலும், 'முதலமைச்சர் ஒழிக' என்ற கோஷத்தை மாணவர்கள் கூறும்படி எதிர்க்கட்சிகள் செய்திருக்கின்றன என்பதை இந்தச் சமயத்திலே நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். என்ன சொன்னார்கள்? 'இந்தி ஒழிக', 'தமிழ் வாழ்க' என்று கூறுகிறார்கள். தமிழ் எங்கே வாழ்கிறது? என்று நான் கேட்கிறேன். (எதிர்த் தரப்பில் ஆரவாரம்). தமிழைக் காப்பதற்கு இந்த அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன? கோவைக் கல்லூரியிலும் மற்ற சில கல்லூரிகளிலும் மாணவர்களைத் தமிழ் மீடியம் மூலமாகப் படிக்கச் சொல்லி முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். ஏன் ஒரு கல்லூரி மாணவனும் அங்கே சேரவில்லை? தமிழில் ஆர்வம் இல்லை. மாணவர்களிடையே தமிழுக்குச் செல்வாக்கே கிடையாது. மாணவர்கள் விரும்புவ

[திரு. டி. கார்ச்சா கவுடர்] [3rd March 1965

1-00. p.m. தெல்லாம் ஆங்கிலம். ஆனால், மாணவர்கள் 'இந்தி ஒழிக', 'ஆங்கிலம் வாழ்க' என்று சொல்லியிருந்தால் அது மாணவர் இயக்கமாக இருந்திருக்கும். ஆனால் இந்தி ஒழிக, தமிழ் வாழ்க என்று சொல்வதன் அர்த்தமே திராவிட முன்னேற்றக் கழகத்தின் தூண்டுதல் அன்றி வேறு ஒன்றும் இல்லையென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, இதைப்பற்றி நான் பேசி உணர்ச்சி வசப்பட விரும்பவில்லை. இன்னும் எவ்வளவோ நடந்து இருக்கின்றன. ஆயினும் பட்ஜெட்டைப் பற்றிச் சில வார்த்தைகள் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நாம் என்ன செய்திருக்கிறோம் இந்த ஐந்தாண்டு காலத்தில் என்பதைத் தனியாக நின்று ஆலோசிக்க வேண்டும். உதாரணமாக நான் ஒரு சிறு கிராமத்தில் இருந்து வருபவன். அந்த கிராமத்தில் 1947-க்கு முன்னால் ஒன்றும் கிடையாது. 1947-க்குப் பிறகு மின்சார சப்ளை கிடைத்திருக்கிறது. ப்ரொடெக்டெட் வாடர் சப்ளை கிடைத்திருக்கிறது. ஒரு எலிமெண்டரி ஸ்கூல் பில்டிங் கட்டியிருக்கிறார்கள். ஒரு மைலுக்குள் ஹைஸ்கூல் கட்டியிருக்கிறார்கள். போஸ்டாபீஸ் ஏற்படுத்தியிருக்கிறார்கள். உணவுக்காக கோவாப்ரேடிவ் சொசைடி வைக்கப்பட்டு இருக்கிறது. தார் போட்ட ரோடு போட்டு இருக்கிறார்கள். ஒரு லைப்ரரி இருக்கிறது. ஒரு கம்யூனிடி ஹால் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இப்போது டெலிபோன் போட்டுக் கொண்டு வருகிறார்கள். இது நீலகிரியில் உள்ள ஒரு கிராமத்தைப் பற்றிச் சொல்கிறேன். இதைவிட ஒரு க்ஷேமநல அரசாங்கம், மக்களுக்காகப் பாடுபடுகின்ற அரசாங்கம் என்ன செய்ய முடியும்? இதைச் சற்று சிந்தித்துப் பார்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மது அரசாங்க அதிகாரிகளுக்கும், சிப்பந்திகளுக்கும் டி. ஏ. உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். அதைப் பற்றி நமது அதிகாரிகளும், சர்க்கார் ஊழியர்களும் மன நிறைவுடன் பாராட்டுகிறார்கள். இந்த ஒரு சலுகையை கிராம அதிகாரிகளுக்கும், சமீபத்தில்தான் அவர்களுடைய சம்பளத்தை உயர்த்திக் கொடுத்திருக்கிறோம் என்றாலும்—அவர்களுக்கும் இந்த டி.ஏ. உயர்வைக் கொடுத்தால் நல்லதாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பென்ஷன் இருக்கிறது. ஆசிரியர்களுடைய பென்ஷன் ஐந்து ரூபாய், ஆறு ரூபாய், எட்டு ரூபாய் என்ற நிலைமையில் இருக்கிறது. அவர்கள் எல்லாம் முதல் அமைச்சர் அவர்களிடத்தில் வந்து முறையிட்டு இருக்கிறார்கள். ஓல்ட் ஏஜ் பென்ஷன் அளவுக்காவது உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். ஆகவே இப்படிக் குறைந்த பென்ஷன் வாங்குபவர்களுக்கு 20 ரூபாய் அளவுக்காவது உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொண்டு எனக்கு பேச சந்தர்ப்பம் அளித்த சபாநாயகருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.



3rd March 1965]

**திருமதி சி. குழந்தை அம்மாள்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நமது முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த நிதி நிலை அறிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆண்டிலே சிறப்பாக சிறிய நீர்ப்பாசனத் திட்டத்திற்கு, குறுகிய கால வெள்ளாமை உற்பத்தியைப் பெருக்க அதிகப்படியான தொகை ஒதுக்கி இருப்பதை நான் பாராட்டுகிறேன். வரவேற்கிறேன். காரணம் என்னுடைய வட்டாரமானது பஞ்சப் பிரதேசம். வறண்ட பகுதி, மழை மறைந்த பிரதேசம். அந்தப் பகுதியில் ஒரு கிணறு வெட்ட ஐயாயிரம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்றால் இருபத்தையாயிரம் ரூபாய் செலவு செய்ய வேண்டியதாக இருக்கிறது. அப்படி வெட்டினாலும் தண்ணீர் குறைவாக இருக்கிறது. பவர் ட்ரில் கொண்டு வந்து தண்ணீரை வெளிக் கொணர நமது சர்க்கார் தீவிர முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஏற்கனவே கோயம்புத்தூர் ஜில்லாவில் இருக்கிற ஐந்து பவர் ட்ரில்களும் மிக மிகப் பழமையானது. அதைப் புதுப்பிக்க வேண்டுமென்று சொன்னால் வெளிநாட்டுச் செலாவணி கிடைக்கவில்லை. இருக்கிற ட்ரில்களை ரிப்பேர் செய்து ஓட்டுங்கள் என்று அறிவிக்கிறார்கள். இந்த ட்ரில்களை என்ன தான் ரிப்பேர் செய்தாலும் கூட ஆழமாகக் குழி போட முடியாது. அதிகப் பிரயாசைப்பட்டு குறைந்த லாபத்தைப் பெறுவதில் பயன் கிடையாது. ஆகவே எப்படியாவது அந்நியச் செலாவணியைப் பெற்று நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் 50 பவர் ட்ரில்களையாவது இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு வழங்க வேண்டுமென்ற யோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நடுத்தர பெரிய பாசனத் திட்டத்தின் அடிப்படையில் எங்கள் ஜில்லாவில் இப்போது பரிசிலனையில் இருந்து வருவது மேல் பாவனித் திட்டம். குறிப்பாக பல்லடம், அவிநாசி, கோவை தாலூகாக்கள் மிக மிக வறண்ட பகுதியாக இருக்கின்றன. ஒரு கிணறு எடுக்க வேண்டுமென்றால் 125 அடி ஆழம் போக வேண்டும். சென்ற ஆண்டில் ஒரு கிணற்றுக்கு ஒரு பம்பு செட்டு போட்டு இறைத்தார்கள் என்றால் இந்த ஆண்டு 2 பம்பு செட்டு போட வேண்டிய நிலை இருக்கிறது. முன்பு 75 ரூபாய் மின்சாரக் கட்டணம் கட்டினவர்கள் இப்போது 130 ரூபாய் மின்சாரக் கட்டணம் கட்ட வேண்டியிருக்கிறது. இப்படி விவசாயச் செலவுகள் அதிகப்படப் பட விவசாயிகள் கடனில் ஆழ்ந்து போகிறார்கள். அந்த விவசாயிகளுடைய கஷ்டத்தைப் போக்க என்ன என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பது பரிசிலனை செய்ய வேண்டிய விஷயம். வருடா வருடம் இப்படிப் பாசன வசதி இன்றி அவர்கள் கஷ்டப்படுவதைத் தடுக்க நிரந்தரப் பரிகாரமாக மேல்பவானித் திட்டத்தில் இந்தப் பகுதி இடம் பெறவேண்டும் என்று பணிவுடன் அமைச்சரவையைப் பார்த்துச் சொல்லிக் கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, கால்நடை தீவன உற்பத்தியைப் பெருக்குவது சம்பந்தமாகப் பார்த்தால் கரும்பு, பருத்தி, சிகரி போன்ற பொருள்கள் கிடைக்கக் கூடிய பகுதியில் அதிகமாக உற்பத்தி

செய்கிறார்கள். விவசாய காலேஜ் மூலமாக அவர்களுக்கு நல்ல முறையில் உதவி செய்ய வழி வகுக்க வேண்டும் இன்றைய தினம் போதுமான தீவனம் கிடைக்கவில்லை.

அதற்கும் மேலே அரிசி விநியோகம். அந்த விநியோகத்தில் நான்கைந்து மாதமாக ஏற்பட்டுள்ள அனுபவத்தைக் கொண்டு நான் சொல்ல முடியும். ஆந்திராவில் இருந்து பச்சை அரிசி தான் வருகிறது. அதுவும் நொறுங்கலாக வருகிறது. எங்கள் பகுதியில் உள்ளவர்கள் புழுங்கல் அரிசியைச் சாப்பிடுபவர்கள். இந்தப் பச்சை அரிசிக் குருணை அவர்களுக்குப் பயன்படவே இல்லை. ஆகவே நமது அரசாங்கம் கண்டிப்பாக ஆந்திரா சர்க்காரை நெல்லாகவே அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டும். நாம் இங்கே புழுங்கலாக ஆக்கிக் கொள்ள முடியும்.

அடுத்தபடியாக, உணவு தானியக் கார்ப்பரேஷனை அமைத்திருக்கிறார்கள். அந்தக் கார்ப்பரேஷன் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, எண்ணெ வகைகள் ஆகியவற்றை படிப்படியாக விநியோகிக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்தபடியாக ஒவ்வொரு ஆண்டும் கல்விக்காக லட்சக் கணக்கான ரூபாய் செலவு செய்கிறோம். இது பற்றி என் அனுபவத்தைச் சொன்னால் என் தொகுதியில் 71 பள்ளிக்கூடங்களில் எட்டாவது, ஒன்பதாவது இடங்களுக்கு இடம் பற்றாமல் இருக்கிறது. முதல் ஆண்டில் அனுமதித்த ஹரிஜன மாணவர்களை அப்புறம் அனுமதிக்க முடியவில்லை. ஆகவே கண்டிப்பாக குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் மூலம் இந்த நாட்டில் நிலவும் பஞ்சத்தையும், பட்டினியையும் போக்க தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று அரசாங்கத்தைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹரிஜன நல இலாகாவில் தாசில்தார்கள் போட்டு இருக்கிறார்கள். அந்தத் தாசில்தார்கள் எல்லாம் டெம்பரரியாகப் போடப்பட்டு இருப்பதால் பர்மெனன்ட் வேகன்ஸ் வரும்போது வேறு இடங்களுக்குப் போக முயற்சிக்கிறார்கள். இதனால் அத்துறையில் அனுபவம் பெற்றவர்களுடைய சேவை நமக்குக் கிடைக்காமல் போகிறது. ஆகவே, மூன்றாண்டு ஐந்தாண்டு என்பதாக ஒரு இலாகாவில் நிரந்தரமாக்கப்படாமல் அதிகாரிகள் இருந்தால் அந்த இலாகாவை பர்மனென்ட் செய்து அந்த அதிகாரிகளையும் பர்மனென்ட் செய்ய வேண்டும்.

அதற்கு அடுத்தபடியாக, வீட்டு வாடகைப் படியாக 9 ரூபாய் எங்கள் பகுதியில் கொடுக்கப்படுகிறது. கோயம்புத்தூரில் ஒரு ஆள் கூட 9 ரூபாய் வாடகைக்கு ஒரு வீட்டைப் பெற முடியாது. ஆகவே ஜில்லாக்களில் உள்ள டெபுடி தாசில்தார், லோயர் டிவிஷன் குமஸ்தாக்கள், டெலிபோன் ஆபரேட்டர்கள் ஆகிய எல்லா சர்க்கார் சிப்பந்திகளுக்கும் மூவாயிரம் ரூபாய் வரைக்கும் செலவு செய்து வீடு கட்டும் திட்டத்தைச் சீக்கிரமாக அமுல் நடத்த வேண்டும்.

தேச நெருக்கடி காரணமாக சென்ற ஆண்டு நிறுத்தப்பட்ட திட்டங்களை இவ் வாண்டு எடுத்துக் கொள்ள அனுமதித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான்காண்டுகளாக என்





னுடைய பகுதியில் ப்ரைமரி ஹெல்த் சென்டர் வேலை நிறுத்தப்பட்டு இருக்கிறது. கேட்டால் அது மலேரியா ஒழிப்புத் திட்டத்தின் கீழ் வருகிறது என்கிறார்கள். ஆனால் எந்தத் திட்டத்தின் கீழும் அது மேற்கொள்ளப்படவில்லை. இன்னும் எத்தனை நாளைக்கு ஒத்திப் போடுவார்களோ தெரியவில்லை. கட்டிடச் செலவு ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டே போகிறது. சென்ற ஆண்டு நாலாயிரத்தில் கட்டக் கூடிய கட்டிடத்திற்கு இவ்வாண்டு ஐயாயிரம் செலவாகும். இரும்பு, சிமட்டி ஆகியவற்றின் விலை ஏறிக் கொண்டிருக்கிறது. ஆகவே கட்டிடங்கள் இல்லாத குறையைப் போக்க தீவிரமாகக் கட்டிடத்தைக் கட்ட நமது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இப்பொழுது பவர்லூம்ஸ், அன்ஆதரைஸ்டு பவர்லூம்ஸ் என்று சொல்லிக் கொடுக்கிறார்கள். லைசென்ஸ் வந்துவிட்டது. எல். 4 லைசென்ஸ் எல்லாம் வந்துவிட்டது. மின்சார சப்ளை வேண்டுமென்று மின்சாரம் கொடுக்கிற எலக்ட்ரிசிடி டிபார்ட்மெண்டைக் கேட்டால், அவர்கள் பஞ்சாயத்திலிருந்து என். ஓ. சி. லைசென்ஸ் வாங்கிவர வேண்டுமென்று சொல்கிறார்கள். பஞ்சாயத்தில் போய்க் கேட்டால் எலக்ட்ரிசிடி லைசென்ஸ் வேண்டும் என்கிறார்கள். இப்படி 'நெய்யுக்கு உழக்கு ஆதாரவா, உழக்குக்கு நெய் ஆதாரவா' என்று சொல்கிற மாதிரி இருக்கிறது. இந்தக் கஷ்டத்தைப் போக்க சட்டத்தைத் திருத்தவேண்டும். லைசென்ஸ் வாங்கி ஆறு மாதங்கள் ஆகிவிட்டன. ஆறு மாதங்கள் ஆகியும் கூட ஓட்ட முடியாமல் இருக்கிறார்கள். அந்த ஆறு மாதங்களுக்கு வட்டி என்ன ஆவது? இதைச் செய்பவர்கள் ஏழைகள் தான். ஏழைகளின் பணத்திற்குப் பாதுகாப்பு வேண்டுமானால் இந்தக் கஷ்டத்தை நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சென்ற 12-2-1965-இல் நடந்த நிகழ்ச்சிகள் பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். திரு. செ. மாதவன் அவர்கள் அடக்குமுறை பற்றி அவருடைய கருத்துக்களைச் சொன்னார்கள். எங்கள் ஜில்லாவிலே ஏற்பட்ட ஒரு சம்பத்தைக் குறிப்பிட்டுவிட்டு நான் என்னுடைய உரையை முடிக்கலாம் என்று நினைக்கிறேன். திருப்பூரிலே, போலீஸ்காரர்களை, சமூக விரோதிகள் பிடித்துக் கட்டிப் போட்டு அவர்கள் மேல் வண்டியை ஏற்றி—பாரமான விறகு வண்டியை ஏற்றி—அதற்கு மேலும் சிலபேர்கள் ஏறி உட்கார்ந்துகொண்டு, அந்த வண்டியை அவர்கள் மேல் ஏற்றி அவர்களைக் கசக்கி, நசுக்கி, பின்பு பெட்ரோலை ஊற்றி நெருப்பு வைத்திருக்கிறார்கள். அந்த நெருப்புச் சம்பவத்தை பார்க்கும்பொழுது, இந்த நாட்டிலே மனிதனாகப் பிறந்த யாருமே கலங்காமல் இருக்க முடியாது. அப்படி இறந்தவருக்கு ஐந்து குழந்தைகள், 32 வயதுள்ள மனைவி 70 வயதுள்ள தகப்பனார். 60 வயதுள்ள தாயார், ஒரே ஒரு மகள். உங்கள் வீட்டில் இப்படி நடந்திருந்தால் சும்மா இருப்பீர்களா? அதை யோசித்துப் பார்க்காமல் இந்தக் கொலைகார ம[illegible]திரிசபை

ஒழிக என்று சொல்கிறார்கள். எனவே, சமூக விரோதச் சக்திகளை இந்த நாட்டிலே அனுமதிக்கக் கூடாது. வள்ளுவர் கூறிய மாதிரி,

" பல்குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பு மில்லது நாடு".

அடக்க வேண்டியதை அடக்குவது சர்க்காருடைய கடமையாகும். ஆகவே போலீசாருக்குத் தாராளமாக அதிகாரங்களைக் கொடுக்க வேண்டும்.

சுக்காரன் பேட்டையில் ஒரு ஊர்வலம் நடந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தார்கள் அந்த ஊர்வலத்தில் . . .

(மணி அடிக்கப்பட்டது)

வடநாட்டுப் பெண்களுடைய ஜடையைப் பிடித்து இழுத்து ஊர்வலத்திற்கு அழைத்திருக்கிறார்கள். டில்லியில் தமிழ்நாட்டுப் பெண்கள் இருக்கிறார்கள். பம்பாயில் உள்ள தமிழ்நாட்டுப் பெண்களுக்கு இப்படி ஏற்பட்டிருந்தால் என்ன ஆவது? அதைக் கொஞ்சம்கூடச் சிந்தித்துப் பாராமல் ஜாதியின் பெயரால் மொழியின் பெயரால் பெண் தன்மையை மானபங்கப் படுத்தியிருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட சமூக விரோத சக்திகளை அடக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

பீளமேட்டில் ஐ.என்.டி.யூ.சி ஆபீசுக்குத் தீ வைத்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக ஒருவரை அரஸ்ட் செய்திருக்கிறார்கள். அவர் தீவிர தி.மு.க. அங்கத்தினரக இருப்பவர். அப்படியானால் தி.மு.க. வில் தீ வைக்கக் கற்பித்து இருக்கிறார்களா?

SRI S. MADHAVAN : The matter is *sub judice*. They have been arrested. They may belong to the D.M.K. Party. But the Court has to decide the question whether they have committed the offence or not. It is not the hon. Member who should decide it.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Court will not decide as to which party they belong.

திருமதி சி. குழந்தையம்மாள்: நடந்ததைத்தான் நான் சொல்கிறேன். சோமனூரில் வந்து பார்த்தால் தெரியும். வெளிநாட்டிலேயிருந்து வந்த பஞ்சு இறக்குமதி செய்யப்பட்டு இருந்தது. இரண்டு லட்சம், மூன்று லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பஞ்சு இருந்தது. அன்னியச் செலாவணி கிடைப்பதே தர்ம சங்கடமாக இருக்கிற இந்த நேரத்தில் பஞ்சு இறக்குமதியாகி இருந்ததை தூக்கிக் கொண்டுபோய் இருக்கிறார்கள். அமோனியம் சல்பேட் எடுத்துக்கொண்டு போய் இருகிறார்கள். அஞ்சிப் பழம், ஆப்பிள் பழம், எண்ணெய் டின்கள் முதலிய பொருள்களை எடுத்துக் கொண்டு போயிருக்கிறார்கள். சூலூர் ஜிப்ட்ஸ் காட்டனுக்கு இரண்டு லட்சம், மூன்று லட்சம் பெறக்கூடிய அந்தக் காட்டனுக்கும் தீ வைத்திருக்கிறார்கள். அங்கு ரயில்வே ஸ்டேஷனை இல்லாத அளவுக்கு அழித்திருக்கிறார்கள். இந்த நாட்டிலே, அழிவு வேலைகளில் ஈடுபடுபவர்கள் யாராய் இருந்தாலும் அவர்கள் சமூக விரோதிகள்தான். அவர்களைத் துப்பாக்கியால் சுட்டது தப்பு என்று சொன்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. வள்ளுவர் கூறுகிறார்.





" செய்தக்கஅல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்".

செய்ய வேண்டியதைச் செய்யாமல் விட்டாலும் கேடுதான் வரும் என்று சொல்லியிருக்கின்றார். ஒரு இடத்தில் நெருப்பு வைத்தவர்களைச் சும்மா விட்டுவிட்டால் அவர்கள் ஊரையே கொளுத்தி விடுவார்கள். ஒரு ஊரிலே நடந்த சம்பவத்தைப் பார்க்கும் பொழுது எந்த மானமுள்ள ஆணோ பெண்ணோ பொறுத்துக் கொள்ள முடியாது. இதைவிட அபாயமானது கோயம்புத்தூர் ஜில்லாவில் கார்கள் எல்லாம் விளையாட்டுப் பொருள்களாக ஆகிவிட்டதுதான். கார்கள் வந்தால் கற்களைப் போடுகிறார்கள். கார்களை நிறுத்தி இந்தி ஒழிக, தமிழ் வாழ்க என்று எல்லாம் எழுதினார்கள். 20,000 ரூபாய் போட்டு வாங்கிய கார்கள் எல்லாம், 2 அணா 3 அணா கொடுத்து வாங்கிய குழந்தை விளையாட்டுப் பொருள்களைப் போல் ஆகிவிட்டது. கார் எல்லாம் விளையாட்டுக் கருவிகளா? பொருளாதார வளம் பெருகுவதற்கு சீக்கிரமாக வேலைகளைச் செய்வதற்காக மத்திய தரப்பினர்கள் தான் கார்கள் வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய காரைப் பாழாக்கிவிட்டால் மீண்டும் அவைகளைப் புதுப்பிப்பதற்கு அவர்கள் என்ன கஷ்டப்படுவார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பணக்காரர்களானாலும் சரி, ஏழைகளானாலும் சரி, உடமைகளுக்குப் பாதுகாப்புத் தர வேண்டுமென்றால் அவர்களுடைய சொத்துக்கள் அழிக்கப்படாமல் காப்பாற்றப்பட வேண்டுமென்றால் துப்பாக்கியால் சுடத்தான் வேண்டும். அல்லது கடுங்காவல் தண்டனை வழங்கத்தான் வேண்டும். இன்னும் தீவிரமான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆனால் இந்தச் சம்பவங்கள் மாணவர்கள் என்று சொல்லி மாணவர்கள் பெயரால் நடந்தது. அவர்களைச் சொல்லிக் குற்றமில்லை. ஆகையால் இந்த மாதிரிச் சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதற்கு நம்முடைய மந்திரி சபை தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டு, இப்படிப்பட்ட குழப்பமான சமயத்திலே, முதலமைச்சர் அவர்களும் மற்ற மந்திரிகளும் சீக்கிரமாகப் பிரச்சினை தீருவதற்கான யோசனைகளைச் செய்து, நல்ல முறையில் நடவடிக்கை எடுத்துக்கொண்டதற்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொண்டு முடிக்கிறேன்.

*திரு. சி. வே. வேலப்பன்: சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, 1965-66-ஆம் ஆண்டு நிதிநிலையறிக்கையின் மீது என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் பரிசீலிப்பதற்கு முன்பு நாம் வேதனைப்பட்ட உள்ளத்தோடு சில விஷயங்களை இந்த மாமன்றத்தில் கேட்கிறோம். அண்மையில் நடைபெற்ற, அதாவது இந்தித் திணிப்பினைக்கண்டிக்கின்ற அந்த நிகழ்ச்சியைப் பார்க்கிறபோது, இந்த அரசு எடுத்துக்கொள்ள

வேண்டிய நடவடிக்கையை செய்ய வேண்டிய காரியத்தை ஒழுங்காகச் செய்யவில்லை என்றும், அதோடு மட்டுமல்லாமல் அரசாங்கமே இதனைத் தூண்டிவிட்டிருக்குமோ என்ற ஐயப்பாடும் நமக்குத் தோன்றுகிறது. ஆளும் கட்சியைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர்கள் இங்கு குறிப்பிடுகின்றபொழுது, இதை முழுக்க முழுக்க தி.மு.க. தூண்டிவிட்டது என்று கூறினார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் தூண்டியதா என்பதை இந்தித் திணிப்பினைக் கண்டிக்கிற முறையில் இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும், கட்டுக்கோப்பு முறைகளையும் பார்த்தால் தெரியும். மாணவர்கள் திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார்கள். எந்த அரசியல் கட்சிக்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை; எந்த அரசியல் தலைவர் அறிக்கை வெளியிட்டாலும் நாங்கள் கட்டுப்படமாட்டோம். எங்கள் உரிமையை நாங்கள் பெற்றே தீருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இத்தனையும் நடந்த பிறகு, திராவிட முன்னேற்றக் கழகம் தான் பொறுப்பு என்று சட்டமன்றத்திலே விவாதிக்கிறார்கள். உதாரணத்தின் மூலம் விளக்கவேண்டுமானால், நான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவன்; என்னுடைய தொகுதியையும், அதன் சுற்றுப்புறத் தொகுதிகளையும் அங்கு நடந்த தீச் செயல்களையும் பார்த்தால் அதற்குத் தூபமிட்டது காங்கிரஸ் கட்சிதான் என்பதை என்னால் நிரூபிக்க முடியும். என்னுடைய தொகுதியில் எந்தவிதமான அசம்பாவிதமும் நடைபெறவில்லை. ஆனால் என்னுடைய தொகுதியைச் சுற்றியுள்ள தொகுதிகளில், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அல்லாத மற்ற தொகுதிகளில் வடக்கே திருச்செங்கோட்டில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றிருக்கிறது; மாணவர்கள் இறந்திருக்கிறார்கள். கீழ்புறம் இருக்கிற நாமக்கல் தொகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது; மாணவர்கள் அடிபட்டிருக்கிறார்கள். தெற்கே இருக்கின்ற கரூர் தொகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்று இருக்கிறது; சர்க்கார் பொருள்களுக்கும், உடைமைகளுக்கும் சேதம் விளைந்திருக்கிறது. மேல்புறம் இருப்பது சோஷலிஸ்ட் நண்புர் நல்லசிவம் அவர்கள் தொகுதி; சென்னிமலைத் தொகுதி. இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், காங்கிரஸ் பிரதிநிதிகள் இருக்கின்ற கரூர், நாமக்கல், திருச்செங்கோடு ஆகிய பகுதிகளில்தான் இந்தச் சம்பவங்கள் நடந்திருக்கின்றன என்பதைப் பார்க்கும்போது காங்கிரஸ்காரர்களே இந்த நிலைமைக்குக் காரணமோ என்ற ஐயம் ஏற்படுகிறது. நியாயமான குடும்பச் செலவுக்குப் பணம் கொடுக்காத குடும்பத் தலைவன் இருந்தால், அதனால் ஏற்படுகிற அதிருப்தியைக் காட்டுவதற்காக தன்னுடைய பிள்ளையை விட்டு 'அப்பாவிடம் இதைக்கேள், அதைக் கேள்' என்று சொல்வதைப் போல் ஆளும் கட்சியிலே இருப்பவர்கள் நேரடியாக தங்களுடைய விருப்பத்தைச் சொல்ல முடியாத நிலையிலே இந்த மாதிரிச் செயல்களிலே ஈடுபட்டார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. இந்தச் சம்பவங்களுக்கு பதினைந்து நாட்களுக்கு முன்னால் நானும் உயர்தர போலீஸ் அதிகாரியும் கலந்து பேசிக் கொள்கிற நிலை ஏற்பட்டது. அப்போது 'அமைதியைக் காப்பதற்கு நல்ல முறையில் வேண்டிய எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளுங்கள்; என்னுடைய



தொகுதியில் ஏதேனும் அசம்பாவிதம் ஏற்பட்டால் அதற்கு நான் பொறுப்பாளி' என்று உத்தரவாதம் கொடுத்தேன். அவர் அங்கு எடுத்துக் கொண்ட முறைகளும் ஒழுங்காக இருந்தன. சிறு அசம்பாவிதம் கூட நடைபெறவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் அறிஞர் அண்ணா அவர்களின் கட்டளைப்படி போட்ட போராட்டத் திட்டங்களை எல்லாம் மிக அமைதியான முறையிலே செவ்வனே நடத்தி வந்திருக்கிறது. தம்மைத்தாமே கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டுமென்பது தான் போராட்டத் திட்டம். தன்னைத் தானே வருத்திக் கொண்டு நாங்கள் இந்தித் திணிப்பைக் கண்டித்தோம். இந்தித் திணிப்பைப் பொறுத்து அமைச்சர்கள் இப்போது மேற்கொண்ட நடவடிக்கைகளை முன்னரே மேற்கொண்டிருந்தால் இந்த விளைவுகள் எல்லாம் ஏற்பட்டிருக்க முடியாது. நடைபெற்ற அசம்பாவிதங்கள் எல்லாம் மாணவர்கள் பெயராலே மற்றவர்களால் செய்யப்பட்டவையே ஆகும். கடந்த சுதந்திரப் போராட்ட காலத்தில் நடந்த போராட்டத்திற்குப் பிறகு நமது தமிழகத்தில் இப்படிப்பட்ட கோரச் செயல்கள் நடைபெற்றதில்லை. அப்போது ஏற்பட்டது போன்று இப்போது ஏற்பட்ட கோரச் செயல்களுக்கு காங்கிரஸ்காரர்களே உடந்தையாக இருந்தார்களோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பற்றி எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் திருமணி முத்தாறு, பொன்னியாறு திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று பல மாநாடுகள் மூலமாகவும், அமைச்சர்களிடத்தில் நேரடியாகவும், மகஜர்கள் மூலமாகவும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று 7,000 கையெழுத்திட்ட மகஜரை முன்னாள் முதலமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். மூவாயிரம் கையெழுத்திட்டு மாவட்ட கலெக்டர் அவர்களுக்கு அனுப்பி இருக்கிறார்கள். மதிப்புக்குரிய கக்கன் அவர்களுக்கு இலச்சிபாளையம் பஞ்சாயத்து வாசித்தளித்த வரவேற்பிலும் அதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை நிறைவேற்றினால்தான் திருச்செங்கோடு, ராசிபுரம், நாமக்கல் பகுதிகளில் விவசாயம் பெருக வழி ஏற்படும். நமது அரசு விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறது என்று எழுத்திலேதான் பார்க்க முடிகிறது. இந்தியாவிலேயே அதிக உற்பத்தி செய்வது ஏக்கர் விகிதாசாரத்தில் பார்க்கும்போது அது நமது சென்னை மாநிலந்தான் என்று அரசாங்க குறிப்பு இருக்கிறது. அதிலும் குறிப்பாக சேலம் மாவட்டத்தில் தான் ஏக்கர் விகிதாசாரப்படி அதிக விவசாயம் செய்யப்படுகிறது என்ற நிலை இருக்கிறது. நல்ல நில வளம் இருக்கிறது. பாடுபட வேண்டுமென்ற மனவளம் மக்களுக்கு இருக்கிறது. ஆகவே நீர் வளத்தைக் கொடுத்தால் அந்தப் பகுதியில் நல்ல முறையில் விவசாயத்தைப் பெருக்க முடியும். திருமணி முத்தாறு, பொன்னியாறு திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்தச் சட்ட சபைக்கு வந்ததில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் வரவு-செலவுத் திட்டத்தின் போதும், விவசாய மானியக் கோரிக்கையின் போதும் வற்புறுத்திப் பேசி வந்திருக்கிறேன். சிறிய

[திரு. சி. வே. வேலப்பன்] [3rd March 1965

பிரச்சினைகளை யெல்லாம் நான் இங்கே வந்து சொல்வதில்லை. அவற்றையெல்லாம் எடுத்துக் கூறுவதற்கு மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலிலே திட்டவட்டமாக இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் அல்லது நிறைவேற்றப்படாது என்று கூறிவிட்டாலாவது நன்றாக இருக்கும். அதை நாங்கள் எங்கள் எஜமானவர்களான பொது மக்களிடத்திலே எடுத்துச் சொல்ல முடியும். கடந்த மூன்று ஆண்டுகளாக இந்த அமைச்சரவை இதைப் பற்றி யாதொரு பதிலும் கொடுக்கவில்லை. மத்திய சர்க்கார் நீர்ப்பாசன அமைச்சர் அவர்களுக்கு திருமணி. முத்தாறு, பொன்னியாறு திட்டம் எந்த நிலையில் இருக்கிறது என்று கேட்டு எழுதியதற்கு திரு. கே. எல். ராவ் அவர்கள் பதில் அனுப்பியிருக்கிறார்கள். அதிலே மத்திய அரசு மேற்படி திட்டத்தை மூன்றாவது திட்டத்தில் எடுத்துக் கொள்ளலாமா என மாநில அரசினரைக் கேட்டதற்கு மாநில அரசு திருமணி முத்தாறு, பொன்னியாறு திட்டம் தவிர மற்ற திட்டங்களை எடுத்துக்கொள்ளலாமென எழுதியுள்ளார்கள். இருந்தாலும் மாநில சர்க்காரை "நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்த்துக்கொள்ளும்படி எழுதியிருக்கிறோம்' என்று எழுதியிருக்கிறார்கள். ஆனால் விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று சொல்கிற இந்தச் சர்க்காரின் நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்போது அந்தத் திட்டத்தைப் பற்றி எதுவுமே இல்லை. இந்தத் திட்டத்தை நீங்கள் பரிசிலனை செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை ஏன் நீங்கள் உடனடியாக எடுத்துக்கொள்ளக் கூடாது? பரிசிலனை செய்து இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும், முடியாது என்று நீங்கள் தீர்ப்பு அளிக்கக் கூடாதா?

இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமானால், பேசுகிற நான் முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவன் என்ற ஐயப்பாடு உங்களுக்கு இருந்தால் மக்கள் நலன் கருதி, அங்குள்ள மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டுமென்று நீங்கள் கருதினால், நான் அதற்கு இடையூறாக இருப்பதாக உங்களுக்குத் தோன்றினால் வேண்டுமானால் என் ராஜிநாமாவைக்கூட எழுதிக் கொடுக்க நான் தயாராகயிருக்கிறேன். அருள் கூர்ந்து நீங்கள் கவனிக்க வேண்டும். செய்ய வேண்டிய காரியங்களைச் செய்தால்தான் அரசாங்கத்தின் மீது மக்கள் கவனத்தைத் திருப்ப முடியும். தேர்தலின்போது மற்ற அமைச்சர் கூறியதுபோல் போர் வெல்ஸ் ஏற்படுத்திக் கொடுக்கிறோம் என்று அப்போது சொன்னால் முடியாது. திட்டங்கள் நல்ல முறையில் நிறைவேற்றப்பட வேண்டும். நிறைவேற்றப்படுகிற திட்டங்கள் நல்ல முறையில் இருந்தால் அதற்காக மக்கள் பங்குப் பணத்தை விதிக்கிற தொகை எவ்வளவு தொகையாக இருந்தாலும் அந்தப் பகுதிகளுக்குச் சென்று மக்களிடத்தில் இருந்து அதை வாங்கிக் கொடுக்க நாங்கள் தயாராயிருக்கிறோமென திருச்செங்கோடு, ராசிபுரம், நாமக்கல் வட்ட விவசாயிகளின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன். விவசாயத்திற்கு முக்கியத்துவம் அளிக்கிறோம் என்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் 1950 ஆண்டில் ஜோடர்பாளையம் அணைக்கட்டில் வந்து பேசினார்கள். விவசாயிகள் இதைப்



3rd March 1965] [திரு. சி. வே. வேலப்பன்]

பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்கிறார்கள். அதை நம்பியவர்கள் இப்போது அவதிக்குள்ளாகி இருக்கிறார்கள். நெல் விவசாயம் செய்கிறவர்களுக்கு சர்க்கார் தண்ட நீர்க் கூலி ஆண்டுக்கு ஏக்கருக்கு 400 ரூபாய் ஆகும். 400 ரூபாய் கட்டுகிறார்கள். அதே நேரத்தில் கரும்பு விவசாயம் செய்கிறவர்கள் ஆண்டு ஒன்றுக்கு 200 ரூபாய் கட்டுகிறார்கள். உணவு அமைச்சர் அவர்கள் விவசாயம் புதிதாக ஆரம்பிக்கப்பட்டால் நஷ்டம் ஏற்படும் என்று சொன்னார்கள். ஆக இந்த 400 ரூபாய் விதிப்பதைத் தவிர்க்க வேண்டும். இதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த உரையை நான் ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருக்கிறேன் என்று கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow. 1-30 p.m.

The House then adjourned.

## VII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

Nil.

123187

# LIST OF AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATION

## IN MADRAS CITY.

Messrs. ACCOUNT TEST INSTITUTE, EGMORE, MADRAS 8
Messrs. HIGGINBOTHAMS, LIMITED, Madras-2.
Messrs. NEW CENTURY BOOK HOUSE, Madras-2
Messrs. P. VARADACHARI & Co., Madras-1.
Messrs. C. SUBBIAH CHETTY & SONS, MADRAS-5.
Sri. S. S. SRINIVASARAGHAVAN, Royapettah, Madras-14.
Messrs. THE FREE INDIA CO-OPERATIVE'S AGENCY, Madras-4.
Messrs. PALANI PRACHURAM, Madras-5.
Messrs. THE EDUCATIONAL AGENCIES, BOOK SELLERS, Madras-15.
Messrs. UNIVERSAL BOOK HOUSE, MOORE MARKET. Madras-3.
Messrs. RUKMINI CORPORATION, VEPERY, Madras-7

## IN MUFASSAL OF MADRAS STATE.

Sri. E. M. GOPALAKRISHNA KONE, Madurai, Madurai district.
Messrs. THE ORIENTAL BOOK HOUSE, Madurai.
Messrs VIVEKANANDA PRESS, PRINTER, PUBLISHER AND BOOK-SELLER Madurai
J.J.M. BOOK DEPOT AND STATIONERY EMPORIUM, MADURAI.
Sri A. VENKATASUBBAN, Vellore, North Arcot district.
Messrs. MUTHAMIZH MANRAM, Mayuram.
Messrs. BHARATHA MATHA BOOK DEPOT, Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. NATHAN & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. APPAR BOOK STALL, Thanjavur.
Messrs. P. N. SWAMINATHASIVAM & Co., Pudukottai, Tiruchirappalli district
Messrs. M. PALANI & Co. Clock Tower, Pudukottai.
Messrs. S. KRISHNASWAMI & Co., Tiruchirappalli district.
Messrs. PALANIAPPA BROTHERS, Tiruchirappalli district.
Sri S. R. SUBRAMANIA PILLAI, Tirunelveli, Tirunelveli district.
Messrs NELLAI PUTHAKA NILAYAM BOOK-SELLERS, 10, Thana Muna Buildings Tirunelveli Junction.
Sri S. ARULDOSS, Villupuram Town, South Arcot district.
Sri. V. B. GANESAN, Villupuram, South Arcot district.
Messrs. THE EDUCATIONAL SUPPLIES COMPANY, Coimbatore (R.S. Puram).
Messrs. VASANTHAM STORES, BOOK-SELLERS, Cross Cut Road, Coimbatore.
Messrs. MERCURY BOOK COMPANY, 223, Raja Street, Coimbatore.
Messrs. SIVALINGA VILAS BOOK DEPOT, Erode, Coimbatore, district.
Sri S. M. JAGANNATHAN, BOOK SELLER AND PUBLISHER, Nagercoil, Kanyakumari district
Sri M. PALANI & Co., Tiruchirappalli.
Messrs. A. K. CHANDRIAH CHETTIAR & SONS, Salem-1.
Messrs. T. CHELLARAM & SONS, BOOK-SELLERS AND STATIONERS, Market, Ootacamund.
Messrs. K. M. K. BROTHERS, BOOK SELLERS, Ootacamund.
Messrs. MEENAKSHI PATHIPAGAM, Pudukottai.

## IN OTHER STATES

Messrs. JANATHA AGENCIES, BOOK SELLERS, Gudur.
Messrs. JAIN AGENCY, New Delhi-1.
Messrs. INTERNATIONAL BOOK HOUSE, Trivandrum.
Messrs. BOOK-LOVERS (PRIVATE) LIMITED, Hyderabad.

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING MADRAS, ON THE AUTHORITY OF THE SPEAKER OF THE LEGISLATIVE ASSEMBLY.